
## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இதெல்லாம் காஞ்சிபுரம்...............பொடவெங்க. (silk)

இதெல்லாம் காஞ்சிபுரம் **பட்டுப்** பொடவெங்க.

(i) இந்தாங்க............... (money)
(ii) அந்தக்...............பட்டுப் பொடவெயெ எடுங்க. (black)
(iii) நான் இந்தப்...............பொடவெயெ வாங்குறேன். (green)
(iv) நாங்க...............ரூபாய்க்கு விக்குறோம். (one hundred and fifty)
(v) உங்களுக்கு...............ரூபாய்க்குத் தரோம். (one hundred and forty)
(vi) அந்தக் கறுப்புப் பட்டுப் பொடவெயெ...............ங்க. (take)
(vii) இந்தப் பொடவெயெயும்...............ங்க. (see/have a glance)
(viii) நீங்க எந்தப் பொடவெயெ...............றீங்க ? (buy)

h. Transform the following singular non-honorific imperatives into singular honorific imperatives.

(i) நீ கொடு.
(ii) நீ எடு.
(iii) நீ வாங்கு.
(iv) நீ பாரு.

i. Frame questions for the answers given below following the models.

Model A : எனக்கு அந்தக் கறுப்புப் பொடவெ வேணும்.
Q : உங்களுக்கு எது வேணும் ?

(i) எனக்கு இந்தப் பச்செப் பொடவெ வேணும்.
(ii) எனக்கு அந்த நைலக்ஸ் ஸாரி வேணும்.

j. Write the word represented by the formula.

Example : **பொடவெயெ** பொடவெ + Objective

(i) ஸாரி + Objective : ...............
(ii) பட்டு + Objective : ...............
(iii) காஞ்சிபுரம் + Objective : ...............
(iv) ரூபாய் + Objective : ...............

k. Answer these questions.

(i) நீங்க உங்க மனெவிக்குப் பட்டுப் பொடவெ வாங்குறீங்களா?
(ii) கடெக்காரன் அந்தப் பச்செப் பொடவெயெ எத்தனெ ரூபாய்க்கு விக்குறான் ?

(iii) உங்க மனெவிக்கு லேட்டஸ்ட் நைலக்ஸ் ஸாரி
வாங்குவீங்களா ?

(iv) உங்களுக்குக் கறுப்புப் பட்டுப் பொடவெ பிடிக்குமா ?

(v) உங்களுக்குப் பச்செப் பட்டுப் பொடவெ பிடிக்காதா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| பட்டு | 'silk' | லேட்டஸ்ட் | 'latest' |
| நைலான் | 'nylon' | நைலக்ஸ் | 'nylex' |
| ஸாரி | 'sari' | கறுப்பு | 'black' |
| எடு | 'take' | பாரு | 'see/have a glance' |
| வாங்கு | 'buy, purchase' | பச்செ | 'green' |
| நூத்தியம்பது | 'one hundred and fifty' | வில் | 'sell' |
| நூத்திநாப்பது | 'one hundred and forty' | பணம் | 'money' |
| பில் | 'bill' | | |

## GRAMMAR

*6.33.116*. It was said in lesson 6.31 that the objective case marker is optional if a noun refers to an inanimate object. But it is almost obligatory when an inanimate object is preceded by any demonstrative adjective. Example:

*6. 33. 116.* நீங்க அந்தப் பட்டுப் பொடவெயெ எடுங்க.
நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க ?
நான் இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்.

*6.33.117*. InTamil, several attributes may be sequenced one after another before a noun without any conjunctive particle if they are semantically related (Refer 6.32.115). Example:

*6. 33. 117.* இதெல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப் பொடவெ.
அதெல்லாம் நைலான், நைலக்ஸ் ஸாரி.

Sandhi : இது + எல்லாம் → இதெல்லாம்
அது + எல்லாம் → அதெல்லாம் (Refer S.3 in 1.2)

பட்டு + பொடவெ → பட்டுப்பொடவெ
கறுப்பு + பொடவெ → கறுப்புப் பொடவெ
எந்த + பொடவெ → எந்தப் பொடவெ
பச்செ + பொடவெ → பச்செப் பொடவெ (Refer S.4 in 1.2)

# UNIT 7

## LESSON 34

RECEIVING A TELEGRAM

**DIALOGUE**

| | |
|---|---|
| நரசய்யா : சுரேஷ்! நாளைக்கு மிஸஸ் ராமு மைசூருலேயிருந்து வருங்களாம். | Suresh! (It seems) that Mrs. Ramu is coming from Mysore tomorrow evening. |
| சுரேஷ் : அப்படியா ? உங்களுக்கு எப்படித் தெரியும் ? | Is that so ? How do you know ? |
| நரசய்யா : இதோ ! ராமுவோடெ தந்தி. | Look! (Here is) Ramu's telegram. |
| சுரேஷ் : எங்கே ? ...அதெ என்கிட்டெக் காட்டுங்க. | Where (it is)... Please show it to me. |
| நரசய்யா : இந்தாங்க... இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ? | Please take this... Will you please show this to Kamala madam ? |

| | | |
|---|---|---|
| சுரேஷ் : | சரி, காண்பிக்குறேன்... நீங்க இப்ப எங்கே போறீங்க ? | Alright, (I) will show (it to her)... Where are you going now ? |
| நரசய்யா : | நான் இப்ப இன்ஸ்டி-டியூட்டுக்குப் போறேன். | Now I am going to the Institute. |
| சுரேஷ் : | பேராசிரியரு இன்ஸ்டிடி-யூட்டுலே இருக்குறாராம்.. இந்தச் சேதியெ அவரு-கிட்டெயும் தெரிவிங்க... நான் கமலா அம்மா-வுக்குச் சொல்லுறேன். | (It seems that) Professor (Sundaram) is in the Institute....Please inform this news to him also...I will tell Kamala madam. |
| நரசய்யா ; | சரி, நான் வரட்டுமா ? | Alright ! Shall I take leave of you ? |

## DRILLS

a. Variation drill

**7. 34. 118.** நீங்க இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ?
நீங்க சேதியெ அவருக்கும் தெரிவிங்க.
நீங்க அதெ எனக்குக் காட்டுங்க.
நான் சேதியெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன்.

**7. 34. 119.** நீங்க இதெக் கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
நீங்க சேதியெ அவருகிட்டெயும் தெரிவிங்க.
நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க.
நான் சேதியெக் கமலா அம்மாகிட்டெச் சொல்லுறேன்.

**7. 34. 120.** மிஸஸ் ராமு வருங்களாம்.
பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் சேதியெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன். | நான் சேதியெக் கமலா அம்மா-வுக்குச் சொல்லுறேன். |
| சொல்லுறேன் | சொல்லுறேன் |
| கமலா அம்மாவுக்கு | கமலா அம்மாவுக்குச் சொல்லு-றேன் |
| சேதியெ | சேதியெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன் |
| நான் | நான் சேதியெக் கமலா அம்மா-வுக்குச் சொல்லுறேன். |

(ii) நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க. — நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க.
காட்டுங்க — காட்டுங்க
என்கிட்டெ — என்கிட்டெக் காட்டுங்க
அதெ — அதெ என்கிட்டெக் காட்டுங்க
நீங்க — நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க.

(iii) பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம். — பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.
இருக்குறாராம் — இருக்குறாராம்
இன்ஸ்டிடியூட்டுலே — இன்ஸ்டிடியூட்டுலேஇருக்குறாராம்
பேராசிரியரு — பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.

c. Expansion drill

(i) நீங்க தெரிவிங்க. — நீங்க தெரிவிங்க.
அவருக்கும் தெரிவிங்க — நீங்க அவருக்கும் தெரிவிங்க.
சேதியெத் தெரிவிங்க — நீங்க சேதியெ அவருக்கும் தெரிவிங்க.

(ii) நீங்க காண்பிக்குறீங்களா ? — நீங்க காண்பிக்குறீங்களா ?
கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ? — நீங்க கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
இந்தத் தந்தியெக் காண்பிக்குறீங்ளா ? — நீங்க இந்தத் தந்தியெக் கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
இப்பக் காண்பிக்குறீங்களா ? — நீங்க இப்ப இந்தத் தந்தியெக் கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?

(iii) மிஸஸ் ராமு வருங்களாம். — மிஸஸ் ராமு வருங்களாம்.
மாலெயிலே வருங்களாம் — மிஸஸ் ராமு மாலெயிலே வருங்களாம்.
நாளெக்கு வருங்களாம் — மிஸஸ் ராமு நாளெக்கு மாலெயிலே வருங்களாம்.

d. Question-Answer drill

(i) Q: உங்களுக்கு எப்படித் தெரியும் ?
A: இதோ ! ராமுவோடெ தந்தி.

(ii) Q: இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ?
A: சரி, காண்பிக்குறேன்.

e. Substitution drill

(i) நீங்க எனக்குக் காட்டுங்க. — நீங்க எனக்குக் காட்டுங்க.

Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| நாங்க | நீங்க எங்களுக்குக் காட்டுங்க. |
| அவன் | நீங்க அவனுக்குக் காட்டுங்க. |
| அவ | நீங்க அவளுக்குக் காட்டுங்க. |
| அவரு | நீங்க அவருக்குக் காட்டுங்க. |
| அவங்க | நீங்க அவங்களுக்குக் காட்டுங்க. |
| அது | நீங்க அதுக்குக் காட்டுங்க. |

(ii) நீங்க என்கிட்டெக் காட்டுங்க. — நீங்க என்கிட்டெக் காட்டுங்க.

Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| நாங்க | நீங்க எங்ககிட்டெக் காட்டுங்க. |
| இவன் | நீங்க இவன்கிட்டெக் காட்டுங்க. |
| இவ | நீங்க இவகிட்டெக் காட்டுங்க. |
| இவரு | நீங்க இவருகிட்டெக் காட்டுங்க. |
| இவங்க | நீங்க இவங்ககிட்டெக் காட்டுங்க. |
| இது | நீங்க இதுகிட்டெக் காட்டுங்க. |

(iii) நான் காண்பிக்குறேன். — நான் காண்பிக்குறேன்.

Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| தெரிவி | நான் தெரிவிக்குறேன். |
| படி | நான் படிக்குறேன். |
| குடி | நான் குடிக்குறேன். |
| கொடு | நான் கொடுக்குறேன். |
| எடு | நான் எடுக்குறேன். |

(iv) நான் இப்பப் போறேன். — நான் இப்பப் போறேன்.

Substitute

| | |
|---|---|
| மாலெயிலே | நான் மாலெயிலே போறேன். |
| இண்ணெக்கு | நான் இண்ணெக்குப் போறேன். |
| ராத்திரி | நான் ராத்திரி போறேன். |

(v) அவங்க வருங்களாம். — அவங்க வருங்களாம்.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| போ | அவங்க போறுங்களாம். |
| தா | அவங்க தருங்களாம். |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் காண்பிக்குறேன். | நீங்க காண்பிக்குறீங்களா ? |
| நான் சொல்லுறேன். | நீங்க சொல்லுறீங்களா ? |
| நான் தெரிவிக்குறேன். | நீங்க தெரிவிக்குறீங்களா ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : மிஸஸ் ராமு................வருங்களாம். (in the evening)
மிஸஸ் ராமு **மாலெயிலே** வருங்களாம்.

(i) இதோ ! ராமுவோடெ................ (telegram)
(ii) இந்தச்................யெ அவருகிட்டெயும் தெரிவிங்க. (news)
(iii) அதெ என்கிட்டெக்................ங்க. (show)
(iv) இதெக் கமலா அம்மாவுக்குக்................க்குறீங்களா ? (show)
(v) இந்தச் சேதியெ அவருகிட்டெயும்................ங்க. (inform)
(vi) நான் கமலா அம்மாகிட்டெ................றேன். (say)

h. Change these sentences as in the example.

Example : அதெ எனக்குக் காட்டுங்க.
அதெ என்கிட்டெக் காட்டுங்க.

(i) இந்தச் சேதியெ அவருக்குத் தெரிவிங்க.
(ii) இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ?
(iii) நான் இதெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன்.

i. Write the word represented by the formula.

Example : **அவருகிட்டெ** அவரு + Locative

(i) நான் + Locative : ................
(ii) நாங்க + Locative : ................
(iii) நீ + Locative : ................
(iv) நீங்க + Locative : ................
(v) அவங்க + Locative : ................
(vi) இவ + Locative : ................

j. Include the indirect object form of the item given in parentheses as shown in the example.

Example : நீங்க அதெக் காட்டுங்க. (நான்)
நீங்க அதெ எனக்குக் காட்டுங்க.

(i) நீங்க இதெக் காண்பிக்குறீங்களா ? (ராதாம்மா)
(ii) நீங்க இந்தச் சேதியெத் தெரிவிங்க. (அவரு)
(iii) நான் இதெச் சொல்லுறேன். (அவங்க)

k. Combine the following sentences as in the model.

Model : நீங்க தெரிவிங்க.
இது சேதி.
அவரு பேராசிரியரு.

நீங்க சேதியெப் பேராசிரியருகிட்டெத் தெரிவிங்க.
(நீங்க சேதியெப் பேராசிரியருக்குத் தெரிவிங்க)

(i) நீங்க என்கிட்டெக் காட்டுங்க.
இது தந்தி.

(ii) நீங்க காண்பிக்குறீங்களா ?
இது தந்தி.
இவங்க கமலா அம்மா.

(iii) நான் சொல்லுறேன்.
இது சேதி.
இவங்க கமலா அம்மா.

I. Answer these questions.

(i) அது யாரோடெ தந்தி ?
(ii) இண்ணெக்கு மாலெயிலே உங்க ஆசிரியரு உங்க அறெக்கு வருரா ?
(iii) நீங்க வீட்டுப்பாடத்தெத் தினந்தோறும் உங்க ஆசிரியருகிட்டெக் காட்டுறீங்களா ?
(iv) இன்ஸ்டிடியூட்டுலேயிருந்து மொதலாவது உங்களுக்கு தந்தி வந்ததா ?
(v) நீங்க மாலெயிலே எங்கே போறீங்க ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| மாலெயிலே | 'in the evening' | மிஸஸ் | 'Mrs' |
| அப்படியா ? | 'is it so ?' | இதோ ! | 'Look !' |
| தந்தி | 'telegram' | காட்டு | 'show' |
| காண்பி | 'show' | இன்ஸ்டிடியூட்டு | 'institute' |
| சேதி | 'news' | தெரிவி | 'inform' |
| சொல்லு | 'say' | | |

## GRAMMAR

**7.34.118.** In the lessons 2.14, 3.19-23, 5.28-30, 6.31 and 6.33 we dealt with various uses of a noun and the case marker **-க்கு/-உக்கு/-அக்கு.** In this Unit the other meanings and uses of the same form are explained in three lessons (7.34, 7.35 and 7.36). Consider the following sentences.

7. 34. 118. நீங்க அதெ எனக்குக் காட்டுங்க.
நீங்க சேதியெ அவருக்கும் தெரிவிங்க.

The transitive verbs like காட்டு 'show', தெரிவி 'inform' etc., identify the noun and the objective case marker as their object as we mentioned earlier. This object may be called direct object. In addition to this, unlike the sentences 6.31.111, 6.32.114 and 6.33.116, these sentences have a noun and the case marker **-க்கு/ -உக்கு/ -அக்கு** to denote indirectly another object of

action that is expressed by the same set of verbs. This object may be called indirect object. e.g., எனக்கு 'me-to', அவருக்கு him-to' etc.

***7.34.119.*** See the following examples.

கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ?
அவருக்கும் தெரிவிங்க.
எனக்குக் காட்டுங்க.
அம்மாவுக்குச் சொல்லுறேன்.

The verbs காண்பி 'show', தெரிவி 'inform', காட்டு 'show', சொல்லு 'tell' etc., may identify the locative form which is expressed by a noun and the case marker -கிட்டெ in the meaning of indirect object as follows :

கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
அவருகிட்டெயும் தெரிவிங்க.
என்கிட்டெக் காட்டுங்க.
கமலா அம்மாகிட்டெச் சொல்லுறேன்.

Example :

7. 34. 119. நீங்க இதெக் கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
நீங்க சேதியெ அவருகிட்டெயும் தெரிவிங்க.

***7.34.120.*** -ஆம் is a kind of reportive particle which means 'it is said'. It is always added to a sentence. Example :

7. 34. 120. மிஸஸ் ராமு வருங்களாம்.
பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.

Sandhi : எப்படி + தெரியும் --> எப்படித் தெரியும் (Refer S.21 in 3.20)
என்கிட்டெ + காட்டுங்க --> என்கிட்டெக் காட்டுங்க (Refer S.22 in 4.25)
அம்மாவுக்கு + காண்பிக்குறீங்களா --> அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா
இன்ஸ்டிடியூட்டுக்கு + போறேன் --> இன்ஸ்டிடியூட்டுக்குப் போறேன்
அம்மாவுக்கு + சொல்லுறேன் --> அம்மாவுக்குச் சொல்லுறேன்
(Refer S.18 in 2.14)

அப்படி + ஆ --> அப்படியா
சேதி + எ --> சேதியெ
அவருகிட்டெ + உம் --> அவருகிட்டெயும் (Refer S.8 in 1.5)
ராமு + ஓடெ --> ராமுவோடெ
அம்மா + உக்கு --> அம்மாவுக்கு (Refer S.9 in 1.7)
காண்பிக்குறீங்க + ஆ --> காண்பிக்குறீங்களா ?
வருங்க + ஆ --> வருங்களா (Refer S.19 in 2.14)

# UNIT 7

# LESSON 35

## DEPARTING FROM THE HOUSE

**DIALOGUE**

| | |
|---|---|
| சுமதி : அத்தெ, நீங்க எந்த மாசம் ஊருலேயிருந்து திரும்பு வீங்க ? | Aunty, in which month will you return from (your) native place ? |
| கமலா : ஜூலெ மாசம் திரும்பு- வேன். | (I) will return (from my native place) in the month of July. |
| சுமதி : எத்தனும் தேதி ? | On which date ? |

| | |
|---|---|
| கமலா : பத்தாம் தேதி புறப்படு வேன்...பதினாலாம் தேதி இங்கே வருவேன் .... நீ வீட்டுலே ஜாக்கிரதெயா இரு. ராமுவுக்கு நாளெக்குப் பணம் அனுப்பு... வீட்டுக்காரனுக்கு வாடகெயெக் கொடு...பால்காரன் நாளெண்ணெக்கு வருவான். நீ அவன்கிட்டெயிருந்து நமக்கு ஒரு கிலோ வெண்ணெ வாங்கு . . . செடிக்கெல்லாம் தண்ணீரு ஊத்து... காய்கறிச் செடிக்கு ஒரம் போடு...நீ மாலெயிலே கடெவீதிக்குப் போறேயா ? | I will start on 10th... (I) will reach here on 14th... (You must) be careful in the house. (You) send money to Ramu tomorrow...Give the rent to the house owner. The milkman will come day after tomorrow. You buy one kilo of butter from him for us.... Water all the plants...Put manure to the vegetable plants...Are you going to the bazaar this evening ? |
| சுமதி : ஆமாங்க. ஆறரெ மணிக்குப் போவேன். | Yes, aunty. I will go at half past six. |
| கமலா : குழந்தெக்கு ஒரு சட்டெ எடு.... நான் வரட்டுமா ? | Buy a shirt for the child....Shall I take leave of you ? |
| சுமதி : சரிங்க. ஜாக்கிரதெயாப் போங்க. | Alright. Please go carefully, (aunty) (Be careful while you go). |

## DRILLS

a. Variation drill

7. 35. 121. நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.
நீ செடிக்குத் தண்ணீரு ஊத்து.
நீ செடிக்கு ஒரம் போடு.
நீ குழந்தெக்குச் சட்டெ எடு.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு. | நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு. |
| அனுப்பு | அனுப்பு |
| பணம் | பணம் அனுப்பு |
| ராமுவுக்கு | ராமுவுக்குப் பணம் அனுப்பு |
| நீ | நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு. |

| | |
|---|---|
| (ii) நீ குழந்தெக்குச் சட்டெ எடு. | நீ குழந்தெக்குச் சட்டெ எடு. |
| எடு | எடு |
| சட்டெ | சட்டெ எடு |
| குழந்தெக்கு | குழந்தெக்குச் சட்டெ எடு |
| நீ | நீ குழந்தெக்குச் சட்டெ எடு. |
| (iii) அவன்கிட்டெயிருந்து ஒரு கிலோ வெண்ணெ வாங்கு. | அவன்கிட்டெயிருந்து ஒரு கிலோ வெண்ணெ வாங்கு. |
| வாங்கு | வாங்கு |
| வெண்ணெ | வெண்ணெ வாங்கு |
| ஒரு கிலோ | ஒரு கிலோ வெண்ணெ வாங்கு |
| அவன்கிட்டெயிருந்து | அவன்கிட்டெயிருந்து ஒரு கிலோ வெண்ணெ வாங்கு. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நீ கொடு. | நீ கொடு. |
| வாடகெயெக் கொடு | நீ வாடகெயெக் கொடு. |
| வீட்டுக்காரனுக்குக் கொடு | நீ வீட்டுக்காரனுக்கு வாடகெயெக் கொடு. |
| (ii) நீ எடு. | நீ எடு. |
| சட்டெ எடு | நீ சட்டெ எடு. |
| குழந்தெக்கு எடு | நீ குழந்தெக்குச் சட்டெ எடு. |
| கடெவீதியிலே எடு | நீ கடெவீதியிலே குழந்தெக்குச் சட்டெ எடு. |
| மாலெயிலே எடு | நீ மாலெயிலே கடெவீதியிலே குழந்தெக்குச் சட்டெ எடு. |
| (iii) நீ ஊத்து. | நீ ஊத்து. |
| தண்ணீரு ஊத்து | நீ தண்ணீரு ஊத்து. |
| செடிக்கெல்லாம் ஊத்து | நீ செடிக்கெல்லாம் தண்ணீரு ஊத்து. |
| (iv) நீ வாங்கு. | நீ வாங்கு. |
| வெண்ணெ வாங்கு | நீ வெண்ணெ வாங்கு. |
| அவன்கிட்டெயிருந்து வாங்கு | நீ அவன்கிட்டெயிருந்து வெண்ணெ வாங்கு. |
| நமக்கு வாங்கு | நீ நமக்கு அவன்கிட்டெயிருந்து வெண்ணெ வாங்கு. |

d. Question-Answer drill

(i) Q : நீங்க எப்ப ஊருலேயிருந்து திரும்புவீங்க?
A : பத்தாம் தேதி திரும்புவேன்.

(ii) Q : நீ மாலெயிலே கடெவீதிக்குப் போறேயா ?
A : ஆமா, ஆறரெ மணிக்குப் போவேன்.

e. Substitution drill

(i) நீ ராமுவுக்கு அனுப்பு. | நீ ராமுவுக்கு அனுப்பு.
Substitute
கொடு | நீ ராமுவுக்குக் கொடு.
எடு | நீ ராமுவுக்கு எடு.
காட்டு | நீ ராமுவுக்குக் காட்டு.
காண்பி | நீ ராமுவுக்குக் காண்பி.
தெரிவி | நீ ராமுவுக்குத் தெரிவி.
வாங்கு | நீ ராமுவுக்கு வாங்கு.

(ii) நீ நாளெண்ணெக்கு வாங்கு. | நீ நாளெண்ணெக்கு வாங்கு.
Substitute
நாளெக்கு | நீ நாளெக்கு வாங்கு.
இண்ணெக்கு | நீ இண்ணெக்கு வாங்கு.

(iii) நான் ஜூலெ மாசம் திரும்புவேன். | நான் ஜூலெ மாசம் திரும்புவேன்.
Substitute
ஜனவரி | நான் ஜனவரி மாசம் திரும்புவேன்.
பெப்ரவரி | நான் பெப்ரவரி மாசம் திரும்புவேன்.
மார்ச் | நான் மார்ச் மாசம் திரும்புவேன்.
ஏப்ரல் | நான் ஏப்ரல் மாசம் திரும்புவேன்.
மே | நான் மே மாசம் திரும்புவேன்.
ஜூன் | நான் ஜூன் மாசம் திரும்புவேன்.
ஆகஸ்ட் | நான் ஆகஸ்ட் மாசம் திரும்புவேன்.
செப்டம்பர் | நான் செப்டம்பர் மாசம் திரும்புவேன்.
அக்டோபர் | நான் அக்டோபர் மாசம் திரும்புவேன்.
நவம்பர் | நான் நவம்பர் மாசம் திரும்புவேன்.
டிசம்பர் | நான் டிசம்பர் மாசம் திரும்புவேன்.

(iv) நான் பத்தாம் தேதி திரும்புவேன். | நான் பத்தாம் தேதி திரும்புவேன்.
Substitute and change the cardinal number accordingly.
பதினெண்ணு | நான் பதினெண்ணும் தேதி திரும்புவேன்.
பன்னிரெண்டு | நான் பன்னிரெண்டாம் தேதி திரும்புவேன்.

| | |
|---|---|
| பதிமூணு | நான் பதிமூணும் தேதி திரும்புவேன். |
| பதினாலு | நான் பதினாலாம் தேதி திரும்புவேன். |
| பதினஞ்சு | நான் பதினஞ்சாம் தேதி திரும்புவேன். |
| இருபது | நான் இருபதாம் தேதி திரும்புவேன். |
| முப்பது | நான் முப்பதாம் தேதி திரும்புவேன். |

(v) பால்காரன் வருவான். — பால்காரன் வருவான்.

Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| தா | பால்காரன் தருவான். |
| ஊத்து | பால்காரன் ஊத்துவான். |
| போடு | பால்காரன் போடுவான். |
| காட்டு | பால்காரன் காட்டுவான். |

(vi) நீ அவன்கிட்டெயிருந்து வாங்கு. — நீ அவன்கிட்டெயிருந்து வாங்கு.

Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| நான் | நீ என்கிட்டெயிருந்து வாங்கு. |
| நாங்க | நீ எங்ககிட்டெயிருந்து வாங்கு. |
| இவன் | நீ இவன்கிட்டெயிருந்து வாங்கு. |
| இவ | நீ இவகிட்டெயிருந்து வாங்கு. |
| இவரு | நீ இவருகிட்டெயிருந்து வாங்கு. |
| இவங்க | நீ இவங்ககிட்டெயிருந்து வாங்கு. |

f. Transformation drill

(i)

| | |
|---|---|
| நான் ஜூலை மாசம் திரும்புவேன். | நீங்க எந்த மாசம் திரும்புவீங்க ? |
| நான் ஆகஸ்ட் மாசம் புறப்படுவேன். | நீங்க எந்த மாசம் புறப்படுவீங்க ? |
| நான் செப்டம்பர் மாசம் போவேன். | நீங்க எந்த மாசம் போவீங்க ? |
| நான் அக்டோபர் மாசம் வருவேன். | நீங்க எந்த மாசம் வருவீங்க ? |

## EXERCISES

**g.** Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் ஜூலெ................திரும்புவேன். (month)
நான் ஜூலெ மாசம் திரும்புவேன்.

(i) எத்தனும்................ ? (date)
(ii) ................பால்காரன் வருவான். (day after tomorrow)
(iii) ................+உக்கு வாடகெயெக் கொடு. (house owner)
(iv) ................வருவான். (milk man)
(v) அவன்கிட்டெயிருந்து................வாங்கு. (butter)
(vi) காய்கறிச்................க்கு ஒரம் போடு. (plant)
(vii) ................செடிக்கு ஒரம் போடு. (vegetable)
(viii) காய்கறிச் செடிக்கு................போடு. (manure)
(ix) குழந்தெக்கு ஒரு................எடு. (shirt)
(x) ஒரம்................ (put)
(xi) ஒரு கிலோ வெண்ணெ................ (buy)
(xii) ராமுவுக்குப் பணம்................ (send)
(xiii) செடிக்கெல்லாம் தண்ணீரு................ (pour)

h. Write the words represented by the formulae.

Example : **வீட்டுக்காரனுக்கு** வீட்டுக்காரன் + Indirect object

(i) ராமு + Indirect object : ................
(ii) அவன் + Indirect object : ................
(iii) செடி + Indirect object : ................
(iv) குழந்தெ + Indirect object : ................
(v) பால்காரன் + Indirect object : ................

Example : **திரும்புவேன்** திரும்பு + Future

(i) புறப்படு + Future : ................
(ii) வா + Future : ................
(iii) அனுப்பு + Future : ................
(iv) ஊத்து + Future : ................
(v) போடு + Future : ................

i. Include the indirect object form of the item given in parentheses as shown in the example.

Example: நீ வாடகெயெக் கொடு. (வீட்டுக்காரன்)
நீ வீட்டுக்காரனுக்கு வாடகெயெக் கொடு.

(i) நீ பணம் அனுப்பு. (ராமு)

(ii) நீ தண்ணீரு ஊத்து. (செடி)
(iii) நீ ஒரம் போடு. (காய்கறிச் செடி)
(iv) நீ சட்டெ எடு. (குழந்தெ)
(v) நீ வெண்ணெ வாங்கு. (நாம)

j. Combine the following sentences as in the model.

Model : நீ அனுப்பு.
இவரு ராமு.
இது பணம்.
நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.

(i) நீ கொடு.
அவன் வீட்டுக்காரன்.
இது வாடகெ.

(ii) நீ ஊத்து.
இதெல்லாம் செடி.
இது தண்ணீரு.

(iii) நீ போடு.
இது காய்கறிச் செடி.
இது ஒரம்.

(iv) நீ எடு.
இது குழந்தெ.
இது ஒரு சட்டெ.

k. Answer these questions.

(i) நீங்க எந்த மாசம் ஊருக்குத் திரும்புவீங்க ?
(ii) நீங்க எத்தனாம் தேதி மைசூருக்கு வந்தீங்க ?
(iii) நீங்க உங்க வீட்டுக்கு எத்தனெ ரூபாய் வாடகெ கொடுக்குறீங்க ?
(iv) நீங்க மாசம் எத்தனெ ரூபாய் உங்க மனெவிக்கு அனுப்புறீங்க ?
(v) நீங்க எத்தனெ கிலோ வெண்ணெ வாங்குறீங்க ?
(vi) கமலா அம்மா எந்த மாசம் ஊருலேயிருந்து திரும்புறாங்க ?
(vii) சுமதி எப்பக் கடெவீதிக்குப் போறா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| அத்தெ | 'mother-in-law, aunty' | மாசம் | 'month' |
| திரும்பு | 'return' | ஜூலெ | 'July, name of the month' |
| தேதி | 'date' | ஜாக்கிரதெ | 'carefulness' |
| அனுப்பு | 'send (as money)' | வீட்டுக்காரன் | 'house owner' |

| | | | |
|---|---|---|---|
| வாடெகெ | 'rent' | பால்காரன் | 'milk man' |
| நாளெண்ணெக்கு | 'day after tomorrow' | வெண்ணெ | 'butter' |
| செடி | 'plant' | ஊத்து | 'pour, as water' |
| காய்கறி | 'vegetables' | ஒரம் | 'manure' |
| போடு | 'put' | சட்டெ | 'shirt' |

## GRAMMAR

**7.35.121.** The verbs like அனுப்பு 'send', ஊத்து 'pour, as water', போடு 'put', எடு 'take' etc., form another class of verbs. This class implies the existence of indirect object when the verbs are used in sentences. Example :

7\. 35. 121. நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.
நீ செடிக்குத் தண்ணீரு ஊத்து.
நீ குழந்தெக்குச் சட்டெ எடு.

Note that the indirect objects ராமுவுக்கு 'Ramu-to', செடிக்கு 'plant-to', குழந்தெக்கு 'child-to' etc., cannot be replaced by the locative form i.e., noun -கிட்டெ as in 7.34.119. The following sentences are ungrammatical.

* நீ ராமுகிட்டெ பணம் அனுப்பு.
* நீ செடிகிட்டெ தண்ணீரு ஊத்து.
* நீ குழந்தெகிட்டெ சட்டெ எடு.

பணம் 'money', தண்ணீரு 'water', ஒரம் 'manure', சட்டெ 'shirt' etc., are direct objects and being inanimate nouns the objective case marker is optional.

Sandhi : நாளெக்கு + பணம் அனுப்பு → நாளெக்குப் பணம் அனுப்பு
ஆறரெமணிக்கு + போவேன் → ஆறரெமணிக்குப் போவேன்
(Refer S.18 in 2.14)

வாடெகெயெ + கொடு → வாடெகெயெக்கொடு (Refer S.20 in 2.17)
காய்கறி + செடி → காய்கறிச் செடி (Refer S.4 in 1.2)

# UNIT 7

# LESSON 36

## IN THE KITCHEN

**DIALOGUE**

| | |
|---|---|
| கமலா : சுமதி, என்ன செய்றே ? | Sumathi, what are (you) doing ? |
| சுமதி : சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன். | (I am occupied with) work in the kitchen. |
| கமலா : நீ இண்ணெக்கு என்னம்மா சமெக்குறே ? | What are you cooking today, dear ? |
| சுமதி : உருளெக்கெழங்கு பொரியல், ரசம், அப்பளம்... அவ்வளவுதான். | Potato fry, rasam and pappad...That's all. |
| கமலா : சாப்பாடு ரெடியா ? | Is meal ready ? |
| சுமதி : ரெடி. அப்பளம் வறுக்குறேன்....அப்புறமா நாம சாப்பிடலாம். | (It is) ready. (I am) frying pappad... Then we shall eat. |

| | |
|---|---|
| கமலா : குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குது.... அதுக்கு மொதல்லே சோறு ஊட்டு. அப்புறம் உன் மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு. | Baby is very hungry...First of all, (you) feed rice to him. Then (you) serve meal to your uncle. |
| சுமதி : சரி, அத்தெ. | Alright, aunty. |
| கமலா : இந்தா குழந்தெ...எனக்குக் காலு ரொம்ப வலிக்கு-தம்மா. நான் கொஞ்சம் படுக்குறேன். | Please take the baby...My leg pains very much, dear. I will lie down for a while. |
| சுமதி : சரிங்க. | Alright, aunty. |

## DRILLS

a. Variation drill

7. 36. 122. குழந்தெக்கு வயிறு பசிக்குது.
எனக்குக் காலு வலிக்குது.

7. 36. 123. நீ என்னம்மா சமெக்குறே ?
எனக்குக் காலு வலிக்குதம்மா.

7. 36. 124. குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குது.
எனக்குக் காலு ரொம்ப வலிக்குது.

b. Build up drill

| | |
|---|---|
| (i) குழந்தெக்கு வயிறு பசிக்கு-தம்மா. | குழந்தெக்கு வயிறு பசிக்குதம்மா. |
| பசிக்குதம்மா | பசிக்குதம்மா |
| வயிறு | வயிறு பசிக்குதம்மா |
| குழந்தெக்கு | குழந்தெக்கு வயிறு பசிக்குதம்மா. |
| (ii) எனக்குக் காலு ரொம்ப வலிக்குது. | எனக்குக் காலு ரொம்ப வலிக்குது. |
| வலிக்குது | வலிக்குது |
| ரொம்ப | ரொம்ப வலிக்குது |
| காலு | காலு ரொம்ப வலிக்குது |
| எனக்கு | எனக்குக் காலு ரொம்ப வலிக்குது. |
| (iii) நான் சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன். | நான் சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன். |
| இருக்குறேன் | இருக்குறேன் |

| | |
|---|---|
| வேலெயா | வேலெயா இருக்குறேன் |
| சமெயக்கட்டுலே | சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன் |
| நான் | நான் சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) எனக்கு வலிக்குது. | எனக்கு வலிக்குது. |
| ரொம்ப வலிக்குது | எனக்கு ரொம்ப வலிக்குது. |
| காலு வலிக்குது | எனக்குக் காலு ரொம்ப வலிக்குது. |
| (ii) குழந்தெக்குப் பசிக்குதம்மா. | குழந்தெக்குப் பசிக்குதம்மா. |
| ரொம்பப் பசிக்குதம்மா | குழந்தெக்கு ரொம்பப் பசிக்கு–தம்மா. |
| வயிறு பசிக்குதம்மா | குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குதம்மா. |
| (iii) நீ பரிமாறு. | நீ பரிமாறு. |
| சாப்பாடு பரிமாறு | நீ சாப்பாடு பரிமாறு. |
| உன் மாமாவுக்குப் பரிமாறு | நீ உன் மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு. |

d. Question-Answer drill

(i) Q : சுமதி, என்ன செய்றே ?
A : சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன்.

(ii) Q : நீ இண்ணெக்கு என்னம்மா சமெக்குறே ?
A : உருளெக்கெழங்கு பொரியல், ரசம், அப்பளம்... அவ்வளவுதான்.

(iii) Q : சாப்பாடு ரெடியா ?
A : ரெடி.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நீ மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு. | நீ மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு. |
| Substitute | |
| சமெ | நீ மாமாவுக்குச் சாப்பாடு சமெ. |
| கொடு | நீ மாமாவுக்குச் சோறு கொடு. |
| (ii) நீ குழந்தெக்குச் சோறு ஊட்டு. | நீ குழந்தெக்குச் சோறு ஊட்டு. |
| Substitute | |
| பரிமாறு | நீ குழந்தெக்குச் சோறு பரிமாறு. |
| சமெ | நீ குழந்தெக்குச் சோறு சமெ. |
| கொடு | நீ குழந்தெக்குச் சோறு கொடு. |

(iii) நான் வறுக்குறேன்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| (iii) நான் வறுக்குறேன். | நான் வறுக்குறேன். |
| நாங்க | நாங்க வறுக்குறோம். |
| நாம | நாம வறுக்குறோம். |
| நீ | நீ வறுக்குறே. |
| நீங்க | நீங்க வறுக்குறீங்க. |
| அவன் | அவன் வறுக்குறான். |
| அவ | அவ வறுக்குறா. |
| அவரு | அவரு வறுக்குறாரு. |

(iv) நான் படுக்குறேன்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| (iv) நான் படுக்குறேன். | நான் படுக்குறேன். |
| கொடு | நான் கொடுக்குறேன். |
| எடு | நான் எடுக்குறேன். |
| வறு | நான் வறுக்குறேன். |
| படி | நான் படிக்குறேன். |
| குடி | நான் குடிக்குறேன். |
| சமெ | நான் சமெக்குறேன். |

(v) குழந்தெக்குப் பசிக்குது.
Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| (v) குழந்தெக்குப் பசிக்குது. | குழந்தெக்குப் பசிக்குது. |
| மாமா | மாமாவுக்குப் பசிக்குது. |
| அத்தெ | அத்தெக்குப் பசிக்குது. |
| அப்பா | அப்பாவுக்குப் பசிக்குது. |
| அம்மா | அம்மாவுக்குப் பசிக்குது. |
| அக்கா | அக்காவுக்குப் பசிக்குது. |
| தங்கெ | தங்கெக்குப் பசிக்குது. |
| தம்பி | தம்பிக்குப் பசிக்குது. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் சமெக்குறேன். | நீ என்ன செய்றே ? |
| நான் படுக்குறேன். | நீ என்ன செய்றே ? |
| நான் வறுக்குறேன். | நீ என்ன செய்றே ? |
| நான் பரிமாறுறேன். | நீ என்ன செய்றே ? |

| | |
|---|---|
| (ii) நான் சமெக்குறேன். | நீ என்னம்மா சமெக்குறே ? |
| நான் வறுக்குறேன். | நீ என்னம்மா வறுக்குறே ? |
| நான் பரிமாறுறேன். | நீ என்னம்மா பரிமாறுறே ? |
| நான் ஊட்டுறேன். | நீ என்னம்மா ஊட்டுறே ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ................ (potato)
**உருளெக்கெழங்கு**

(i) ................ (fried food)
(ii) ................ (thin disc-like preparation of black gram)
(iii) ................ (cooked rice)
(iv) ................ (meal)
(v) குழந்தெக்கு................பசிக்குது. (stomach)
(vi) எனக்குக்................வலிக்குது. (leg)
(vii) குழந்தெக்குச் சோறு................ (feed)
(viii) உன் மாமாவுக்குச் சாப்பாடு................ (serve)
(ix) குழந்தெக்கு வயிறு................க்குது. (hunger)
(x) எனக்குக் காலு................க்குது. (pain)
(xi) நான் கொஞ்சம்................க்குறேன். (lie down)

h. Write the word represented by the formula.

Example : **பசிக்குது** பசி + Present

(i) வலி + Present : ............
(ii) இரு + Present : ............
(iii) படு + Present : ............
(iv) சமெ + Present : ............

i. Include the indirect object form of the item given in parentheses as shown in the example.

Example : நீ மொதல்லே சோறு ஊட்டு. (குழந்தெ)
நீ குழந்தெக்கு மொதல்லே சோறு ஊட்டு.

(i) நீ சாப்பாடு பரிமாறு. (உன் மாமா)

j. Combine the following sentences as in the model.

Model : நீ பரிமாறு.
இவரு உன் மாமா.
இது சாப்பாடு.
நீ உன் மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு.

(i) நீ மொதல்லே ஊட்டு.
அது குழந்தெ.
இது சோறு.

k. Answer these questions.

(i) சுமதி என்ன செய்றுங்க ?
(ii) இண்ணெக்கு உங்க மனெவி என்ன சமெக்குறுங்க ?
(iii) உங்களுக்கு உங்க மனெவி சாப்பாடு பரிமாறுறுங்களா ?
(iv) நீங்க எப்பப் படுக்குறீங்க ?
(v) உங்களுக்கு இப்ப வயிறு பசிக்குதா ?
(vi) உங்களுக்கு உருளெக்கெழங்குப் பொரியல் பிடிக்குமா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| சமெயக்கட்டு | 'kitchen' | சமெ | 'cook' |
| உருளெக் கெழங்கு | 'potato' | பொரியல் | 'any fried food' |
| ரசம் | 'Rasam, a kind of soup prepared out of tamarind, pepper and tomato' | அப்பளம் | 'thin disc-like preparation of black gram' |
| ரெடி | 'ready' | வறு | 'fry' |
| வயிறு | 'stomach' | பசி | 'hunger' |
| சோறு | 'cooked rice' | ஊட்டு | 'feed' |
| பரிமாறு | 'serve' | காலு | 'leg' |
| வலி | 'pain' | படு | 'lie down' |

## GRAMMAR

**7.36.122.** The verbs பசி 'be hungry', வலி 'pain' etc., have the subject which is expressed by a noun and the case marker -க்கு/ -உக்கு/ -அக்கு. Example :

7. 36. 122. குழந்தெக்கு வயிறு பசிக்குது.
எனக்குக் காலு வலிக்குது.

**7.36.123.** -ம்மா is a truncated form of -அம்மா. It is, in spoken Tamil, added to any sentence (Refer 1.7.30). Here it is added to the question form என்ன 'what'. Example :

7. 36. 123. நீ என்னம்மா சமெக்குறே ?

**7.36.124.** ரொம்ப is an adverb. It is functionally different from the intensifier ரொம்ப (Refer 1.4.17). It occurs immediately before a verb.

7. 36. 124. எனக்குக் காலு ரொம்ப வலிக்குதம்மா.
குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குது.

Sandhi : ரொம்ப + பசிக்குது →ரொம்பப் பசிக்குது. (Refer S. 14 in 1.11)
மாமாவுக்கு + சாப்பாடு → மாமாவுக்குச் சாப்பாடு (பரிமாறு)
எனக்கு + காலு → எனக்குக் காலு (ரொம்ப வலிக்குதம்மா
Refer S. 18 in 2.14)

# UNIT 8

# LESSON 37

## WHERE DID YOU STUDY ?

### DIALOGUE

| | | |
|---|---|---|
| சுரேஷ் : | வணக்கம், ஸார் ! | Vanakkam, sir. |
| மூர்த்தி : | வாங்க சுரேஷ், உக்காருங்க... நீங்க எங்கே பி.ஏ. படிச்சீங்க ? | Please come Mr. Suresh. Please be seated.... Where did you study B.A. ? |
| சுரேஷ் : | நான் ரோஹ்தக்லே ஜெயின் கல்லூரியிலே படிச்சேன். | I studied in Jain college in Rohtak. |
| மூர்த்தி : | நான் போன வருஷம் ஒரு கருத்தரங்குலே உங்களெப் பார்த்தேன். | I saw you in a seminar last year. |
| சுரேஷ் : | எங்கே ?...அண்ணமலெ யுனிவர்சிட்டியிலேயா ? | Where ?...(Was it) in Annamalai University ? |

| | |
|---|---|
| மூர்த்தி : ஆமா. நீங்க அங்கே படிச்சீங்களா ? | Yes. Did you study there ? |
| சுரேஷ் : ஆமா. நான் அங்கேதான் ஆங்கிலம் எம். ஏ. படிச்சேன். | Yes. I studied M. A. English there. |
| மூர்த்தி : நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ? | Did you stay in the hostel ? |
| சுரேஷ் : ஆமா. நான் பி. ஜி. ஹாஸ்டல்லே தங்குனேன். | Yes. I stayed in the P.G. Hostel. |
| மூர்த்தி : எந்த மெஸ்லே சாப்பிட்டீங்க ? | In which mess did you dine ? |
| சுரேஷ் : பி.ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்…நீங்களும் அண்ணமலெ யுனிவர்சிட்டி தானா ? | I took my food in the P. G. mess. Are you too from Annamalai University ? |
| மூர்த்தி : ஆமா. நானும் அதே யுனிவர்சிட்டிதான். நீங்க இப்ப எங்கே போறீங்க ? | Yes. I too (studied) in the same University. Where are you going now ? |
| சுரேஷ் : போஸ்டாபீசுக்குப் போறேன். அடுத்தவாரம் என் நண்பர் திரிவேதி இங்கே வருரு. அவருக்கு அவசரமா ஒரு தந்தி அனுப்புறேன்… வரட்டுமா ? | (I am) going to the post-office. My friend Trivedi is coming here next week. I am sending a telegram to him urgently. Shall (I) take leave of you ? |
| மூர்த்தி : சரி, வாங்க. | Alright, please do. |

## DRILLS

a. Variation drill

8. 37. 125. நான் ரோஹ்தக்லே படிச்சேன்.
நான் பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.
நீங்க எங்கே படிச்சீங்க ?
நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் ரோஹ்தக்லே படிச்-சேன். | நான் ரோஹ்தக்லே படிச்சேன். |
| படிச்சேன் | படிச்சேன் |
| ரோஹ்தக்லே | ரோஹ்தக்லே படிச்சேன் |
| நான் | நான் ரோஹ்தக்லே படிச்சேன். |
| (ii) நீங்க எங்கே படிச்சீங்க ? | நீங்க எங்கே படிச்சீங்க ? |
| எங்கே படிச்சீங்க ? | எங்கே படிச்சீங்க ? |
| நீங்க | நீங்க எங்கே படிச்சீங்க ? |
| (iii) நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ? | நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ? |
| தங்குனீங்களா ? | தங்குனீங்களா ? |
| ஹாஸ்டல்லே | ஹாஸ்டல்லே தங்குனீங்களா ? |
| நீங்க | நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ? |
| (iv) நீங்க அங்கே படிச்சீங்களா ? | நீங்க அங்கே படிச்சீங்களா ? |
| படிச்சீங்களா ? | படிச்சீங்களா ? |
| அங்கே | அங்கே படிச்சீங்களா ? |
| நீங்க | நீங்க அங்கே படிச்சீங்களா ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நான் பார்த்தேன். | நான் பார்த்தேன். |
| உங்களெப் பார்த்தேன் | நான் உங்களெப் பார்த்தேன். |
| ஒரு செமினர்லே பார்த்தேன் | நான் ஒரு செமினர்லே உங்களெப் பார்த்தேன். |
| போன வருஷம் பார்த்தேன் | நான் போன வருஷம் ஒரு செமி-னர்லே உங்களெப் பார்த்தேன். |
| (ii) நீங்க தங்குனீங்களா ? | நீங்க தங்குனீங்களா ? |
| ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ? | நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ? |

d. Question-Answer drill

(i) Q : நீங்க எங்கே பி. ஏ. படிச்சீங்க ?
A : நான் ஜெயின் கல்லூரியிலே படிச்சேன்.

(ii) Q : நீங்க அங்கே படிச்சீங்களா ?
A : ஆமா, நான் அங்கே தான் ஆங்கிலம் எம். ஏ. படிச்சேன்.

(iii) Q : நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?
A : ஆமா, நான் பி. ஜி. ஹாஸ்டல்லே தான் தங்குனேன்.

(iv) Q : எந்த மெஸ்லே சாப்பிட்டீங்க ?
A : பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.

(v) Q : நீங்களும் அண்ணமலெ யுனிவர்சிட்டிதானு ?
A : ஆமா, நானும் அதே யுனிவர்சிட்டிதான்.

e. Substitution drill

(i) நான் செமினர்லே பார்த்தேன். — நான் செமினர்லே பார்த்தேன்.
Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| கல்லூரி | நான் கல்லூரியிலே பார்த்தேன். |
| யுனிவர்சிட்டி | நான் யுனிவர்சிட்டியிலே பார்த்தேன். |
| போஸ்டாபீஸ் | நான் போஸ்டாபீஸ்லே பார்த்தேன். |
| ஹாஸ்டல் | நான் ஹாஸ்டல்லே பார்த்தேன். |
| பள்ளிக்கூடம் | நான் பள்ளிக்கூடத்துலே பார்த்தேன். |
| வீடு | நான் வீட்டுலே பார்த்தேன். |

(ii) நான் ஹாஸ்டல்லே தங்குனேன். — நான் ஹாஸ்டல்லே தங்குனேன்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| நாங்க | நாங்க ஹாஸ்டல்லே தங்குனோம். |
| நாம | நாம ஹாஸ்டல்லே தங்குனோம். |
| நீ | நீ ஹாஸ்டல்லே தங்குனே. |
| நீங்க | நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்க. |
| அவன் | அவன் ஹாஸ்டல்லே தங்குனான். |
| அவ | அவ ஹாஸ்டல்லே தங்குனா. |
| அவரு | அவரு ஹாஸ்டல்லே தங்குனாரு. |
| அவங்க | அவங்க ஹாஸ்டல்லே தங்குனாங்க. |

(iii) நான் தங்குனேன். — நான் தங்குனேன்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| ஊட்டு | நான் ஊட்டுனேன். |
| போ | நான் போனேன். |
| பரிமாறு | நான் பரிமாறுனேன். |
| அனுப்பு | நான் அனுப்புனேன். |

(iv) நான் படிச்சேன். — நான் படிச்சேன்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| குடி | நான் குடிச்சேன். |
| சமெ | நான் சமெச்சேன் |

| | |
|---|---|
| (v) நான் பார்த்தேன். | நான் பார்த்தேன். |
| Substitute and conjugate the verb suitably. | |
| கொடு | நான் கொடுத்தேன். |
| எடு | நான் எடுத்தேன். |
| படு | நான் படுத்தேன். |
| வறு | நான் வறுத்தேன். |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் ஜெயின் கல்லூரியிலே படிச்சேன். | நீங்க எங்கே படிச்சீங்க ? |
| நான் ஹாஸ்டல்லே தங்குனேன். | நீங்க எங்கே தங்குனீங்க ? |
| நான் மெஸ்லே சாப்பிட்டேன். | நீங்க எங்கே சாப்பிட்டீங்க ? |
| நான் செமினார்லே பார்த்தேன். | நீங்க எங்கே பார்த்தீங்க ? |
| (ii) நான் பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன். | நீங்க எந்த மெஸ்லே சாப்பிட்டீங்க ? |
| நான் ஜெயின் கல்லூரியிலே படிச்சேன். | நீங்க எந்தக் கல்லூரியிலே படிச்சீங்க ? |
| நான் பி. ஜி. ஹாஸ்டல்லே தங்குனேன். | நீங்க எந்த ஹாஸ்டல்லே தங்குனீங்க ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீங்க எங்கே................ச்சீங்க ? (study)
நீங்க எங்கே படிச்சீங்க ?

(i) நான்................உங்களெப் பார்த்தேன். (last year)
(ii) நான் ஹாஸ்டல்லே................னேன். (stay)
(iii) என் நண்பர்................வருரு. (next week)
(iv) நான்................அனுப்புறேன். (urgently)

h. Match the following.

| | |
|---|---|
| நான்<br>நீங்க<br>அவரு | தங்குனேன்<br>வருரு<br>படிச்சீங்களா |

i. Include the locative form of the item given in parentheses as shown in the example.

Example : நான் படிச்சேன். (கல்லூரி)
நான் கல்லூரியிலே படிச்சேன்.

(i) நான் உங்களெப் பார்த்தேன். (செமினார்)
(ii) நீங்க படிச்சீங்களா ? (அண்ணாமலெ யுனிவர்சிட்டி)
(iii) நான் தங்குனேன். (ஹாஸ்டல்)
(iv) நான் சாப்பிட்டேன். (மெஸ்)

j. Write the word represented by the formula.

Example: **கல்லூரியிலே** கல்லூரி + Locative.

(i) செமினார் + Locative : ..................
(ii) ஹாஸ்டல் + Locative : ..............
(iii) மெஸ் + Locative : ..............

k. Frame questions for the answers given below following the model.

Model : A: நான் ரோஹ்தக்லே படிச்சேன்.
Q: நீங்க எங்கே படிச்சீங்க ?

(i) நான் பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.
(ii) நான் ஹாஸ்டல்லே தங்குனேன்.
(iii) நான் ஒரு செமினார்லே உங்களெப் பார்த்தேன்.
(iv) நான் அங்கே ஆங்கிலம் படிச்சேன்.

l. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verb தங்கு 'stay'.

(i) நான் ஹாஸ்டல்லே................
(ii) நீங்க ஹாஸ்டல்லே................
(iii) நண்பர் திரிவேதி................

m. Answer these questions.

(i) நீங்க எங்கே பி.ஏ/பி.எஸ்ஸி படிச்சீங்க ?
(ii) நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?
(iii) உங்க யுனிவர்சிட்டியோடெ பேரு என்ன ?
(iv) நீங்க மெஸ்லே சாப்பிட்டீங்களா ?
(v) நீங்க காலெயிலே போஸ்டாபீஸுக்குப் போவீங்களா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| படி | 'study' | போன | 'last' |
| செமினார் | 'seminar' | தங்கு | 'stay' |
| மெஸ் | 'mess' | போஸ்டாபீஸ் | 'post-office' |
| அடுத்த | 'next' | வாரம் | 'week' |
| அவசரமா | 'urgently' | | |

## GRAMMAR

8.37.125. This Unit exclusively deals with locative case and its various uses. As in other cases, the locative case marker follows the noun it qualifies. There are three locative case markers in Tamil (Refer 2.13.53). The chief characteristic uses of the locative case are

(i) to denote a place where an action takes place,
(ii) to denote a thing in which an action is performed,
(iii) to denote time expression,
(iv) to denote the meaning of 'by' and
(v) to denote a person with whom an action is performed.

In this lesson, the locative is used to denote a place where an action takes place. The locative case marker is always suffixed to a place noun in this case. Example :

8. 37. 125. நான் ரோஷ்றதக்லே படிச்சேன்.
நான் பி. ஜி. ஹாஸ்டல்லே தங்குனேன்.

This locative form is correspondingly questioned using எங்கே 'where'. Example :

8. 37. 125. நீங்க எங்கே படிச்சீங்க ?

Sandhi : படிச்சீங்க + ஆ → படிச்சீங்களா ?
தங்குனீங்க + ஆ → தங்குனீங்களா (Refer S.19 in 2.14)

கல்லூரி + இலே → கல்லூரியிலே
யுனிவர்சிட்டி + இலே → யுனிவர்சிட்டியிலே (Refer S.8 in 1.5)

# UNIT 8

# LESSON 38

## WHEN DID YOU JOIN THE JOB ?

### DIALOGUE

| | | |
|---|---|---|
| மூர்த்தி : | சுரேஷ், நேத்துப் பேப்பர் வாசிச்சீங்களா ?... பேராசிரியரு அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறாராம்...,உங்களுக்கு அவரெத் தெரியுமா ? | Mr. Suresh, did you read newspaper yesterday ? (It is said that) Professor Agasthialingom is going to America. Do you know him ? |
| சுரேஷ் : | ஓ ! ரொம்ப நல்லாத் தெரியும்... அண்ணாமலெ யுனிவர்சிட்டியிலே மொழியியல் பேராசிரியரா இருக்குறாரு. நான் அவரெ ஒரு கூட்டத்துலே சந்திச்சேன் . . . அவருகூடக் கொஞ்ச நேரம் பேசுனேன். | Oh ! (I) know (him) very well. He is a Professor of Linguistics in Annamalai University. I met him in a meeting...I spoke with him for some time. |

| | |
|---|---|
| **மூர்த்தி** : நீங்க எந்த மொழியிலே அப்பப் பேசுனீங்க ? | In what language did you speak (with him) at that time ? |
| சுரேஷ் : ஆங்கிலத்துலே தான் பேசுனேன். ஏன்னா, அப்ப எனக்குத் தமிழ் தெரியாது. அவரும் என்கூட ஆங்கிலத்துலே பேசுனாரு. | (I) spoke (with him) only in English because I did not know Tamil at that time. He too spoke with me in English. |
| **மூர்த்தி** : எந்த ஆண்டுலே அண்ணாமலெ யுனிவர்சிட்டியிலே படிச்சீங்க ? | In which year did you study in Annamalai University ? |
| சுரேஷ் : ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்திரெண்டாம் ஆண்டுலே படிச்சேன். | (I) studied in the year 1972. |
| மூர்த்தி : எப்ப வேலெயிலே சேர்ந்தீங்க ? | When did you join the job ? |
| சுரேஷ் : ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தியஞ்சு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி சேர்ந்தேன் ... நீங்க நாளெக்குக் காலெயிலே விருதுநகர் போறீங்களா ? | (I) joined on the 22nd of August 1975. ...Are you going to Virudhunagar tomorrow morning ? |
| மூர்த்தி : ஆமா, அதிகாலெயிலே போவேன். | Yes, (I) will go in the early morning. |
| சுரேஷ் : எதுலே போறீங்க ? | How are you going ? |
| மூர்த்தி : ரயில்லே போறேன். | (I) am going by train. |

## DRILLS

a. Variation drill

**8. 38. 126.** **நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.**
**நான் வேலெயிலே சேர்ந்தேன்.**
**நீங்க எந்த மொழியிலே பேசுனீங்க ?**

8. 38. 127. நான் அதிகாலெயிலே போவேன்.
நீங்க காலெயிலே போறீங்களா ?
நீங்க எப்ப வேலெயிலே சேர்ந்தீங்க ?

8. 38. 128. நான் ரயில்லே போறேன்.
நீங்க எதுலே போறீங்க ?

8. 38. 129. நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
ஏன்னு, எனக்குத் தமிழ் தெரியாது.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் ஆங்கிலத்துலே பேசுனேன். | நான் ஆங்கிலத்துலே பேசுனேன். |
| பேசுனேன் | பேசுனேன் |
| ஆங்கிலத்துலே | ஆங்கிலத்துலே பேசுனேன் |
| நான் | நான் ஆங்கிலத்துலே பேசுனேன். |
| (ii) நீங்க காலெயிலே போறீங்களா ? | நீங்க காலெயிலே போறீங்களா ? |
| போறீங்களா ? | போறீங்களா ? |
| காலெயிலே | காலெயிலே போறீங்களா ? |
| நீங்க | நீங்க காலெயிலே போறீங்களா ? |
| (iii) அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறுராம். | அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறுராம். |
| போறுராம் | போறுராம் |
| அமெரிக்கா | அமெரிக்கா போறுராம் |
| அகஸ்தியலிங்கம் | அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறுராம். |
| (iv) நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன். | நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன். |
| சேர்ந்தேன் | சேர்ந்தேன் |
| வேலெயிலே | வேலெயிலே சேர்ந்தேன் |
| இருபத்திரெண்டாம் தேதி | இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன் |
| ஆகஸ்ட் மாசம் | ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன் |
| அஞ்சாம் ஆண்டு | அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன் |

| | |
|---|---|
| எழுபத்தி | எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன் |
| தொள்ளாயிரத்தி | தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன் |
| ஆயிரத்தி | ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன் |
| நான் | நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்தி ரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நான் சேர்ந்தேன். | நான் சேர்ந்தேன். |
| வேலெயிலே சேர்ந்தேன் | நான் வேலெயிலே சேர்ந்தேன். |
| ஆகஸ்ட் மாசம் சேர்ந்தேன் | நான் ஆகஸ்ட் மாசம் வேலெயிலே சேர்ந்தேன். |
| ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சுலே சேர்ந்தேன் | நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சுலே ஆகஸ்ட் மாசம் வேலெயிலே சேர்ந்தேன். |
| (ii) அவரும் பேசுனரு. | அவரும் பேசுனரு. |
| ஆங்கிலத்துலே பேசுனரு | அவரும் ஆங்கிலத்துலே பேசுனரு. |
| என்னோடெ பேசுனரு | அவரும் என்னோடெ ஆங்கிலத்துலே பேசுனரு. |
| (iii) நான் போறேன். | நான் போறேன். |
| ரயில்லே போறேன் | நான் ரயில்லே போறேன். |

d. Question-Answer drill

(i) Q : உங்களுக்கு அவரெத் தெரியுமா ?
A : ஓ ! ரொம்ப நல்லாத் தெரியும்.

(ii) Q : நீங்க எந்த மொழியிலே அப்பப் பேசுனீங்க ?
A : ஆங்கிலத்துலேதான் பேசுனேன். ஏன்னு, அப்ப எனக்குத் தமிழ் தெரியாது.

(iii) Q : எப்ப வேலெயிலே சேர்ந்தீங்க ?
A : ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சுலே ஆகஸ்ட் மாசம் வேலெயிலே சேர்ந்தேன்.

e. Substitution drill

(i) நான் அதிகாலெயிலே போவேன். — நான் அதிகாலெயிலே போவேன்.
Substitute
காலெயிலே — நான் காலெயிலே போவேன்.
மத்தியானம் — நான் மத்தியானம் போவேன்.
ராத்திரி — நான் ராத்திரி போவேன்.

(ii) நான் போவேன். — நான் போவேன்.
Substitute and change the verb accordingly.
நாங்க — நாங்க போவோம்.
நாம — நாம போவோம்.
நீ — நீ போவே.
நீங்க — நீங்க போவீங்க.
அவன் — அவன் போவான்.
அவ — அவ போவா.
அவரு — அவரு போவாரு.
அவங்க — அவங்க போவாங்க.

(iii) நான் வேலெயிலே சேர்ந்தேன். — நான் வேலெயிலே சேர்ந்தேன்.
Substitute
நாங்க — நாங்க வேலெயிலே சேர்ந்தோம்.
நாம — நாம வேலெயிலே சேர்ந்தோம்.
நீ — நீ வேலெயிலே சேர்ந்தே.
நீங்க — நீங்க வேலெயிலே சேர்ந்தீங்க.
அவன் — அவன் வேலெயிலே சேர்ந்தான்.
அவ — அவ வேலெயிலே சேர்ந்தா.
அவரு — அவரு வேலெயிலே சேர்ந்தாரு.
அவங்க — அவங்க வேலெயிலே சேர்ந்தாங்க.

(iv) நான் சந்திச்சேன். — நான் சந்திச்சேன்.
Substitute and conjugate the verb suitably.
வாசி — நான் வாசிச்சேன்.
படி — நான் படிச்சேன்.
குடி — நான் குடிச்சேன்.
சிகரெட் பிடி — நான் சிகரெட் பிடிச்சேன்.

(v) நான் பேசுனேன். — நான் பேசுனேன்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| போ | நான் போனேன். |
| எழுது | நான் எழுதுனேன். |
| பரிமாறு | நான் பரிமாறுனேன். |
| ஊட்டு | நான் ஊட்டுனேன். |
| ஏறு | நான் ஏறுனேன். |

(vi) நான் சேர்ந்தேன். — நான் சேர்ந்தேன்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| வா | நான் வந்தேன். |
| தா | நான் தந்தேன். |
| கொண்டுவா | நான் கொண்டுவந்தேன். |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் ஆங்கிலத்துலே பேசுனேன். | நீங்க எதுலே பேசுனீங்க ? |
| அவரு ஆங்கிலத்துலே பேசுனரு. | அவரு எதுலே பேசுனரு ? |
| நான் தமிழ்லே பேசுனேன். | நீங்க எதுலே பேசுனீங்க ? |
| (ii) நான் ரயில்லே போறேன். | நீங்க எதுலே போறீங்க ? |
| நான் பஸ்லே போறேன். | நீங்க எதுலே போறீங்க ? |
| நான் கார்லே போறேன். | நீங்க எதுலே போறீங்க ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீங்க பேப்பர்................ச்சீங்களா ? (read)
நீங்க பேப்பர் **வாசிச்சீங்களா ?**

(i) அவரு................பேராசிரியரா இருக்குறரு. (linguistics)
(ii) நான் ஒரு கூட்டத்துலே அவரெ............ச்சேன். (meet)
(iii) நான் அவரோடெ................னேன். (speak)
(iv) நீங்க எந்த................யிலே பேசுனீங்க ? (language)
(v) எப்ப................யிலே சேர்ந்தீங்க ? (job)
(vi) நான்................போவேன். (in the early morning)
(vii) நீங்க எப்ப வேலெயிலே................ந்தீங்க ? (join)

h. Match the following.

| | |
|---|---|
| நீங்க<br>நான்<br>பேராசிரியரு<br>அவரு | பேசுனாரு<br>போறாராம்<br>வாசிச்சீங்களா ?<br>சந்திச்சேன் |

i. Include the locative form of the item given in parentheses as shown in the example.

Example : நான் படிச்சேன். (யுனிவர்சிட்டி)
நான் யுனிவர்சிட்டியிலே படிச்சேன்.

(i) நான் அவரோடெ பேசுனேன். (ஆங்கிலம்)
(ii) நான் எழுபத்தி அஞ்சுலே சேர்ந்தேன். (வேலெ)
(iii) நான் அவரெச் சந்திச்சேன். (கூட்டம்)

j. Frame questions for the answers given below following the model.

Model : A: நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
Q: நீங்க எதுலே பேசுனீங்க ?

(i) நான் வேலெயிலே சேர்ந்தேன்.
(ii) நான் ரயில்லே போறேன்.

k. Frame eight sentences from the table below.

Example : நான் கல்லூரியிலே இருக்குறேன்.

| | | |
|---|---|---|
| நான் | கல்லூரி<br>ஹாஸ்டல் | இரு<br>தங்கு<br>படி<br>பாரு |

l. Frame four sentences from the table below as in the example.

Example : நாம தமிழ்லே பேசுறோம்.

| | | |
|---|---|---|
| நாம | ஆங்கிலம்<br>தமிழ்<br>இந்தி<br>தெலுங்கு | பேசு |

m. Fill in the blanks with the sentence conjunction ஏன்னா.

(i) நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
...............எனக்குத் தமிழ் தெரியாது.

(ii) எனக்குப் பேராசிரியரெத் தெரியும்.
............நான் அண்ணுமலெ யுனிவர்சிட்டியிலே படிச்சேன்.

(iii) நான் அதிகாலெயிலே போவேன்.
................நான் ரயில்லே போறேன்.

n. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verb பேசு 'speak'.

(i) நான் அவரோடெ.................
(ii) நீங்க எதுலே.................
(iii) அவரும் என்னோடெ.................

o. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verb சேரு 'join'.

(i) நான் வேலெயிலே.................
(ii) நீங்க எப்ப வேலெயிலே.................

p. Select the right word and use it in the blank with suitable form.

கூட்டம், வேலெ, ஆங்கிலம்

(i) நான்.............. .பேசுனேன்.
(ii) நான்................சந்திச்சேன்.
(iii) நான்................சேர்ந்தேன்.

q. Write the word represented by the formula.

Example: **படிச்சேன்** படி + past

(i) சந்தி + Past : .................
(ii) சேரு + Past : .................
(iii) பேசு + Past : .................

r. Answer these questions.

(i) நீங்க அமெரிக்கா போவீங்களா ?
(ii) நீங்க உங்க மனெவியெ/கணவரெ எப்பச் சந்திப்பீங்க ?
(iii) நீங்க தமிழ்லே நல்லாப் பேசுவீங்களா ?
(iv) நீங்க எந்த ஆண்டுலே பி.ஏ/பி.எஸ்ஸி. படிச்சீங்க ?
(v) எப்ப நீங்க வேலெயிலே சேர்ந்தீங்க ?
(vi) நீங்க அதிகாலெயிலே மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?
(vii) நீங்க உங்க ஊருக்கு எதுலே போறீங்க ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| வாசி | 'read' | மொழியியல் | 'linguistics, the study about language' |
| கூட்டம் | 'meeting' | சந்தி | 'meet' |
| கொஞ்சநேரம் | 'for a short time' | பேசு | 'speak' |
| மொழி | 'language' | ஏன்னு | 'because' |
| அப்ப | 'at that time' | ஆண்டு | 'year' |
| ஆயிரம் | 'thousand' | தொள்ளாயிரம் | 'nine hundred' |
| எழுபது | 'seventy' | எப்ப | 'when' |
| வேலெ | 'job' | சேரு | 'join' |
| ஆகஸ்ட் | 'August, name of a month' | அதிகாலெயிலே | 'in the early morning' |

## GRAMMAR

*8.38.126.* The locative case, in this lesson, is used to denote (i) a thing in which an action is performed, (ii) time expression and (iii) the meaning of 'by'. The locative case marker is attached to the nouns like ஆங்கிலம் 'the English language', வேலெ 'job' etc., to indicate the meaning (i). Example :

*8. 38. 126.* நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
நான் வேலெயிலே சேர்ந்தேன்.

This locative form is correspondingly questioned using எதுலே 'in which (language etc.).' Example :

*8. 38. 126.* நீங்க எதுலே பேசுனீங்க ?

*8.38.127.* The locative case marker is attached to the nouns like அதிகாலெ 'early morning', காலெ 'morning' etc., to denote the meaning (ii). Example :

*8. 38. 127.* நான் அதிகாலெயிலே போவேன்.
நீங்க காலெயிலே போறீங்களா ?

In a sentence, this locative form is questioned by using எப்ப 'when'. Example :

*8. 38. 127.* நீங்க எப்ப வேலெயிலே சேர்ந்தீங்க ?

*8.38.128.* The locative case marker is added to the nouns like ரயில் 'train', பஸ் 'bus' etc., to denote the meaning 'by'. Example :

*8. 38. 128.* நான் ரயில்லே போறேன்.

(vi) Q : அப்பா எங்கே ?
A : அப்பா கடெவீதிக்குப் போனுங்க.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நீ பேனுவாலெ எழுது. | நீ பேனுவாலெ எழுது. |
| Substitute | |
| பென்சிலாலெ | நீ பென்சிலாலெ எழுது. |
| (ii) நான் எடுக்கமாட்டேன். | நான் எடுக்கமாட்டேன். |
| Substitute and conjugate the verb suitably | |

| | |
|---|---|
| கொடு | நான் கொடுக்கமாட்டேன். |
| படு | நான் படுக்கமாட்டேன். |
| அடி | நான் அடிக்கமாட்டேன். |
| குடி | நான் குடிக்கமாட்டேன். |

(iii) அப்பா கொடுத்தாங்க. — அப்பா கொடுத்தாங்க.
Substitute

| | |
|---|---|
| அம்மா | அம்மா கொடுத்தாங்க. |
| மாமா | மாமா கொடுத்தாங்க. |
| அத்தெ | அத்தெ கொடுத்தாங்க. |
| அக்கா | அக்கா கொடுத்தாங்க. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் பேனாவாலெ எழுதுவேன். | நான் பேனாவாலெ எழுதமாட்டேன். |
| நான் கத்தியாலெ சீவுவேன். | நான் கத்தியாலெ சீவமாட்டேன். |
| நான் கம்பாலெ அடிப்பேன். | நான் கம்பாலெ அடிக்கமாட்டேன். |
| நான் பேனாவெ எடுப்பேன். | நான் பேனாவெ எடுக்கமாட்டேன். |
| (ii) நான் பேனாவாலெ எழுத மாட்டேன். | நீ பேனாவாலெ எழுதமாட்டேயா? |
| நான் கத்தியாலெ சீவமாட்டேன். | நீ கத்தியாலெ சீவமாட்டேயா ? |
| நான் கம்பாலெ அடிக்கமாட்டேன். | நீ கம்பாலெ அடிக்கமாட்டேயா ? |
| நான் பேனாவெ எடுக்கமாட்டேன். | நீ பேனாவெ எடுக்கமாட்டேயா ? |
| (iii) என்கிட்டெப் பேனா இல்லெ. | உன்கிட்டெப் பேனா இல்லெயா ? |
| என்கிட்டெப் பென்சில் இல்லெ. | உன்கிட்டெப் பென்சில் இல்லெயா ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இது................ (ball point pen)
**இது பால்பாயிண்ட் பேனா.**

(i) ................பேனாவாலெ எழுது. (ordinary)
(ii) இந்தப் பென்சிலெ................றீங்களா ? (sharpen)
(iii) அப்பா................+ஆலெ அடிப்பாங்க. (stick)
(iv) அப்பா கம்பாலெ................ப்பாங்க. (beat)

h. Include the instrumental form of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : நீ வீட்டுப்பாடத்தெ எழுது. (பேனா)
நீ வீட்டுப்பாடத்தெப் பேனாவாலெ எழுது.

(i) நீ வீட்டுப்பாடத்தெ எழுதாதே. (பென்சில்)
(ii) இந்தப் பென்சிலெச் சீவுறீங்களா ? (கத்தி)
(iii) அப்பா என்னெ அடிப்பாங்க. (கம்பு)

i. Give the future negative form of the verb given in parentheses.

(i) நான்............... (எடு)
(ii) நாங்க............... (கொடு)
(iii) நீ............... (போ)
(iv) நீங்க............... (வா)
(v) அவன்............... (அடி)
(vi) அவ............... (எழுது)
(vii) அவரு............... (சீவு)
(viii) அவங்க............... (உக்காரு)

j. Frame eight sentences from the table given below.

Example : நீ பேனாவாலெ எழுது.

| | | |
|---|---|---|
| நீ<br>நீங்க | பேனா<br>பென்சில் | எழுது<br>வரெ |

k. Join the following according to the sandhi rules.

(i) பேனா + ஆலெ : ........
(ii) பேனா + எ : ........
(iii) கம்பு + ஆலெ : ........
(iv) கத்தி + ஆலெ : ........

l. Answer these questions.

(i) உங்ககிட்டெ பால்பாயிண்ட் பேனா இருக்குதா ?
(ii) நீங்க உங்க மாணவங்களெக் கம்பாலெ அடிப்பீங்களா ?
(iii) கலா எந்தப் பேனாவாலெ வீட்டுப்பாடம் எழுதுறா ?
(iv) நீங்க தினசரி வீட்டுப்பாடம் எழுதுறீங்களா ?
(v) நீங்க உங்க மனெவியோடெ/கணவரோடெ பேனாவெ எடுக்கமாட்டீங்களா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| பால்பாயிண்ட் பேனா | 'ball point pen' | சாதாரண | 'ordinary' |
| கத்தி | 'knife' | சீவு | 'sharpen' |
| கம்பு | 'stick' | அடி | 'beat' |

## GRAMMAR

***11.44.137.*** The case form which consists of a noun and the case marker –ஆலெ is called instrumental case. It is used in the following meanings.

(i) To denote an instrument with which the action is performed.
(ii) To denote an object by means of which the action is performed.
(iii) To denote the cause and agent of the action.
(iv) To denote the object which is used in implementing the action.

The different uses of the instrumental case mentioned above are determined by the different classes of verbs and the various kinds of nouns with which the marker –ஆலெ occurs. In this lesson the instrumental case marker –ஆலெ is used in the first meaning listed above. Example :

***11. 44. 137.*** நீ வீட்டுப்பாடத்தெச் சாதாரணப் பேனாவாலெ எழுது.
அப்பா என்னெக் கம்பாலெ அடிப்பாங்க.

In these sentences, பேனா 'pen' and கம்பு 'stick' are the instruments with which the actions of writing and beating are performed respectively.

Sandhi : என் + எ → என்னெ (Refer S.11 in 1.8)
மூர்த்தி + ஓடெ → மூர்த்தியோடெ
கத்தி + ஆலெ → கத்தியாலெ
சரி + அம்மா → சரியம்மா (Refer S.8 in 1.5)
பேனா + ஆலெ → பேனாவாலெ
பேனா + எ → பேனாவெ (Refer S.9 in 1.7)

# UNIT 11

# LESSON 45

## WHAT DO WE DO WITH LEGS ?

### DIALOGUE

| | |
|---|---|
| சுரேஷ் : கலா, நான் ஒரு கேள்வி கேக்குறேன்.... நீ பதில் சொல்லுறேயா ? | Kala, I will ask a question... Will you answer ? |
| கலா : சரி மாமா. கேளுங்க. | Okey uncle. Please ask. |
| சுரேஷ் : கண்ணு, காது, மூக்கு, வாய், கை, காலு இதெல்லாம் உடல் உறுப்பு, இல்லெயா ? இதாலெ நாம என்ன செய்றோம் ? | Eyes, ears, nose, mouth, hands and legs are all body parts, are they not ? What do we do with them ? |

| | |
|---|---|
| கலா : இது ரொம்பச் சின்னக் கேள்வி, மாமா. விடெ சொல்லட்டுமா.... ? நாம கண்ணாலெ பார்க்குறோம் ; காதாலெ கேக்குறோம். | It is a very simp'e question, uncle. Shall (I) answer...? We see with eyes; and hear with ears. |
| சுரேஷ் : எதாலெ சுவாசிக்குறோம்? | With which do we breathe ? |
| கலா : மூக்காலெ சுவாசிக்குறோம். | (We) breathe with nose. |
| சுரேஷ் : அப்புறம் ? | Then ? |
| கலா : வாயாலெ பேசுறோம்; சாப்பிடுறோம் ; கையாலெ வேலெ செய்றோம் ; | (We) speak with mouth ; eat (with mouth); and work with hands. |
| சுரேஷ் : ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ? | Howmany fingers are in a hand ? |
| கலா : ஒரு கையிலெ அஞ்சு வெரலு இருக்குது. | There are five fingers in a hand. |
| சுரேஷ் : காலாலெ என்ன செய்றோம்.... ? உனக்குத் தெரியுமா ? | What do (we) do with legs...Do you know ? |
| கலா : தெரியும்....காலாலெ நடக்குறோம்.... மாமா, அப்பா வருங்க. | (Yes I) know....(we) walk with legs... Uncle, father is coming. |
| சுரேஷ் : கெட்டிக்காரி ! | Clever girl ! |

## DRILLS

a. Variation drill

**11. 45. 138.** நாம கண்ணாலெ பார்க்குறோம்.
நாம காதாலெ கேக்குறோம்.
நாம கையாலெ வேலெ செய்றோம்.
நாம கையாலெ என்ன செய்றோம் ?
நாம எதாலெ வேலெ செய்றோம் ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) நாம கண்ணாலெ பார்க்குறோம். | நாம கண்ணாலெ பார்க்குறோம். |
| பார்க்குறோம் | பார்க்குறோம் |

| | |
|---|---|
| கண்ணுலெ | கண்ணுலெ பார்க்குறோம் |
| நாம | நாம கண்ணுலெ பார்க்குறோம். |
| (ii) நாம காதாலெ கேக்குறோம். | நாம காதாலெ கேக்குறோம். |
| கேக்குறோம் | கேக்குறோம் |
| காதாலெ | காதாலே கேக்குறோம் |
| நாம | நாம காதாலெ கேக்குறோம். |
| (iii) நாம கையாலெ வேலெ செய்றோம். | நாம கையாலெ வேலெ செய்றோம். |
| செய்றோம் | செய்றோம் |
| வேலெ | வேலெ செய்றோம் |
| கையாலெ | கையாலெ வேலெ செய்றோம் |
| நாம | நாம கையாலெ வேலெ செய்றோம். |
| (iv) நாம இதாலெ என்ன செய்றோம். | நாம இதாலெ என்ன செய்றோம் ? |
| என்ன செய்றோம் ? | என்ன செய்றோம் ? |
| இதாலெ | இதாலெ என்ன செய்றோம் ? |
| நாம | நாம இதாலெ என்ன செய்றோம் ? |
| (v) நாம எதாலெ சுவாசிக்குறோம் ? | நாம எதாலெ சுவாசிக்குறோம் ? |
| எதாலெ சுவாசிக்குறோம் ? | எதாலெ சுவாசிக்குறோம் ? |
| நாம | நாம எதாலெ சுவாசிக்குறோம் ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நாம செய்றோம். | நாம செய்றோம். |
| வேலெ செய்றோம் | நாம வேலெ செய்றோம். |
| கையாலெ செய்றோம் | நாம கையாலெ வேலெ செய்றோம். |
| (ii) நாம பேசுறோம். | நாம பேசுறோம். |
| வாயாலெ பேசுறோம் | நாம வாயாலெ பேசுறோம். |
| (iii) நாம சுவாசிக்குறோம். | நாம சுவாசிக்குறோம். |
| மூக்காலெ சுவாசிக்குறோம் | நாம மூக்காலெ சுவாசிக்குறோம். |
| (iv) நாம நடக்குறோம். | நாம நடக்குறோம். |
| காலாலெ நடக்குறோம் | நாம காலாலெ நடக்குறோம். |

d. Question-Answer drill

(i) Q : நான் ஒரு கேள்வி கேக்குறேன், நீ பதில் சொல்லுறேயா ?

A : சரி, கேளுங்க.

(ii) Q : ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ?
A : ஒரு கையிலே அஞ்சு வெரலு இருக்குது.

(iii) Q : காலாலெ என்ன செய்றோம் ?
A : காலாலெ நடக்குறோம்.

(iv) Q : எதாலெ சுவாசிக்குறோம் ?
A : நாம மூக்காலெ சுவாசிக்குறோம்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நாம வாயாலெ சாப்பிடுறோம். | நாம வாயாலெ சாப்பிடுறோம். |
| Substitute and change the noun suitably. | |
| கை | நாம கையாலெ சாப்பிடுறோம். |
| (ii) நாம மூக்காலெ சுவாசிக்குறோம். | நாம மூக்காலெ சுவாசிக்குறோம். |
| Substitute and change the noun suitably. | |
| வாய் | நாம வாயாலெ சுவாசிக்குறோம். |
| (iii) ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ? | ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ? |
| Substitute and change the noun suitably. | |
| காலு | ஒரு காலுலே எத்தனெ வெரலு இருக்குது ? |
| (iv) கண்ணு ஒரு உறுப்பு. | கண்ணு ஒரு உறுப்பு. |
| Substitute | |
| காது | காது ஒரு உறுப்பு. |
| மூக்கு | மூக்கு ஒரு உறுப்பு. |
| வாய் | வாய் ஒரு உறுப்பு. |
| கை | கை ஒரு உறுப்பு. |
| வெரலு | வெரலு ஒரு உறுப்பு. |
| காலு | காலு ஒரு உறுப்பு. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நாம மூக்காலெ சுவாசிக்குறோம். | நாம எதாலெ சுவாசிக்குறோம் ? |
| நாம கண்ணுலெ பார்க்குறோம். | நாம எதாலெ பார்க்குறோம் ? |
| நாம காதாலெ கேக்குறோம். | நாம எதாலெ கேக்குறோம் ? |
| நாம வாயாலெ பேசுறோம். | நாம எதாலெ பேசுறோம் ? |
| நாம கையாலெ வேலெ செய்றோம். | நாம எதாலெ வேலெ செய்றோம் ? |
| நாம காலாலெ நடக்குறோம். | நாம எதாலெ நடக்குறோம் ? |

| | |
|---|---|
| (ii) நாம காலாலெ நடக்குறோம். | நாம காலாலெ என்ன செய்றோம் ? |
| நாம வாயாலெ பேசுறோம். | நாம வாயாலெ என்ன செய்றோம்? |
| நாம காதாலெ கேக்குறோம். | நாம காதாலெ என்ன செய்றோம் ? |
| நாம மூக்காலெ சுவாசிக்கு-றோம். | நாம மூக்காலெ என்ன செய்றோம்? |
| நாம கண்ணுலெ பார்க்குறோம் | நாம கண்ணுலெ என்ன செய்-றோம் ? |
| நாம கையாலெ வேலெ செய்றோம். | நாம கையாலெ என்ன செய்-றோம் ? |

## EXERCISES

**g.** Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model: நான் ஒரு...............கேக்குறேன். (question)
நான் ஒரு **கேள்வி** கேக்குறேன்.

(i) நீ...............றேயா ? (answer)
(ii) கை உடலு............... (human body part)
(iii) நான்...............சொல்லட்டுமா ? (answer)
(iv) நாம...............+ஆலெ பார்க்குறோம். (eye)
(v) நாம...............+ஆலெ கேக்குறோம். (ear)
(vi) நாம...............+ஆலெ சுவாசிக்குறோம். (nose)
(vii) மூக்காலெ...............க்குறும். (breathe)
(viii) ...............+ஆலெ பேசுறோம். (mouth)
(ix) ...............+ஆலெ வேலெ செய்றோம். (hand)
(x) கையிலே எத்தனெ...............இருக்குது ? (finger)
(xi) காலாலெ...............க்குறோம். (walk)
(xii) நீ............... (clever girl)

h. Include the instrumental form of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : நாம பார்க்குறோம். (கண்ணு)
நாம **கண்ணுலெ** பார்க்குறோம்.

(i) நாம கேக்குறோம். (காது)
(ii) நாம சுவாசிக்குறோம். (மூக்கு)
(iii) நாம சாப்பிடுறோம். (வாய்)
(iv) நாம என்ன செய்றோம். (இது)

i. Select the right word and use it in the blank with suitable form.

பாரு, கேளு, சுவாசி, நட, சாப்பிடு

(i) நாம காதாலெ...............

(ii) நாம காலாலெ...............
(iii) நாம மூக்காலெ...............
(iv) நாம கண்ணாலெ...............
(v) நாம வாயாலெ...............

j. Write the word represented by the formula.

Example : **செய்றோம்** செய் + Present

(i) சாப்பிடு + Present : ...............
(ii) பாரு + Present : ...............
(iii) பேசு + Present : ...............
(iv) கேளு + Present : ...............
(v) சுவாசி + Present : ...............

k. Match the following.

| | |
|---|---|
| நான்<br>நாம<br>நீ<br>அப்பா<br>வெரலு | சாப்பிடுறோம்<br>கேக்குறேன்<br>இருக்குது<br>வரு:ரு<br>சொல்லுறே |

l. Frame eight sentences from the table given below.

Example : நாம கையாலெ வேலெ செய்றோம்.

| | | |
|---|---|---|
| நாம<br>நாங்க | கை | வேலெ செய்<br>கொடு<br>எடு<br>வாங்க |

m. Join the following according to the sandhi rules.

(i) **கண்ணு** + ஆலெ : ............ (ii) கை + இலே : ...............
**காது** + ஆலெ : ...............
காலு + ஆலெ : ...............
**இது** + ஆலெ : ...............

n. Answer the questions.

(i) எதெல்லாம் உடலு உறுப்பு ?
(ii) நாம கண்ணாலெ என்ன செய்றோம் ?
(iii) நாம காதாலெ என்ன செய்றோம் ?
(iv) ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ?
(v) நாம எதாலெ நடக்குறோம் ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கேள்வி | 'question' | பதில் | 'answer (noun)' |
| பதில் சொல்லு | 'answer (verb)' | கண்ணு | 'eye' |
| காது | 'ear' | மூக்கு | 'nose' |
| வாய் | 'mouth' | கை | 'hand' |
| உடலு | '(human) body' | உறுப்பு | '(human) body part' |
| விடை | 'answer (noun)' | கேளு | 'hear' |
| சுவாசி | 'breathe | வேலெ செய் | 'work' |
| வெரலு | 'finger' | நட | 'walk' |
| கெட்டிக்காரி | 'clever girl' | | |

## GRAMMAR

***11.45.138.*** The instrumental case illustrated in this lesson forms a class of nouns by means of which the action is performed. This meaning of the instrumental case is again indicated by its case marker -ஆலெ. Example :

*11. 45. 138.* நாம கண்ணாலெ பார்க்குறோம்.
நாம காதாலெ கேக்குறோம்.
நாம கையாலெ வேலெ செய்றோம்.
நாம எதாலெ வேலெ செய்றோம் ?

It is important to note that the case marker -ஆலெ is used in Tamil whenever the function of the human/non-human body parts is to be expressed.

Sandhi : இது + ஆலெ → இதாலெ
காது + ஆலெ → காதாலெ
கண்ணு + ஆலெ → கண்ணாலெ
எது + ஆலெ → எதாலெ
மூக்கு + ஆலெ → மூக்காலெ (Refer S.3 in 1.2)
சின்ன + கேள்வி → சின்னக் கேள்வி (Refer S.4 in 1.2)

# UNIT 11

# LESSON 46

## MEETING A FRIEND FOR RECOMMENDATION

### DIALOGUE

| | | |
|---|---|---|
| சுரேஷ் : | வணக்கம், மூர்த்தி ஸார்! | Vanakkam, Mr. Murthi. |
| மூர்த்தி : | வணக்கம், மிஸ்டர் சுரேஷ்... ரொம்ப நேரம் காத்திருக்குறீங்களா ? | Vanakkam, Mr. Suresh...Are (you) waiting for a long time ? |
| சுரேஷ் : | இல்லெங்க. இப்பத்தான் வந்தோம் ... பஸ் லேட்டா ? | No sir. (We) came just now... Was the bus late ? |
| மூர்த்தி : | ஆமாங்க. அரெமணி- நேரம் லேட்டா வந்தது. அதனாலெ கொஞ்சம் தாமதம்....உக்காருங்க. | Yes. It came late by a half an hour. That is why (I) am a bit late...Please be seated. |

| | |
|---|---|
| சுரேஷ் : இவன் என்னோடெ நண்பன் திரிவேதி. இவன் தங்கெ எங்க இன்ஸ்டிடியூட்டுலே ஸ்டெனோ வேலெக்கு மனுப்போடுறா .... நீங்க அவளுக்காகச் சிபாரிசு பண்ணுவீங்களா... ? உங்களாலெ முடியுமா ? | He is my friend Trivedi. His younger sister is applying for the post of a steno in our institute. Would you please give her your recommendation... ? Can you do (this) ? |
| மூர்த்தி : நான் டைரக்டர்கிட்டெச் சொல்லுறேன்...அவ்வளவு தான் என்னாலெ முடியும். அதுவும் உங்களுக்காக இந்தக் காரியத்தெச் செய்றேன். | I will tell the director....That is all I can do. That too, (I) am doing this favour because of you only. |
| சுரேஷ் : அது போதும் ஸார். ரொம்ப நன்றி. எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம். இந்த உதவியெ எப்பவும் மறக்க மாட்டேன். நாங்க வரட்டுமா ? | That is enough, sir. Thank (you) very much. We are putting you into great trouble. (I) will never forget this help. Shall we take leave of you ? |
| மூர்த்தி : வாங்க. வணக்கம். | Please do. Vanakkam ! |

## DRILLS

a. Variation drill

**11. 46. 139.** எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
அதனாலெ கொஞ்சம் தாமதம்.

**11. 46. 140.** என்னாலெ முடியும்.
உங்களாலெ முடியுமா ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம். | எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம். |
| சிரமம் | சிரமம் |
| ரொம்ப | ரொம்பச் சிரமம் |
| உங்களுக்கு | உங்களுக்கு ரொம்பச் சிரமம் |
| எங்களாலெ | எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம். |

| | |
|---|---|
| (ii) உங்களாலெ முடியுமா ? | உங்களாலெ முடியுமா ? |
| முடியுமா ? | முடியுமா ? |
| உங்களாலெ | உங்களாலெ முடியுமா ? |
| (iii) என்னாலெ முடியும். | என்னாலெ முடியும். |
| முடியும் | முடியும் |
| என்னாலெ | என்னாலெ முடியும். |
| (iv) அதனாலெ கொஞ்சம் தாமதம். | அதனாலெ கொஞ்சம் தாமதம். |
| தாமதம் | தாமதம் |
| கொஞ்சம் | கொஞ்சம் தாமதம் |
| அதனாலெ | அதனாலெ கொஞ்சம் தாமதம். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) என்னாலெ முடியும். | என்னாலெ முடியும். |
| அவ்வளவுதான் முடியும் | என்னாலெ அவ்வளவுதான் முடியும். |
| (ii) உங்களுக்குச் சிரமம். | உங்களுக்குச் சிரமம். |
| ரொம்பச் சிரமம் | உங்களுக்கு ரொம்பச் சிரமம். |
| எங்களாலெ சிரமம் | உங்களுக்கு எங்களாலெ ரொம்பச் சிரமம். |
| (iii) அதனாலெ தாமதம். | அதனாலெ தாமதம். |
| கொஞ்சம் தாமதம் | அதனாலெ கொஞ்சம் தாமதம். |

d. Question-Answer drill

(i) Q : நீங்க ரொம்ப நேரமாக் காத்திருக்குறீங்களா ?
A : இல்லெங்க, இப்பத்தான் வந்தோம்.

(ii) Q : பஸ் லேட்டா ?
A : ஆமா, அரெமணிநேரம் லேட்டா வந்தது.

(iii) Q : உங்களாலெ முடியுமா ?
A : என்னாலெ முடியும்.

(iv) Q : நாங்க வரட்டுமா ?
A : வாங்க, வணக்கம்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) உங்களாலெ முடியுமா ? | உங்களாலெ முடியுமா ? |
| Substitute and change the pronoun suitably. | |
| நான் | என்னாலெ முடியுமா ? |
| நாம | நம்மாலெ முடியுமா ? |
| நீ | உன்னாலெ முடியுமா ? |

| | |
|---|---|
| **அவன்** | **அவனாலெ முடியுமா ?** |
| **அவ** | **அவளாலெ முடியுமா ?** |
| **அவரு** | **அவராலெ முடியுமா ?** |
| **அவங்க** | **அவங்களாலெ முடியுமா ?** |

| | |
|---|---|
| (ii) உங்களுக்காகச் செய்றேன். Substitute and change the pronoun suitably. | உங்களுக்காகச் செய்றேன். |
| இவன் | இவனுக்காகச் செய்றேன் |
| இவ | இவளுக்காகச் செய்றேன். |
| இவரு | இவருக்காகச் செய்றேன். |
| இவங்க | இவங்களுக்காகச் செய்றேன். |
| இது | இதுக்காகச் செய்றேன். |

| | |
|---|---|
| (iii) உங்களுக்கு ரொம்பச் சிரமம். Substitute and change the pronoun suitably. | உங்களுக்கு ரொம்பச் சிரமம். |
| நான் | எனக்கு ரொம்பச் சிரமம். |
| அவன் | அவனுக்கு ரொம்பச் சிரமம். |
| அவ | அவளுக்கு ரொம்பச் சிரமம். |
| அவங்க | அவங்களுக்கு ரொம்பச் சிரமம். |
| அது | அதுக்கு ரொம்பச் சிரமம். |

| | |
|---|---|
| (iv) அரெமணி நேரம் லேட்டா வந்தது. Substitute | அரெமணி நேரம் லேட்டா வந்தது. |
| கால் | கால்மணி நேரம் லேட்டா வந்தது. |
| முக்கால் | முக்கால்மணி நேரம் லேட்டா வந்தது. |
| ஒரு | ஒருமணி நேரம் லேட்டா வந்தது. |
| ரெண்டு | ரெண்டுமணி நேரம் லேட்டா வந்தது. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) எங்களாலெ உங்களுக்குச் சிரமம். | யாராலெ உங்களுக்குச் சிரமம் ? |
| அவங்களாலெ உங்களுக்குச் சிரமம். | யாராலெ உங்களுக்குச் சிரமம் ? |
| அவளாலெ உங்களுக்குச் சிரமம். | யாராலெ உங்களுக்குச் சிரமம் ? |
| அவராலெ உங்களுக்குச் சிரமம். | யாராலெ உங்களுக்குச் சிரமம் ? |

(ii) என்னாலெ முடியும். — என்னாலெ முடியாது.
உன்னாலெ முடியும். — உன்னாலெ முடியாது.
இவராலெ முடியும். — இவராலெ முடியாது.
இவளாலெ முடியும். — இவளாலெ முடியாது.

(iii) உங்களாலெ முடியுமா ? — உங்களாலெ முடியாதா ?
அவங்களாலெ முடியுமா ? — அவங்களாலெ முடியாதா ?
அவளாலெ முடியுமா ? — அவளாலெ முடியாதா ?
அவராலெ முடியுமா ? — அவராலெ முடியாதா ?

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : அதனாலெ கொஞ்சம்................ (late)
அதனாலெ கொஞ்சம் தாமதம்.

(i) உங்களாலெ................+ ஆ. (can)
(ii) எங்களாலெ உங்களுக்கு................ (trouble)
(iii) இந்த................+ எ மறக்கமாட்டேன். (help)
(iv) இந்த உதவியெ................மறக்கமாட்டேன். (ever)
(v) இந்த உதவியெ எப்பவும்................க்கமாட்டேன். (forget)

h. Change the given nouns in to the instrumental (in the meaning of 'causal') and add at the beginning of the sentences given below.

(i) நாங்க : உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
(ii) நான் : உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
(iii) அவன் : உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
(iv) அவ : கொஞ்சம் தாமதம்.
(v) அவங்க : கொஞ்சம் தாமதம்.
(vi) அது : கொஞ்சம் தாமதம்.

i. Include the dative form (in the purposive meaning) of the item given in parentheses against each of the sentences given below.

(i) இவன் தங்கெ மனுப்போடுரு. (ஸ்டெனோ வேலெ)
(ii) நீங்க சிபாரிசு பண்ணுவீங்களா ? (அவ)

j. Frame questions for the answers given below following the model.

Model : A: என்னாலெ முடியும்.
Q: உங்களாலெ முடியுமா ?

(i) எங்களாலெ முடியும்.
(ii) உன்னாலெ முடியும்.

k. Frame twelve sentences from the table given below.

Example : உன்னாலெ முடியுமா ?

| | |
|---|---|
| நான்<br>நாங்க<br>நாம<br>நீ<br>நீங்க<br>அவன் | முடியுமா ?<br>முடியும் |

l. Join the following according to the sandhi rule.

(i) எங்க + ஆலெ : ............... அவங்க + ஆலெ : ...............
உங்க + ஆலெ : ............... அவ + ஆலெ : ...............

m. Answer these questions.

(I) லதா என்ன வேலெக்கு மனுப்போடுறா ?
(ii) சுரேஷோடெ நண்பனோடெ பேரு என்ன ?
(iii) நீங்க நேத்து வகுப்புக்கு லேட்டா வந்திங்களா ?
(iv) நீங்க இந்தக் கவிதெயெப் படிக்குறீங்களா ? உங்களாலெ முடியுமா ?
(v) நீங்க வகுப்புக்குத் தினந்தோறும் தாமதமா வறீங்களா ?
(vi) நீங்க எந்த வருஷம் ஆசிரியரு வேலெக்கு மனுப்போட்டீங்க ?
(vii) உங்க ஆசிரியரு வேலெக்கு உங்க நண்பரு சிபாரிசு பண்ணுறா ?
(viii) உங்க ஆசிரியரு வேலெக்காக யாரு சிபாரிசு பண்ணுறாங்க ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| நேரம் | 'time' | லேட் | 'late' |
| தாமதம் | 'late' | முடியும் | 'can' |
| காரியம் | 'work' | சிரமம் | 'trouble' |
| உதவி | 'help' | எப்பவும் | 'ever' |
| மற | 'forget' | | |

## GRAMMAR

*11. 46. 139.* In this lesson, as we mentioned earlier, the case marker -ஆலெ is added to the nouns to express the meaning of the cause and agent of the action. Example :

*11. 46. 139.* எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
அதனாலெ கொஞ்சம் தாமதம்.

The case marker -ஆலெ is here suffixed to the noun எங்க(ள்) and together it has the force of meaning 'because of us'.

***11. 46. 140.*** Like defective verbs, the verbs முடியும் 'can' and முடியாது 'cannot' do not have all the required forms of conjugation. They are impersonal and common to all genders. Unlike the other defective verbs these verbs obligatorily require instrumental as their subject. Example :

***11. 46. 140.*** என்னாலெ முடியும்.
உங்களாலெ முடியுமா ?

Sandhi : காத்திருக்குறீங்க + ஆ→ காத்திருக்குறீங்களா ?
சிபாரிசு பண்ணுவீங்க + ஆ→ சிபாரிசு பண்ணுவீங்களா ?
(Refer S.19 in 2.14)
அவளுக்காக + கொஞ்சம் → அவளுக்காகக் கொஞ்சம் (சிபாரிசு பண்ணுவீங்களா ?) (Refer S.25 in 10.42)
உங்க + ஆலெ → உங்களாலெ
உங்க + உக்காக → உங்களுக்காக
உங்க + உக்கு → உங்களுக்கு (Refer S.6 in 1.5)
ரொம்ப + சிரமம் → ரொம்பச் சிரமம் (Refer S.14 in 1.11)

# UNIT 11

## LESSON 47

MADURAI

**DIALOGUE**

| | | |
|---|---|---|
| சுரேஷ் : | திரிவேதி, இதுதான் மதுரெ மீனாட்சி அம்மன் கோயில். | Trivedi, this is Madurai Meenakshi-amman temple. |
| திரிவேதி : | இந்தக் கோயிலெ யாரு கட்டுனாங்க ? | Who built this temple ? |
| சுரேஷ் : | இந்தக் கோயிலெ ஒரு பாண்டிய அரசரு கட்டு-னாரு. அவரு பேரு சுந்தர பாண்டியன். அவரு இந்தக்கோயில் பூராவெ-யும் கல்லாலெயே கட்டு-னாரு. ஷாஜஹான் தாஜ்-மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு இல்லெயா ? அதேமாதிரி திருமலெ நாயக்கர் மகாலெ வெறும் செங்-கல்லுலே திருமலெ நாயக்கர் கட்டுனாரு. | A Pandya king built this temple. His name is Sundara Pandyan. He built this whole temple only with stones. Shahjahan built Taj Mahal with marbles only, isn't it ? Like that Thirumalai Naikkar built the Thiru-malai Naikkar Mahal with bricks only. |

| | |
|---|---|
| திரிவேதி : அந்த மகால் எங்கே இருக்குது ? | Where is that Mahal ? |
| சுரேஷ் : பக்கத்துலே தான் இருக்குது. அதோ ! அது தங்கக் கொடிமரம். | (It) is very near. Look ! That is the golden flagstaff. |
| திரிவேதி : அந்தக் கொடிமரத்தெத் தங்கத்தாலெயே செய்தாங்களா ? | Did they make that flagstaff with gold only ? |
| சுரேஷ் : இல்லெ. வெறும் மரத்துலே செய்தாங்க. அப்புறம் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க. இங்கே 'சித்திரெப் பௌர்ணமி' ரொம்ப விசேஷம். அண்ணெக்குக் கள்ளழகர் ஆத்துலே எறங்குவாரு. அண்ணெக்குக் கள்ளழகரெப் பூவாலெ அலங்கரிப்பாங்க. ஊர்வலமும் நடத்துவாங்க. | No. (They) made it only of wood. Then (they) wrapped (it) with gold plates. The 'Chaitra fullmoon' festival is the speciality here. The Lord Kallazhahar would step in to the river on that day. The Lord Kallazhahar will be adorned with flowers on that day. (They) will hold the procession also. |
| திரிவேதி : சரி, நாம இப்ப திருமலெ நாயக்கர் மகாலுக்குப் போகலாமா ? | Alright, shall we go to Thirumalai Naikkar Mahal now ? |
| சுரேஷ் : சரி, போவோம். | Okey, we shall go. |

## DRILLS

a. Variation drill

**11. 47. 141.** ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.
அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.
அந்தக் கொடிமரத்தெ எதாலெ செய்தாங்க ?

**11. 47. 142.** திருமலெ நாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.
கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.
கொடிமரத்தெ எதுலே செய்தாங்க ?

**11. 47. 143.** திருமலெநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு.
அந்தக் கொடிமரத்தெ வெறும் தங்கத்தாலெயே செய்தாங்களா ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு. | ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு. |
| கட்டுனாரு | கட்டுனாரு |
| கல்லாலெ | கல்லாலெ கட்டுனாரு |
| பளிங்கு | பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு |
| தாஜ்மகாலெ | தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு |
| ஷாஜஹான் | ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு. |
| (ii) அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு. | அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு. |
| கட்டுனாரு | கட்டுனாரு |
| கல்லாலெ | கல்லாலெ கட்டுனாரு |
| கோயிலெ | கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு |
| அவரு | அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு. |
| (iii) திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு. | திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு. |
| கட்டுனாரு | கட்டுனாரு |
| செங்கல்லுலே | செங்கல்லுலே கட்டுனாரு |
| மகாலெ | மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு |
| திருமலெநாயக்கர் | திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு. |
| (iv) அந்தக் கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க. | அந்தக் கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க. |
| வேய்ஞ்சாங்க | வேய்ஞ்சாங்க |
| தங்கத்தகட்டுலே | தங்கத்தகட்டுலே வேய்ஞ்சாங்க |
| கொடிமரத்தெ | கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க |
| அந்த | அந்தக் கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க. |
| (v) திருமலெநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு. | திருமலெ நாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு. |
| கட்டுனாரு | கட்டுனாரு |
| செங்கல்லுலே | செங்கல்லுலே கட்டுனாரு |
| வெறும் | வெறும் செங்கல்லுலே கட்டுனாரு |

| | |
|---|---|
| மகாலெ | மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனரு |
| திருமலெ நாயக்கர் | திருமலெநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனரு. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) ஷாஜஹான் கட்டுனரு. | ஷாஜஹான் கட்டுனரு. |
| பளிங்குக்கல்லாலெ கட்டுனரு | ஷாஜஹான் பளிங்குக் கல்லாலெ கட்டுனரு. |
| தாஜ்மகாலெக் கட்டுனரு | ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனரு. |
| (ii) திருமலெநாயக்கர் கட்டுனரு. | திருமலெ நாயக்கர் கட்டுனரு. |
| செங்கல்லுலே கட்டுனரு | திருமலெ நாயக்கர் செங்கல்லுலே கட்டுனரு. |
| மகாலெக் கட்டுனரு | திருமலெ நாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனரு. |

d. Question-Answer drill

(i) Q : அந்த மகால் எங்கே இருக்குது ?
A : பக்கத்துலேதான் இருக்குது ?

(ii) Q : திருமலெநாயக்கர் மகாலுக்குப் போகலாமா ?
A : சரி, போவோம்.

(iii) Q : அந்தக் கொடிமரத்தெ வெறும் தங்கத்தாலெயே செய்தாங்களா ?
A : இல்லெ, தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) தங்கத்தாலெயே செய்தாங்களா ? Substitute and change the noun suitably. | தங்கத்தாலெயே செய்தாங்களா ? |
| கல்லு | கல்லாலெயே செய்தாங்களா ? |
| பளிங்குக் கல்லு | பளிங்குக் கல்லாலெயே செய்தாங்களா ? |
| செங்கல்லு | செங்கல்லாலெயே செய்தாங்களா ? |
| (ii) அவரு செங்கல்லுலே கட்டுனரு. Substitute and change the noun suitably. | அவரு செங்கல்லுலே கட்டுனரு. |

| | |
|---|---|
| தங்கம் | அவரு தங்கத்துலே கட்டுறாரு. |
| கல்லு | அவரு கல்லுலே கட்டுறாரு. |
| பளிங்குக் கல்லு | அவரு பளிங்குக் கல்லுலே கட்டுறாரு. |

(iii) அவரு இந்தக் கோயிலெக் கட்டுறாரு. — அவரு இந்தக் கோயிலெக்கட்டு-றாரு.

Substitute and change the noun suitably.

| | |
|---|---|
| மகால் | அவரு இந்த மகாலெக் கட்டுறாரு. |
| வீடு | அவரு இந்த வீட்டெக் கட்டுறாரு. |
| பள்ளிக்கூடம் | அவரு இந்தப் பள்ளிக்கூடத்தெக் கட்டுறாரு. |
| கல்லூரி | அவரு இந்தக் கல்லூரியெக் கட்டுறாரு. |
| கோபுரம் | அவரு இந்தக் கோபுரத்தெக் கட்டுறாரு. |

(iv) அவங்க வேய்ஞ்சாங்க. — அவங்க வேய்ஞ்சாங்க.

Substitute and change the verb suitably.

| | |
|---|---|
| நான் | நான் வேய்ஞ்சேன். |
| நாம | நாம வேய்ஞ்சோம். |
| நாங்க | நாங்க வேய்ஞ்சோம். |
| நீ | நீ வேய்ஞ்சே. |
| நீங்க | நீங்க வேய்ஞ்சீங்க. |
| அவன் | அவன் வேய்ஞ்சான். |
| அவ | அவ வேய்ஞ்சா. |
| அவரு | அவரு வேய்ஞ்சாரு. |

(v) இது சித்திரெ மாசம். — இது சித்திரெ மாசம்.

Substitute

| | |
|---|---|
| வைகாசி | இது வைகாசி மாசம். |
| ஆனி | இது ஆனி மாசம். |
| ஆடி | இது ஆடி மாசம். |
| ஆவணி | இது ஆவணி மாசம். |
| புரட்டாசி | இது புரட்டாசி மாசம். |
| ஐப்பசி | இது ஐப்பசி மாசம். |
| கார்த்திகெ | இது கார்த்திகெ மாசம். |
| மார்கழி | இது மார்கழி மாசம். |
| தை | இது தை மாசம். |
| மாசி | இது மாசி மாசம். |
| பங்குனி | இது பங்குனி மாசம். |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) அவரு கல்லுலே கட்டுறாரு. | அவரு கல்லாலெ கட்டுறாரு. |
| அவரு செங்கல்லுலே கட்டுறாரு. | அவரு செங்கல்லாலெ கட்டுறாரு. |
| அவரு பளிங்குக் கல்லுலே கட்டுறாரு. | அவரு பளிங்குக் கல்லாலெ கட்டுறாரு. |
| அவரு தங்கத்துலே கட்டுறாரு. | அவரு தங்கத்தாலெ கட்டுறாரு. |
| (ii) அவரு கல்லாலெ கட்டுறாரு. | அவரு எதாலெ கட்டுறாரு ? |
| அவரு பளிங்குக் கல்லாலெ கட்டுறாரு. | அவரு எதாலெ கட்டுறாரு ? |
| அவரு செங்கல்லாலெ கட்டுறாரு. | அவரு எதாலெ கட்டுறாரு ? |
| (iii) அவரு கல்லுலே கட்டுறாரு. | அவரு எதுலே கட்டுறாரு ? |
| அவருதங்கத்துலே கட்டுறாரு. | அவரு எதுலே கட்டுறாரு ? |
| அவரு செங்கல்லுலே கட்டுறாரு. | அவரு எதுலே கட்டுறாரு ? |
| (iv) ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுறாரு. | யாரு தாஜ்மகாலெக் கட்டுறாங்க ? |
| திருமலெநாயக்கர் மகாலெக் கட்டுறாரு. | யாரு மகாலெக் கட்டுறாங்க ? |
| சுந்தரபாண்டியன் மீனாட்சி அம்மன் கோயிலெக் கட்டுறாரு. | யாரு மீனாட்சி அம்மன் கோயிலெக் கட்டுறாங்க ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இதுதான்................ (temple)
**இதுதான் கோயில்.**

(i) ஒரு................கட்டுறாரு. (king)
(ii) அவரு கல்லாலெயே................றாரு. (build)
(iii) ................வெயும் கல்லாலெயே கட்டுறாரு. (complete, whole)
(iv) அவரு...... ........+ஆலெயே கட்டுறாரு. (stone)
(v) தாஜ்மகாலெ................+ஆலெ கட்டுறாரு. (marble stone)
(vi) அதே................கட்டுறாரு. (like)
(vii) அவரு................+எக் கட்டுறாரு. (palace)
(viii) அவரு................+லே கட்டுறாரு. (bricks)
(ix) அது தங்க................ (flagstaff)
(x) அதுக்குமேலே................+லே வேய்ஞ்சாங்க. (gold sheet)

(xi) அதுக்கு மேலே................ஞ்சாங்க. (wrap)
(xii) ................கள்ளழகர் ஆத்துலே எறங்குவாரு. (on that day)
(xiii) கள்ளழகரெ................+ஆலெ அலங்கரிப்பாங்க. (flower)
(xiv) கள்ளழகர்................+லே எறங்குவாரு. (river)
(xv) கள்ளழகரெப் பூவாலெ................ப்பாங்க. (adorn)
(xvi) ................நடத்துவாங்க. (procession)
(xvii) ஊர்வலம்................வாங்க. (hold the procession)

h. Include the instrumental form of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுனரு. (பளிங்குக் கல்லு)
ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனரு.

(i) அவரு இந்தக் கோயிலெக் கட்டுனரு. (கல்லு)
(ii) திருமலெ நாயக்கர் ஒரு மகாலெக் கட்டுனரு. (செங்கல்லு)
(iii) கொடி மரத்தெச் செய்தாங்க. (தங்கத்தகடு)

i. Include the locative form (in the meaning of instrumental) of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : அவரு இந்தக் கோயிலெக் கட்டுனரு. (கல்லு)
அவரு இந்தக் கோயிலெக் கல்லுலே கட்டுனரு.

(i) திருமலெநாயக்கர் ஒரு மகாலெக் கட்டுனரு. (செங்கல்லு)
(ii) கொடிமரத்தெச் செய்தாங்க. (தங்கத்தகடு)
(iii) ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுனரு. (பளிங்குக்கல்லு)

j. Write the word represented by the formula.

Example : **கல்லாலெ** கல்லு + Instrumental.

(i) பூ + Instrumental : ................
(ii) தங்கம் + Instrumental : ................
(iii) தங்கத்தகடு + Instrumental : ................
(iv) மரம் + Instrumental : ................
(v) செங்கல்லு + Instrumental : ................

k. Write the word represented by the formula.

Example : **நடத்துவாங்க** நடத்து + Future

(i) எறங்கு + Future : ................
(ii) வேய் + Future : ................
(iii) கட்டு + Future : ................
(iv) செய் + Future : ................

l. Frame questions for the answers given below following the model.

Model : A: அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனரு.
Q: அவரு கோயிலெ எதாலெ கட்டுனரு ?

(i) ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனரு.
(ii) அந்தக் கொடிமரத்தெ மரத்தாலெ செய்தாங்க.
(iii) திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லாலெ கட்டுனரு.

Model : A: ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லுலே கட்டுனரு.
Q: ஷாஜஹான் தாஜ்மகாலெ எதுலே கட்டுனரு?

(i) திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனரு.
(ii) அந்தக் கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.
(iii) அவரு கோயிலெக் கல்லுலே கட்டுனரு.

m. Write twelve sentences about the months of the year.

Example : சித்திரெ தமிழ் ஆண்டுலே மொதலாவது மாசம்.

n. Ask who did each of these things.

Example : ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுனரு.
யாரு தாஜ்மகாலெக் கட்டுனங்க ?

(i) திருமலெ நாயக்கர் மகாலெக் கட்டுனரு.
(ii) அவங்க மகாலுக்குப் போனாங்க.
(iii) கள்ளழகர் ஆத்துலே எறங்குவாரு.
(iv) அவங்க கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.
(v) அவங்க கள்ளழகரெப் பூவாலெ அலங்கரிப்பாங்க.

o. Join the following according to the sandhi rules.

(i) கல்லு + ஆலெ : ................
செங்கல்லு + ஆலெ : .........
(ii) பூ + ஆலெ : ................
(iii) தங்கம் + ஆலெ : ............
கொடிமரம் + எ : ................
(iv) தங்கத்தகடு + லே : ............
(v) ஆறு + லே : ................

p. Answer these questions.

(i) மீனாட்சி அம்மன் கோயிலெ யாரு கட்டுனங்க ?
(ii) அவரு கோயில் பூராவெயும் எதாலெ கட்டுனரு ?
(iii) தாஜ்மகாலெ யாரு கட்டுனங்க ?
(iv) கொடிமரத்தெ எதுலே செய்தாங்க ?
(v) கள்ளழகரெ எதாலெ அலங்கரிப்பாங்க ?
(vi) எங்கே சித்திரெப் பௌர்ணமி ரொம்ப விசேஷம் ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கோயில் | 'temple' | கட்டு | 'build' |
| பாண்டிய(ன்) | 'the Pandya king' | அரசரு | 'king' |
| பூரா | 'complete, whole' | கல்லு | 'stone' |
| பளிங்குக் கல்லு | 'marble stone' | மாதிரி | 'like' |
| மகால் | 'palace' | வெறும் | 'only' |
| செங்கல்லு | 'brick(s)' | தங்க (ம்) | 'gold' |
| கொடிமரம் | 'flagstaff' | செய் | 'make' |
| மரம் | 'wood' | தங்கத்தகடு | 'gold plate' |
| வேய் | 'wrap' | சித்திரெ | 'Chittirai, name of the Tamil month' |
| பௌர்ணமி | 'full moon' | விசேஷம் | 'special (festival)' |
| எறங்கு | 'step into' | ஆறு | 'river' |
| அலங்கரி | 'adorn' | பூ | 'flower' |
| ஊர்வலம் நடத்து | 'hold the procession' | ஊர்வலம் | 'procession' |

## GRAMMAR

***11.47.141.*** It has been already remarked in 11.44 that the instrumental case has got various functions in Tamil. At times, when a case marker is used to indicate a particular meaning, it may be replaced by another case marker without any change in meaning. This is one of the chief characteristics of case in general and this phenomenon is called 'case overlapping'. Let us consider the following examples.

**11. 47. 141.** ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனரு.
அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனரு.

***11.47.142.*** The instrumental marker -ஆலெ is added to the nouns to denote the objects that are used in implementing the action of கட்டு 'build'. That is, பளிங்குக் கல்லு 'marble stone', கல்லு 'stone' etc., are the objects that are used for the construction. In this meaning, the locative case marker can have the position of the instrumental case marker as follows.

**11. 47. 142.** திருமலெ நாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனரு.
கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.

**11.47.143.** வெறும் 'merely, only' is a kind of modifier. Example :

**11. 47. 143.** திருமலெநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனரு.
அந்தக் கொடிமரத்தெ வெறும் தங்கத்தாலெயே செய்தாங்களா ?

Sandhi 26. The word final -று is dropped when it is followed by any case. The nominal base and the case suffix, again, are linked by the increment **-த்த்-.** Example :

ஆறு + உலே → ஆத்துலே

தங்கம் + கொடிமரம் → தங்க கொடிமரம்
தங்கம் + தகடு → தங்க தகடு (Refer S.2 in 1.1)
தங்க + கொடிமரம் → தங்கக் கொடிமரம்
தங்க + தகடு → தங்கத்தகடு
பளிங்கு + கல்லு → பளிங்குக் கல்லு
இந்த + கோயில் → இந்தக்கோயில்
அந்த + கொடிமரம் → அந்தக் கொடிமரம் (Refer S.3 in 1.2)
பக்கம் + உலே → பக்கத்துலே
தங்கம் + ஆலெ → தங்கத்தாலெ
மரம் + உலே → மரத்துலே (Refer S.17 in 2.13)
தகடு + உலே → தகட்டுலே (Refer S.16 in 2.13)

## UNIT 12

## LESSON 48

### CONSULTING A DOCTOR

**DIALOGUE**

| | |
|---|---|
| சுரேஷ் : வணக்கம், டாக்டர் ! | Vanakkam, doctor ! |
| டாக்டர் : வணக்கம். உங்க உடம்புக்கு என்ன ? | Vanakkam. What happened to (your) health ? |
| சுரேஷ் : ரெண்டு மூணு நாளா இருமலா இருக்குதுங்க... லேசாக் காய்ச்சலும் இருக்குது. | (I) have cough for two or three days ...(I) have slight fever also. |
| டாக்டர் : ராத்திரி நல்லாத் தூங்குறீங்களா ? | Are (you) sleeping well during nights ? |
| சுரேஷ் : இல்லெங்க. ராத்திரிப் பூராவும் இருமல்தாங்க. | No sir. I am coughing all through the night, sir. |

டாக்டர் : காய்ச்சல் எப்பவும் இருக்குதா ?

Do (you) have fever all the time ?

சுரேஷ் : காய்ச்சல் எப்பவும் இல்லெலங்க, மாலெயிலே லேசாக் காய்ச்சல் அடிக்கும். ராத்திரி ஒருதரம் உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். உடனே காய்ச்சலும் குறெயும். ஆனா எப்பவும் இருமுறேங்க.

(I) do not have fever all the time (in a day) There is slight fever inthe evening. The whole body perspires once in the night. Then fever is reduced. But (I) cough all the time.

டாக்டர் : அடிக்கடி தும்முறீங்களா ?

Are (you) sneezing often ?

சுரேஷ் : ஆமாங்க. தும்மல் இருக்குது ; கூடவே சளியும் இருக்குது.

Yes, sir. (I) have sneezing, I have also cold.

டாக்டர் : ஒண்ணுமில்லேங்க. இந்த மருந்தெ ஒரு நாளெக்கு நாலுவேளெ சாப்பிடுங்க... நீங்க தனியாவா போறீங்க ?

There is nothing. You take this medicine four times a day...Are you going alone ?

சுரேஷ் : இல்லெங்க. கூடவே என் நண்பரும் வருரு. வறேங்க.

No, sir. My friend is also coming along with me. I take leave of you, sir.

டாக்டர் : வணக்கம்.

Vanakkam.

## DRILLS

a. Variation drill

12. 48. 144. நீங்க நல்லாத் தூங்குறீங்களா ?
உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
நீங்க அடிக்கடி தும்முறீங்களா ?

12. 48. 145. கூடவே என் நண்பரும் வருரு.
கூடவே சளியும் இருக்குதுங்க.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நீங்க நல்லாத் தூங்கு-றீங்களா ? | நீங்க நல்லாத் தூங்குறீங்களா ? |
| தூங்குறீங்களா ? | தூங்குறீங்களா ? |
| நல்லா | நல்லாத் தூங்குறீங்களா ? |
| நீங்க | நீங்க நல்லாத் தூங்குறீங்களா ? |
| (ii) உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். | உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். |
| வேர்க்கும் | வேர்க்கும் |
| நல்லா | நல்லா வேர்க்கும் |
| பூராவும் | பூராவும் நல்லா வேர்க்கும் |
| உடம்பு | உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். |
| (iii) கூடவே என் நண்பரும் வருரு. | கூடவே என் நண்பரும் வருரு. |
| வருரு | வருரு |
| நண்பரும் | நண்பரும் வருரு |
| என் | என் நண்பரும் வருரு |
| கூடவே | கூடவே என் நண்பரும் வருரு. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) ராத்திரி வேர்க்கும். | ராத்திரி வேர்க்கும். |
| நல்லா வேர்க்கும். | ராத்திரி நல்லா வேர்க்கும். |
| உடம்பு பூராவும் வேர்க்கும். | ராத்திரி உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். |
| ஒரு தரம் வேர்க்கும் | ராத்திரி ஒருதரம் உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். |
| (ii) நீங்க தும்முறீங்களா ? | நீங்க தும்முறீங்களா ? |
| அடிக்கடி தும்முறீங்களா ? | நீங்க அடிக்கடி தும்முறீங்களா ? |
| (iii) என் நண்பரும் வருரு. | என் நண்பரும் வருரு. |
| கூடவே வருரு | என் நண்பரும் கூடவே வருரு. |

d. Question-Answer drill

(i) Q : உங்க உடம்புக்கு என்ன ?
A : ரெண்டு மூணு நாளா இருமலா இருக்குதுங்க....
லேசாக் காய்ச்சலும் இருக்குது.

(ii) Q : காய்ச்சல் எப்பவும் இருக்குதா ?
A : எப்பவும் இல்லெங்க.

(iii) Q : அடிக்கடி தும்முறீங்களா ?
A : ஆமாங்க. தும்மல் இருக்குது ; கூடவே சளியும் இருக்குதுங்க.

(iv) Q : நீங்க தனியாவா போறீங்க ?
A : இல்லெங்க. கூடவே என் நண்பரும் வரூரு.

e. Substitution drill

(i) நீங்க தூங்குறீங்களா ? — நீங்க தூங்குறீங்களா ?
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| நீ | நீ தூங்குறேயா ? |
| சுரேஷ் | சுரேஷ் தூங்குறாரா ? |
| மணி | மணி தூங்குறானா ? |
| மாணவங்க | மாணவங்க தூங்குறாங்களா ? |
| மாலா | மாலா தூங்குறாளா ? |
| அது | அது தூங்குதா ? |

(ii) என் நண்பரும் வரூரு. — என் நண்பரும் வரூரு.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| இருமு | என் நண்பரும் இருமுறூரு. |
| தூங்கு | என் நண்பரும் தூங்குறூரு. |
| தும்மு | என் நண்பரும் தும்முறூரு. |
| போ | என் நண்பரும் போறூரு. |

(iii) காய்ச்சல் அடிக்கும். — காய்ச்சல் அடிக்கும்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| இரு | காய்ச்சல் இருக்கும். |
| குறெ | காய்ச்சல் குறெயும். |
| வா | காய்ச்சல் வரும். |
| போ | காய்ச்சல் போகும். |

(iv) காய்ச்சல் இருக்குது. — காய்ச்சல் இருக்குது.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| குறெ | காய்ச்சல் குறெயுது. |
| அடி | காய்ச்சல் அடிக்குது. |
| வா | காய்ச்சல் வருது. |
| போ | காய்ச்சல் போகுது. |

(v) மூணு நாளா இருமலா இருக்குதுங்க. — மூணு நாளா இருமலா இருக்குதுங்க.
Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| காய்ச்சல் | மூணு நாளாக் காய்ச்சலா இருக்குதுங்க. |
| தும்மல் | மூணு நாளாத் தும்மலா இருக்குதுங்க. |
| சளி | மூணு நாளாச் சளியா இருக்கு-துங்க. |

| | |
|---|---|
| (vi) உங்க உடம்புக்கு என்ன ? Substitute and change the noun accordingly. | உங்க உடம்புக்கு என்ன ? |
| காலு | உங்க காலுக்கு என்ன ? |
| கண்ணு | உங்க கண்ணுக்கு என்ன ? |
| மூக்கு | உங்க மூக்குக்கு என்ன ? |
| கை | உங்க கைக்கு என்ன ? |
| உடலு | உங்க உடலுக்கு என்ன ? |

| | |
|---|---|
| (vii) கூடவே என் நண்பரும் வருரு. Substitute and change the noun accordingly. | கூடவே என் நண்பரும் வருரு. |
| மாமா | கூடவே என் மாமாவும் வருரு. |
| அப்பா | கூடவே என் அப்பாவும் வருரு. |
| கணவரு | கூடவே என் கணவரும் வருரு. |
| சிநேகிதரு | கூடவே என் சிநேகிதரும் வருரு. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் தூங்குறேன். | நீங்க தூங்குறீங்களா ? |
| நான் இருமுறேன். | நீங்க இருமுறீங்களா ? |
| நான் தும்முறேன். | நீங்க தும்முறீங்களா ? |
| (ii) எனக்கு இருமலா இருக்குது. | எனக்கு இருமலா இருந்தது. |
| எனக்குத் தும்மலா இருக்குது. | எனக்குத் தும்மலா இருந்தது. |
| எனக்குக் காய்ச்சலா இருக்குது. | எனக்குக் காய்ச்சலா இருந்தது. |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model: உங்க................க்கு என்ன ? (health/body)
உங்க உடம்புக்கு என்ன ?

(i) மூணு நாளா................+ஆ இருக்குதுங்க. (cough)
(ii) லேசா................+உம் இருக்குது. (fever)
(iii) ராத்திரி நல்லாத்................றீங்களா ? (sleep)

(iv) காய்ச்சல்..............இருக்குதா ? (always)
(v) உடம்பு நல்லா..............க்கும். (sweat)
(vi) உடனே காய்ச்சலும்..............யும். (reduce)
(vii) அடிக்கடி..............றீங்களா ? (sneeze)
(viii) ..............இருக்குது. (sneezing)
(ix) ..............யும் இருக்குதுங்க. (cold)
(x) இந்த..............+எச் சாப்பிடுங்க. (medicine)
(xi) நாலு..............சாப்பிடுங்க. (times)
(xii) நீங்க..............போறீங்களா ? (alone)

h. Write the word represented by the formula.

Example : அடிக்கும் அடி + Future

(i) வேர் + Future : ................
(ii) குறெ + Future : ................
(iii) தும்மு + Future : ................
(iv) இருமு + Future : ................
(v) சாப்பிடு + Future : ................
(vi) வா + Future : ................
(vii) தூங்கு + Future : ................

i. Include the adverb form of the item given in parentheses as shown in the example.

Example : ரெண்டு மூணு நாளா இருக்குதுங்க. (இருமல்)
ரெண்டு மூணு நாளா இருமலா இருக்குதுங்க.

(i) ரெண்டு மூணு நாளா இருக்குதுங்க. (காய்ச்சல்)
(ii) மாலெயிலே அஞ்சுமணிக்குக் காய்ச்சல் அடிக்கும். (லேசு)
(iii) நீங்க போறீங்களா ? (தனி)
(iv) ஆமாங்க, இருக்குதுங்க. (தும்மல்)
(v) இருமலா இருக்குதுங்க. (மூணு நாளு)

j. Transform the following singular non-honorific imperatives into singular honorific imperatives.

(i) நீ சாப்பிடு.
(ii) நீ தூங்கு.
(iii) நீ போ.
(iv) நீ வா.
(v) நீ இருமு.

k. Answer these questions.

(i) உங்க உடம்புக்கு என்ன ?
(ii) நீங்க ராத்திரி நல்லாத் தூங்குறீங்களா ?

(iii) நேத்து ராத்திரி உங்களுக்குக் காய்ச்சல் அடிச்சதா ?
(iv) உங்க அறெயிலே ரொம்ப வேர்க்குதா ?
(v) நீங்க தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்குத் தனியாவா போறீங்க ?
(vi) கூடவே உங்க மனெவியும்/கணவரும் மைசூருக்கு வந்தாங்களா ?
(vii) நீங்க இப்ப மருந்து சாப்பிடுறீங்களா ?
(viii) நீங்க இருமலுக்கு என்ன மருந்து சாப்பிடுறீங்க ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| டாக்டர் | 'medical doctor' | உடம்பு | 'human body / health' |
| இருமல் | 'cough' | லேசா | 'slightly' |
| காய்ச்சல் | 'fever' | தூங்கு | 'sleep' |
| பூரா (வும்) | 'throughout, whole' | எப்பவும் | 'always' |
| காய்ச்சல் அடி | 'get fever' | (ஒரு) தரம் | 'once' |
| வேர் | 'sweat' | குறெ | 'reduce' |
| இருமு | 'cough' | தும்மு | 'sneeze' |
| தும்மல் | 'sneezing' | சளி | 'cold' |
| மருந்து | 'medicine' | வேளெ | 'times' |
| தனியா | 'alone' | | |

## GRAMMAR

***12.48.144.*** Tamil verbs may be broadly classified into two, namely, intransitive and transitive. As Arden says 'the intransitive verb usually expresses experiencing, enduring, and action which is confined to the subject of the verb and does not pass on to an object. The verbs such as தூங்கு, 'sleep', வேர் 'sweat' தும்மு 'sneeze' and இருமு 'cough' are intransitive verbs. These verbs suggest that the subjects in the following sentences are experiencing the actions expressed by them. Note that there is no object in these sentences.

*12. 48. 144.* நீங்க நல்லாத் தூங்குறீங்களா ?
உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
நீங்க அடிக்கடி தும்முறீங்களா ?

***12.48.145.*** We noticed in 5.28.101 that கூட- is a sociative case marker. Unlike other case markers this can occur alone without noun. It signifies 'along with'. -ஏ is an emphatic marker. Example :

*12. 48. 145.* கூடவே என் நண்பரும் வருரு.
கூடவே சளியும் இருக்குதுங்க.

Sandhi : கூட + ஏ → கூடவே
தனியா + ஆ → தனியாவா (Refer S.9 in 1.9)
நல்லா + தூங்குறீங்களா → நல்லாத் தூங்குறீங்களா
(Refer S.21 in 3.20)

# UNIT 12

# LESSON 49

## WITH THE SERVANT BOY

### DIALOGUE

| | |
|---|---|
| சுரேஷ் : மணி, நீ எப்ப எழுந்தே? | Mani, when did you get up ? |
| மணி : நான் அஞ்சு மணிக்கே எழுந்தேன் ஸார். | I got up at five o' clock, sir. |
| சுரேஷ் : யாரு உன்னெப் படுக்கெயிலேயிருந்து எழுப்புனாங்க ? | Who woke you up from the bed ? |
| மணி : நரசய்யா ஸார் எழுப்புனாங்க. பெட் காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா ? | Mr. Narasaiah woke me up, sir. Shall (I) boil the milk for bed coffee? |
| சுரேஷ் : பாலு அடுப்புலே காயுது. அதெ அடுப்புலேயிருந்து எறக்கு. பூசெக்குப் பூ வாங்குனேயா ? | The milk is being heated in the oven. You remove it from the oven. Did you buy flowers for pooja ? |

| | |
|---|---|
| மணி : இல்லெ, ஸார். தோட்டத்-துலேயிருந்து பறிக்கட்-டுமா ? | No, sir. Shall (I) pluck (flowers) from the garden ? |
| சுரேஷ் : சரி. அந்தக் குழாயிலே-யிருந்து தண்ணீரு கசியுது, பாரு. அதெ இறுக்கமா மூடு. அல-மாரியிலேயிருந்து பல்-பொடி டப்பாவெ எடு... கெணத்துலேயிருந்து ஒரு வாளி தண்ணீரு எறெ. | Alright, Look ! The water is leaking from that tap. Close it tightly. Take the tooth powder tin from the almirah. Draw a bucket of water from the well. |
| மணி : சரிங்க. வாளியிலேயிருந்து தண்ணீரு ஒழுகுது ஸார். | Alright, sir. The water is leaking from the bucket, sir. |
| சுரேஷ் : நாளெக்கு ஒரு புது வாளி வாங்கலாம் .... ரூமுலே திரிவேதி தூங்குறாரு .... அவரெச் சீக்கிரமா எழுப்பு. | (We) shall buy a new bucket tomorrow. Mr. Trivedi is sleeping in the room. Wake him up quickly. |
| மணி : சரிங்க. | Alright, sir. |

## DRILLS

a. Variation drill

**12. 49. 146.** யாரு உன்னெ எழுப்புனுங்க ?
நான் பாலெக் காய்ச்சட்டுமா ?
நீ அதெ இறுக்கமா மூடு.
நீ அவரெ எழுப்பு.

**12. 49. 147.** நான் அஞ்சுமணிக்கே எழுந்தேன்,
நரசய்யா தான் என்னெ எழுப்புனுரு.
பால் அடுப்புலே காயுது.
நான் பாலெக் காய்ச்சட்டுமா ?

**12. 49. 148.** யாரு உன்னெப் படுக்கெயிலேயிருந்து எழுப்புனுங்க ?
நீ கடையிலேயிருந்து பூ வாங்குனேயா ?
அலமாரியிலேயிருந்து பல்பொடி டப்பாவெ எடு.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா ? | நான் காபிக்குப் பாலெக் காய்ச்-சட்டுமா ? |
| காய்ச்சட்டுமா ? | காய்ச்சட்டுமா ? |
| பாலெ | பாலெக் காய்ச்சட்டுமா ? |
| காபிக்கு | காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா? |
| நான் | நான் காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா ? |
| (ii) நரசய்யாதான் என்னெ எழுப்புனரு. | நரசய்யாதான் என்னெ எழுப்புனரு. |
| எழுப்புனரு | எழுப்புனரு |
| என்னெ | என்னெ எழுப்புனரு |
| நரசய்யாதான் | நரசய்யாதான் என்னெ எழுப்புனரு. |
| (iii) நீ கடெயிலேயிருந்து பூ வாங்குனேயா ? | நீ கடெயிலேயிருந்து பூ வாங்கு-னேயா ? |
| வாங்குனேயா ? | வாங்குனேயா ? |
| பூ | பூ வாங்குனேயா ? |
| கடெயிலேயிருந்து | கடெயிலேயிருந்து பூ வாங்கு-னேயா ? |
| நீ | நீ கடெயிலேயிருந்து பூ வாங்கு-னேயா ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நீ மூடு. | நீ மூடு. |
| இறுக்கமா மூடு | நீ இறுக்கமா மூடு. |
| அதெ மூடு | நீ அதெ இறுக்கமா மூடு. |
| (ii) நீ எழுப்பு. | நீ எழுப்பு. |
| அவரெ எழுப்பு | நீ அவரெ எழுப்பு. |
| சீக்கிரமா எழுப்பு | நீ சீக்கிரமா அவரெ எழுப்பு. |
| (iii) நீ வாங்குனேயா ? | நீ வாங்குனேயா ? |
| பூ வாங்குனேயா ? | நீ பூ வாங்குனேயா ? |
| பூசெக்கு வாங்குனேயா ? | நீ பூசெக்குப் பூ வாங்குனேயா ? |
| கடெயிலேயிருந்து வாங்கு-னேயா ? | நீ கடெயிலேயிருந்து பூசெக்குப் பூ வாங்குனேயா ? |
| (iv) அந்தக் குழாயிலெயிருந்து கசியுது. | அந்தக் குழாயிலேயிருந்து கசியுது. |
| தண்ணீரு கசியுது | அந்தக் குழாயிலேயிருந்து தண்ணீரு கசியுது. |

d. Question-Answer drill

(i) Q : நீ எப்ப எழுந்தே ?
A : நான் அஞ்சுமணிக்கே எழுந்தேன், ஸார்.

(ii) Q : யாரு உன்னெ எழுப்புனுங்க ?
A : நரசய்யாதான் எழுப்புனுரு.

(iii) Q : கடெயிலேயிருந்து பூசெக்குப் பூ வாங்குனேயா ?
A : இல்லெ ஸார்.

e. Substitution drill

(i) அவரு எழுப்புனுரு. — அவரு எழுப்புனுரு.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| நான் | நான் எழுப்புனேன். |
| நாங்க | நாங்க எழுப்புனேம். |
| நாம | நாம எழுப்புனேம். |
| நீ | நீ எழுப்புனே. |
| நீங்க | நீங்க எழுப்புனீங்க |
| அவன் | அவன் எழுப்புனுன். |
| அவ | அவ எழுப்புனு. |
| இவங்க | இவங்க எழுப்புனுங்க. |

(ii) யாரு உன்னெ எழுப்புனுங்க? — யாரு உன்னெ எழுப்புனுங்க ?
Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| நான் | யாரு என்னெ எழுப்புனுங்க ? |
| மணி | யாரு மணியெ எழுப்புனுங்க ? |
| நரசய்யா | யாரு நரசய்யாவெ எழுப்புனுங்க ? |
| அவரு | யாரு அவரெ எழுப்புனுங்க ? |
| நாங்க | யாரு எங்களெ எழுப்புனுங்க ? |
| நாம | யாரு நம்மெ எழுப்புனுங்க ? |

(iii) நான் எழுப்புனேன். — நான் எழுப்புனேன்.
Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| பாரு | நான் பார்த்தேன் |
| காய்ச்சு | நான் காய்ச்சுனேன். |
| எறக்கு | நான் எறக்குனேன். |
| வாங்கு | நான் வாங்குனேன். |
| பறி | நான் பறிச்சேன். |
| மூடு | நான் மூடுனேன். |
| எறெ | நான் எறெச்சேன். |
| எடு | நான் எடுத்தேன். |

(iv) அது காயுது. — அது காயுது.
Substitute and conjugate the verb suitably.
கசி — அது கசியுது.
ஒழுகு — அது ஒழுகுது.

f. Transformation drill

(i) திரிவேதி தூங்குறுரு. — திரிவேதி தூங்குனுரு.
நரசய்யா எழுப்புறுரு. — நரசய்யா எழுப்புனுரு.
நான் பறிக்குறேன். — நான் பறிச்சேன்.
நான் எடுக்குறேன். — நான் எடுத்தேன்.

(ii) அது காயுது. — அது காயும்.
அது கசியுது. — அது கசியும்.
அது ஒழுகுது. — அது ஒழுகும்.

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ எப்ப................ந்தே ? (get up)
நீ எப்ப எழுந்தே ?

(i) யாரு உன்னெ................ னுங்க. (wake up)
(ii) நான்................+எக் காய்ச்சட்டுமா ? (milk)
(iii) நான்................+அட்டுமா ? (boil)
(iv) பாலு ................து. (be boiled)
(v) ................ லேயிருந்து எறக்கு. (oven)
(vi) ................+ இலேயிருந்து வாங்குனேயா ? (shop)
(vii) ................+உலேயிருந்து பறிக்கட்டுமா ? (garden)
(viii) அந்த................+ இலேயிருந்து தண்ணீரு கசியுது. (pipe)
(ix) தண்ணீரு................யுது (leak)
(x) அதெ................+ஆ மூடு. (tightness)
(xi) அதெ................ (close)
| (ii) நீங்க மொதல்வரெச் சந்திக்கணும். | நீங்க மொதல்வரெச் சந்திக்கணும். |
| சந்திக்கணும் | சந்திக்கணும் |
| மொதல்வரெ | மொதல்வரெச் சந்திக்கணும் |
| நீங்க | நீங்க மொதல்வரெச் சந்திக்கணும். |
| (iii) நான் யாரெப் பார்க்கணும் ? | நான் யாரெப் பார்க்கணும் ? |
| யாரெப் பார்க்கணும் ? | யாரெப் பார்க்கணும் ? |
| நான் | நான் யாரெப் பார்க்கணும் ? |
| (iv) நான் வகுப்புக்கு வரணுமா ? | நான் வகுப்புக்கு வரணுமா ? |
| வரணுமா ? | வரணுமா ? |
| வகுப்புக்கு | வகுப்புக்கு வரணுமா ? |
| நான் | நான் வகுப்புக்கு வரணுமா ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நீங்க சந்திக்கணும். | நீங்க சந்திக்கணும். |
| மொதல்வரெச் சந்திக்கணும் | நீங்க மொதல்வரெச் சந்திக்கணும். |
| மொதலாவது சந்திக்கணும் | நீங்க மொதலாவது மொதல்வரெச் சந்திக்கணும். |
| (ii) நீங்க தங்கணும். | நீங்க தங்கணும். |
| ஹாஸ்டல்லே தங்கணும் | நீங்க ஹாஸ்டல்லே தங்கணும். |
| (iii) நீங்க கொண்டு வரணும். | நீங்க கொண்டு வரணும். |
| வகுப்புக்குக் கொண்டு வரணும் | நீங்க வகுப்புக்குக் கொண்டு வரணும். |
| மறுநாளு கொண்டு வரணும் | நீங்க மறுநாளு வகுப்புக்குக் கொண்டு வரணும். |
| வீட்டுப்பாடத்தெக் கொண்டு வரணும் | நீங்க வீட்டுப்பாடத்தெ மறுநாளு வகுப்புக்குக் கொண்டு வரணும். |
| (iv) நீங்க சாப்பிடணும். | நீங்க சாப்பிடணும். |
| ஹாஸ்டல் மெஸ்லே சாப்பி-டணும் | நீங்க ஹாஸ்டல் மெஸ்லே சாப்பி-டணும். |

d. Question-Answer drill

(i) Q : நான் தமிழ் படிக்கணும்....அட்மிஷனுக்காக யாரெப் பார்க்கணும் ?

A : மொதலாவது மொதல்வரெச் சந்திக்கணும்.

(ii) Q : அவரோடெ அறெ தெரியுமா ?

A : தெரியாதுங்க.

(iii) Q : எனக்கு அட்மிஷன் லகுவாக் கெடெக்குங்களா ?

A : அட்மிஷன் கெடெக்கும். ஆனு, நீங்க கடினமா உழெக்கணும்.

(iv) Q : எத்தனெ மணி நேரம் மாணவங்க வகுப்புலே இருக்கணும் ?

A : சுமார் அஞ்சரெ மணி நேரம் இருக்கணும்.

e. Substitution drill

(i) நான் பார்க்கணும். — நான் பார்க்கணும்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| சந்தி | நான் சந்திக்கணும். |
| உழெ | நான் உழெக்கணும். |
| வாசி | நான் வாசிக்கணும். |
| இரு | நான் இருக்கணும். |
| கொடு | நான் கொடுக்கணும். |

(ii) நீங்க தங்கணும். — நீங்க தங்கணும்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| கொண்டுவா | நீங்க கொண்டுவரணும். |
| வா | நீங்க வரணும். |
| சாப்பிடு | நீங்க சாப்பிடணும். |
| சொல்லு | நீங்க சொல்லணும். |
| எழுது | நீங்க எழுதணும். |

(iii) நீங்க வாசிக்கமுடியும். — நீங்க வாசிக்க முடியும்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| சந்தி | நீங்க சந்திக்க முடியும். |
| உழெ | நீங்க உழெக்க முடியும். |
| பாரு | நீங்க பார்க்க முடியும். |
| இரு | நீங்க இருக்க முடியும். |
| கொடு | நீங்க கொடுக்க முடியும். |

(iv) நீங்க எழுத முடியும். — நீங்க எழுத முடியும்.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| தங்கு | நீங்க தங்கமுடியும். |
| கொண்டுவா | நீங்க கொண்டுவரமுடியும். |
| வா | நீங்க வரமுடியும். |
| சாப்பிடு | நீங்க சாப்பிடமுடியும். |
| சொல்லு | நீங்க சொல்லமுடியும். |

(v) நான் மொதல்வரெச் சந்திக்கணும். — நான் மொதல்வரெச் சந்திக்கணும்.

Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| பேராசிரியரு | நான் பேராசிரியரெச் சந்திக்கணும். |
| ஆசிரியரு | நான் ஆசிரியரெச் சந்திக்கணும். |
| ஆசிரியெ | நான் ஆசிரியெயெச் சந்திக்கணும். |
| மாணவரு | நான் மாணவரெச் சந்திக்கணும். |
| மாணவி | நான் மாணவியெச் சந்திக்கணும். |

f. Transformation drill

(i)

| | |
|---|---|
| நீங்க மொதல்வரெப் பார்க்கணும். | நான் யாரெப் பார்க்கணும் ? |
| நீங்க பேராசிரியரெப் பார்க்கணும். | நான் யாரெப் பார்க்கணும் ? |
| நீங்க ஆசிரியரெச் சந்திக்கணும். | நான் யாரெச் சந்திக்கணும் ? |
| நீங்க மாணவரெச் சந்திக்கணும். | நான் யாரெச் சந்திக்கணும் ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீங்க................+எச் சந்திக்கணும். (principal)
நீங்க **மொதல்வரெச் சந்திக்கணும்.**

(i) எனக்கு................+ஆக் கெடெக்குங்களா ? (easiness)
(ii) நீங்க................உழெக்கணும். (hard)
(iii) நீங்க கடினமா................க்கணும். (work)
(iv) இன்னொரு முக்கியமான................ (matter)
(v) ................முக்கியமான விஷயம். (another)
(vi) இன்னொரு................விஷயம். (important)
(vii) ................வகுப்புக்குக் கொண்டு வரணும். (next day)

h. Include the infinitive form of the verb given in parentheses against each of the sentences as shown in the example.

Example : நான் தமிழ்...............ணும் ? (படி)
நான் தமிழ் படிக்கணும்.

(i) நான் யாரெப்...............ணும் ? (பாரு)
(ii) நான் மொதல்வரெச்...............ணும். (சந்தி)
(iii) நீங்க கடினமா...............ணும். (உழெ)
(iv) மாணவங்க வகுப்புலே ............... ணும். (எழுது)
(v) அதெயெல்லாம்...............ணும். (எழுது)
(vi) மெஸ்லே...............ணும். (சாப்பிடு)

i. Write the word represented by the formula.

Example : படிக்க படி + Infinitive

(i) தங்கு + Infinitive : ...............
(ii) சொல்லு + Infinitive : ...............
(iii) சாப்பிடு + Infinitive : ...............
(iv) கொண்டுவா + Infinitive : ...............
(v) எழுது + Infinitive : ...............
(vi) இரு + Infinitive : ...............
(vii) உழெ + Infinitive : ...............
(viii) சந்தி + Infinitive : ...............
(ix) பாரு + Infinitive : ...............

j. Fill in the blanks using the appropriate obligative verbal forms of the verb given in paren heses.

(i) நான் தமிழ்........... (படி)
(ii) நான் யாரெப் ........... (பாரு)
(iii) மொதலாவது மொதல்வரெச்........... (சந்தி)
(iv) அஞ்சரெ மணி நேரம்........... (இரு)
(v) அதெயெல்லாம்........... (எழுது)

k. Change the given nouns into the objective and add at the left to the verb in the sentences given below.

(i) மொதல்வரு : நீங்க சந்திக்கணும்.
(ii) யாரு : நான் பார்க்கணும்.
(iii) புதுமொழி : நீங்க எழுத முடியும்.
(iv) எல்லாம் : அவரு சொல்லுவாரு.

l. Change these sentences to the future.

(i) அவரு எல்லாத்தெயும் சொல்லுறுரு.
(ii) நெறெய வீட்டுப்பாடம் கொடுக்குறேம்.

(iii) மாணவங்க நெறெய வீட்டுப்பாடம் எழுதுறாங்க.
(iv) சுமார் அஞ்சரெ மணி நேரம் வகுப்புலே இருக்குறாங்க.

m. Frame questions for the answers given below following the model.

Model : நீங்க மொதல்வரெப் பார்க்கணும்.
நான் யாரெப் பார்க்கணும் ?

(i) நீங்க பேராசிரியரெப் பார்க்கணும்.
(ii) நீங்க ஆசிரியரெச் சந்திக்கணும்.
(iii) நீங்க மாணவரெச் சந்திக்கணும்.

n. Make up ten sentences in the pattern.

Subject + Obligative verb.
Model : நான் + படிக்கணும்.

o. Answer these questions.

(i) நீங்க எங்கேயிருந்து வறீங்க ?
(ii) உங்களுக்குத் தமிழ் டிப்ளமோ படிக்கணுமா ?
(iii) நீங்க இந்த இன்ஸ்டிடியூட்டுலே மொதலாவது யாரெச் சந்திச்சீங்க ?
(iv) உங்களுக்கு உங்க ஆசிரியரோடெ வீடு தெரியுமா ?
(v) நீங்க கடினமா உழெக்குறீங்களா ?
(vi) நீங்க எத்தனெ மணி நேரம் வகுப்புலே இருக்கணும் ?
(vii) நீங்க தினந்தோறும் வீட்டுப்பாடம் எழுதணுமா ?
(viii) நீங்க ஹாஸ்டல்லேதான் தங்கணுமா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| அட்மிஷன் | 'admission' | மொதல்வரு | 'principal' |
| லகுவா | 'easily' | கடினமா | 'hard' |
| உழெ | 'work (hard)' | அப்படீன்னுத்தான் | 'then only' |
| இன்னொரு | 'another' | முக்கியமான | 'important' |
| விஷயம் | 'matter' | தங்கு | 'stay' |

## GRAMMAR

**15.55.155.** The defective verbs like வேணும்/வேண்டாம், பிடிக்கும்/பிடிக்காது, தெரியும்/தெரியாது etc., can be added to the infinitive form of another verb as auxiliary verbs. This unit in six lessons deals with the various uses of this kind of verbal composition in detail.

–ணும் is a truncated form of the verb வேணும். It is added to the infinitive to denote 'obligation' or 'strong wish'or 'command'. These verbs are at times called 'obligative verbs'. Example :

**15. 55. 155.** நான் தமிழ்ப் படிக்கணும்.
நான் வகுப்புக்கு வரணுமா ?
நான் யாரெப் பார்க்கணும் ?

It is important to note that the basic difference between the defective verb வேணும் and the auxiliary verb -ணும் is that the subject is always dative in the former (Refer 3.19.70) and nominative in the latter.

**15.55.156.** அப்படீன்னுத்தான் means 'if it is so'. See the use of this form in the following examples.

**15. 55. 156.** அப்படீன்னுத்தான் ஒரு புதுமொழியெ நல்லா வாசிக்க முடியும்.
அப்படீன்னுத்தான் ஒரு புதுமொழியெ நல்லா எழுத முடியும்.

Sandhi 27. Honorific marker -ங்க is realised as -ங்கள் when a particle beginning with vowel is added to it. Example :

கெடெக்குங்க + ஆ → கெடெக்குங்களா

Sandhi 28. The consonants க், ச், த் and ப் are always doubled after அப்படீன்னு. Example :

அப்படீன்னு + தான் → அப்படீன்னுத்தான்

கெடெக்கும் + ங்க → கெடெக்குங்க (Refer S.2 in 1.1)
மாணவன் + ங்க → மாணவங்க (Refer S.5 in 1.3)
யாரெ + பார்க்கணும் → யாரெப் பார்க்கணும்
மொதல்வரெ + சந்திக்கணும் → மொதல்வரெச் சந்திக்கணும்
(Refer S.20 in 2.17)

# UNIT 15

# LESSON 56

## INVITING A FRIEND

### DIALOGUE

| | |
|---|---|
| மூர்த்தி : சுரேஷ் ! நீங்க எங்க வீட்டுக்குச் சாப்பிட வரணும். நாளெக்கு உங்களுக்கு வரமுடி–யுமா ? | Suresh ! you must come to our house for lunch. Can you come tomorrow ? |
| சுரேஷ் : என்ன விசேஷங்க ? | What is special, (about tomorrow) sir ? |
| மூர்த்தி : நாளெ கலாவோட பெறந்த நாளு. அதனாலே நாளெக்கு மத்தியானம் சாப்பிட வாங்க. | Tomorrow is Kala's birth day. So, (you) please come and have a lunch tomorrow noon. |

| | |
|---|---|
| சுரேஷ் : மன்னிக்கணுங்க.... நாளெக்கு எனக்கு வர முடியாதுங்களே! பேராசிரியரோடெ வகுப்பு இருக்குது. நான் கண்டிப்பாப் போகணும். | Pardon (me), sir... (you see) I cannot come tomorrow. (I) have Professor's class. I should attend (it) certainly. |
| மூர்த்தி : சரி, மத்தியானம் வர வேண்டாம். காலெயிலே வரமுடியுமா ? | Alright, (you) need not come in the noon. Can (you) come in the morning ? |
| சுரேஷ் : காலேயிலே வகுப்புக் கெடெயாது. அதனுலெ கல்லூரிக்கே போக வேண்டாம். நான் காலெயிலே எத்தனெ மணிக்கு வரணும் ? | (Yes), (I) can come in the morning because there is no class in the morning. So I need not go even to college. At what time in the morning should I come (to your house) ? |
| மூர்த்தி : உங்களுக்குக் காலெயிலே ஏழு மணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? | Will there be any difficulty for you to come at seven o'clock in the morning ? |
| சுரேஷ் : ஆமாங்க.. ஏழுமணிக்குப் பஸ் கெடெயாது. அதனுலெ எனக்கு வரக் கஷ்டமா இருக்கும். | Yes, sir. There is no bus at seven o'clock. So it will be difficult for me to come. |
| மூர்த்தி : எட்டுமணிக்குச் சௌகரியமா இருக்குமா ? | Will it be convenient at eight o'clock ? |
| சுரேஷ் : எட்டுமணிக்குச் சௌகரியமா இருக்குங்க.... அப்பவே வறேன். | It will be convenient at eight o'clock... (I) will come at that time. |
| மூர்த்தி : ரொம்ப நன்றி. நான் வரட்டுமா ? | Thank (you) very much. Shall I take leave of you ? |
| சுரேஷ் : வாங்க. | Please do. |

## DRILLS

a. Variation drill

**15. 56. 157.** நான் கல்லூரிக்குப் போக வேண்டாம்.
நீங்க மத்தியானம் வரவேண்டாம்.

**15. 56. 158.** உங்களுக்கு நாளெக்கு வரமுடியுமா ?
எனக்கு நாளெக்கு வரமுடியாது,
எனக்குக் காலெயிலே வரமுடியும்.

**15. 56. 159.** உங்களுக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா
இருக்குமா ?
எனக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்கும்.

**15. 56. 160.** அதனுலெ, நீங்க மத்தியானம் சாப்பிட வாங்க.
அதனுலெ, எனக்கு வரக் கஷ்டமா இருக்கும்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) எனக்குக் காலெயிலே வர முடியும். | எனக்குக் கலெயிலே வரமுடியும். |
| முடியும் | முடியும் |
| வர | வரமுடியும் |
| காலெயிலே | காலெயிலே வரமுடியும் |
| எனக்கு | எனக்குக் காலெயிலே வரமுடியும். |
| (ii) உங்களுக்கு நாளெக்கு வர முடியுமா ? | உங்களுக்கு நாளெக்கு வரமுடியுமா ? |
| முடியுமா ? | முடியுமா ? |
| வர | வரமுடியுமா ? |
| நாளெக்கு | நாளெக்கு வரமுடியுமா ? |
| உங்களுக்கு | உங்களுக்கு நாளெக்கு வரமுடியுமா ? |
| (iii) எனக்கு நாளெக்கு வர முடியாது. | எனக்கு நாளெக்கு வரமுடியாது. |
| முடியாது | முடியாது |
| வர | வரமுடியாது |
| நாளெக்கு | நாளெக்கு வரமுடியாது |
| எனக்கு | எனக்கு நாளெக்கு வரமுடியாது. |
| (iv) நீங்க மத்தியானம் வர வேண்டாம். | நீங்க மத்தியானம் வரவேண்டாம். |
| வேண்டாம் | வேண்டாம் |
| வர | வரவேண்டாம் |
| மத்தியானம் | மத்தியானம் வரவேண்டாம் |
| நீங்க | நீங்க மத்தியானம் வரவேண்டாம். |
| (v) உங்களுக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? | உங்களுக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? |
| கஷ்டமா இருக்குமா ? | கஷ்டமா இருக்குமா ? |
| வர | வரக் கஷ்டமா இருக்குமா ? |

| | |
|---|---|
| ஏழுமணிக்கு | ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? |
| உங்களுக்கு | உங்களுக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) உங்களுக்கு முடியுமா ? | உங்களுக்கு முடியுமா ? |
| வரமுடியுமா ? | உங்களுக்கு வரமுடியுமா ? |
| மத்தியானம் முடியுமா ? | உங்களுக்கு மத்தியானம் வர முடியுமா ? |
| நாளெக்கு முடியுமா ? | உங்களுக்கு நாளெக்கு மத்தி-யானம் வரமுடியுமா ? |
| (ii) உங்களுக்குக் கஷ்டமா இருக்குமா ? | உங்களுக்குக் கஷ்டமா இருக்குமா? |
| வரக் கஷ்டமா இருக்குமா ? | உங்களுக்கு வரக் கஷ்டமா இருக்-குமா ? |
| ஏழுமணிக்குக் கஷ்டமா இருக்குமா ? | உங்களுக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? |
| காலெயிலே கஷ்டமா இருக்-குமா ? | உங்களுக்குக் காலெயிலே ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ? |
| (iii) நான் போக வேண்டாம். | நான் போக வேண்டாம். |
| கல்லூரிக்கே போக வேண்டாம் | நான் கல்லூரிக்கே போக வேண்டாம். |
| காலெயிலே போக வேண்டாம் | நான் காலெயிலே கல்லூரிக்கே போக வேண்டாம். |

d. Question-Answer drill

(i) Q : என்ன விசேஷங்க ?
A : கலாவோடெ பெறந்த நாளு.

(ii) Q : காலெயிலே வரமுடியுமா ?
A : காலெயிலே வரமுடியும்.

(iii) Q : உங்களுக்குக் காலெயிலே ஏழுமணிக்கு வரக்கஷ்டமா இருக்குமா ?
A : ஆமாங்க.

(iv) Q : எட்டுமணிக்குச் சௌகரியமா இருக்குமா ?
A : எட்டுமணிக்குச் சௌகரியமா இருக்குங்க.

e. Substitution drill

(i) நீங்க சாப்பிட வரணும். — நீங்க சாப்பிட வரணும்.
Substitute and change the verb accordingly.
பாரு — நீங்க பார்க்க வரணும்.
கொடு — நீங்க கொடுக்க வரணும்.
சொல்லு — நீங்க சொல்ல வரணும்.

(ii) உங்களுக்கு வரக் கஷ்டமா இருக்குமா? — உங்களுக்கு வரக் கஷ்டமா இருக்குமா?
Substitute and change the verb accordingly.
தங்கு — உங்களுக்குத் தங்கக் கஷ்டமா இருக்குமா?
உழெ — உங்களுக்கு உழெக்கக் கஷ்டமா இருக்குமா?
போ — உங்களுக்குப் போகக் கஷ்டமா இருக்குமா?
வாசி — உங்களுக்கு வாசிக்கக் கஷ்டமா இருக்குமா?
எழுத — உங்களுக்கு எழுதக் கஷ்டமா இருக்குமா?

(iii) நீங்க வரணும். — நீங்க வரணும்.
Substitute and change the verb accordingly.
போ — நீங்க போகணும்.
மன்னி — நீங்க மன்னிக்கணும்.

f. Transformation drill

(i) எனக்கு வரமுடியும். — உங்களுக்கு வரமுடியுமா?
எனக்குப் போக முடியும். — உங்களுக்குப் போக முடியுமா?
எனக்குச் சாப்பிட முடியும். — உங்களுக்குச் சாப்பிட முடியுமா?

(ii) எனக்கு வரமுடியும். — எனக்கு வரமுடியாது.
எனக்குப் போக முடியும். — எனக்குப் போக முடியாது.
எனக்குச் சாப்பிட முடியும். — எனக்குச் சாப்பிட முடியாது.

(iii) நீங்க வரணும். — நீங்க வரவேண்டாம்.
நீங்க போகணும். — நீங்க போக வேண்டாம்.
நீங்க சாப்பிடணும். — நீங்க சாப்பிட வேண்டாம்.

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நாளெக்குக் கலாவோடெ................. (birth day)
நாளெக்குக் கலாவோடெ **பொறந்தநாளு.**

(i) நீங்க................க்கணுங்க. (excuse)
(ii) நான்................போகணும். (definitely)
(iii) எட்டுமணிக்கு................இருக்குமா ? (convenient)

h. Include the infinitive form of the verb given in parentheses against each of the sentences as shown in the example.

Example : நாளெக்கு முடியுமா ? (வா)
நாளெக்கு வர முடியுமா ?

(i) நீங்க மத்தியானம் வாங்க. (சாப்பிடு)
(ii) நீங்க ............க்கணும். (மன்னி)
(iii) நான் எத்தனெ மணிக்கு............ணும். (வா)
(iv) கல்லூரிக்கு வேண்டாம். (போ)

i. Write the word represented by the formula.

Example : **சாப்பிட** சாப்பிடு + Infinitive

(i) வா + Infinitive : ................
(ii) போ + Infinitive : ................
(iii) தா + Infinitive : ................

j. Fill in the blanks using the appropriate obligative verbal forms of the verb given in parentheses.

(i) நீங்க................. (மன்னி)
(ii) நான் கண்டிப்பாப்................. (போ)
(iii) நீங்க சாப்பிட................. (வா)

k. Change these sentences to the negative.

(i) எனக்குப் போக முடியும்.
(ii) எனக்கு வரமுடியும்.
(iii) நீங்க போகணும்.
(iv) நீங்க சாப்பிடணும்.

l. Change the given nouns into the dative and add at the left to the verb in the sentences given below.

(i) வீடு : நீங்க சாப்பிட வரணும்.
(ii) வகுப்பு : நான் போகணும்.
(iii) கல்லூரி : நான் போக வேண்டாம்.
(iv) ஏழுமணி : பஸ் கெடெயாது.

m. Frame questions for the answers given below following the model.

Model : எனக்கு வரமுடியும்.
உங்களுக்கு வரமுடியுமா ?

(i) எனக்குப் போக முடியும்.
(ii) எனக்குச் சாப்பிட முடியும்.

n. Make up ten sentences in the pattern.

Subj. (Dat) + Inf. + | முடியும் / முடியாது |

Model : எனக்கு + வர + முடியும்.

o. Answer these questions.

(i) நாளெக்கு எங்க வீட்டுக்கு வரமுடியுமா ?
(ii) உங்க மகளோடெ பொறந்தநாளு எப்ப ?
(iii) நீங்க தமிழ் வகுப்புக்குக் கண்டிப்பாப் போகணுமா ?
(iv) இண்ணெக்கு நீங்க இன்ஸ்டிடியூட்டுக்குப் போக வேண்டாமா ?
(v) உங்களுக்குக் காலெயிலே அஞ்சுமணிக்கு எழுந்திருக்கக் கஷ்டமா இருக்குமா ?
(vi) ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு சிட்டியிலேயிருந்து கங்கோத்ரிக்குப் பஸ் கெடெக்குமா ?
(vii) ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு சிட்டியிலேயிருந்து பஸ் கெடெயாது, இல்லே ?
(viii) உங்களுக்கு ஹாஸ்டல் சௌகரியமா இருக்குதா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| பொறந்தநாளு | 'birthday' | அதனாலெ | 'so/therefore' |
| மன்னி | 'pardon, excuse' | முடியாது | 'cannot' |
| கண்டிப்பா | 'certainly' | சௌகரியமா | 'conveniently' |

## GRAMMAR

**15.56.157.** We mentioned in the previous lesson that the verb வேணும் has a truncated form -ணும். However, its corresponding negative is identical in form with the negative defective verb வேண்டாம். Example :

**15. 56. 157.** நான் கல்லூரிக்குப் போக வேண்டாம்.
நீங்க மத்தியானம் வரவேண்டாம்.

**15.56.158.** முடியும்/முடியாது is also used as an auxiliary verb and added to the infinitive as follows.

*15. 56. 158.* உங்களுக்கு நாளைக்கு வரமுடியுமா ?
எனக்கு நாளைக்கு வரமுடியாது.
எனக்குக் காலெயிலே வரமுடியும்.

In these sentences, rarely the nominative can also have the position of subject. Example :

*15. 56. 158.* நான் காலெயிலே வரமுடியும்.
நான் நாளெக்கு வரமுடியாது.

***15.56.159.*** Like முடியும்/முடியாது, கஷ்டமா இருக்கும்/கஷ்டமா இருக்காது is also added to the infinitive of another verb and it has dative as its subject. Example :

*15. 56. 159.* உங்களுக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்குமா ?
எனக்கு ஏழுமணிக்கு வரக் கஷ்டமா இருக்கும்.

***15.56.160.*** அதனுலெ is a sentence conjunction which means 'so/therefore'. Example :

*15. 56. 160.* அதனுலெ, நீங்க மத்தியானம் சாப்பிட வாங்க.
அதனுலெ, எனக்கு வரக் கஷ்டமா இருக்கும்.

Sandhi 29. The consonants க், ச், த் and ப் are always doubled after the infinitives. Example :

வர + கஷ்டம் → வரக்கஷ்டம்

விசேஷம் + ங்க → விசேஷங்க
மன்னிக்கணும் + ங்க → மன்னிக்கணுங்க (Refer S. 1 in 1.1)
வரமுடியாதுங்க + ஏ → வரமுடியாதுங்களே (Refer S.27 in 15.55)
கண்டிப்பா + போகணும் → கண்டிப்பாப் போகணும் (Refer S.21 in 3.20)

# UNIT 15

# LESSON 57

## BORROWING MONEY FROM A FRIEND

### DIALOGUE

| | |
|---|---|
| நரசய்யா : சுரேஷ், அவசரமா பத்து ரூபாய் கடன் வேணும். உங்களாலெ கொடுக்க முடியுமா ? | Suresh, I need a loan of ten rupees urgently. Can you give me ? |
| சுரேஷ் : மன்னிக்கணும் நரசய்யா, என்னாலே பத்துரூபாய் கொடுக்க முடியாது. எட்டு ரூபாய் போதுமா ? | Pardon me, Mr. Narasaiah.... I cannot give (you) ten rupees. Will eight rupees do ? |

| | |
|---|---|
| நரசய்யா : சரிங்க, கொடுங்க.... எனக்குக் கடன் வாங்கப் பிடிக்காது. இண்ணெக்கு வேறே வழி இல்லெ .... நாளெக்கு எங்க அண்ணு ஊருலேயிருந்து வருரு. அடுத்த வாரம் திருப்பிக் கொடுக்குறேன். | Alright. Please give (it)··· I do not like borrowing (money from others). (There is) no other way today... My elder brother is coming from (his) place tomorrow. I will return (it) next week. |
| சுரேஷ்: அடுத்த வாரமா....எனக்கு ஞாயிற்றுக்கெழமெ இந்தப் பணம் வேணுமே. உங்களாலெ தயவு செய்து அண்ணெக்குக் கொடுக்க முடியுமா ? | Oh! next week.... ? (you see) I need this money on Sunday. Could you please return this money on that day ? |
| நரசய்யா : ஞாயிற்றுக்கெழமெ கொடுக்கக் கொஞ்சம் கஷ்டமா இருக்கும் . . . திங்கக்கெழமெ கொடுக்கட்டுமா ? | I will have some difficulty to return it on Sunday. Shall (I) give (it) on Monday ? |
| சுரேஷ் : சரி, கொடுங்க .... இண்ணெக்கு மாலெயிலே சினிமாவுக்கு வறீங்களா? | Alright, (you) please give it (on Monday)... Are you coming for the movie this evening ? |
| நரசய்யா : இல்லெ. எனக்குச் சினிமாவுக்குப் போகப் பிடிக்காது .... நாடகம் பார்க்கப் பிடிக்கும். ஒரு நாடகத்துக்குப் போகலாமா ? | No sir. I do not like to go to cinema. (I) like seeing dramas. Shall (we) go for a drama ? |
| சுரேஷ் : எனக்கு நாடகமும் பிடிக்கும்....அப்ப, மாலெயிலே ஸ்டார் தியேட்டர்லே சந்திப்போமா ? | Alright, I like dramas also.... Then, shall we meet at Star theatre ? |
| நரசய்யா : சரி. நான் வறேன், சுரேஷ். | Alright. I take leave of you, Mr. Suresh. |
| சுரேஷ் : வாங்க. | Please do. |

## DRILLS

a. Variation drill

**15. 57. 161.** உங்களாலெ பத்துரூபாய் கொடுக்க முடியுமா ?
என்னாலெ பத்துரூபாய் கொடுக்க முடியாது.

**15. 57. 162.** எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும்.
எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்கும்.
எனக்குக் கடன் வாங்கப் பிடிக்காது.

b. Build up drill

| | |
|---|---|
| (i) உங்களாலெ பத்துரூபாய் கொடுக்க முடியுமா ? | உங்களாலெ பத்துரூபாய் கொடுக்க முடியுமா ? |
| முடியுமா ? | முடியுமா ? |
| கொடுக்க | கொடுக்க முடியுமா ? |
| ரூபாய் | ரூபாய் கொடுக்க முடியுமா ? |
| பத்து | பத்துரூபாய் கொடுக்க முடியுமா ? |
| உங்களாலெ | உங்களாலெ பத்து ரூபாய் கொடுக்க முடியுமா ? |
| (ii) எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும். | எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும். |
| பிடிக்கும் | பிடிக்கும் |
| பார்க்க | பார்க்கப் பிடிக்கும் |
| நாடகம் | நாடகம் பார்க்கப் பிடிக்கும் |
| எனக்கு | எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும். |
| (iii) எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்காது. | எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்காது. |
| பிடிக்காது | பிடிக்காது |
| பார்க்க | பார்க்கப் பிடிக்காது |
| சினிமா | சினிமா பார்க்கப் பிடிக்காது |
| எனக்கு | எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்காது. |
| (iv) எனக்குக் கடன் வாங்கப் பிடிக்காது. | எனக்குக் கடன் வாங்கப் பிடிக்காது. |
| பிடிக்காது | பிடிக்காது |
| கடன் வாங்க | கடன் வாங்கப் பிடிக்காது |
| எனக்கு | எனக்குக் கடன் வாங்கப் பிடிக்காது. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) என்னுலெ முடியாது. | என்னுலெ முடியாது. |
| கொடுக்க முடியாது | என்னுலெ கொடுக்க முடியாது. |
| பத்து ரூபாய் முடியாது | என்னுலெ பத்துரூபாய் கொடுக்க முடியாது. |
| (ii) எனக்குப் பிடிக்காது. | எனக்குப் பிடிக்காது. |
| போகப் பிடிக்காது | எனக்குப் போகப் பிடிக்காது. |
| சினிமாவுக்குப் பிடிக்காது | எனக்கு சினிமாவுக்குப் போகப் பிடிக்காது. |
| (iii) எனக்குப் பிடிக்கும். | எனக்குப் பிடிக்கும். |
| பார்க்கப் பிடிக்கும் | எனக்குப் பார்க்கப் பிடிக்கும். |
| நாடகம் பிடிக்கும் | எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும். |

d. Question-Answer drill

(i) Q : திங்கக் கெழமெ கொடுக்கட்டுமா ?
A : சரி, கொடுங்க.

(ii) Q : இண்ணெக்கு மாலெயிலே சினிமாவுக்கு வறீங்களா ?
A : இல்லெ, எனக்குச் சினிமாவுக்குப் போகப் பிடிக்காது.

(iii) Q : ஒரு நாடகத்துக்குப் போகலாமா ?
A : சரி, எனக்கு நாடகமும் பிடிக்கும்.

(iv) Q : அப்ப, மாலெயிலே ஸ்டார் தியேட்டர்லே சந்திப்போமா ?
A : சரி, நான் வறேன்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) உங்களாலெ கொடுக்க முடியுமா ? Substitute and change the pronoun accordingly. | உங்களாலெ கொடுக்க முடியுமா ? |
| நீ | உன்னுலெ கொடுக்க முடியுமா ? |
| நான் | என்னுலெ கொடுக்க முடியுமா ? |
| நாம | நம்மாலெ கொடுக்க முடியுமா ? |
| நாங்க | எங்களாலெ கொடுக்க முடியுமா ? |
| அவன் | அவனுலெ கொடுக்க முடியுமா ? |
| அவ | அவளாலெ கொடுக்க முடியுமா ? |
| அவரு | அவராலெ கொடுக்க முடியுமா ? |
| அவங்க | அவங்களாலெ கொடுக்க முடியுமா ? |

| | |
|---|---|
| (ii) எனக்கு வாங்கப் பிடிக்காது. | எனக்கு வாங்கப் பிடிக்காது. |
| Substitute and change the verb accordingly. | |
| போ | எனக்குப் போகப் பிடிக்காது. |
| வா | எனக்கு வரப் பிடிக்காது. |
| எழுது | எனக்கு எழுதப் பிடிக்காது. |
| கொண்டுவா | எனக்குக் கொண்டுவரப் பிடிக்காது. |
| (iii) எனக்குப் பார்க்கப் பிடிக்கும். | எனக்குப் பார்க்கப் பிடிக்கும். |
| Substitute and change the verb accordingly. | |
| சந்தி | எனக்குச் சந்திக்கப் பிடிக்கும். |
| வாசி | எனக்கு வாசிக்கப் பிடிக்கும். |
| படி | எனக்குப் படிக்கப் பிடிக்கும். |
| (iv) எனக்கு ஞாயிற்றுக்கெழமெ பணம் வேணும். | எனக்கு ஞாயிற்றுக்கெழமெ பணம் வேணும். |
| Substitute and change the verb accordingly. | |
| திங்கக்கெழமெ | எனக்குத் திங்கக்கெழமெ பணம் வேணும். |
| செவ்வாக்கெழமெ | எனக்குச் செவ்வாக்கெழமெ பணம் வேணும். |
| புதன்கெழமெ | எனக்குப் புதன்கெழமெ பணம் வேணும். |
| வியாழக்கெழமெ | எனக்கு வியாழக்கெழமெ பணம் வேணும். |
| வெள்ளிக்கெழமெ | எனக்கு வெள்ளிக்கெழமெ பணம் வேணும். |
| சனிக்கெழமெ | எனக்குச் சனிக்கெழமெ பணம் வேணும். |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) என்னாலெ கொடுக்க முடியும். | உங்களாலெ கொடுக்க முடியுமா ? |
| என்னாலெ வாங்க முடியும். | உங்களாலெ வாங்க முடியுமா ? |
| என்னாலெ வர முடியும். | உங்களாலெ வர முடியுமா ? |
| என்னாலெ சாப்பிட முடியும். | உங்களாலெ சாப்பிட முடியுமா ? |
| (ii) என்னாலெ சாப்பிட முடியும். | என்னாலெ சாப்பிட முடியாது. |
| என்னாலெ வர முடியும். | என்னாலெ வர முடியாது. |
| என்னாலெ வாங்க முடியும். | என்னாலெ வாங்க முடியாது. |
| என்னாலெ கொடுக்க முடியும். | என்னாலெ கொடுக்க முடியாது. |

| | |
|---|---|
| (iii) எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும். | எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்காது. |
| எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்கும். | எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்காது. |
| எனக்குக் கடன் வாங்கப் பிடிக்கும். | எனக்குக் கடன் வாங்கப் பிடிக்காது. |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : எனக்கு...............வேணும். (urgently)
எனக்கு அவசரமா வேணும்.

(i) எனக்கு...............வேணும். (loan)
(ii) எனக்கு...............+அ பிடிக்காது. (buy)
(iii) இன்னைக்கு வேறெ...............இல்லெ. (way)
(iv) ...............வாரம் கொடுக்குறேன். (next)
(v) அடுத்த...............கொடுக்குறேன். (week)
(vi) நாளெக்கு எங்க...............வர்ருரு. (elder brother)
(vii) எனக்கு...............வேணும். (sunday)
(viii) எனக்குப்...............வேணும். (money)
(ix) ...............கொடுக்கட்டுமா ? (monday)

h. Include the infinitive form of the verb given in parentheses against each of the sentences as shown in the example.

Example : என்னுலெ முடியாது. (கொடு)
என்னுலெ கொடுக்க முடியாது.

(i) என்னுலெ முடியாது. (வா)
(ii) எனக்குப் பிடிக்காது. (வாங்கு)
(iii) எனக்குப் பிடிக்காது. (போ)
(iv) எனக்கு நாடகம் பிடிக்கும். (பாரு)

i. Change the given nouns into the instrumental and add at the left to the sentences given below.

(i) நீங்க : கொடுக்க முடியுமா ?
(ii) நான் : பத்துருபாய் கொடுக்க முடியாது.
(iii) அண்ணு : வரமுடியும்.

j. Write the word represented by the formula.

Example : போக போ + Infinitive

(i) கொடு + Infinitive : ...............
(ii) வாங்கு + Infinitive : ...............

(iii) வா + Infinitive : ................

(iv) சந்தி + Infinitive : ................

k. Change these sentences to the future.

(i) நான் அடுத்த வாரம் கொடுக்குறேன்.

(ii) நாளெக்கு அண்ணு ஊருலேயிருந்து வருரு.

(iii) நீங்க சினிமாவுக்குப் போறீங்களா ?

(iv) நான் தியேட்டருலே சந்திக்குறேன்.

l. Change these sentences to the negative.

(i) என்னுலெ கொடுக்க முடியும்.

(ii) என்னுலெ வாங்க முடியும்.

(iii) எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும்.

(iv) எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்கும்.

(v) எனக்குக் கடன் வாங்கப் பிடிக்கும்.

m. Write seven sentences about the days of the week.

Example : ஞாயிற்றுக்கெழமெ வாரத்துலே மொதலாவது நாளு.

n. Answer these questions.

(i) அவசரமா எனக்கு இருபது ரூபாய் கடன் வேணும். உங்களாலெ கொடுக்க முடியுமா ?

(ii) எனக்குக் கடன் வாங்கப் பிடிக்கும். உங்களுக்கு ?

(iii) எனக்குக் கடன் கொடுக்கப் பிடிக்காது. உங்களுக்கு ?

(iv) உங்களுக்குச் சினிமாவுக்குப் போகப் பிடிக்குமா ?

(v) உங்களுக்கு நாடகம் பார்க்கப் பிடிக்குமா ?

(vi) நாளெக்கு உங்க அண்ணு ஊருலேயிருந்து வருரா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கடன் | 'loan' | கடன்வாங்கு | 'borrow' |
| வழி | 'way' | அண்ணு | 'elder brother' |
| ஞாயிற்றுக்கெழமெ | 'sunday' | தயவுசெய்து | 'please' |
| திங்கக்கெழமெ | 'monday' | நாடகம் | 'drama' |

## GRAMMAR

**15.57.161.** We have already noted in the lesson 11.46.140 that the verb முடியும்/முடியாது at times has its subject in the instrumental form which consists of a noun and the instrumental marker **-ஆலெ.** There was no explicit indication of the occurrence of the infinitive of another verb in those

sentences. However, its existence is inherently understood in those sentences. In the following sentences the infinitives that are followed by முடியும்/முடியாது are overtly expressed.

*15. 57. 161.* உங்களாலெ பத்துரூபாய் கொடுக்க முடியுமா ?
என்னாலெ பத்துரூபாய் கொடுக்க முடியாது.

*15.57.162.* Like other defective verbs, பிடிக்கும்/பிடிக்காது can also be added to the infinitive form of another verb. But it is important to note that only the dative can have the position of subject in these sentences. Example :

*15. 57. 162.* எனக்கு நாடகம் பார்க்கப் பிடிக்கும்.
எனக்குச் சினிமா பார்க்கப் பிடிக்காது.

Sandhi : வாங்க + பிடிக்காது → வாங்கப் பிடிக்காது
கொடுக்க + கொஞ்சம் → கொடுக்கக் கொஞ்சம்
(கஷ்டமா இருக்கும்)
போக + பிடிக்காது → போகப் பிடிக்காது
பார்க்க + பிடிக்கும் → பார்க்கப் பிடிக்கும் (Refer S. 29 in 15.56)

# UNIT 15

# LESSON 58

## EXPECTING A GUEST TO ARRIVE

**DIALOGUE**

| | |
|---|---|
| சுரேஷ் : நரசய்யா, நேத்து உங்க அண்ணா ஊருலேயிருந்து வந்தாரா ? | Narasaiah, did your elder brother come from (his) place yesterday ? |
| நரசய்யா : வரலெ .... ஒருவேளெ இண்ணொக்கு வரக்கூடும். | (He) did not come (yesterday)... Perhaps (he) may come today. |
| சுரேஷ் : அவரு மட்டுமா வருரு ? | Is he coming alone ? |
| நரசய்யா : தெரியலெ..ஒருவேளெ அண்ணியும் வரலாம். அவங்ககூடக் குழந்தெங்களும் வரக்கூடும். | (I) do not know... Perhaps my sister-in-law may also come... With her the children may also come. |

| | | |
|---|---|---|
| சுரேஷ் : | நீங்க அவங்களெ நேத்துச் சாயங்காலமே எதிர்பார்த்தீங்க, இல்லே ? | You expected them yesterday evening itself, didn't you ? |
| நரசய்யா : | ஆமா சுரேஷ்... பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலேதான் இருந்தேன். | Yes, Mr. Suresh... (I) was in the bus stand till ten o' clock yesterday. |
| சுரேஷ் : | என்ன ? பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலேயா இருந்தீங்க ? | What ? Were you there in the bus stand till ten o' clock ? |
| நரசய்யா : | ஆமாங்க. அவங்க வரலெ. இண்ணெக்குச் சாயங்காலமும் பஸ் ஸ்டாண்டுக்குப் போகணும். | Yes. They didn't turn up. (I) should go to bus stand today evening too. |
| சுரேஷ் : | நானும் உங்ககூட வரட்டுமா ? | Shall I also come with you ? |
| நரசய்யா : | நீங்க நாளெக்குப் பரீட்செக்குப் படிக்க வேண்டாமா ? | Don't you have to study for the tomorrow's examination ? |
| சுரேஷ் : | எனக்குச் சாயங்காலம் படிக்கப் பிடிக்காது. | I do not like studying in the evening. |
| நரசய்யா : | சரி, அஞ்சுமணிக்குப் போகலாம். நீங்க ரெடியா இருங்க. | Alright, we shall go at five o' clock. Please be ready. |
| நரசய்யா : | சரி. | Alright. |

## DRILLS

a. Variation drill

*15. 58. 163.* அண்ணு இண்ணெக்கு வரக்கூடும்.
அண்ணிகூடக் குழந்தெங்களும் வரக்கூடும்.

*15. 58. 164.* நான் பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன்.
நீங்க பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தீங்களா ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) அண்ணு இண்ணெக்கு வரக் கூடும். | அண்ணு இண்ணெக்கு வரக் கூடும். |
| கூடும் | கூடும் |
| வர | வரக்கூடும் |
| இண்ணெக்கு | இண்ணெக்கு வரக்கூடும் |
| அண்ணு | அண்ணு இண்ணெக்கு வரக்கூடும். |
| (ii) அண்ணிகூடக் குழந்தெங்-களும் வரக்கூடும். | அண்ணிகூடக் குழந்தெங்களும் வரக்கூடும். |
| கூடும் | கூடும் |
| வர | வரக்கூடும் |
| குழந்தெங்களும் | குழந்தெங்களும் வரக்கூடும் |
| அண்ணிகூட | அண்ணிகூடக் குழந்தெங்களும் வரக்கூடும். |
| (iii) நான் பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன். | நான் பத்துமணிவரெ பஸ் ஸ்டா-ண்டுலே இருந்தேன். |
| இருந்தேன் | இருந்தேன் |
| பஸ் ஸ்டாண்டுலே | பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன் |
| பத்துமணிவரெ | பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன் |
| நான் | நான் பத்துமணிவரெ பஸ் ஸ்டா-ண்டுலே இருந்தேன். |
| (iv) நீங்க பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தீங்களா? | நீங்க பத்துமணிவரெ பஸ் ஸ்டா-ண்டுலே இருந்தீங்களா ? |
| இருந்தீங்களா ? | இருந்தீங்களா ? |
| பஸ் ஸ்டாண்டுலே | பஸ்ஸ்டாண்டுலே இருந்தீங்களா ? |
| பத்துமணிவரெ | பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தீங்களா ? |
| நீங்க | நீங்க பத்துமணிவரெ பஸ் ஸ்டா-ண்டுலே இருந்தீங்களா ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) அண்ணு வரக்கூடும். | அண்ணு வரக்கூடும். |
| இண்ணெக்கு வரக்கூடும் | அண்ணு இண்ணெக்கு வரக்கூடும். |
| ஊருலேயிருந்து வரக்கூடும் | அண்ணு ஊருலேயிருந்து இண்ணெக்கு வரக்கூடும். |

| | |
|---|---|
| (ii) குழந்தெங்களும் வரக்கூடும் | குழந்தெங்களும் வரக்கூடும். |
| ஒருவேளெ வரக்கூடும் | குழந்தெங்களும் ஒருவேளெ வரக்கூடும். |
| அண்ணிகூட வரக்கூடும் | குழந்தெங்களும் அண்ணிகூட ஒருவேளெ வரக்கூடும். |
| (iii) நான் பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன். | நான் பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன். |
| பத்துமணிவரெ இருந்தேன். | நான் பத்துமணிவரெ பஸ் ஸ்டா– ண்டுலே இருந்தேன். |
| (iv) நீங்க படிக்க வேண்டாமா ? | நீங்க படிக்க வேண்டாமா ? |
| பரீட்செக்குப் படிக்க வேண்– டாமா ? | நீங்க பரீட்செக்குப் படிக்க வேண்டாமா ? |
| நாளெக்குப் படிக்க வேண்– டாமா ? | நீங்க நாளெக்குப் பரீட்செக்குப் படிக்க வேண்டாமா ? |

d. Question-Answer drill

(i) Q : நேத்து உங்க அண்ணு ஊருலேயிருந்து வந்தாரா ?
A : வரலெ. ஒருவேளெ இண்ணெக்கு வரக்கூடும்.

(ii) Q : அவரு மட்டுமா வருரு ?
A : தெரியலெ.

(iii) Q : நீங்க அவங்களெ நேத்துச் சாயங்காலமே எதிர்பார்த்– தீங்க, இல்லே ?
A : ஆமா.

(iv) Q : பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தீங்களா ?
A : ஆமா.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) இண்ணெக்கு வரக்கூடும். | இண்ணெக்கு வரக்கூடும். |
| Substitute and change the verb accordingly. | |
| போ | இண்ணெக்குப் போகக்கூடும். |
| சந்தி | இண்ணெக்குச் சந்திக்கக்கூடும். |
| கொண்டுவா | இண்ணெக்குக் கொண்டுவரக் கூடும். |
| பாரு | இண்ணெக்குப் பார்க்கக்கூடும். |
| (ii) நீங்க படிக்க வேண்டாமா ? | நீங்க படிக்க வேண்டாமா ? |
| Substitute | |
| முடியுமா ? | நீங்க படிக்க முடியுமா ? |
| முடியாதா ? | நீங்க படிக்க முடியாதா ? |

(iii) அவங்க வரலெ. | அவங்க வரலெ.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| போ | அவங்க போகலெ. |
| படி | அவங்க படிக்கலெ. |
| சந்தி | அவங்க சந்திக்கலெ. |
| தங்கு | அவங்க தங்கலெ. |
| எழுது | அவங்க எழுதலெ. |

(iv) நீங்க எதிர்பார்த்தீங்க. | நீங்க எதிர்பார்த்தீங்க.

Substitute and conjugate the verb suitably.

| | |
|---|---|
| பாரு | நீங்க பார்த்தீங்க. |
| கொடு | நீங்க கொடுத்தீங்க. |
| வறு | நீங்க வறுத்தீங்க. |
| எடு | நீங்க எடுத்தீங்க. |
| படு | நீங்க படுத்தீங்க. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) அண்ணு இண்ணைக்கு வரக்கூடும். | யாரு இண்ணைக்கு வரக்கூடும் ? |
| அண்ணி இண்ணைக்கு வரக்கூடும். | யாரு இண்ணைக்கு வரக்கூடும் ? |
| குழந்தெங்க இண்ணைக்கு வரக்கூடும். | யாரு இண்ணைக்கு வரக்கூடும் ? |

| | |
|---|---|
| (iii) அவரு மட்டும் வருரு. | அவரு மட்டுமா வருரு ? |
| அவங்க மட்டும் வருங்க. | அவங்க மட்டுமா வருங்க ? |
| அண்ணி மட்டும் வருங்க. | அண்ணி மட்டுமா வருங்க ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ................வரலாம். (elder brother's wife)

**அண்ணி** வரலாம்.

(i) நீங்க நேத்து................த்தீங்க. (expect)

(ii) நீங்க................+ஆ இருங்க. (ready)

h. Write the word represented by the formula.

Example : **வர** வா + Infinitive.

(i) எதிர்பாரு + Infinitive : ................

(ii) இரு + Infinitive : ................

(iii) படி + Infinitive : ................

i. Change these sentences to the past.

(i) அண்ணு ஊருலேயிருந்து வருரு.
(ii) அவங்களெச் சாயங்காலமே எதிர்பார்க்குறேன்.
(iii) சாயங்காலம் பஸ் ஸ்டாண்டுக்குப் போறேன்.
(iv) பத்துமணி வரெ பஸ் ஸ்டாண்டுலே இருக்குறேன்.
(v) நீங்க பரீட்செக்குப் படிக்குறீங்க.

j. Frame questions for the answers given below following the models.

Model : அண்ணு இண்ணெக்கு வரக்கூடும்.
யாரு இண்ணெக்கு வரக்கூடும் ?

(i) குழந்தெங்க இண்ணெக்கு வரக்கூடும்.
(ii) அண்ணி இண்ணெக்கு வரக்கூடும்.

Model : அண்ணு இண்ணெக்கு வரக்கூடும்.
அண்ணு இண்ணெக்கு வரக்கூடுமா ?

(i) அண்ணி இண்ணெக்கு வரக்கூடும்.
(ii) குழந்தெங்க இண்ணெக்கு வரக்கூடும்.

k. Make up ten sentences in the pattern.

Subj. + Inf + கூடும்.
Model : அண்ணி + வர + கூடும்.

l. Answer these questions.

(i) நேத்து உங்க மனெவி ஊருலேயிருந்து வந்தாங்களா ?
(ii) நேத்து ராத்திரி எத்தனெ மணிவரெ நீங்க படிச்சீங்க ?
(iii) இண்ணெக்குச் சாயங்காலம் நீங்க சினிமாவுக்குப் போறீங்களா ?
(iv) உங்களுக்குச் சாயங்காலம் படிக்கப் பிடிக்குமா ?
(v) நீங்க மாலெயிலே எத்தனெ மணிவரெ வகுப்புலே இருக்குறீங்க ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கூடும் | 'may' | மட்டும் | 'only, alone' |
| தெரி | 'know' | அண்ணி | 'elder brother's wife' |
| எதிர்பாரு | 'expect' | வரெ | 'till, until' |

## GRAMMAR

**15.58.163.** கூடும் is an auxiliary verb which is idiomatically used in the sense of 'may' (Also refer 15.59). Example :

**15. 58. 163.** அண்ணு இண்ணெக்கு வரக்கூடும்.
அண்ணிகூடக் குழந்தெங்களும் வரக்கூடும்.

**15.58.164.** வரெ is a particle. The combination of the noun denoting time and this particle indicate a point of time 'till' or 'from which an action is performed'. Example :

**15. 58. 164.** நான் பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன்.
நீங்க பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தீங்களா ?

The sentences 15.58.164. usually preceded by another combination of a noun denoting time and -இலேயிருந்து. Example :

நான் (எட்டுமணியிலேயிருந்து) பத்துமணிவரெ பஸ் ஸ்டாண்டுலே இருந்தேன்.

'I was in the bus stand (from eight o' clock) till ten o' clock'.

Sandhi : வர + கூடும் → வரக்கூடும்
படிக்க + பிடிக்காது → படிக்கப் பிடிக்காது (Refer S.29 in 15.56)

அவங்ககூட + குழந்தெங்களும் → அவங்க கூடக் குழந்தெங்களும்
(வரக்கூடும். (Refer S.23 in 5.28)

# UNIT 15

# LESSON 59

DO YOU KNOW READING MARATHI WELL?

**DIALOGUE**

| | |
|---|---|
| நரசய்யா : சுரேஷ், உங்களுக்கு மராத்தி நல்லா வாசிக்கத் தெரியுமா ? | Suresh, do you know reading Marathi well ? |
| சுரேஷ் : வாசிக்கத் தெரியாது ; கொஞ்சம் பேசத் தெரியும். | (I) don't know reading; I know speaking (Marathi) a little. |
| நரசய்யா : வேறே யாருக்கு நல்லா வாசிக்கத் தெரியும் ? | Who else knows reading Marathi well ? |
| சுரேஷ் : பேராசிரியருக்கு நல்லா வாசிக்கத் தெரியும். | Professor (Sundaram) knows reading (Marathi) well ? |
| நரசய்யா : அவரு இப்ப எங்கே இருப்பாரு ? | Where will he be now ? |

சுரேஷ் : கல்லூரியிலே இருப்பாரு.... அது என்ன ?
(He) will be in the college. What is that ?

நரசய்யா : இது ஒரு நண்பனோடே கடிதம். இவன் சொந்த ஊரு பம்பாய். மராத்தி மாத்திரந்தான் இவனுக்குப் புரியும். எல்லாருக்கும் மராத்தியிலேயே கடிதம் எழுதுவான்.
It is a letter from a friend of mine. His native place is Bombay. He understands only Marathi. He will write letters to all only in Marathi.

சுரேஷ் : நீங்க கல்லூரியிலே பேராசிரியரெப் பாருங்க. அவருக்கு மராத்தி எழுதவும் தெரியும். அதனாலெ, அவரு உதவியோடெ நீங்க உங்க நண்பருக்குப் பதிலும் எழுதலாம்.
You meet Professor (Sundaram) in the college. He knows writing Marathi also. So, with his help you can also have (your) reply to your friend written in (Marathi).

நரசய்யா : அப்படியா ? இப்ப உங்களாலெ என் கூடக் கல்லூரிக்கு வரக் கூடுமா ?
Is that so ? Can you come now with me to the college ?

சுரேஷ் : இப்பவா ? மன்னிக்கணுங்க. எனக்குக் கொஞ்சம் வேலெ இருக்குது.
Now ? Please pardon me. I have some work.

நரசய்யா : சரி. நான் மட்டும் போறேன். வரட்டுமா?
Alright. I will go alone. Shall (I) take leave of you ?

சுரேஷ் : வாங்க.
Please do.

## DRILLS

a. Variation drill

*15. 59. 165.* உங்களாலெ என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ?
அவருக்கு இண்ணெக்குக் கல்லூரிக்கு வரக்கூடும்.

*15. 59. 166.* உங்களுக்கு மராத்தி வாசிக்கத் தெரியுமா ?
எனக்கு மராத்தி வாசிக்கத் தெரியாது.
எனக்கு மராத்தி பேசத் தெரியும்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) எனக்கு மராத்தி பேசத் தெரியும். | எனக்கு மராத்தி பேசத் தெரியும். |
| தெரியும் | தெரியும் |
| பேச | பேசத் தெரியும் |
| மராத்தி | மராத்தி பேசத் தெரியும் |
| எனக்கு | எனக்கு மராத்தி பேசத் தெரியும். |
| (ii) உங்களுக்கு மராத்தி வாசிக்கத் தெரியுமா ? | உங்களுக்கு மராத்தி வாசிக்கத் தெரியுமா ? |
| தெரியுமா ? | தெரியுமா ? |
| வாசிக்க | வாசிக்கத் தெரியுமா ? |
| மராத்தி | மராத்தி வாசிக்கத் தெரியுமா ? |
| உங்களுக்கு | உங்களுக்கு மராத்தி வாசிக்கத் தெரியுமா ? |
| (iii) உங்களுக்கு என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? | உங்களுக்கு என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? |
| கூடுமா ? | கூடுமா ? |
| வர | வரக்கூடுமா ? |
| கல்லூரிக்கு | கல்லூரிக்கு வரக்கூடுமா ? |
| என்கூட | என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? |
| உங்களுக்கு | உங்களுக்கு என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) உங்களுக்குத் தெரியுமா ? | உங்களுக்குத் தெரியுமா ? |
| வாசிக்கத் தெரியுமா ? | உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா ? |
| நல்லாத் தெரியுமா ? | உங்களுக்கு நல்லா வாசிக்கத் தெரியுமா ? |
| மராத்தி தெரியுமா ? | உங்களுக்கு மராத்தி நல்லா வாசிக்கத் தெரியுமா ? |
| (ii) பேராசிரியருக்குத் தெரியும். | பேராசிரியருக்குத் தெரியும். |
| வாசிக்கத் தெரியும் | பேராசிரியருக்கு வாசிக்கத் தெரியும். |
| நல்லாத் தெரியும் | பேராசிரியருக்கு நல்லா வாசிக்கத் தெரியும். |
| (iii) உங்களுக்கு வரக்கூடுமா ? | உங்களுக்கு வரக்கூடுமா ? |
| கல்லூரிக்கு வரக்கூடுமா ? | உங்களுக்குக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? |

| | |
|---|---|
| என்கூட வரக்கூடுமா ? | உங்களுக்கு என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? |
| இப்ப வரக்கூடுமா ? | உங்களுக்கு இப்ப என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ? |

d. Question-Answer drill

(i) Q : உங்களுக்கு மராத்தி வாசிக்கத் தெரியுமா ?
A : வாசிக்கத் தெரியாது ; கொஞ்சம் பேசத்தெரியும்.

(ii) Q : அவரு இப்ப எங்கே இருப்பாரு ?
A : கல்லூரியிலே இருப்பாரு.

(iii) Q : இப்ப உங்களுக்கு என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ?
A : இப்பவா ? மன்னிக்கணுங்க. எனக்குக் கொஞ்சம் வேலெ இருக்குது.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா ? | உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா ? |
| Substitute and change the verb accordingly. | |
| படி | உங்களுக்குப் படிக்கத் தெரியுமா ? |
| பேசு | உங்களுக்குப் பேசத் தெரியுமா ? |
| எழுது | உங்களுக்கு எழுதத் தெரியுமா ? |
| வரெ | உங்களுக்கு வரெயத் தெரியுமா ? |
| செய் | உங்களுக்குச் செய்யத் தெரியுமா ? |
| (ii) எனக்கு எழுதவும் தெரியும். | எனக்கு எழுதவும் தெரியும். |
| Substitute and change the verb accordingly. | |
| படி | எனக்குப் படிக்கவும் தெரியும். |
| வாசி | எனக்கு வாசிக்கவும் தெரியும். |
| கொடு | எனக்குக் கொடுக்கவும் தெரியும். |
| வரெ | எனக்கு வரெயவும் தெரியும். |
| (iii) பேராசிரியருக்கு நல்லா வாசிக்கத் தெரியும். | பேராசிரியருக்கு நல்லா வாசிக்கத் தெரியும். |
| Substitute | |
| கொஞ்சம் | பேராசிரியருக்குக் கொஞ்சம் வாசிக்கத் தெரியும். |
| வேகமா | பேராசிரியருக்கு வேகமா வாசிக்கத் தெரியும். |
| அழகா | பேராசிரியருக்கு அழகா வாசிக்கத் தெரியும். |

(iv) உங்ளுகக்கு வரக்கூடுமா ? — உங்களுக்கு வரக்கூடுமா ?

Substitute and change the pronoun accordingly.

| | |
|---|---|
| நீ | உனக்கு வரக்கூடுமா ? |
| இவன் | இவனுக்கு வரக்கூடுமா ? |
| இவ | இவளுக்கு வரக்கூடுமா ? |
| இவரு | இவருக்கு வரக்கூடுமா ? |
| இவங்க | இவங்களுக்கு வரக்கூடுமா ? |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) எனக்கு வாசிக்கத் தெரியும். | உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா ? |
| எனக்கு எழுதத் தெரியும். | உங்களுக்கு எழுதத் தெரியுமா ? |
| எனக்குப் படிக்கத் தெரியும். | உங்களுக்குப் படிக்கத் தெரியுமா ? |
| எனக்கு வரெயத் தெரியும். | உங்களுக்கு வரெயத் தெரியுமா ? |
| (ii) எனக்கு வரெயத் தெரியும். | யாருக்கு வரெயத் தெரியும் ? |
| எனக்கு எழுதத் தெரியும். | யாருக்கு எழுதத் தெரியும் ? |
| எனக்குப் படிக்கத் தெரியும். | யாருக்குப் படிக்கத் தெரியும் ? |
| எனக்கு வாசிக்கத் தெரியும். | யாருக்கு வாசிக்கத் தெரியும் ? |
| (iii) எனக்கு வாசிக்கத் தெரியும். | எனக்கு வாசிக்கத் தெரியாது. |
| எனக்கு வரெயத் தெரியும். | எனக்கு வரெயத் தெரியாது. |
| எனக்கு எழுதத் தெரியும். | எனக்கு எழுதத் தெரியாது. |
| எனக்குப் படிக்கத் தெரியும். | எனக்குப் படிக்கத் தெரியாது. |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இது நண்பனோடெ................ (letter)
இது நண்பனோடெ **கடிதம்.**

(i) இவன்................பம்பாய். (native place)
(ii) அவரு................+ ஓடெ பதில் எழுதலாம். (help)
(iii) நான்................போறேன். (only)

h. Include the infinitive form of the verb given in parentheses against each of the sentences as shown in the example.

Example : உங்களுக்குத் தெரியுமா ? (வாசி)
உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா ?

(i) எனக்குக் கொஞ்சம் தெரியும். (பேசு)
(ii) அவருக்கு நல்லாத் தெரியும். (எழுது)

i. Write the word represented by the formula.

Example: **எழுத** எழுது + Infinitive

(i) வாசி + Infinitive : ................
(ii) பேசு + Infinitive : ................
(iii) மன்னி + Infinitive : ................

j. Frame questions for the answers given below following the model.

Model : எனக்கு வாசிக்கத் தெரியும்.
யாருக்கு வாசிக்கத் தெரியும் ?

(i) எனக்கு எழுதத் தெரியும்.
(ii) எனக்குப் படிக்கத் தெரியும்.
(iii) எனக்கு வரெயத் தெரியும்.

k. Change these sentences to the negative.

(i) எனக்கு வாசிக்கத் தெரியும்.
(ii) அவனுக்கு மராத்தி மட்டும் புரியும்.
(iii) எனக்குப் படிக்கத் தெரியும்.
(iv) அவருக்கு எழுதவும் தெரியும்.

l. Make up ten sentences in the pattern.

Subj. (Dat) + Inf + | தெரியும் | / | தெரியாது |

Model : பேராசிரியருக்கு + வாசிக்க + தெரியும்.

m. Answer these questions.

(i) உங்களுக்குத் தமிழ் நல்லா வாசிக்கத் தெரியுமா ?
(ii) உங்க ஆசிரியரு இப்ப எங்கே இருப்பாரு ?
(iii) உங்க மனெவிக்குத் தமிழ் எழுதத் தெரியுமா ?
(iv) உங்க மனெவி கடிதம் எழுதுனுங்களா ?
(v) நீங்க உங்க மனெவிக்கு எப்பப் பதில் எழுதுனீங்க ?
(vi) உங்களாலெ தமிழ்லேயே கடிதம் எழுத முடியுமா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கடிதம் | 'letter' | சொந்த ஊரு | 'native place' |
| பதில் | 'reply' | பதில் எழுது | 'reply' |

## GRAMMAR

***15.59.165.*** A reference has been made in the previous lesson about the use of the auxiliary verb **கூடும்.** We use this verb in the sense '(it is) possible' '(it) can be done' etc., in this lesson. See the following examples.

***15. 59. 165.*** உங்களாலெ என்கூடக் கல்லூரிக்கு வரக்கூடுமா ?
அவரு இண்ணெக்குக் கல்லூரிக்கு வரக்கூடும்.

It has the instrumental form as its subject.

***15.59.166.*** தெரியும்/தெரியாது also has the function of an auxiliary verb when it is added to the infinitive form of a verb. Example :

***15. 59. 166.*** எனக்கு மராத்தி பேசத் தெரியும்.
உங்களுக்கு மராத்தி வாசிக்கத் தெரியுமா ?

Sandhi : வாசிக்க + தெரியாது → வாசிக்கத் தெரியாது
பேச + தெரியும் → பேசத் தெரியும்
வர + கூடுமா → வரக்கூடுமா (Refer S.29 in 15.56)

எழுத + உம் → எழுதவும்
இப்ப + ஆ → இப்பவா (Refer S.9 in 1.7)
கல்லூரி + இலே → கல்லூரியிலே
உதவி + ஒடெ → உதவியோடெ
அப்படி + ஆ → அப்படியா (Refer S.7 in 1.5)

# UNIT 15

## LESSON 60

WHAT SHOULD I DO IN THE MORNING ?

**DIALOGUE**

| | |
|---|---|
| மூர்த்தி : கலா, அங்கே என்ன பண்ணுறே ? | Kala, what are you doing there? |
| கலா : வெளெயாடுறேன், அப்பா? | (I) am playing, daddy. |
| மூர்த்தி : இங்கே வா ! காலெயிலே வெளெயாடக்கூடாது. காலெயிலே படிக்கணும்... சாயங்காலம் வெளெயாடணும்.... தெரியுதா ? | Come here !... (You) must not play in the morning... (You) must play in the evening... Do you understand ? |
| கலா : சரியப்பா. | Alright, daddy. |

| | |
|---|---|
| மூர்த்தி : நீ பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டாமா ? | Don't you have to go to school ? |
| கலா : போகணும்.... அம்மா வேலெயா இருக்குறாங்க. அம்மா தானே என்னெக் குளிப்பாட்டணும் ? | (Yes) I should go....Mother is busy at work. Isn't the mother who should bathe me ? |
| மூர்த்தி : அம்மாவுக்காகக் காத்திருக்கக்கூடாது. நீயே குளிக்கணும். | (You) must not wait for mother. You should bathe yourself. |
| கலா : அப்புறம், காலெயிலே என்ன செய்யணும் ? | Then, what should (I) do in the morning ? |
| மூர்த்தி : அப்புறம், டிபன் சாப்பிடணும். | Then, (you) should eat (your) tiffin/ (breakfast). |
| கலா : டிரஸ் பண்ணவேண்டாமா? | Won't I have to dress (myself) ? |
| மூர்த்தி : ஒம்பது மணிக்கு டிரஸ் பண்ணணும். .ஒம்பதரெ மணிக்குப் பள்ளிக்கூடத்துக்குப்போகணும். ணும். பள்ளிக் கூடத்துலே ஆசிரியருக்கு வணக்கம் சொல்லணும். ஆசிரியரெ அவமரியாதெ செய்யக் கூடாது. போ ! அம்மா காத்திருக்குறாங்க. | (You) should dress yourself at nine o'clock... (You) should go to school at nine thirty... (You) should greet your teacher in the school... (You) should not show disrespect to the teacher. Go! Mother is waiting. |
| கலா : சரியப்பா. | Okey, daddy. |

## DRILLS

a. Variation drill

*15. 60. 167.* நான் என்ன செய்யணும் ?
நீயே குளிக்கணும்.
நீ பள்ளிக்கூடத்துக்குப் போகணும்.

*15. 60. 168.* நீ காலெயிலே வெளெயாடக்கூடாது.
நீ அம்மாவுக்காகக் காத்திருக்கக்கூடாது.
நீ ஆசிரியரெ அவமரியாதெ செய்யக்கூடாது.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் என்ன செய்யணும் ? | நான் என்ன செய்யணும் ? |
| என்ன செய்யணும் ? | என்ன செய்யணும் ? |
| நான் | நான் என்ன செய்யணும் ? |
| (ii) நீயே குளிக்கணும். | நீயே குளிக்கணும். |
| குளிக்கணும் | குளிக்கணும் |
| நீயே | நீயே குளிக்கணும். |
| (iii) நீ பள்ளிக்கூடத்துக்குப் போகணும். | நீ பள்ளிக்கூடத்துக்குப் போகணும். |
| போகணும் | போகணும் |
| பள்ளிக்கூடத்துக்கு | பள்ளிக்கூடத்துக்குப் போகணும் |
| நீ | நீ பள்ளிக்கூடத்துக்குப் போகணும். |
| (iv) நீ காலெயிலே வெளெயாடக் கூடாது. | நீ காலெயிலே வெளெயாடக் கூடாது. |
| கூடாது | கூடாது |
| வெளெயாட | வெளெயாடக்கூடாது |
| காலெயிலே | காலெயிலே வெளெயாடக்கூடாது |
| நீ | நீ காலெயிலே வெளெயாடக் கூடாது. |
| (v) நீ அம்மாவுக்காகக் காத்தி-ருக்கக்கூடாது. | நீ அம்மாவுக்காகக் காத்திருக்கக் கூடாது. |
| காத்திருக்கக்கூடாது | காத்திருக்கக் கூடாது |
| அம்மாவுக்காக | அம்மாவுக்காகக் கத்திருக்கக் கூடாது |
| நீ | நீ அம்மாவுக்காகக் காத்திருக்கக் கூடாது. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நான் என்ன செய்யணும் ? | நான் என்ன செய்யணும் ? |
| காலெயிலே என்ன செய்ய-ணும் ? | நான் காலெயிலே என்ன செய்ய-ணும் ? |
| (ii) நீ போகவேண்டாமா ? | நீ போகவேண்டமா ? |
| பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாமா ? | நீ பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாமா ? |
| (iii) நீ வெளெயாடக் கூடாது. | நீ வெளெயாடக் கூடாது. |
| காலெயிலே வெளெயாடக் கூடாது! | நீ காலெயிலே வெளெயாடக் கூடாது. |

| | |
|---|---|
| (iv) நீ செய்யக்கூடாது. | நீ செய்யக்கூடாது. |
| அவமரியாதெ செய்யக் கூடாது | நீ அவமரியாதெ செய்யக்கூடாது. |
| ஆசிரியரெச் செய்யக்கூடாது | நீ ஆசிரியரெ அவமரியாதெ செய்யக்கூடாது. |

d. Question-Answer drill

(i) Q : அங்கே என்ன பண்ணுறே ?
A : வெளெயாடுறேன்.
(ii) Q : நீ பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாமா ?
A : போகணும்.
(iii) Q : அப்புறம் காலெயிலே என்ன செய்யணும் ?
A : அப்புறம் டிபன் சாப்பிடணும்.
(iv) Q : அம்மாதானே என்னெக் குளிப்பாட்டணும் ?
A : அம்மாவுக்காகக் காத்திருக்கக் கூடாது. நீயே குளிக்கணும்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நீ படிக்கணும். | நீ படிக்கணும். |
| Substitute and change the verb accordingly. | |
| வெளெயாடு | நீ வெளெயாடணும். |
| போ | நீ போகணும். |
| குளிப்பாட்டு | நீ குளிப்பாட்டணும். |
| குளி | நீ குளிக்கணும். |
| காத்திரு | நீ காத்திருக்கணும். |
| சாப்பிடு | நீ சாப்பிடணும். |
| சொல்லு | நீ சொல்லணும். |

| | |
|---|---|
| (ii) நீ வெளெயாடக்கூடாது. | நீ வெளெயாடக்கூடாது. |
| Substitute and change the verb accordingly. | |
| சாப்பிடு | நீ சாப்பிடக்கூடாது. |
| குளிப்பாட்டு | நீ குளிப்பாட்டக்கூடாது. |
| சொல்லு | நீ சொல்லக்கூடாது. |
| போ | நீ போகக்கூடாது. |
| குளி | நீ குளிக்கக்கூடாது. |
| காத்திரு | நீ காத்திருக்கக்கூடாது. |
| படி | நீ படிக்கக்கூடாது. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் குளிக்கணும். | நீ குளிக்க வேண்டாம். |
| நான் குளிப்பாட்டணும். | நீ குளிப்பாட்ட வேண்டாம். |
| நான் போகணும். | நீ போக வேண்டாம். |
| நான் வெளெயாடணும். | நீ வெளெயாட வேண்டாம். |
| (ii) நான் வெளெயாடணும். | நீ வெளெயாடக் கூடாது. |
| நான் குளிப்பாட்டணும். | நீ குளிப்பாட்டக் கூடாது. |
| நான் குளிக்கணும். | நீ குளிக்கக் கூடாது. |
| நான் போகணும். | நீ போகக் கூடாது. |
| (iii) நீ குளிக்கணும். | நான் என்ன செய்யணும் ? |
| நீ வெளெயாடணும். | நான் என்ன செய்யணும் ? |
| நீ போகணும். | நான் என்ன செய்யணும் ? |
| நீ குளிப்பாட்டணும். | நான் என்ன செய்யணும் ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ காலெயிலே................+அக் கூடாது. (play)
நீ காலெயிலே **வெளெயாடக்** கூடாது.

(i) அம்மா என்னெ................ருங்க. (bathe)
(ii) அப்புறம், நான்................றேன். (dress)

h. Include the infinitive form of the verb given in parentheses against each of the sentences as shown in the example.

Example : சாயங்காலம்................ணும். (வெளெயாடு)
சாயங்காலம் வெளெயாடணும்.

(i) அம்மாதானே என்னெக்................ணும். (குளிப்பாட்டு)
(ii) நீ அம்மாவுக்காகக்..............ணும். (காத்திரு)
(iii) நீயே................ணும். (குளி)
(iv) காலெயிலே என்ன................ணும் ? (செய்)
(v) ஆசிரியருக்கு வணக்கம்................ணும். (சொல்லு)

i. Fill in the blanks using the prohibitive form of the verbs given in parentheses.

(i) நீ காலெயிலே........................ (வெளெயாடு)
(ii) நீ அம்மாவுக்காகக்................ (காத்திரு)
(iii) ஆசிரியரெ................ (அவமரியாதெ செய்)
(iv) அம்மா என்னெக்................ (குளிப்பாட்டு)

j. Write the word represented by the formula.

Example : படிக்க படி + Infinitive

(i) வெளெயாடு + Infinitive : ................

(ii) குளிப்பாட்டு + Infinitive : ................

(iii) காத்திரு + Infinitive : ................

(iv) குளி + Infinitive : ................

(v) செய் + Infinitive : ................

(vi) பண்ணு + Infinitive : ................

k. Change these sentences to the negative.

(i) நீ குளிக்கணும்.

(ii) நீ குளிப்பாட்டணும்.

(iii) நீ போகணும்.

(iv) நீ வெளெயாடணும்.

l. Frame questions for the answers given below following the model.

Model : நீ குளிக்கணும்.
நான் என்ன செய்யணும் ?

(i) நீ வெளெயாடணும்.

(ii) நீ போகணும்.

(iii) நீ வரணும்.

(iv) நீ குளிப்பாட்டணும்.

m. Make up ten sentences in the pattern.

Subj. + Inf. + கூடாது

Model : நீ + வெளெயாட + கூடாது.

n. Answer these questions.

(i) நீங்க எத்தனெ மணிக்கு இன்ஸ்டிடியூட்டுக்குப் போகணும் ?

(ii) நீங்க வகுப்புலே ஆசிரியருக்கு வணக்கம் சொல்லணுமா ?

(iii) ஆசிரியரெ அவமரியாதெ செய்யக்கூடாது, இல்லே ?

(iv) மாணவங்க காலெயிலே வெளெயாடக்கூடாது, இல்லே ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| அங்கே | 'there' | வெளெயாடு | 'play' |
| குளிப்பாட்டு | 'bathe' | டிரஸ் | 'dress' |
| டிரஸ் பண்ணு | 'wear, as clothes' | அவமரியாதெ | 'disrespect' |

## GRAMMAR

*15.60.167.* The infinitive form of a verb என்ன செய் is the corresponding question of the infinitive form of the main verb with which the auxiliary verbs are added. Example :

*15. 60. 167.* நான் என்ன செய்யணும் ?

We mentioned in the lessson 15.55 that the auxiliary verb-ணும் has the meaning of 'command'. See the following examples.

*15. 60. 167.* நீயே குளிக்கணும்.
நீயே பள்ளிக்கூடத்துக்குப் போகணும்.

-ஏ is an emphatic marker. Example :

*15. 60. 167.* நீயே குளிக்கணும்.

*15.60.168.* கூடாது 'must not/should not' is although similar with கூடும் in formation, this auxiliary verb implies that a prohibition is imposed not to carry out an action. Example :

*15. 60. 168.* நீ காலெயிலே வெளெயாடக்கூடாது.
நீ ஆசிரியரெ அவமரியாதெ செய்யக்கூடாது.

Sandhi : வெளெயாட + கூடாது → வெளெயாடக்கூடாது
காத்திருக்க + கூடாது → காத்திருக்கக் கூடாது
செய்ய + கூடாது → செய்யக்கூடாது (Refer S.29 in 15.56)

அம்மாவுக்காக + காத்திருக்கக்கூடாது → அம்மாவுக்காகக் காத்திருக்கக் கூடாது. (Refer S.25 in 10.42)

## UNIT 16

## LESSON 61

WITH THE STATION MASTER

**DIALOGUE**

| | |
|---|---|
| சுரேஷ் : ஸார் ! மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ? | Sir, when will the train that goes to Mayuram come ? |
| ஸ்டேஷன் மாஸ்டர் : பத்துமணிக்கு வரணும்....இண்ணைக்கு நாப்பது நிமிஷம் லேட். அதனாலெ பத்து நாப்பதுக்கு வரும். நீங்க எங்கே போகணும் ? | (It) should have come at 10 o'clock... Today (it is) late by forty minutes. So, (it) will come at ten forty. Where do you want to go ? |
| சுரேஷ் : மாயவரத்துக்குத்தாங்க. | Up to Mayuram, sir. |

| | |
|---|---|
| ஸ்டேஷன் மாஸ்டர் : அப்படீன்னு, இப்ப வற ரயில்லேயே நீங்க போகலாமே ? | If that is so, you can go very well by the incoming train now ? |
| சுரேஷ் : ஏங்க.... ? பத்துநாப்பது ரயில்லே ரொம்பக் கூட்டமா இருக்குமா ? | Why, sir... ? Will there be much crowd in the ten forty train ? |
| ஸ்டேஷன் மாஸ்டர் : கோடெ விடுமுறெ பாருங்க.... சென்னெயிலேயிருந்து வற ரயில்லேயெல்லாம் ரொம்பக் கூட்டமா இருக்கும். | You see, (this) is summer vacation... It will be crowded in the trains that are coming from Madras. |
| சுரேஷ் : அப்படீங்களா ? இந்த ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? | Is that so ? Is there any book shop in this railway station ? |
| ஸ்டேஷன் மாஸ்டர் : மூணாவது பிளாட்பாரத்துலே இருக்குற கேண்டீனுக்குப் பக்கத்துலே ஒரு கடெ இருக்குது. அங்கே எல்லாப் புஸ்தகமும் கெடெக்கும். | There is a shop near the canteen which is in the third platform··· All the books are available there. |
| சுரேஷ் : இங்கே டிக்கெட் கொடுக்குற கெளண்டர் எந்தப் பக்கம் இருக்குதுங்க ? | In which side is the ticket issuing counter here ? |
| ஸ்டேஷன் மாஸ்டர் : அதோ ! அதுதாங்க கெளண்டர். | Look there ! That is the counter. |
| சுரேஷ் : ரொம்ப நன்றிங்க. | Thank (you) very much, sir. |

## DRILLS

a. Variation drill

16. 61. 169. சென்னெயிலேயிருந்து வற ரயில்லே கூட்டமா இருக்கும்.
மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ?
இங்கே டிக்கெட் கொடுக்குற கெளண்டர் எந்தப் பக்கம் இருக்குது ?
இந்த ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) சென்னெயிலேயிருந்து வற ரயில்லே கூட்டமா இருக்கும். | சென்னெயிலேயிருந்து வற ரயில்லே கூட்டமா இருக்கும். |
| இருக்கும் | இருக்கும் |
| கூட்டமா | கூட்டமா இருக்கும் |
| ரயில்லே | ரயில்லே கூட்டமா இருக்கும் |
| வற | வற ரயில்லே கூட்டமா இருக்கும் |
| சென்னெயிலேயிருந்து | சென்னெயிலேயிருந்து வற ரயில்லே கூட்டமா இருக்கும். |
| (ii) மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ? | மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ? |
| எப்ப வரும் ? | எப்ப வரும் ? |
| ரயில் | ரயில் எப்ப வரும் ? |
| மாயவரத்துக்குப் போற | மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ? |
| (iii) இந்த ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? | இந்த ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? |
| இருக்குதுங்களா ? | இருக்குதுங்களா ? |
| கடெ | கடெ இருக்குதுங்களா ? |
| புஸ்தகம் விக்குற | புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? |
| ரயில்வே ஸ்டேஷன்லே | ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? |
| இந்த | இந்த ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? |
| (iv) ரயில் பத்து நாப்பதுக்கு வரும். | ரயில் பத்து நாப்பதுக்கு வரும். |
| வரும் | வரும் |
| பத்து நாப்பதுக்கு | பத்து நாப்பதுக்கு வரும் |
| ரயில் | ரயில் பத்து நாப்பதுக்கு வரும். |

(v) இந்த ரயில் மாயவரத்துக்கு எப்பப் போகும் ?
எப்பப் போகும் ? — எப்பப் போகும் ?
மாயவரத்துக்கு — மாயவரத்துக்கு எப்பப் போகும் ?
ரயில் — ரயில் மாயவரத்துக்கு எப்பப் போகும் ?
இந்த — இந்த ரயில் மாயவரத்துக்கு எப்பப் போகும் ?

c. Expansion drill

(i) இந்த ரயில்வே ஸ்டேஷன்லே கடெ இருக்குதுங்களா ? — இந்த ரயில்வே ஸ்டேஷன்லே கடெ இருக்குதுங்களா ?
புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ? — இந்த ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்கு–துங்களா ?

(ii) இங்கே கௌண்டர் எந்தப் பக்கம் இருக்குது ? — இங்கே கௌண்டர் எந்தப் பக்கம் இருக்குது ?
டிக்கெட் கொடுக்குற கௌண்டர் எந்தப் பக்கம் இருக்குது ? — இங்கே டிக்கெட் கொடுக்குற கௌண்டர் எந்தப் பக்கம் இருக்குது ?

(iii) இந்த ரயில் எப்பப் போகும் ? — இந்த ரயில் எப்பப் போகும் ?
மாயவரத்துக்கு எப்பப் போகும் ? — இந்த ரயில் மாயவரத்துக்கு எப்பப் போகும் ?

(iv) ரயில் வரும். — ரயில் வரும்.
பத்து நாப்பதுக்கு வரும். — ரயில் பத்து நாப்பதுக்கு வரும்.

d. Question-Answer drill

(i) Q : ஸார், மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ?
A : பத்து நாப்பதுக்கு வரும்.

(ii) Q : நீங்க எங்கே போகணும் ?
A : மாயவரத்துக்குத்தாங்க.

(iii) Q : ஏங்க....? பத்து நாப்பது ரயில்லே ரொம்பக் கூட்டமா இருக்குமா ?
A : சென்னெயிலேயிருந்து வற ரயில்லேயெல்லாம் ரொம்பக் கூட்டமா இருக்கும்.

(vi) Q : இங்கே டிக்கெட் கொடுக்குற கௌண்டர் எத்தப் பக்கம் இருக்குதுங்க ?
A : **அதோ ! அதுதாங்க கௌண்டர்.**

e. Substitution drill

| | |
|---|---|
| (i) டிக்கெட் கொடுக்குற கௌண்டர் எங்கே இருக்குது ? | டிக்கெட் கொடுக்குற கௌண்டர் எங்கே இருக்குது ? |
| Substitute and change the verb accordingly. | |
| வாங்கு | டிக்கெட் வாங்குற கௌண்டர் எங்கே இருக்குது ? |
| எடு | டிக்கெட் எடுக்குற கௌண்டர் எங்கே இருக்குது ? |
| வில் | டிக்கெட் விக்குற கௌண்டர் எங்கே இருக்குது ? |
| தா | டிக்கெட் தற கௌண்டர் எங்கே இருக்குது ? |
| (ii) மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ? | மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ? |
| Substitute and change the verb accordingly. | |
| வா | மாயவரத்துக்கு வற ரயில் எப்ப வரும் ? |
| கௌம்பு | மாயவரத்துக்குக் கௌம்புற ரயில் எப்ப வரும் ? |
| புறப்படு | மாயவரத்துக்குப் புறப்படுற ரயில் எப்ப வரும் ? |
| (iii) ரயில் எப்ப வரும் ? | ரயில் எப்ப வரும் ? |
| Substitute and conjugate the verb suitably. | |
| போ | ரயில் எப்பப் போகும் ? |
| சேரு | ரயில் எப்பச் சேரும் ? |
| புறப்படு | ரயில் எப்பப் புறப்படும் ? |
| கௌம்பு | ரயில் எப்பக் கௌம்பும் ? |
| (iv) ரயில் எப்ப வரும் ? | ரயில் எப்ப வரும் ? |
| Substitute | |
| வண்டி | வண்டி எப்ப வரும் ? |
| பஸ் | பஸ் எப்ப வரும் ? |
| கார் | கார் எப்ப வரும் ? |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) மாயவரத்துக்குப் போற ரயில் பத்து நாப்பதுக்கு வரும். | எங்கே போற ரயில் பத்து நாப்பதுக்கு வரும் ? |

| | |
|---|---|
| ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குது. | எங்கே புஸ்தகம் விக்குற கடெ இருக்குது ? |
| கேண்டீனுக்குப் பக்கத்துலே புஸ்தகம் விக்குற கடெ இருக்குது. | எங்கே புஸ்தகம் விக்குற கடெ இருக்குது ? |
| பிளாட்பாரத்துலே டிக்கெட் கொடுக்குற கௌண்டர் இருக்குது. | எங்கே டிக்கெட் கொடுக்குற கௌண்டர் இருக்குது ? |
| (ii) ரயில் பத்து நாப்பதுக்கு வந்தது. | ரயில் பத்து நாப்பதுக்கு வரும். |
| ரயில்லே கூட்டமா இருந்தது. | ரயில்லே கூட்டமா இருக்கும். |
| ரயில் பதினொருமணிக்குச் சேர்ந்தது. | ரயில் பதினொருமணிக்குச் சேரும். |
| அங்கே எல்லாப் புஸ்தகமும் கெடெச்சது. | அங்கே எல்லாப் புஸ்தகமும் கெடெக்கும். |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ரயில்லே ரொம்ப................+ஆ இருக்கும். (crowd)
ரயில்லே ரொம்பக் கூட்டமா இருக்கும்.

(i) புஸ்தகம் விக்குற................இருக்குதுங்களா ? (shop)
(ii) அது டிக்கெட் கொடுக்குற................ (counter)
(iii) ரயில் பத்து மணிக்கு மாயவரம்................ம். (reach)

h. Change these sentences into present relative participles.

Model : ரயில் மாயவரத்துக்குப் போகுது.
மாயவரத்துக்குப் போற ரயில்....

(i) ரயில் இப்ப வருது.
(ii) கடெ கேண்டீனுக்குப் பக்கத்துலே இருக்குது.
(iii) கேண்டீன் மூணுவது பிளாட்பாரத்துலே இருக்குது.

i. Fill in the blanks using the relative participle (present) form of the verbs given in parentheses.

(i) மாயவரத்துக்குப்................ரயில் எப்ப வரும் ? (போ)
(ii) இப்ப................ரயில்லேயே நீங்க போகலாம். (வா)
(iii) இங்கே புஸ்தகம்................கடெ எங்கே இருக்குது ? (வில்)
(iv) டிக்கெட்................கௌண்டர் எந்தப் பக்கம் இருக்குது ? (கொடு)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : ரயில் எப்ப வரும் ?
ரயில் மாயவரத்துக்குப் போகுது.
மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ?

(i) நீங்க ரயில்லேயே போகலாமே ?
ரயில் இப்ப வருது.

(ii) கேண்டீனுக்குப் பக்கத்துலே ஒரு கடெ இருக்குது.
கேண்டீன் மூணாவது பிளாட்பாரத்துலே இருக்குது.

k. Write the word represented by the formula.

Example : **போற** போ + Rel. Part. (Present)

(i) வா + Rel. Part. (Present) : ................
(ii) தா + Rel. Part. (Present) : ................
(iii) பாரு + Rel. Part. (Present) : ................
(iv) வில் + Rel. Part. (Present) : ................
(v) இரு + Rel. Part. (Present) : ................
(vi) கொடு + Rel. Part. (Present) : ................
(viii) சேரு + Rel. Part. (Present) : ................

l. Change the underlined word or group of words to its corresponding question.

(i) ரயில் பத்து நாப்பதுக்கு வரும்.
(ii) நான் மாயவரத்துக்குப் போகணும்.
(iii) டிக்கெட் கொடுக்குற கௌண்டர் இந்தப் பக்கம் இருக்குது.
(iv) கேண்டீனுக்குப் பக்கத்துலே ஒரு கடெ இருக்குது.

m. Change the given nouns into the locative and add at the left to the verb in the sentences given below.

(i) ரயில் : நீங்க போகலாமே ?
(ii) ஸ்டேஷன் : புஸ்தகம் விக்குற கடெ இருக்குது.
(iii) பிளாட்பாரம் : கேண்டீன் இருக்குது.

n. Join the following according to the sandhi rule.

(i) பக்கம் + உலே :................ கூட்டம் + உலே :............
மாயவரம் + உலே :.......... புஸ்தகம் + உலே :............
பிளாட்பாரம் + உலே :......

o. Answer the questions.

(i) சென்னெயிலேயிருந்து வற பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் பெங்களூருக்கு எப்ப வரும் ? உங்களுக்குத் தெரியுமா ?

(ii) உங்க ஊரு ரயில்வே ஸ்டேஷன்லே புஸ்தகம் விக்குற கடெ இருக்குதுங்களா ?
(iii) உங்க ஊரு ரயில்வே ஸ்டேஷன்லே எத்தனவது பிளாட்பாரத்துலே கேண்டீன் இருக்குது ?
(iv) அடுத்த கோடெ விடுமுறெக்கு நீங்க எங்கே போறீங்க ?
(v) நீங்க ஊருக்குப் போற ரயில்லே ரொம்பக் கூட்டமா இருக்குமா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| நாப்பது | 'forty' | பத்து நாப்பது | 'ten forty' |
| கூட்டம் | 'crowd' | கோடெ | 'summer' |
| விடுமுறெ | 'vacation' | சேரு | 'reach' |
| பிளாட்பாரம் | 'platform' | கௌண்டர் | 'counter' |

## GRAMMAR

**16.61.169.** So far we dealt with the internal structure of various simple sentences in fifteen units. This Unit starts with the complex and compound sentences of Tamil. This lesson introduces the relative participle or verbal adjective. It precedes and qualifies the nouns or the noun phrases as other adjectives (Refer 1.4). Like adjectives this also cannot be declined. In addition to this, it does not show any gender or number distinction agreeing with the subject which it precedes. This Unit in seven lessons elaborately deals with present relative participle (Lesson 61), past relative participle (Lesson 62), negative relative participle (Lesson 63), present and past participial nouns (lesson 64, 65 and 66) and negative participial noun (lesson 67). The relative participle is formed by adding the suffix -அ to the verb stem consisting of a verb root and tense marker. Example :

*16. 61. 169.* சென்னெயிலேயிருந்து வற ரயில்லே கூட்டமா இருக்கும்.
மாயவரத்துக்குப் போற ரயில் எப்ப வரும் ?

Note that வற and போற are relativeparticiples. They qualify the following noun ரயில் as other adjectives. As they are derived from the verb roots வா 'come', and போ 'go' they are called verbal adjectives. The verb roots are conjugated for present tense here. Example : வற ரயில், போற ரயில், கொடுக்குற கௌண்டர், விக்குற கடெ etc.

Sandhi 30. -ன் is dropped before the honorific marker -ங்க. Example :

தான் + ங்க → தாங்க
மாயவரம் + உக்கு → மாயவரத்துக்கு
பிளாட்பாரம் + உலே → பிளாட்பாரத்துலே
பக்கம் + உலே → பக்கத்துலே (Refer S.17 in 2.13)
ரொம்ப + கூட்டமா → ரொம்பக் கூட்டமா (இருக்குமா ?)
(Refer S.14 in 1.11)
அப்படிங்க + ஆ → அப்படிங்களா ?
இருக்குதுங்க + ஆ → இருக்குதுங்களா ? (Refer S.27 in 15.55)

# UNIT 16

## LESSON 62

### ABOUT A FILM

**DIALOGUE**

| | |
|---|---|
| நரசய்யா : சுரேஷ், நீங்க நேத்து என்ன படம் பார்த்தீங்க ? | Suresh, what film did you see yesterday ? |
| சுரேஷ் : 'அபூர்வராகங்கள்' பார்த்தேன். பாலசந்தரோடெ படம். | I saw 'Apoorvaragangal'. (It is) Balachandar's film. |
| நரசய்யா : உங்களுக்குப் பாலசந்தர் எடுக்குற படமெல்லாம் ரொம்பப் பிடிக்குமா ? | Do you like verymuch all the films produced by Balachandar ? |

சுரேஷ் : ஆமாங்க. அவரு ஒரு நல்ல டைரக்டர். நீங்க அவரு தயாரிச்ச 'அரங்கேற்றம்' படத்தெப் பார்த்தீங்களா ?

Yes, sir. He is a good director. Did you see 'Arangetram', the film produced by him ?

நரசய்யா : ஆமா, நடிகெ பிரமீளா நடிச்ச படம்தானே .... ? ரொம்ப நல்ல படம்.

Yes, isn't the film in which the actress Pramila acted ?... (It) is a very good film.

சுரேஷ் : பாலசந்தர் எடுத்த எல்லாப் படங்களெயும் விட 'அவள் ஒரு தொடர்கதை' தான் எனக்கு ரொம்பப் பிடிச்ச படம்.. உங்களுக்கு ?

Of all the films produced by Balachandar, it is the film 'Aval oru Thodarkathai' that I liked most... What about you ?

நரசய்யா : எனக்கும் அப்படித் தாங்க. 'அவள் ஒரு தொடர்கதை'யிலே பாலசந்தர் எழுதுன வசனத்துலே இருக்குற ஆழம் 'அபூர்வராகங்கள்'லே இல்லெ, இல்லெங்களா ?

Same is (true) for me too. The depth of the dialouge written by Balachandar in 'Aval oru Thodarkathai' is not found in 'Apoorvaragangal' isn't it ?

சுரேஷ் : ஆமாங்க.... நீங்க சொல்லுற பாயிண்ட் ரொம்பச் சரி. ஆனா, 'அபூர்வராகங்கள்'லே நடிகர் கமலஹாசன் ரொம்ப ஜோரா நடிக்குறுரு.

Yes, sir... The point you are making is very correct. But in 'Apoorvarahangal' the actor Kamalahasan acts very well.

நரசய்யா : ஆமாங்க....... அது உண்மெதாங்க.

Yes, sir... That is true.

## DRILLS

a. Variation drill

**16. 62. 170.** அது பிரமீளா நடிச்ச படம்.
பாலசந்தர் எடுத்த 'அவள் ஒரு தொடர்கதை'
எனக்கு ரொம்பப் பிடிக்கும்.
'அவள் ஒரு தொடர்கதை' எனக்குப் பிடிச்ச படம்.
நீங்க சொன்ன பாயிண்ட் ரொம்பச்சரி.
நீங்க பாலசந்தர் தயாரிச்ச 'அரங்கேற்றம்'
பார்த்தீங்களா ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) அது பிரமீளா நடிச்ச படம். | அது பிரமீளா நடிச்ச படம். |
| படம் | படம் |
| நடிச்ச | நடிச்ச படம் |
| பிரமீளா | பிரமீளா நடிச்ச படம் |
| அது | அது பிரமீளா நடிச்ச படம். |
| (ii) நீங்க சொல்லுற பாயிண்ட் ரொம்பச் சரி. | நீங்க சொல்லுற பாயிண்ட் ரொம்பச் சரி. |
| ரொம்பச் சரி | ரொம்பச் சரி |
| பாயிண்ட் | பாயிண்ட் ரொம்பச் சரி |
| சொல்லுற | சொல்லுற பாயிண்ட் ரொம்பச் சரி |
| நீங்க | நீங்க சொல்லுற பாயிண்ட் ரொம்பச் சரி. |
| (iii) நீங்க பாலசந்தர் தயாரிச்ச 'அரங்கேற்றம்' பார்த்தீங்-கங்களா ? | நீங்க பாலசந்தர் தயாரிச்ச 'அரங்கேற்றம்' பார்த்தீங்களா ? |
| பார்த்தீங்களா ? | பார்த்தீங்களா ? |
| 'அரங்கேற்றம்' | 'அரங்கேற்றம்' பார்த்தீங்களா ? |
| பாலசந்தர் தயாரிச்ச | பாலசந்தர் தயாரிச்ச 'அரங்-கேற்றம்' பார்த்தீங்களா ? |
| நீங்க | நீங்க பாலசந்தர் தயாரிச்ச 'அரங்கேற்றம்' பார்த்தீங்களா ? |
| (iv) 'அவள் ஒரு தொடர்கதை' எனக்குப் பிடிச்ச படம். | 'அவள் ஒரு தொடர் கதை' எனக்குப் பிடிச்ச படம். |
| படம் | படம் |
| பிடிச்ச | பிடிச்ச படம் |
| எனக்கு | எனக்குப் பிடிச்ச படம் |
| 'அவள் ஒரு தொடர் கதை' | 'அவள் ஒரு தொடர்கதை' எனக்குப் பிடிச்ச படம். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) அது படம். | அது படம். |
| பிரமீளா நடிச்ச படம் | அது பிரமீளா நடிச்ச படம். |
| (ii) நீங்க பார்த்தீங்களா ? | நீங்க பார்த்தீங்களா ? |
| பாலசந்தர் தயாரிச்ச 'அரங்-கேற்றம்' பார்த்தீங்களா ? | நீங்க பாலசந்தர் தயாரிச்ச 'அரங்கேற்றம்' பார்த்தீங்களா ? |
| (iii) அது படம். | அது படம். |
| எனக்குப் பிடிச்ச படம் | அது எனக்குப் பிடிச்ச படம். |

d. Question-Answer drill

(i) Q : நீங்க நேத்து என்ன படம் பார்த்தீங்க ?
A : 'அபூர்வராகங்கள்' பார்த்தேன.
(ii) Q : உங்களுக்குப் பாலசந்தர் எடு க்குற ட ங்களெல்லாம் ரொம்பப் பிடிக்குமா ?
A : ஆமாங்க.
(iii) Q : 'அவள் ஒரு தொடர்கதை' தா னக்கு ரொம்பப் பிடிச்ச படம்....உங்களுக்கு ?
A : எனக்கும் அப்படித்தாங்க.

e. Substitution drill

(i) அது பிரமீளா நடிச்ச படம். — அது பிரமீளா நடிச்ச படம்.
Substitute and change the verb accordingly.
எடு — அது பிரமீளா எடுத்த படம்.
பாரு — அது பிரமீளா பார்த்த படம்.
போ — அது பிரமீளா போன படம்.

(ii) நீங்க சொல்லுற பாயிண்ட் சரி. — நீங்க சொல்லுற பாயிண்ட் சரி.
Substitute and change the verb accordingly.
கேளு — நீங்க கேக்குற பாயிண்ட் சரி.
எழுது — நீங்க எழுதுற பாயிண்ட் சரி.
பேசு — நீங்க பேசுற பாயிண்ட் சரி.
படி — நீங்க படிக்குற பாயிண்ட் சரி.

(iii) நீங்க என்ன படம் பார்த்தீங்க ? — நீங்க என்ன படம் பார்த்தீங்க ?
Substitute
சினிமா — நீங்க என்ன சினிமா பார்த்தீங்க ?
நாடகம் — நீங்க என்ன நாடகம் பார்த்தீங்க ?

f. Transformation drill

(i) அது பாலசந்தர் தயாரிச்ச படம். — அது பாலசந்தர் தயாரிக்குற படம்.
அது பிரமீளா நடிச்ச படம். — அது பிரமீளா நடிக்குற படம்.
அது எனக்குப் பிடிச்ச படம். — அது எனக்குப் பிடிக்குற படம்.
அது பாலசந்தர் எழுதுன வசனம். — அது பாலசந்தர் எழுதுற வசனம்.
நீங்க சொன்ன பாயிண்ட் சரி. — நீங்க சொல்லுற பாயிண்ட் சரி.

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நேத்து என்ன................பார்த்தீங்க ? (cinema)
நேத்து என்ன படம் பார்த்தீங்க ?

(i) அது................பிரமீளா நடிச்ச படம். (actress)
(ii) அது எனக்கு ரொம்பப்................ச்ச படம். (like)
(iii) அது அவரு எழுதுன................ (dialogue)
(iv) கமலஹாசன் ரொம்ப நல்லா................க்குறாரு. (act)
(v) அவரு................கமலஹாசன். (actor)
(vi) அது பாலசந்தர்................ச்ச படம். (produce)

h. Change these sentences into present relative participles.

Model : நான் நேத்துப் படம் பார்த்தேன்.
நான் நேத்துப் பார்த்த படம்....

(i) பாலசந்தர் படம் எடுத்தாரு.
(ii) அவரு 'அரங்கேற்றம்' படம் தயாரிச்சாரு.
(iii) அவரு வசனம் எழுதுனாரு.

i. Change these sentences into past relative participles.

Model : பாலசந்தர் படம் எடுக்குறாரு.
பாலசந்தர் எடுக்குற படம்....

(i) நான் படம் பார்க்குறேன்.
(ii) அவரு 'அரங்கேற்றம்' படம் தயாரிக்குறாரு.
(iii) அவரு வசனம் எழுதுறாரு.

j. Fill in the blanks using the relative participle (past) form of the verbs given in parentheses.

(i) இது பாலசந்தர்................படம். (எடு)
(ii) இது நடிகெ பிரமீளா................படம். (நடி)
(iii) இது எனக்கு ரொம்பப்................படம். (பிடி)
(iv) நீங்க................பாயிண்ட் ரொம்பச் சரி. (சொல்லு)
(v) இது அவரு................வசனம். (எழுது)
(vi) இது பாலசந்தர்................படம். (தயாரி).

k. Write the word represented by the formula.

Example : **எடுக்குற** எடு + Rel. Part. (Present)

(i) நடி + Rel. Part. (Present) : ................
(ii) பிடி + Rel. Part. (Present) : ................
(iii) குடி + Rel. Part. (Present) : ................
(iv) கொடு + Rel. Part. (Present) : ................

(v) பாரு + Rel. Part. (Past) : ................
(vi) எழுது + Rel. Part. (Past) : ................
(vii) சொல்லு + Rel. Part. (Past) : ................
(viii) இரு + Rel. Part. (Past) : ................
(ix) வா + Rel. Part. (Past) : ................
(x) வேய் + Rel. Part. (Past) : ................
(xi) செய் + Rel. Part. (Past) : ................

l. Change the underlined word or group of words to its corresponding question.

(i) நான் 'அபூர்வராகங்கள்' படம் பார்த்தேன்.
(ii) அவரு ஒரு நல்ல டைரக்டர்.
(iii) அது ரொம்ப நல்ல படம்.
(iv) பாலசந்தர் எடுத்த எல்லாப் படங்களெயும் விட இது அவருக்குப் பிடிச்ச படம்.

m. Change these sentences to the past tense.

(i) இது இப்ப வற ரயில்.
(ii) இது புஸ்தகம் விக்குற கடெ.
(iii) உங்களுக்குப் பாலசந்தர் எடுக்குற படம் ரொம்பப் பிடிக்குமா ?
(iv) இது பிரமீளா நடிக்குற படம்தானே ?
(v) உங்களுக்குப் பிடிக்குற படம் எது ?
(vi) பாலசந்தர் எழுதுற வசனம் எனக்குப் பிடிக்கும்.

n. Answer the questions.

(i) நீங்க நேத்துப் படம் பார்த்தீங்களா ?
(ii) உங்களுக்குச் சாந்தாராம் எடுக்குற படமெல்லாம் பிடிக்குமா ?
(iii) சத்யஜித் ரே வங்காளப் படம் எடுக்குற ஒரு பெரிய டைரக்டர், இல்லே ?
(iv) நீங்க சிவாஜி கணேசன் நடிச்ச தமிழ்ப்படம் பார்த்தீங்களா ?
(v) உங்களுக்குப் பிடிச்ச ஹிந்தி நடிகெ யாரு ?
(vi) உங்களுக்கு யாரு எழுதுன வசனம் பிடிக்கும் ?
(vii) நீங்க போன பரீட்செயிலே கேட்ட எல்லாக் கேள்விக்கும் பதில் எழுதுனீங்களா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| படம் | 'cinema' | எடு | 'take, produce' |
| டைரக்டர் | '(cinema) director' | தயாரி | 'produce' |
| நடிகெ | 'an actress' | நடி | 'act' |
| பிடி | 'like' | வசனம் | 'dialogue' |
| ஆழம் | 'depth' | நடிகர் | 'an actor' |
| ஜோரா | 'well' | | |

## GRAMMAR

**16.62.170.** The past relative participle form is expressed by the verb root, past tense marker and the suffix -அ. Example :

*16. 62. 170.* அது பிரமீளா நடிச்ச படம்.
நீங்க சொன்ன பாயிண்ட் ரொம்பச் சரி.

Note that நடிச்ச and சொன்ன are derived from the verb roots நடி 'act' and சொல்லு 'say' respectively.

Sandhi : தான் + ங்க → தாங்க (Refer S.30 in 16.61)
அப்படி + தான் → அப்படித்தான் (Refer S.21 in 3.20)
இல்லெங்க + ஆ → இல்லெங்களா (Refer S.27 in 15.55)
பார்த்தீங்க + ஆ → பார்த்தீங்களா (Refer S.19 in 2.14)

# UNIT 16

# LESSON 63

## ABOUT AN ACTOR

### DIALOGUE

செல்வி : கலா, போன பரீட்செயிலே கணக்குலே எத்தனெ மார்க்கு வாங்குனே ?

Kala, howmany marks did you get in mathematics in the last test ?

கலா : பாஸ் மார்க்குத்தான் வாங்குனேன். பரீட்செயிலே கேட்ட ரெண்டு கேள்வி எனக்குச் சரியாப் புரியலெ. அப்புறம், நான் படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது....அதனாலெ ரொம்ப மார்க்கு எனக்குக் கெடெக்கலெ.

I got just pass mark. I did not understand correctly the two questions that were asked in the test. Then there were many questions from the portions which I had not read. That is why I did not get more marks.

| | |
|---|---|
| செல்வி : நீ நேத்து சினிமாவுக்குப் போனேயா ? | Did you go to cinema yesterday ? |
| கலா : ஆமா. ஒரு இந்திப் படத்-துக்குப் போனேன். | Yes, I went to a Hindi film. |
| செல்வி : நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமேயில்லெயா ? | Is there any Hindi film which you have not seen ? |
| கலா : அப்படி இல்லெ....அநேகமா எல்லாப்படத்தெயும் பார்ப்பேன்.... ராஜேஷ் கன்னு நடிச்ச படம் எனக்கு ரொம்பப் பிடிக்-கும். | (It is) not like that... (I) will see almost all the films.... I like verymuch the film in which Rajeshkhanna acted. |
| செல்வி : இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ, இல்லெயா ? | Nowdays there is no film in which he is not acting, isn't it ? |
| கலா : ஆமா. அவரு நடிக்குற படத்தெ எல்லாரும் விரும்புறுங்க .... நான் போஸ்டாபீஸுக்குப் போகணும். வரட்டுமா ? | Yes. Everybody likes the film in which he acts. I have to go to post office. Shall (I) take leave of you ? |
| செல்வி : சரி. | Okay. |

## DRILLS

**a.** Variation drill

*16. 63. 171.* நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ.
இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ.
நான் படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ. | நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ. |
| இல்லெ | இல்லெ |
| ஒண்ணுமே | ஒண்ணுமே இல்லெ |
| இந்திப்படம் | இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ |
| பார்க்காத | பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ. |
| நீ | நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ. |

| | |
|---|---|
| (ii) இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ. | இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ. |
| இல்லெ | இல்லெ |
| படமே | படமே இல்லெ |
| நடிக்காத | நடிக்காத படமே இல்லெ |
| அவரு | அவரு நடிக்காத படமே இல்லெ |
| இப்ப எல்லாம் | இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ. |
| (iii) நான் படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது. | நான் படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது. |
| இருந்தது | இருந்தது |
| கேள்வி | கேள்வி இருந்தது |
| நெறெய | நெறெயக் கேள்வி இருந்தது |
| படிக்காத பகுதியிலேயிருந்து | படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது |
| நான் | நான் படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) அவரு நடிக்காத படமே இல்லெ. | அவரு நடிக்காத படமே இல்லெ. |
| இப்ப எல்லாம் இல்லெ | அவரு நடிக்காத படமே இப்ப எல்லாம் இல்லெ. |
| (ii) நீ பார்க்காத இந்திப்படம் இல்லெ. | நீ பார்க்காத இந்திப்படம் இல்லெ. |
| ஒண்ணுமே இல்லெ | நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ. |
| (iii) நெறெயக் கேள்வி இருந்தது. | நெறெயக் கேள்வி இருந்தது. |
| நான் படிக்காத பகுதியிலேயிருந்து இருந்தது | நெறெயக் கேள்வி நான் படிக்காத பகுதியிலேயிருந்து இருந்தது. |

d. Question-Answer drill

(i) Q: போன பரீட்செயிலே கணக்குலே எத்தனெ மார்க்கு வாங்குனே ?
A: பாஸ் மார்க்குதான் வாங்குனேன்.

(ii) Q: நீ நேத்து சினிமாவுக்குப் போனேயா ?
A: ஆமா. ஒரு இந்திப்படத்துக்குப் போனேன்.

(iii) Q: நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமேயில்லெயா ?
A: அப்படி இல்லெ...அநேகமா எல்லாப் படங்களெயும் பார்ப்பேன்.

(iv) Q: இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ, இல்லெயா ?
A: ஆமா.

e. Substitution drill

(i) அது நான் படிக்காத பகுதி. — அது நான் படிக்காத பகுதி.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| கேளு | அது நான் கேக்காத பகுதி. |
| எழுது | அது நான் எழுதாத பகுதி. |
| பேசு | அது நான் பேசாத பகுதி. |
| பாரு | அது நான் பார்க்காத பகுதி. |

(ii) நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெயா ? — நீ பார்க்காத இந்திப் படம் ஒண்ணுமே இல்லெயா ?
Substitute and change the pronoun accordingly.

| | |
|---|---|
| போ | நீ போகாத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெயா ? |
| வா | நீ வராத இந்திப்படம் ஒண்ணுமெ இல்லெயா ? |
| சிபாரிசுபண்ணு | நீ சிபாரிசு பண்ணாத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெயா ? |
| நடி | நீ நடிக்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெயா ? |

f. Transformation drill

(i)

| | |
|---|---|
| இது நான் படிச்ச பகுதி. | இது நான் படிக்காத பகுதி. |
| இது நான் படிக்குற பகுதி. | இது நான் படிக்காத பகுதி. |
| இது ராஜேஷ்கன்ன நடிச்ச படம். | இது ராஜேஷ்கன்ன நடிக்காத படம். |
| இது ராஜேஷ்கன்ன நடிக்குற படம். | இது ராஜேஷ்கன்ன நடிக்காத படம். |
| இது நீபார்த்த இந்திப்படம். | இது நீ பார்க்காத இந்திப்படம். |
| இது நீ பார்க்குற இந்திப் படம். | இது நீ பார்க்காத இந்திப்படம். |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ எத்தனெ மார்க்கு...............லே வாங்குனே ?
(mathematics)
நீ எத்தனெ மார்க்கு **கணக்கு**லே வாங்குனே ?

(i) நீ எத்தனெ மார்க்கு...............னே ? (get)
(ii) கேள்வி படிக்காத...........யிலேயிருந்து இருந்தது. (portion)
(iii) ராஜேஷ்கன்ன படத்தெ எல்லாரும்...............றுங்க. (like)

h. Change these sentences into present relative participles.

Model : கேள்வி எனக்குப் புரியுது.
எனக்குப் புரியுற கேள்வி....

(i) நான் நல்ல மார்க்கு வாங்குறேன்.
(ii) நான் இந்திப்படம் பார்க்குறேன்.
(iii) நான் சினிமாவுக்குப் போறேன்.
(iv) ராஜேஷ்கன்னு நடிக்குறாரு.
(v) எல்லாரும் அந்தப் படத்தெ விரும்புறாங்க.

i. Change these sentences into past relative participles.

Model : நான் மார்க்கு வாங்குனேன்.
மார்க்கு வாங்குன நான்....

(i) நான் இந்திப்படம் பார்த்தேன்.
(ii) ராஜேஷ்கன்னு நடிச்சாரு.
(iii) எல்லாரும் அந்தப் படத்தெ விரும்புறாங்க.
(iv) கேள்வி எனக்குப் புரிஞ்சது.
(v) நான் சினிமாவுக்குப் போனேன்.

j. Change these sentences into negative relative participles.

Model : நான் சினிமாவுக்குப் போகலெ.
சினிமாவுக்குப் போகாத நான்....

(i) நான் இந்திப்படம் பார்க்கலெ.
(ii) ராஜேஷ்கன்னு நடிக்கலெ.
(iii) எல்லாரும் அந்தப் படத்தெ விரும்பலெ.
(iv) கேள்வி எனக்குப் புரியலெ.
(v) மார்க்கு எனக்குக் கெடெக்கலெ.

k. Fill in the blanks using the relative participle (past) form of the verbs given in parentheses.

(i) ................பரீட்செயிலே எத்தனெ மார்க்கு வாங்குனே ? (போ)
(ii) பரீட்செயிலே................கேள்வி எனக்குப் புரியலெ. (கேளு)
(iii) நான்................பகுதியிலேருந்து நெறெயக் கேள்வி இருந்தது. (படி)
(iv) இது நீ................இந்திப்படம். (பாரு)
(v) இது எல்லாரும்................படம். (விரும்பு)

l. Fill in the blanks using the relative participle (negative) form of the verbs given in parentheses.

(i) இது பரீட்செயிலே................கேள்வி. (கேளு)
(ii) நான்................பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி இருந்தது. (படி)

(iii) இது நான்................இந்திப்படம். (பாரு)
(iv) அவரு................படமே இல்லெ. (நடி)
(v) இது நான்................இந்திப்படம். (விரும்பு)

m. Write the word represented by the formula.

Example : **வராத** வா + Rel. Part. (Neg)

(i) பாரு + Rel. Part. (Neg) : ................
(ii) இரு + Rel. Part. (Neg) : ................
(iii) கொடு + Rel. Part. (Neg) : ................
(iv) சேரு + Rel. Part. (Neg) : ................
(v) படி + Rel. Part. (Neg) : ................
(vi) கேளு + Rel. Part. (Neg) : ................
(vii) விரும்பு + Rel. Part. (Neg) : ................
(viii) போ + Rel. Part. (Neg) : ................

n. Change the given nouns into the dative and add at the left to the verb in the sentences given below.

(i) நான் : கேள்வி புரியலெ.
(ii) படம் : நான் போனேன்.
(iii) போஸ்டாபீஸ் : நான் போகணும்.

o. Change the given nouns into the objective and add at the left to the verb in the sentences given below.

(i) படம் : நான் பார்ப்பேன்.
(ii) இந்திப்படம் : எல்லாரும் விரும்புறுங்க.
(iii) கேள்வி : நீங்க கேளுங்க.

p. Answer these questions.

(i) போன பரீட்செயிலே நீங்க படிக்காத பகுதியிலேயிருந்து நெறெயக் கேள்வி கேட்டாங்களா ?
(ii) நீங்க பார்க்காத ஒரு இந்திப்படத்தோடெ பேரெ எழுதுங்க.
(iii) ராஜேஷ்கன்ன நடிச்ச படம் உங்களுக்கு நல்லாப் பிடிக்குமா?
(iv) நீங்க இப்பப் படிக்குற புஸ்தகத்தோடெ பேரு என்ன ?
(v) உங்களுக்குத் தமிழ் கற்பிக்குற ஆசிரியரு பேரு என்ன ?
(vi) நேத்து வகுப்புக்கு வராத மணவரு யாரு ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கணக்கு | 'mathematics' | மார்க்கு | 'marks' |
| வாங்கு | 'get' | பாஸ் | 'pass' |
| பகுதி | 'portion' | விரும்பு | 'wish, like' |

## GRAMMAR

**16.63.171.** The negative relative participle is formed by adding the negative suffix -ஆத் which occurs in the negative verbs like வராது 'will not come' செய்யாது 'will not do' etc., to any verb roots. The relative participle suffix -அ is immediately added to the negative marker. Consider the following examples.

*16. 63. 171.* நீ பார்க்காத இந்திப்படம் ஒண்ணுமே இல்லெ.
இப்ப எல்லாம் அவரு நடிக்காத படமே இல்லெ.

பார்க்காத and நடிக்காத are negative relative participles and they are derived from the verbs பாரு 'see' and நடி 'act' respectively. Note that the verb root is not conjugated for any tense. That is to say, negative in general, has no tense in Tamil. Hence, this may be treated as the corresponding negative expression of both present and past relative participles. Example : வற/வராத ; போற/போகாத ; விக்குற/விக்காத *(16.61)* ; நடிச்ச/நடிக்காத ; பிடிச்ச/பிடிக்காத ; எடுத்த/எடுக்காத *(16.62)*.

Sandhi : பரீட்செ + இலே → பரீட்செயிலே
சரி + ஆ → சரியா
இல்லெ + ஆ → இல்லெயா (Refer S.8 in 1.5)
சரியா + புரியலெ → சரியாப் புரியலெ (Refer S.21 in 3.20)
எனக்கு + சரியா → எனக்குச் சரியாப் (புரியலெ)
சினிமாவுக்கு + போனேயா → சினிமாவுக்குப் போனேயா
(Refer S.18 in 2.14)

இந்தி + படம் → இந்திப்படம்
எல்லா + படத்தெயும் → எல்லாப் படத்தெயும் (Refer S. 4 in 1.2)

# UNIT 16

# LESSON 64

## OPENING AN ACCOUNT IN THE BANK

### DIALOGUE

| | |
|---|---|
| மணி : வணக்கம். | Vanakkam. |
| மேனேஜர் : வணக்கம் .... என்ன வேணுங்க ? | Vanakkam...What (do you) want, sir? |
| மணி : உங்க பேங்குலே ஒரு அக்கவுண்ட் தெறக்கணும். | (I) want to open an account in your bank. |
| மேனேஜர் : உக்காருங்க. நான் ஒரு பாரம் கொடுக்குறேன். அதெ அக்கவுண்ட் தெறக்குறவங்க பூர்த்தி பண்ணணும். உங்க பேருலே தானே அக்கவுண்ட் தெறக்குறீங்க ? | Please be seated. I will give a form. Those who open the account should fill it up. (I think) (you) are opening the account in your name? |

| | |
|---|---|
| மணி : ஆமாங்க. | Yes, sir. |
| மேனேஜர் : அப்படின்னா, இந்தப் பாரத்தெ நீங்களே பூர்த்தி பண்ணுங்க. | If that is so, please fill up this form yourself. |
| மணி : நான் இங்கிலீஷ் படிச்சவன் இல்லெங்க.... இந்தப் பாரத்தெ நீங்களே எனக்காகப் பூர்த்தி பண்ண முடியுமா ? | I am not one who learned English.... Can you fill up this form yourself for me ? |
| மேனேஜர் : கொடுங்க....உங்களெ பேங்குக்கு அறிமுகப்படுத்துறவரு யாரு ? | Please give (it)... Who introduces (you) to the bank ? |
| மணி : யாரும் இல்லெங்க. | Nobody, sir. |
| மேனேஜர் : இந்தப் பேங்குலே அக்கவுண்ட் இருக்குறவங்கள்லே யாரெயாவது உங்களுக்குத் தெரியுமா ? | Do you know anybody who has account in this bank ? |
| மணி : தெரியும். சுரேஷ் ஸார் இந்தப் பேங்குலே பணம் போடுறவருதான். அவரு போதுமா ? | (I) know. Mr. Suresh is also one who has account in this bank. Is his (recommendation) sufficient ? |
| மேனேஜர் : போதும். அவருகிட்டெயிருந்து இதுலே ஒரு கையொப்பம் வாங்குங்க. அப்புறம், என்னெப் பாருங்க. | (It) is sufficient. (You) please get a signature from him here. Then, (you) please come and see me. |
| மணி : சரிங்க, வறேன். | Alright sir, (I) take leave of you. |
| மேனேஜர் : வாங்க. | Please do. |

**DRILLS**

a. Variation drill

**16. 64. 172.** நான் அவ்வளவா இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ.
சுரேஷ் இந்தப் பேங்குலே பணம் போடுறவரு.
உங்களெப் பேங்குக்கு அறிமுகப்படுத்துறவரு யாரு?
இதெ அக்கவுண்ட் தெறக்குறவங்க பூர்த்தி
பண்ணணும்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் அவ்வளவா இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ. | நான் அவ்வளவா இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ. |
| இல்லெ | இல்லெ |
| படிக்குறவன் | படிக்குறவன் இல்லெ |
| இங்கிலீஷ் | இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ |
| அவ்வளவா | அவ்வளவா இங்கிலீஷ் படிக்கு-றவன் இல்லெ |
| நான் | நான் அவ்வளவா இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ. |
| (ii) அருணாசலம் இந்தப் பேங்-குலே பணம் போடுறவரு. | அருணாசலம் இந்தப் பேங்குலே பணம் போடுறவரு. |
| போடுறவரு | போடுறவரு |
| பணம் | பணம் பேடுறவரு |
| பேங்குலே | பேங்குலே பணம் போடுறவரு |
| இந்த | இந்தப் பேங்குலே பணம் போடு-றவரு |
| அருணாசலம் | அருணாசலம் இந்தப் பேங்குலே பணம் போடுறவரு. |
| (iii) உங்களெப் பேங்குக்கு அறிமுகப்படுத்துறவரு யாரு? | உங்களெப் பேங்குக்கு அறிமுகப்-படுத்துறவரு யாரு ? |
| யாரு ? | யாரு ? |
| அறிமுகப்படுத்துறவரு | அறிமுகப்படுத்துறவரு யாரு ? |
| பேங்குக்கு | பேங்குக்கு அறிமுகப்படுத்துறவரு யாரு ? |
| உங்களெ | உங்களெப் பேங்குக்கு அறிமுகப்-படுத்துறவரு யாரு ? |
| (iv) அதெ அக்கவுண்ட் தெறக்கு-றவங்க பூர்த்தி பண்ணணும். | அதெ அக்கவுண்ட் தெறக்குற-வங்க பூர்த்தி பண்ணணும். |
| பூர்த்தி பண்ணணும் | பூர்த்தி பண்ணணும் |
| அக்கவுண்ட் தெறக்குறவங்க | அக்கவுண்ட் தெறக்குறவங்க பூர்த்தி பண்ணணும் |
| அதெ | அதெ அக்கவுண்ட் தெறக்குறவங்க பூர்த்தி பண்ணணும். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) அருணாசலம் பணம் போடு-றவரு. | அருணாசலம் பணம் போடுறவரு. |
| இந்தப் பேங்குலெ பணம் போடுறவரு | அருணாசலம் இந்தப் பேங்குலே பணம் போடுறவரு. |

| | |
|---|---|
| (ii) உங்களெ அறிமுகப்படுத்து-றவரு யாரு ? | உங்களெ அறிமுகப்படுத்துறவரு யாரு ? |
| பேங்குக்கு அறிமுகப்படுத்து-றவரு யாரு ? | உங்களெப் பேங்குக்கு அறிமுகப்-படுத்துறவரு யாரு ? |
| (iii) அக்கவுண்ட் தெறக்குறவங்க பூர்த்தி பண்ணணும். | அக்கவுண்ட் தெறக்குறவங்க பூர்த்தி பண்ணணும். |
| அதெப் பூர்த்தி பண்ணணும் | அக்கவுண்ட் தெறக்குறவங்க அதெப் பூர்த்தி பண்ணணும். |

d. Question-Answer drill

(i) Q : என்ன வேணுங்க ?
A : உங்க பேங்குலே ஒரு அக்கவுண்ட் தெறக்கணும்.

(ii) Q : உங்க பேருலேதானே அக்கவுண்ட் தெறக்குறீங்க ?
A : ஆமாங்க.

(iii) Q : உங்களெப் பேங்குக்கு அறிமுகப்படுத்துறவரு யாரு ?
A : யாரும் இல்லெங்க.

(iv) Q : இந்தப் பேங்குலே அக்கவுண்ட் இருக்குறவங்கள்லே யாரெயாவது உங்களுக்குத் தெரியுமா ?
A : தெரியும்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நான் இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ. | நான் இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ. |
| Substitute and change the verb accordingly. | |
| வாசி | நான் இங்கிலீஷ் வாசிக்குறவன் இல்லெ. |
| எழுது | நான் இங்கிலீஷ் எழுதுறவன் இல்லெ. |
| பேசு | நான் இங்கிலீஷ் பேசுறவன் இல்லெ. |
| கற்பி | நான் இங்கிலீஷ் கற்பிக்குறவன் இல்லெ. |
| (ii) நான் இங்கிலீஷ் படிக்குறவன். | நான் இங்கிலீஷ் படிக்குறவன். |
| Substitute and change the participial noun accordingly. | |
| நாங்க | நாங்க இங்கிலீஷ் படிக்குறவங்க. |
| நாம | நாம இங்கிலீஷ் படிக்குறவங்க. |
| நீங்க | நீங்க இங்கிலீஷ் படிக்குறவங்க. |
| அவ | அவ இங்கிலீஷ் படிக்குறவ. |
| அவரு | அவரு இங்கிலீஷ் படிக்குறவரு. |
| அவங்க | அவங்க இங்கிலீஷ் படிக்குறவங்க. |

| | |
|---|---|
| (iii) நீங்க இதுலே கையொப்பம் வாங்குங்க. | நீங்க இதுலே கையொப்பம் வாங்குங்க. |
| கையெழுத்து | நீங்க இதுலே கையெழுத்து வாங்குங்க. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) இவரு என்னெ அறிமுகப்படுத்துறவரு. | இவரு யாரு ? |
| இவரு அக்கவுண்ட் தெறக்குறவரு. | இவரு யாரு ? |
| இவரு பேங்குலே பணம் போடுறவரு. | இவரு யாரு ? |
| இவரு பாரம் கொடுக்குறவரு. | இவரு யாரு ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இந்தப் பாரத்தெ நீங்களே................ங்க. (fill up)
இந்தப் பாரத்தெ நீங்களே **பூர்த்தி பண்ணு**ங்க.

(i) உங்களெ................றவரு யாரு ? (introduce)
(ii) இவரு பேங்குலே பணம்................றவரு. (deposit)
(iii) அவருகிட்டெயிருந்து................வாங்குங்க. (signature)

h. Fill in the blanks using the appropriate conjugated noun (Participial noun) forms of the verb படி 'read' in the present tense.

(i) நான்................
(ii) நீ (masc) ................
(iii) நீ (fem) ................
(iv) அவன்................
(v) அவ................
(vi) நாங்க................
(vii) நாம................
(viii) நீங்க................
(ix) அவங்க................
(x) அது................

i. Change these sentences into participial constructions (present) following the model.

Model : அவங்க அக்கவுண்ட் தெறக்குறுங்க.
அக்கவுண்ட் தெறக்குற அவங்க....
அக்கவுண்ட் தெறக்குறவங்க....

(i) அவரு பேங்குக்கு அறிமுகப்படுத்துறாரு.
(ii) அருணாசலம் இந்தப் பேங்குலே பணம் போடுறாரு.
(iii) நான் பாரம் கொடுக்குறேன்.
(iv) நீங்க பாரத்தெப் பூர்த்தி பண்ணுறீங்க.
(v) நீங்க கையொப்பம் வாங்குறீங்க.

j. Rewrite the formulae following the model.

Model: யாரு + Obj. + ஆவது = யாரெயாவது

(i) அவன் + Obj. + ஆவது = ................
(ii) அவ + Inst. + ஆவது = ................
(iii) அவங்க + Loc. + ஆவது = ................
(iv) என் + Dat. + ஆவது = ................
(v) அவரு + Abl. + ஆவது = ................
(vi) எங்க + Soc. + ஆவது = ..............

k. Answer the questions.

(i) உங்களுக்குப் பேங்குலே அக்கவுண்ட் தெறக்கணுமா ?
(ii) உங்களெ மைதூரு பேங்குக்கு அறிமுகப்படுத்துனவரு யாரு ?
(iii) நீங்க இங்கிலீஷ் நல்லாப் படிக்குறவரா ?
(iv) உங்ககூடத் தமிழ் படிக்குறவங்கள்லே யாரெ உங்களுக்கு ரொம்ப நல்லாப் பிடிக்கும் ?
(v) நீங்க எந்தப் பேங்குலே பணம் போடுறீங்க ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| பேங்கு | 'bank' | அக்கவுண்ட் | 'account' |
| பாரம் | 'form' | பூர்த்திபண்ணு | 'fill up' |
| அறிமுகப்படுத்து | 'introduce' | போடு | 'deposit, as money' |
| கையொப்பம் | 'signature' | | |

## GRAMMAR

***16.64.172.*** The participial nouns are otherwise called conjugated nouns. They are formed by adding the pronominal suffixes -அன், -அ, -அரு, -அங்க and -து to relative participles. The conjugated verb and the pronominal suffixes simultaneously indicate both action and doer of the action. Like all nouns and pronouns they are also declined for case and inflected for gender and number. Example:

*16. 64. 172.* நான் அவ்வளவா இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ.
அருணாசலம் இந்தப் பேங்குலே பணம்
போடுறவரு.

Note that படிக்குற and போடுற are relative participles. As they indicate tense distinction the participial nouns can also be classified into two kinds namely present partcipial nouns and past participial nouns. Example :

படிச்சுறவன் போடுறவரு
அறிமுகப்படுத்துறவரு தெறக்குறவங்க etc.

Consider the following examples.

(i) நான் படிக்குறவன்.
(ii) நாங்க போடுறவங்க.
(iii) நாம தெறக்குறவங்க.

The third person pronominal suffixes -அன் and -அங்க are used in the first person. Similarly these can also be used in the second person. Example :

(iv) நீ படிக்குறவன்.
(v) நீங்க தெறக்குறவங்க.

The above examples illustrate one of the chief characteristics of the participial nouns that they do not distinguish any person.

Sandhi : யாரெ + ஆவது → யாரெயாவது (Refer S.8 in 1.5)
என் + எ → என்னெ (Refer S.11 in 1.8)

# UNIT 16

# LESSON 65

## ABOUT A MUSICIAN

### DIALOGUE

| | |
|---|---|
| சுந்தரம் : கர்ணாடக சங்கீதத்துலே தமிழ்நாட்டுலே எம். எஸ். சுப்புலட்சுமிதான் பெரிய பாடகி. நேத்து ராத்திரி ரேடியோவுலே பாடுனவங்க அவங்க தான். போன வாரம் 'நேஷனல் புரோக்கிராம்'-லே அவங்க கச்சேரி-யெக் கேட்டீங்களா ? .... கேட்டவங்க எல்லாரும் ரொம்பப் பாராட்டுனாங்க. என்னமாப் பாட்டுப்பாடுறாங்க ! அவங்களுக்கு | In Carnatic music M.S.Subbulakshmi is the topmost singer in Tamilnadu. It was she who sang last night in the radio. Did you listen to her concert on the National Programme last week ?... All those who listened to (her concert) appreciated (her) very-much. How nicely (she) sings songs ! No singer who performs these days has the voice she has. What do you think about it ?.... Those who performed concerts those days had devotion for the music. Do they, those who sing these days, perform music ? They are all doing katha-kalakshepa. See, there was a concert |

இருக்குற சாரீரம் இப்பப் பாடுறவங்கள்லே யாருக்கும் இல்லெங்க. நீங்க என்ன நெனெக்குறீங்க? ....அந்தக் காலத்துலே கச்சேரி செய்தவங்களுக்கு சங்கீதத்துலே ஒரு 'டிவோஷன்' இருந்தது. இப்பப் பாடுறவன் எல்லாம் சங்கீதமா பண்ணுறான்? சும்மா கதாகாலட்சேபம் பண்ணுறான். நேத்து நம்ம சபாவுலே ஒரு கச்சேரி இருந்தது, பாருங்க. பாடுனவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சு பேரு உக்கார்ந்திருந்தாங்க. அவ்வளவுதான் கூட்டம். இவங்க எல்லாம் ஏன் கச்சேரி செய்றாங்க? ....இவரு எப்படிப் பாடுறாரு பார்ப்போம்.

yesterday in our sabha. Four or five people were sitting by the side of the one who sang. That was all the crowd. Why do they all do concerts? Let (us) see how this person sings?

## DRILLS

a. Variation drill

**16. 65. 173.** ரேடியோவுலே பாடுனவங்க சுப்புலட்சுமி.
கச்சேரி செய்தவங்களுக்குச் சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது.
பாடுனவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சு பேரு உக்கார்ந்திருந்தாங்க.
கேட்டவங்க எல்லாரும் ரொம்பப் பாராட்டுனாங்க.

b. Build up drill

(i) ரேடியோவுலே பாடுனவங்க எம். எஸ். சுப்புலட்சுமி.

எம். எஸ். சுப்புலட்சுமி பாடுனவங்க

ரேடியோவுலே

ரேடியோவுலே பாடுனவங்க எம். எஸ். சுப்புலட்சுமி.
எம். எஸ். சுப்புலட்சுமி
பாடுனவங்க எம். எஸ். சுப்புலட்சுமி
ரேடியோவுலே பாடுனவங்க எம். எஸ். சுப்புலட்சுமி.

| | | |
|---|---|---|
| (ii) | கச்சேரி செய்தவங்களுக்குச் சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது. | கச்சேரி செய்தவங்களுக்குச் சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது. |
| | இருந்தது | இருந்தது |
| | டிவோஷன் | டிவோஷன் இருந்தது |
| | சங்கீதத்துலே | சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது |
| | கச்சேரி செய்தவங்களுக்கு | கச்சேரி செய்தவங்களுக்குச் சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது. |
| (iii) | பாடுனவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சு பேரு உக்கார்ந்திருந்தாங்க. | பாடுனவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க. |
| | உக்கார்ந்திருந்தாங்க | உக்கார்ந்திருந்தாங்க |
| | நாலஞ்சுபேரு | நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க |
| | பக்கத்துலே | பக்கத்துலே நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க |
| | பாடுனவளுக்கு | பாடுனவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க. |
| (iv) | கேட்டவங்க எல்லாரும் ரொம்பப் பாராட்டுனுங்க. | கேட்டவங்க எல்லாரும் ரொம்பப் பாராட்டுனுங்க. |
| | பாராட்டுனுங்க | பாராட்டுனுங்க |
| | ரொம்ப | ரொம்பப் பாராட்டுனுங்க |
| | எல்லாரும் | எல்லாரும் ரொம்பப் பாராட்டுனுங்க |
| | கேட்டவங்க | கேட்டவங்க எல்லாரும் ரொம்பப் பாராட்டுனுங்க. |

c. Expansion drill

| | | |
|---|---|---|
| (i) | நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க. | நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க. |
| | பாடுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க | நாலஞ்சுபேரு பாடுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க. |
| (ii) | கச்சேரி செய்தவங்களுக்கு இருந்தது. | கச்சேரி செய்தவங்களுக்கு இருந்தது. |
| | சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது | கச்சேரி செய்தவங்களுக்குச் சங்கீதத்துலே டிவோஷன் இருந்தது. |

(iii) இப்பப் பாடுறவங்கள்லே யாருக்கும் இல்லெ. அவங்களுக்கு இருக்குற சாரீரம் யாருக்கும் இல்லெ

இப்பப் பாடுறவங்கள்லே யாருக்கும் இல்லெ. இப்பப் பாடுறவங்கள்லே அவங்களுக்கு இருக்குற சாரீரம் யாருக்கும் இல்லெ.

d. Substitution drill

(i) அவங்கதான் நேத்துப் பாடுனவங்க.

அவங்கதான் நேத்துப் பாடுனவங்க.

Substitute and change the participial noun accordingly.

| | |
|---|---|
| நான் | நான்தான் நேத்துப் பாடுனவன். |
| நீ | நீதான் நேத்துப் பாடுனவன். |
| அவன் | அவன்தான் நேத்துப் பாடுனவன். |
| அவ | அவதான் நேத்துப் பாடுனவ. |
| அவரு | அவருதான் நேத்துப் பாடுனவரு. |

(ii) பாடுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க.

பாடுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| எழுது | எழுதுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க. |
| பேசு | பேசுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க. |
| வாசி | வாசிச்சவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க. |
| சாப்பிடு | சாப்பிட்டவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க. |
| வா | வந்தவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க. |

(iii) கேட்டவங்க ரொம்பப் பாராட்டுனாங்க.

கேட்டவங்க ரொம்பப் பாராட்டுனாங்க.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| சாப்பிடு | சாப்பிட்டவங்க ரொம்பப் பாராட்டுனாங்க. |
| வாங்கு | வாங்குனவங்க ரொம்பப் பாராட்டுனாங்க. |
| கொடு | கொடுத்தவங்க ரொம்பப் பாராட்டுனாங்க. |
| வா | வந்தவங்க ரொம்பப் பாராட்டுனாங்க. |

e. Transformation drill

| | |
|---|---|
| (i) ரேடியோவுலே பாடுறவங்க சுப்புலட்சுமி. | ரேடியோவுலே பாடுனவங்க சுப்புலட்சுமி. |
| கச்சேரியெக் கேக்குறவங்க பாராட்டுறுங்க. | கச்சேரியெக் கேட்டவங்க பாராட்டுறுங்க. |
| பாடுறவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க. | பாடுனவளுக்குப் பக்கத்துலே நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க. |

## EXERCISES

f. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : அவங்க................+எ கேட்டீங்களா ?
(music concert)
அவங்க கச்சேரியெக் கேட்டீங்களா ?

(i) கேட்டவங்க எல்லாரும்................ஞங்க. (appreciate)
(ii) என்னமாப்................பாடுஞங்க. (song)
(iii) அவங்களுக்கு இருக்குற................யாருக்கும் இல்லெ. (voice)
(iv) நீங்க என்ன................க்குறீங்க ? (think)
(v) ................+லே டிவோஷன் இருந்தது. (music)
(vi) நேத்து................+லே கச்சேரி இருந்தது. (sabha)
(vii) என்னமாப் பாட்டு................ஞங்க. (sing)

g. Change these sentences into participial constructions (past) following the model.

Model : அவங்க ரேடியோவுலே பாடுஞங்க.
ரேடியோவுலே பாடுன அவங்க....
ரேடியோவுலே பாடுனவங்க....

(i) நீங்க கச்சேரியெக் கேட்டீங்க.
(ii) அவங்க ரொம்பப் பாராட்டுஞங்க.
(iii) அவங்க கச்சேரி செய்தாங்க.
(iv) அவன் இப்பப் பாடுஞன்.
(v) அவ இப்பப் பாடுறு.
(vi) நாலஞ்சுபேரு உக்கார்ந்திருந்தாங்க.

h. Fill in the blanks using the appropriate conjugated noun (participial noun) forms of the verb பாடு 'sing' in the past tense.

(i) நான்................
(ii) நீ (masc.) ................
(iii) நீ (fem.) ................

(iv) இவன்...............
(v) இவ...............
(vi) இவரு...............
(vii) நாங்க...............
(viii) நாம...............
(ix) நீங்க...............
(x) இவங்க...............

i. Change these sentences to the past tense.

(i) நான் அவ்வளவா இங்கிலீஷ் படிக்குறவன் இல்லெ.
(ii) உங்களெப் பேங்குக்கு அறிமுகப்படுத்துறவரு யாரு ?
(iii) அருணாசலம் இந்தப் பேங்குலே பணம் போடுறவரு.
(iv) பேங்குலே அக்கவுண்ட் தெறக்குறவரு யாரு ?

j. Change the underlined word or group of words to its corresponding question.

(i) கர்னாடக சங்கீதத்துலே சுப்புலட்சுமி பெரிய பாடகி.
(ii) நேத்து நம்ம சபாவுலே கச்சேரி இருந்தது.
(iii) பாடுனவளுக்குப் பக்கத்துலே உக்கார்ந்திருந்தாங்க.
(iv) இவரு நல்லாப் பாடுறாரு.

k. Answer these questions.

(i) தமிழ்நாட்டுலே கர்னாடக சங்கீதத்துலே பெரிய பாடகி யாரு ?
(ii) உங்க மனைவி பாட்டுப் பாடுவாங்களா ?
(iii) உங்களோடெ கல்லூரியிலே படிச்சவங்க எல்லாருக்கும் வெலெ கெடெச்சதா ?
(iv) உங்களுக்குச் சங்கீதம் தெரியுமா ?
(v) நீங்க கச்சேரி கேக்கப் போவீங்களா ?
(vi) கச்சேரி செய்றவங்கள்லே உங்களுக்குப் பிடிச்சவரு யாரு ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கர்னாடக சங்கீதம் | 'Carnatic music' | தமிழ்நாடு | 'the Tamilnadu' |
| பாடகி | 'female singer' | ரேடியோ | 'radio' |
| பாடு | 'sing' | கச்சேரி | 'music performance' |
| கேளு | 'listen to' | பாராட்டு | 'appreciate' |
| பாட்டு | 'song' | சாரீரம் | 'voice' |
| நெனெ | 'think' | அந்தக்காலம் | 'those days' |
| கச்சேரி செய் | 'give music performance' | சங்கீதம் | 'music' |
| டிவோஷன் | 'devotion' | சங்கீதம் பண்ணு | 'give music performance' |
| கதாகாலட்சேபம் | 'kathakalakshepa' | சபா | 'sabha' |

**GRAMMAR**

*16.65.173.* This lesson deals with the past participial nouns. They are formed by adding the pronominal suffixes –அன் or –அ or –அரு or –அங்க or -து as the case may be to the relative participles (Refer 16.61.169). Example :

*16. 65. 173.* ரேடியோவுலே பாடுனவங்க சுப்புலட்சுமி.
கேட்டவங்க எல்லாரும் ரொம்பப் பாராட்டுனாங்க.

Note that the verb roots பாடு 'sing' and கேளு 'listen to' in the relative participles பாடுன and கேட்ட are conjugated for past tense.

Sandhi : சங்கீதம் + உலே → சங்கீதத்துலே
காலம் + உலே → காலத்துலே
பக்கம் + உலே → பக்கத்துலே (Refer S.17 in 2.13)
தமிழ்நாடு + உலே → தமிழ்நாட்டுலே (Refer S.16 in 2.13)
ரேடியோ + உலே → ரேடியோவுலே
சபா + உலே → சபாவுலே (Refer S.9 in 1.7)

# UNIT 16

# LESSON 66

## OVER THE TELEPHONE

### DIALOGUE

| | | |
|---|---|---|
| சுந்தரம் : | ஹலோ ! இது 21138. யாரு பேசுறது ? | Hallo ! This is 21138. Who is spek-ing ? |
| சுரேஷ் : | நான்தாங்க .... சுரேஷ் பேசுறேன். | This is Suresh speaking. |
| சுந்தரம் : | என்னங்க, என்ன வேணும் ? | What sir, what do (you) want ? |
| சுரேஷ் : | மாலெயிலே வீட்டுக்கு வறேன் ; ஒரு புஸ்தகம் கொடுக்குறீங்களா ? | (I) will come to (your) house (this) evening. Will you lend me a book ? |
| சுந்தரம் : | சிறுகதெ வேணுமா ? நாவல் வேணுமா ? | Do (you) want a short story or a novel ? |

| | |
|---|---|
| சுரேஷ் : ஏதாவது புராணக்கதெ இருக்குதா ? | Is there any puranic story (withyou)? |
| சுந்தரம் : இல்லெங்க. ஏதாவது– பழெய இலக்கியம் கொடுக்கட்டுமா ? | No, sir. Shall (I) give any old literature ? |
| சுரேஷ் : வேண்டாங்க. புராணக்– கதெ படிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம். ஒரு நாவல் கொடுங்க. | No, sir. I like reading puranic story very much, Give (me) a novel ? |
| சுந்தரம் : யாரு எழுதுனது வேணும் ? | Which author's book do you want? |
| சுரேஷ் : ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன்.. நேத்துக் காலெயிலே வீட்டுக்கு வந்தது யாரு ? | Give (me) the novel written by Jayakanthan... Who is he who came (to your) house yesterday morning ? |
| சுந்தரம் : என் நண்பர் ஒருவரு வந்தாரு.... உங்ககிட்டெ யாரு சொன்னது ? | One of my friends came··· Who told you ? |
| சுரேஷ் : உங்க மிஸஸ் தான் சொன்னது....மாலெயிலே ஒரு சினிமா– வுக்குப் போவோமா ? | Your wife only told me... Shall (we) go for a cinema this evening ? |
| சுந்தரம் : இல்லெங்க, அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காது. | No, sir. I don't like going to cinema often. |
| சுரேஷ் : சரிங்க. மாலெயிலே சந்திக்குறேன். | Alright, sir. (I) will meet (you) in the evening. |

## DRILLS

a. Variation drill

*16. 66. 174.* உங்களுக்கு யாரு எழுதுனது வேணும் ?
எனக்கு ஜெயகாந்தன் எழுதுனது கொடுங்களேன்.

*16. 66. 175.* புராணக்கதெ படிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம்.
அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப்
பிடிக்காது.
ஹலோ ! யாரு பேசுறது ?

*16. 66. 176.* காலெயிலே உங்க வீட்டுக்கு வந்தது யாரு ?
உங்ககிட்டெ யாரு சொன்னது ?

b. Build up drill

| | |
|---|---|
| (i) எனக்கு ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்க-ளேன். | எனக்கு ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன். |
| கொடுங்களேன் | கொடுங்களேன் |
| ஜெயகாந்தன் எழுதுன நாவல் | ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன் |
| எனக்கு | எனக்கு ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன். |
| (ii) உங்களுக்கு யாரு எழுதுனது வேணும் ? | உங்களுக்கு யாரு எழுதுனது வேணும் ? |
| யாரு எழுதுனது வேணும் ? | யாரு எழுதுனது வேணும் ? |
| உங்களுக்கு | உங்களுக்கு யாரு எழுதுனது வேணும் ? |
| (iii) காலெயிலே உங்க வீட்டுக்கு வந்தது யாரு ? | காலெயிலே உங்க வீட்டுக்கு வந்தது யாரு ? |
| யாரு | யாரு ? |
| வந்தது | வந்தது யாரு ? |
| வீட்டுக்கு | வீட்டுக்கு வந்தது யாரு ? |
| உங்க | உங்க வீட்டுக்கு வந்தது யாரு ? |
| காலெயிலே | காலெயிலே உங்க வீட்டுக்கு வந்தது யாரு ? |
| (iv) உங்ககிட்டெ யாரு சொன்னது ? | உங்ககிட்டெ யாரு சொன்னது ? |
| யாரு சொன்னது ? | யாரு சொன்னது ? |
| உங்ககிட்டெ | உங்ககிட்டெ யாரு சொன்னது ? |
| (v) ஹலோ ! யாரு பேசுறது ? | ஹலோ ! யாரு பேசுறது ? |
| யாரு பேசுறது ? | யர்ரு பேசுறது ? |
| ஹலோ ! | ஹலோ ! யாரு பேசுறது ? |
| (vi) அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காது. | அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காது. |
| பிடிக்காது | பிடிக்காது |
| எனக்கு | எனக்குப் பிடிக்காது |
| போறது | போறது எனக்குப் பிடிக்காது |
| சினிமாவுக்கு | சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காது |

| | |
|---|---|
| அடிக்கடி | அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காது. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) எனக்குக் கொடுங்களேன்.<br>ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன் | எனக்குக் கொடுங்களேன்.<br>எனக்கு ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன். |
| (ii) உங்க வீட்டுக்கு வந்தது யாரு ?<br>காலெயிலே வந்தது யாரு ? | உங்க வீட்டுக்கு வந்தது யாரு ?<br>உங்க வீட்டுக்குக் காலெயிலே வந்தது யாரு ? |
| (iii) எனக்குப் பிடிக்காது.<br>சினிமாவுக்குப் போறது பிடிக்காது | எனக்குப் பிடிக்காது.<br>எனக்குச் சினிமாவுக்குப் போறது பிடிக்காது. |

d. Question-Answer drill

(i) Q : ஹலோ ! யாரு பேசுறது ?
A : நான்தாங்க.

(ii) Q : யாரு எழுதுனது வேணும் ?
A : ஜெயகாந்தன் எழுதுன நாவல் கொடுங்களேன்.

(iii) Q : நேத்துக் காலெயிலே வீட்டுக்கு வந்தது யாரு ?
A : என் நண்பர் ஒருவரு வந்தாரு.

(iv) Q : உங்ககிட்டெ யாரு சொன்னது ?
A : உங்க மிஸஸ்தான் சொன்னுங்க.

(v) Q : மாலெயிலே ஒரு சினிமாவுக்குப் போவோமா ?
A : இல்லெங்க. அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காதுங்க.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) யாரு எழுதுனது வேணும் ?<br>Substitute and change the verb accordingly. | யாரு எழுதுனது வேணும் ? |
| கொடு | யாரு கொடுத்தது வேணும் ? |
| அனுப்பு | யாரு அனுப்புனது வேணும் ? |
| படி | யாரு படிச்சது வேணும் ? |
| தா | யாரு தந்தது வேணும் ? |
| கொண்டுவா | யாரு கொண்டுவந்தது வேணும் ? |
| (ii) யாரு பேசுறது ?<br>Substitute and change the verb accordingly. | யாரு பேசுறது ? |

| | |
|---|---|
| கேளு | யாரு கேக்குறது ? |
| சொல்லு | யாரு சொல்லுறது ? |
| பாடு | யாரு பாடுறது ? |
| படி | யாரு படிக்குறது ? |
| காட்டு | யாரு காட்டுறது ? |

(iii) புராணக்கதெ படிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம். — புராணக்கதெ படிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம்.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| வாசி | புராணக்கதெ வாசிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம். |
| எழுது | புராணக்கதெ எழுதுறது எனக்கு ரொம்ப இஷ்டம். |
| கற்பி | புராணக்கதெ கற்பிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம். |
| சொல்லு | புராணக்கதெ சொல்லுறது எனக்கு ரொம்ப இஷ்டம். |
| கேளு | புராணக்கதெ கேக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம். |

(iv) நாவல் வேணுமா ? — நாவல் வேணுமா ?

Substitute

| | |
|---|---|
| சிறுகதெ | சிறுகதெ வேணுமா ? |
| புராணக்கதெ | புராணக்கதெ வேணுமா ? |
| இலக்கியம் | இலக்கியம் வேணுமா ? |
| நாடகம் | நாடகம் வேணுமா ? |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) உங்க வீட்டுக்கு வறது யாரு? | உங்க வீட்டுக்கு வந்தது யாரு ? |
| உங்ககிட்டெ யாரு சொல்லுறது ? | உங்கக்கிட்டெ யாரு சொன்னது ? |
| யாரு எழுதுறது வேணும் ? | யாரு எழுதுனது வேணும் ? |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ................வேணுமா ? (short story)

**சிறுகதெ** வேணுமா ?

(i) ஏதாவது...............இருக்குதா ? (puranic story)
(ii) ஏதாவது...............கொடுக்கட்டுமா ? (literature)
(iii) ...............புராணக்கதெ இருக்குதா ? (any)
(iv) ...............போறது எனக்குப் பிடிக்காது. (often)

h. Change these sentences into participial constructions (past) following the model.

Model : ஜெயகாந்தன் நாவல் எழுதுனரு.
ஜெயகாந்தன் எழுதுன நாவல்....
ஜெயகாந்தன் எழுதுனது....

(i) அவரு புஸ்தகம் படிச்சாரு.
(ii) அவங்க படம் வரெஞ்சாங்க.
(iii) பாலச்சந்தர் சினிமா எடுத்தாரு.
(iv) சுப்புலட்சுமி பாட்டுப் பாடுனங்க.
(v) அருணசலம் பேங்குலே பணம் போட்டாரு.

i. Change these sentences into participial constructions (present) following the model.

Model : பாலச்சந்தர் சினிமா எடுக்குறரு.
பாலச்சந்தர் எடுக்குற சினிமா....
பாலச்சந்தர் எடுக்குறது....

(i) ஜெயகாந்தன் நாவல் எழுதுறரு.
(ii) சுந்தரம் படம் பார்க்குறரு.
(iii) சுப்புலட்சுமி பாட்டுப் பாடுறங்க.
(iv) அருணசலம் பேங்குலே பணம் போடுறரு.
(v) அவங்க புஸ்தகம் வாசிக்குறங்க.

j. Fill in the blanks using the appropriate conjugated noun (participial noun) forms of the verbs வா 'come', குடி 'drink', வில் 'sell' and அனுப்பு 'send' respectively in the past tense.

(i) அது ................ (iii) அது ................
(ii) அது ................ (iv) அது ................

k. Fill in the blanks using the appropriate conjugated noun (participial noun) forms of the verbs வா 'come', கொண்டுவா 'bring' காட்டு 'show' and வாங்கு 'buy' respectively in the present tense.

(i) அது ................ (iii) அது ................
(ii) அது ................ (iv) அது ................

l. Fill in the blanks using the appropriate conjugated noun forms of the verbs பேசு 'speak', போ 'go', செய் 'do', சிகரெட் பிடி 'smoke' வாங்கு 'buy' and தெரிவி 'inform' respectively in the present and past tenses.

Present tense

(i) யாரு ................ (iv) யாரு ................
(ii) யாரு ................ (v) யாரு ................
(iii) யாரு ................ (vi) யாரு ................

Past tense

| | |
|---|---|
| (i) யாரு ................ | (iv) யாரு ................ |
| (ii) யாரு ........... .... | (v) யாரு ................ |
| (iii) யாரு ................ | (vi) யாரு ................ |

m. Make one sentence out of two by using a verbal noun following the model.

Model : நான் புராணக்கதெ படிக்குறேன்.
அது எனக்கு இஷ்டம்.
புராணக்கதெ படிக்குறது எனக்கு இஷ்டம்.

(i) அவரு நல்லாச் சாப்பிடுறுரு.
அது அவருக்கு இஷ்டம்.

(ii) அம்மா சமெக்குறுங்க.
அது அம்மாவோடெ வேலெ.

(iii) சுந்தரம் கல்லூரியிலே தமிழ் கற்பிக்குறுரு.
அது சுந்தரத்தோடெ வேலெ.

(iv) அவரு அடிக்கடி சினிமாவுக்குப் போறுரு.
அது அவருக்குப் பிடிக்கும்.

(v) ஜெயகாந்தன் நாவல் எழுதுறுரு.
அது ஜெயகாந்தனேடெ வேலெ.

n. Change the underlined word or group of words to its corresponding question.

(i) <u>நான்தான்</u> பேசுறேன்.

(ii) <u>ஜெயகாந்தன்</u> எழுதுன நாவல் வேணும்.

(iii) அவருக்கு <u>ஒரு புஸ்தகம்</u> வேணும்.

o. Answer these questions.

(i) உங்க போன் நம்பர் என்ன ?

(ii) உங்களுக்கு நாவல் வேணுமா ? யாரு எழுதுனது வேணும் ?

(iii) நேத்து வகுப்புலே பாடம் படிச்சது யாரு ?

(iv) வகுப்புலே போர்டுலே படம் வரெஞ்சது யாரு ?
உங்களுக்குத் தெரியுமா ?

(v) உங்களுக்கு அடிக்கடி சினிமாவுக்குப் போறது பிடிக்குமா ?

(vi) லீவுலே நாவல் வாசிக்குறது உங்க வேலெயா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| கொடு | 'lend' | சிறுகதெ | 'short story' |
| புராணக்கதெ | 'puranic story' | இலக்கியம் | 'literature' |
| அடிக்கடி | 'often' | | |

## GRAMMAR

**16. 66. 174.** எழுதுனது is a participial noun in which the verb எழுது 'write' is conjugated in the third person neuter singular. Example:

> **16. 66. 174.** உங்களுக்கு யாரு எழுதுனது வேணும் ?
> எனக்கு ஜெயகாந்தன் எழுதுனது கொடுங்களேன்.

**16.66.175.** படிக்குறது, போறது, பேசுறது etc., are used as verbal nouns in Tamil. Example:

> **16. 66. 175.** புராணக்கதெ படிக்குறது எனக்கு ரொம்ப இஷ்டம்.
> அடிக்கடி சினிமாவுக்குப் போறது எனக்குப் பிடிக்காது.
> ஹலோ ! யாரு பேசுறது ?

The verbal nouns may also be inflected for case as other participial nouns. It is important to note that the formation of this type of verbal nouns is restricted in adding only the pronominal suffix -அது unlike participial nouns. Moreover, the participial nouns in 16.66.174 are not functionaly same as the verbal noun. But it is very difficult to distinguish one from the other in isolation. In a sentence, when it denotes the action itself, this may be called verbal noun. When it denotes something which does the action of verb this may be called participial noun.

**16.66.176.** Like participial nouns verbal nouns also distinguish tense in Tamil. Consider the following sentences.

> **16. 66. 176.** காலெயிலே உங்க வீட்டுக்கு வந்தது யாரு ?
> உங்ககிட்டெ யாரு சொன்னது ?

The verb roots வா 'come', சொல்லு 'tell' in the verbal nouns வந்தது and சொன்னது are conjugated for past tense as படி 'read', போ 'go' and பேசு 'speak' in the verbal nouns படிக்குறது, போறது and பேசுறது are conjugated for present tense (Refer 16.66.175).

Sandhi : புராணம் + கதெ → புராணகதெ (Refer S.2 in 1.1)
புராண + கதெ → புராணக் கதெ (Refer S. 4 in 1.2)
சினிமாவுக்கு + போறது → சினிமாவுக்குப் போறது
எனக்கு + பிடிக்காது → எனக்குப் பிடிக்காது (Refer S.18 in 2.14)
கொடுக்குறீங்க + ஆ → கொடுக்குறீங்களா (Refer S.19 in 2.14)

# UNIT 16

## LESSON 67

### ABOUT THE SMUGGLERS

**DIALOGUE**

சுந்தரம் : இந்த உலகத்துலே பணத்துக்கு ஆசெப்-படாதவங்க யாரு ? எல்லாருக்கும் பணம் அவசியம். ஆனா, நேரான வழியிலே சம்பாதிக்காதவனோடெ பணம் நல்ல பணம் இல்லெ. ஒரு நாளு அந்தப் பணத்தாலெ கூட அவனெக் காப்-பாத்த முடியாது. எத்த-னெயோ கடத்தல் காரங்களெ உங்களுக்குத்

Who is there in this world who does not desire (to have) money ? Money is necessary for all. But the money earned by some one not through just means is not good money. One day even that money cannot save him. You know so many smugglers, don't you ? They are all in prison now. Whatever they earned is with government. Because, the means through which they earned the money was not good. One must work honestly. Those who did not work (honestly) will have to suffer one day.

தெரியும், இல்லெயா ? அவங்க எல்லாம் இப்ப ஜெயில்லே இருக்கு-ருங்க. அவங்க சம்பா-திச்சது எல்லாம் சர்க்கார் கிட்டெ இருக்குது. ஏன்னு, பணத்தெச் சம்பாதிச்ச வழி நல்லது இல்லெ. நேர்மெயா உழெக்கணும். அப்படி உழெக்காதவங்க எல்லாரும் ஒரு நாளு கஷ்டப்படத்தான் வேணும்.

## DRILLS

a. Variation drill

16. 67. 177. பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ?
நேரான வழியிலே சம்பாதிக்காதவனோடெ பணம் நல்ல பணம் இல்லெ.
நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) பணத்துக்கு ஆசெப்படாத-வங்க யாரு ? | பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? |
| யாரு ? | யாரு ? |
| ஆசெப்படாதவங்க | ஆசெப்படாதவங்க யாரு ? |
| பணத்துக்கு | பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? |
| (ii) நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும். | நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும். |
| வேணும் | வேணும் |
| கஷ்டப்படத்தான் | கஷ்டப்படத்தான் வேணும் |
| எல்லாரும் | எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும் |
| உழெக்காதவங்க | உழெக்காதவங்க எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும் |
| நேர்மெயா | நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நேர்மெயா உழெக்காதவங்க கஷ்டப்படத்தான் வேணும். எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும் | நேர்மெயா உழெக்காதவங்க கஷ்டப்படத்தான் வேணும். நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும் கஷ்டப்படத்தான் வேணும். |
| (ii) பணத்துக்கு ஆசெப்படா-தவங்க யாரு ? இந்த உலகத்துலே யாரு ? | பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? பணத்துக்கு ஆசெப்படாதவங்க இந்த உலகத்துலே யாரு ? |
| (iii) நேர்மெயா உழெக்காதவங்க கஷ்டப்படத்தான் வேணும். ஒருநாளு கஷ்டப்படத்தான் வேணும் | நேர்மெயா உழெக்காதவங்க கஷ்டப்படத்தான் வேணும். நேர்மெயா உழெக்காதவங்க ஒருநாளு கஷ்டப்படத்தான் வேணும். |

d. Substitution drill

| | |
|---|---|
| (i) ஆசெப்படாதவங்க யாரு ? Substitute and change the verb accordingly. | ஆசெப்படாதவங்க யாரு ? |
| போ | போகாதவங்க யாரு ? |
| வா | வராதவங்க யாரு ? |
| சாப்பிடு | சாப்பிடாதவங்க யாரு ? |
| கேளு | கேக்காதவங்க யாரு ? |
| தங் | தங்காதவங்க யாரு ? |
| உழெ | உழெக்காதவங்க யாரு ? |
| சம்பாதி | சம்பாதிக்காதவங்க யாரு ? |
| (ii) பணத்துக்கு ஆசெப்படாத-வங்க யாரு ? Substitute and change the noun accordingly. | பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? |
| ரூபாய் | ரூபாய்க்கு ஆசெப்படாதவங்க யாரு ? |
| தங்கம் | தங்கத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? |
| பொடவெ | பொடவெக்கு ஆசெப்படாதவங்க யாரு ? |
| புஸ்தகம் | புஸ்தகத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? |

e. Transformation drill

| | |
|---|---|
| (i) அவங்க பணத்துக்கு ஆசெப்படுறவங்க. | அவங்க பணத்துக்கு ஆசெப் படாதவங்க. |
| அவங்க பணத்துக்கு ஆசெப்பட்டவங்க. | அவங்க பணத்துக்கு ஆசெப் படாதவங்க. |
| அவங்க நேர்மெயா உழெச்சவங்க. | அவங்க நேர்மெயா உழெக்காதவங்க. |
| அவங்க நேர்மெயா உழெக் குறவங்க. | அவங்க நேர்மெயா உழெக்காதவங்க. |

## EXERCISES

f. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ...............+லே பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ? (world)

**உலகத்துலே** பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ?

(i) அந்தப் பணத்தாலெயே...............+ அ முடியாது. (save)
(ii) ...............+ ஏ உங்களுக்குத் தெரியும். (smugglers)
(iii) அவங்க...............+லே இருக்குறாங்க. (jail)
(iv) அவங்க சம்பாதிச்சது...............கிட்டெ இருக்குது. (government)
(v) பணத்தெச் சம்பாதிச்ச...............நல்லது இல்லெ. (way)
(vi) பணத்தெ...............ச்ச வழி நல்லது இல்லெ. (earn)
(vii) உழெக்காதவங்க...............+அத் தான் வேணும். (suffer)

g. Change these sentences into negative participial constructions following the model.

Model : அவங்க ரேடியோவுலே பாடுனாங்க.
ரேடியோவுலே பாடுன அவங்க...............
ரேடியோவுலே படுனவங்க. ...............
ரேடியோவுலே பாடாதவங்க...............

(i) அவங்க பணத்துக்கு ஆசெப்படுறாங்க.
(ii) அவங்க நேரான வழியிலே பணத்தெச் சம்பாதிக்குறாங்க.
(iii) அவங்க நேர்மெயா உழெச்சாங்க.
(iv) நீங்க கச்சேரியெக் கேட்டீங்க.
(v) அவ பாடுறா.
(vi) அருணாசலம் இந்த பேங்குலே பணம் போடுறாரு.
(vii) நான் பாரம் கொடுக்குறேன்.

h. Fill in the blanks using the negative participial noun form of the verbs given in parentheses.

(i) அவங்க பணத்துக்கு................ (ஆசெப்படு)
(ii) அவன் நேரான வழியிலே................ (சம்பாதி)
(iii) அவங்க என்னெ................ (காப்பாத்து)
(iv) அவங்க நேர்மெயா................ (உழெ)
(v) இந்தக் கேள்வி பரீட்செயிலே................ (கேளு)
(vi) இது நான்................ (பாரு)

i. Fill in the blanks using the appropriate negative conjugated noun (negative participial noun) forms of the verb ஆசெப்படு 'like'.

(i) நான் (masc.)....
(ii) நீ (masc.) ................
(iii) நீ (fem.) ................
(iv) இவன்................
(v) இவ................
(vi) இவரு................
(vii) நாங்க................
(viii) நாம................
(ix) நீங்க................
(x) இவங்க................
(xi) இது................
(xii) அது................

j. Write the word represented by the formula.

Example : **வராதவன்** வா + Participial noun (Neg.)

(i) பாரு + Participial noun (Neg.) : ................
(ii) கொடு + Participial noun (Neg.) · ................
(iii) சேரு + Participial noun (Neg.) : ............
(iv) விரும்பு + Participial noun (Neg.) : ............
(v) பாராட்டு + Participial noun (Neg.) : ............
(vi) பாடு + Participial noun (Neg.) : ............

k. Answer these questions.

(i) நீங்க பணத்துக்கு ஆசெப்படாதவரா ?
(ii) நேரான வழியிலே சம்பாதிக்காதவனோடெ பணம் நல்ல பணம் இல்லெ, இல்லே ?
(iii) நீங்க சினிமாவே பார்க்காதவரா ?
(iv) உங்களுக்குப் படிக்காதவங்களெப் பிடிக்குமா ?
(v) உங்களுக்குப் பணம் இல்லாதவங்களெப் பிடிக்காதா ?
(vi) உங்க மனெவி தமிழ் படிக்காதவங்களா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| உலகம் | 'world' | ஆசெப்படு | 'desire' |
| அவசியம் | 'important' | நேரானவழி | 'just means' |
| காப்பாத்து | 'save' | கடத்தல்காரங்க | 'smugglers' |
| ஜெயில் | 'prison, jail' | சர்க்கார் | 'government' |
| நேர்மெ | 'honest' | கஷ்டம் | 'suffering' |
| கஷ்டப்படு | 'suffer' | சம்பாதி | 'earn' |

## GRAMMAR

*16.67.177.* The negative form of a participial noun is expressed by negative relative participle (Refer 16.63.171) and the pronominal suffixes -அன் or -அ or -அரு or -அங்க or -து as the case may be. As it is mentioned earlier in section (16.63) negative in general has no tense in Tamil. Consider the following examples :

*16. 67. 177.* பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ?
நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும்
கஷ்டப்படத்தான் வேணும்.

ஆசெப்படாதவங்க and உழெக்காதவங்க are nagative participial nouns and they are derived from the negative relative participles ஆசெப்படாத and உழெக்காத by adding the pronominal suffix -அங்க.

Sandhi : உலகம் + உலே → உலகத்துலே
பணம் + உக்கு → பணத்துக்கு (Refer S.17 in 2.13)

# UNIT 17

# LESSON 68

## ASKING WAY TO KANYAKUMARI

**DIALOGUE**

| | |
|---|---|
| சுரேஷ் : ஸார், கன்னியாகுமரிக்கு எந்த வழியாப் போக-ணும் ? | Sir, by which way (one) should go to Kanyakumari ? |
| கண்டக்டர்: நம்பர் எட்டு, ஒம்பது, பத்து பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க. | Please go and wait at the 8, 9 and 10 number bus stops. |
| சுரேஷ் : சுசீந்திரத்துலே ஸ்டாப் இருக்குதுங்களா ? | Will there be any stop at Suchindrum ? |
| கண்டக்டர் : ஆமாங்க. பத்து நிமிஷம் நிக்கும்... நீங்க சுசீந்திரத்துலே எறங்-கணுமா ? | Yes, sir. (It) will stop for ten minutes.... Do you want to get down at Suchindrum ? |

| | |
|---|---|
| சுரேஷ் : ஆமாங்க. | Yes, sir. |
| கண்டக்டர் : அப்படீன்னு, நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க. அங்கே எறங்கி நீங்க சுசீந்திரம் கோயிலெப் பார்க்கலாம். ஆறு மணிக்கு நம்பர் பத்து வரும். அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம். | If it is so, please get into the bus No. 8 and get down at Suchindrum. Having got down there you can see Suchindrum temple. At six o' clock the bus No. 10 will come. Boarding that (you) can go to Kanyakumari. |
| சுரேஷ் : கன்னியாகுமரியிலே காலெயிலே சூரியோதயம் பார்க்க முடியுமா ? | Can (I) see sunrise in the morning at Kanyakumari ? |
| கண்டக்டர் : முடியும். கன்னியாகுமரியிலெ இருக்குற ஒரு ஹோட்டல்லே ராத்திரி தங்கி அதிகாலெயிலே சூரியோதயம் பார்க்கலாம். மாலெயிலே சூரிய அஸ்தமனமும் பார்க்கலாம். அதோ ! எட்டாம் நம்பர் பஸ் வருது. அதுலே ஏறிச் சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க. | Yes. (you) can (see). (You) can see sunrise early in the morning by staying in a hotel at Kanyakumari; (You) can also see sunset in the evening. Look ! The bus No. 8 is comming. Please board that bus and buy a ticket to Suchindrum. |
| சுரேஷ் : ரொம்ப நன்றிங்க. | Thank (you) verymuch, sir. |
| கண்டக்டர் : பரவாயில்லெங்க. | Don't mention please. |

## DRILLS

a. Variation drill

17. 68. 178. நீங்க நம்பர் எட்டு பஸ்ஸ்டாப்லே போய் நில்லுங்க.
நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க.
சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம்.
நீங்க ஹோட்டல்லே தங்கி அதிகாலெயிலே சூரியோதயம் பார்க்கலாம்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க. | நீங்க நம்பர் எட்டு பஸ்ஸ்டாப்லே போய் நில்லுங்க. |
| நில்லுங்க | நில்லுங்க |
| போய் | போய் நில்லுங்க |
| பஸ் ஸ்டாப்லே | பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க |
| நம்பர் எட்டு | நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க |
| நீங்க | நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க. |

| | |
|---|---|
| (ii) சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம். | சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம். |
| பார்க்கலாம் | பார்க்கலாம் |
| கோயிலெ | கோயிலெப் பார்க்கலாம் |
| நீங்க | நீங்க கோயிலெப் பார்க்கலாம் |
| எறங்கி | எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம் |
| சுசீந்திரத்துலே | சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம். |

| | |
|---|---|
| (iii) நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க. | நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க. |
| எறங்குங்க | எறங்குங்க |
| சுசீந்திரத்துலே | சுசீந்திரத்துலே எறங்குங்க |
| ஏறி | ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க |
| நம்பர் எட்டுலே | நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்-துலே எறங்குங்க |
| நீங்க | நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க. |

| | |
|---|---|
| (iv) பஸ்லே ஏறிக் கன்னியா குமரிக்குப் போகலாம். | பஸ்லே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம். |
| போகலாம் | போகலாம் |
| கன்னியாகுமரிக்கு | கன்னியாகுமரிக்குப் போகலாம் |
| ஏறி | ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம் |
| பஸ்லே | பஸ்லே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நீங்க பார்க்கலாம். | நீங்க பார்க்கலாம். |
| கோயிலெப் பார்க்கலாம் | நீங்க கோயிலெப் பார்க்கலாம் |

| | |
|---|---|
| எறங்கிப் பார்க்கலாம் | நீங்க எறங்கிக் கோயிலெப் பார்க்கலாம் |
| சுசீந்திரத்துலே பார்க்கலாம் | நீங்க சுசீந்திரத்துலே எறங்கிக் கோயிலெப் பார்க்கலாம். |
| (ii) நீங்க நில்லுங்க. | நீங்க நில்லுங்க. |
| போய் நில்லுங்க | நீங்க போய் நில்லுங்க. |
| நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே நில்லுங்க | நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க. |
| (iii) நீங்க பார்க்கலாம். | நீங்க பார்க்கலாம். |
| சூரியோதயம் பார்க்கலாம் | நீங்க சூரியோதயம் பார்க்கலாம். |
| அதிகாலெயிலே பார்க்கலாம் | நீங்க அதிகாலெயிலே சூரியோ-தயம் பார்க்கலாம். |
| ஹோட்டல்லே தங்கி பார்க்-கலாம் | நீங்க ஹோட்டல்லே தங்கி அதி காலெயிலே சூரியோதயம் பார்க்க லாம். |

d. Question-Answer drill

(i) Q : ஸார், கன்னியாகுமரிக்கு எந்த வழியாப் போகணும் ?
A : நம்பர் எட்டு, ஒம்பது, பத்து பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க.

(ii) Q : சுசீந்திரத்துலே ஸ்டாப் இருக்குதுங்களா ?
A : ஆமாங்க. பத்து நிமிஷம் நிக்கும்.

(iii) Q : நீங்க சுசீந்திரத்துலே எறங்கணுமா ?
A : ஆமாங்க.

(iv) Q : கன்னியாகுமரியிலே காலெயிலே சூரியோதயம் பார்க்க முடியுமா ?
A : முடியும்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) அதுலே ஏறிக் கன்னியா குமரிக்குப் போகலாம். | அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம். |
| Substitute and change the verb accordingly. | |
| கௌம்பு | அதுலே கௌம்பிக் கன்னியா குமரிக்குப் போகலாம். |
| புறப்படு | அதுலே புறப்பட்டுக் கன்னியா குமரிக்குப் போகலாம். |
| (ii) அது வருது. | அது வருது. |
| Substitute and conjugate the verb suitably. | |

| | |
|---|---|
| போ | அது போகுது. |
| ஏறு | அது ஏறுது. |
| நில்லு | அது நிக்குது. |
| தங்கு | அது தங்குது. |
| பாரு | அது பார்க்குது. |
| வாங்கு | அது வாங்குது. |
| தா | அது தருது. |

(iii) அது வரும். — அது வரும்.

Substitute and conjugate the verb accordingly.

| | |
|---|---|
| போ | அது போகும். |
| ஏறு | அது ஏறும். |
| எறங்கு | அது எறங்கும். |
| நில்லு | அது நிக்கும் |
| தங்கு | அது தங்கும். |
| பாரு | அது பார்க்கும். |
| வாங்கு | அது வாங்கும். |

f. Integration drill

| | |
|---|---|
| (i) நீங்க ஒரு ஹோட்டல்லே தங்குங்க. நீங்க அதிகாலெயிலே சூரியோதயம் பாருங்க. | நீங்க ஒரு ஹோட்டல்லே தங்கி அதிகாலெயிலே சூரியோதயம் பாருங்க. |
| (ii) நீங்க போங்க. நீங்க பஸ் ஸ்டாப்லே நில்லுங்க. | நீங்க போய் பஸ் ஸ்டாப்லே நில்லுங்க. |
| (iii) நீங்க கன்னியாகுமரிக்குப் போகலாம். நீங்க சுசீந்திரத்துக்கு வரலாம். | நீங்க கன்னியாகுமரிக்குப் போய் சுசீந்திரத்துக்கு வரலாம். |
| (iv) நீங்க பஸ்லே ஏறுங்க. நீங்க சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க. | நீங்க பஸ்லே ஏறிச் சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க. |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : பஸ் ஸ்டாப்லே போய்................ங்க. (wait)
பஸ் ஸ்டாப்லே போய் **நில்லுங்க.**

(i) காலெயிலே................பார்க்க முடியுமா ? (sunrise)
(ii) மாலெயிலே................+உம் பார்க்கலாம். (sunset)

h. Write the word represented by the formula.

Example : **வந்து** வா + Verb. Part

(i) போ + Verb. Part : ................
(ii) இரு + Verb. Part : ................
(iii) எறங்கு + Verb. Part : ................
(iv) பாடு + Verb. Part : ................
(v) கொடு + Verb. Part : ................
(vi) படி + Verb. Part : ................
(vii) குடி + Verb. Part : ................
(viii) வேய் + Verb. Part : ................
(ix) பாரு + Verb. Part : ................
(x) செய் + Verb. Part : ................

i. Use the verbal participle and the suitable finite forms of the verbs given in parentheses in order.

(i) நீங்க நம்பர் எட்டுலே................சுசீந்திரத்துலே................
(ஏறு ; எறங்கு)

(ii) நீங்க ராத்திரி................சூரியோதயம்................
(தங்கு ; பாரு)

(iii) அவ புஸ்தகத்தெப்................பாடம்................
(படி ; எழுது)

(iv) அவங்க சுப்புலட்சுமியெப்................நல்லாப்................
(பாராட்டு ; பேசு)

(v) அவரு புஸ்தகத்தெ................என்கிட்டெக்................
(வாங்கு ; கொடு)

(vi) அவரு என்னெப் பேங்குக்கு................பாரத்தெப்................
(அறிமுகப்படுத்து ; பூர்த்திபண்ணு)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நீங்க போங்க.
நீங்க பஸ் ஸ்டாப்லே நில்லுங்க.
நீங்க போய் பஸ் ஸ்டாப்லே நில்லுங்க.

(i) நீங்க நம்பர் எட்டுலே ஏறுங்க.
நீங்க சுசீந்திரத்துலே எறங்குங்க.

(ii) நீங்க சுசீந்திரத்துலே எறங்குங்க.
நீங்க கோயிலெப் பார்க்கலாம்.

(iii) நீங்க கன்னியாகுமரிக்குப் போகலாம்.
நீங்க சுசீந்திரத்துக்கு வரலாம்.

(iv) ஒரு ஹோட்டல்லே தங்குங்க.
நீங்க அதிகாலெயிலே சூரியோதயம் பாருங்க.

(v) நீங்க பஸ்லே ஏறுங்க.
நீங்க சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க.

k. Write the word represented by the formula.

Example : **போனுன்** போ + Past

(i) நில்லு + Past : ................
(ii) எறங்கு + Past : ................
(iii) ஏறு + Past : ................
(iv) தங்கு + Past : ................
(v) வாங்கு + Past : ................

l. Change the underlined word or group of words to its corresponding questions.

(i) சுசீந்திரத்துலே பத்து நிமிஷம் நிக்கும்.
(ii) ஆறுமணிக்கு நம்பர் பத்து வரும்.
(iii) கன்னியாகுமரியிலே சூரியோதயம் பார்க்கலாம்.
(iv) அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.

m. Answer these questions.

(i) நீங்க கன்னியாகுமரிக்குப் போனீங்களா ?
(ii) உங்க ஊருலே சூரிய அஸ்தமனம் பார்க்க முடியுமா ?
(iii) எத்தனும் நம்பர் பஸ்லே ஏறி நீங்க மைதரு சிட்டிக்குப் போவீங்க ?
(iv) ரயில்லேயிருந்து எறங்கி எத்தனும் நம்பர் பஸ்லே ஏறி உங்க வீட்டுக்குப் போவீங்க ?
(v) போன தேர்வு எழுதி எத்தனெ மார்க்கு வாங்குனீங்க ?
(vi) தினந்தோறும் மார்க்கெட்டுக்குப் போய் காய்கறி வாங்குறீங்களா ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| நில்லு | 'wait' | நில்லு | 'stop' |
| சூரியோதயம் | 'sunrise' | சூரிய அஸ்தமனம் | 'sunset' |

## GRAMMAR

*17.68.178.* Following the Unit 16, this Unit introduces the compound sentence called verbal participle or past participle or adverbial participle. This form of compound sentence is widely used in Tamil. The compounding in this type of sentence is generally done by a non-finite verb or a sequence of non-finite verbs (subordinate clause) and a finite verb (main clause). Whereas, in

a complex sentence similar non-finite verbs in the subordinate clause cannot be sequenced with the finite verb in the main clause. That is, a sentence like *நான் நேத்து பார்த்த ஓடுன பையன் வந்தான் is considered to be ungrammatical. Now let us consider the following sentence.

*17. 68. 178.* நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க.

In this sentence, the non-finite verb is ஏறி 'having got into' which may be called verbal participle. It is, here, compounded with the finite verb எறங்குங்க '(you) get down'. As we indicated earlier, this non-finite verb can be sequenced with other non-finite verbs also. For example, the sentence 'நீங்க நம்பர் எட்டுலே ஏறி, டிக்கெட் வாங்கி சுசீந்திரத்துலே எறங்குங்க is considered to be grammatical. In English, this form of expression is organised by a series of finite verbs joined by conjunctive particles. A verbal participle form is expressed by a verb stem consisting of base verb and its corresponding past tense marker and the suffix denoting verbal participle. See the following examples.

| | |
|---|---|
| ஏறி | 'having got into' |
| எறங்கி | 'having got down' |
| தங்கி | 'having stayed' |
| வாங்கி | 'having bought' |
| போய் | 'having gone' |

In the above mentioned forms the base verb and the past tense marker may be represented as follows.

| | |
|---|---|
| ஏறு + இ : ஏறி | 'having got into' |
| எறங்கு + இ : எறங்கி | 'having got down' |
| தங்கு + இ : தங்கி | 'having stayed' |
| வாங்கு + இ : வாங்கி | 'having bought' |
| போ + ய் : போய் | 'having gone' |

Note that there is no suffix to indicate the verbal participle. Also note that the verbs like ஏறு 'get-into', எறங்கு 'get down' etc., have two past tense markers -இ- and -ன்-. -இ- is added to the stem when the verbal participle is consituted. -ன்- occurs elsewhere (as in ஏறுனேன் 'get into-I' etc.). In the case of the verb போ 'go' -ய்- may be treated as the past tense marker.

The verbal participles do not give the meaning of past tense markers. The tense is always denoted by the finite verb in the main clause. For example, in the sentence 'நீங்க பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க' the meaning of future is conveyed by the imperative verb நில்லுங்க '(you) wait'. Similarly, negation is alo expressed by the negative finite verb. In Tamil, verbal participles are used in many ways. In this lesson we are chiefly concerned with a kind of verbal participle form which is used to express the continuation of the action expressed by the finite verb in the main clause. Example :

**17. 68. 178.** நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய்
நில்லுங்க.
நீங்க சுசீந்திரத்துலே எறங்கி கோயிலெப்
பார்க்கலாம்.
பஸ்லே ஏறி கன்னியாகுமரிக்குப் போகலாம்.

Sandhi 31. The consonants க், ச், த் and ப் are always doubled after the verbal participle ending in -இ. Example:

ஏறி + சுசீந்திரத்துலே —> ஏறிச் சுசீந்திரத்துலே (எறங்குங்க)
வழியா + போகணும் —> வழியாப் போகணும் (Refer S.21 in 3.20)

# UNIT 17

# LESSON 69

MEETING A FRIEND AFTER SOMETIME

**DIALOGUE**

| | |
|---|---|
| சுரேஷ் : வணக்கங்க....உங்களெப் பார்த்து ரொம்ப நாளா-குது, இல்லெங்களா ? | Vanakkam, sir... It is many days since I saw you, isn't it ? |
| மூர்த்தி : ஆமாங்க. சௌக்கியமா இருக்குறீங்களா ?....நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும், இல்லே ? | Yes, sir. How are you ? ... It may be a month since we met, isn't it ? |
| சுரேஷ் : ஆமாங்க .... வீட்டுலே யாரும் இல்லெங்களா ? | Yes, sir... Is there nobody in the house ? |
| மூர்த்தி : இல்லெங்க....என் மனைவி ஊருக்குப் போய் ரெண்டு மூணு வாரம் ஆச்சு .... வேகெஷன் பாருங்க. | No, sir. It is three weeks since my wife went to (her) native place... It is a vacation (you) see. |

| | |
|---|---|
| சுரேஷ் : உங்க சொந்த ஊரு எது? | Which is your native place? |
| மூர்த்தி : சேலம். | Salem. |
| சுரேஷ் : நீங்க பெறந்த ஊரு அதுதானு ? | Is it that your birth place? |
| மூர்த்தி : ஆமாங்க. ஆனு, நாங்க இந்த ஊருக்கு வந்து சுமார் பத்து வருஷம் ஆச்சு. | Yes, sir. But it is ten years since we came to this place. |
| சுரேஷ் : நீங்க போகலெயா ? | Didn't you go (to your native place)? |
| மூர்த்தி : நான் சேலத்துக்குப் போய்க் கிட்டத்தட்ட மூணு வருஷம் ஆச்சு.... நேரமில்லெங்க. | It is approximately three years since I went to Salem.... (There) is no time. |
| சுரேஷ் : அது சரிதாங்க....உங்களுக்கு நேரம் கெடெக்குறது ரொம்பக் கஷ்டம், இல்லே ? | Yes, that is right, sir .... It is very difficult for you to find time, isn't it? |
| மூர்த்தி : ஆமாங்க. | Yes, sir. |

## DRILLS

a. Variation drill

17. 69. 179. உங்களெப் பார்த்து ரொம்ப நாளாகுது.
நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்.
என் மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.
நான் சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.

b. Build up drill

| | |
|---|---|
| (i) உங்களெப் பார்த்து ரொம்ப நாளாச்சு. | உங்களெப் பார்த்து ரொம்ப நாளாச்சு. |
| நாளாச்சு | நாளாச்சு |
| ரொம்ப | ரொம்ப நாளாச்சு |
| பார்த்து | பார்த்து ரொம்ப நாளாச்சு |
| உங்களெ | உங்களெப் பார்த்து ரொம்ப நாளாச்சு. |

| | |
|---|---|
| (ii) நாம் சந்திச்சு ஒருமாசம் இருக்கும். | நாம சந்திச்சு ஒருமாசம் இருக்கும். |
| இருக்கும் | இருக்கும் |
| ஒரு மாசம் | ஒரு மாசம் இருக்கும் |
| சந்திச்சு | சந்திச்சு ஒரு மாசம் இருக்கும் |
| நாம | நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும். |
| (iii) என் மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு. | என் மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு. |
| ஆச்சு | ஆச்சு |
| மூணு வாரம் | மூணு வாரம் ஆச்சு |
| போய் | போய் மூணு வாரம் ஆச்சு |
| ஊருக்கு | ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு |
| மனெவி | மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு |
| என் | என் மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு. |
| (iv) நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு. | நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு. |
| ஆச்சு | ஆச்சு |
| பத்து வருஷம் | பத்து வருஷம் ஆச்சு |
| வந்து | வந்து பத்து வருஷம் ஆச்சு |
| ஊருக்கு | ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு |
| இந்த | இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு |
| நாங்க | நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) உங்களெப் பார்த்து நாளாச்சு. | உங்களெப் பார்த்து நாளாச்சு. |
| ரொம்ப நாளாச்சு | உங்களெப் பார்த்து ரொம்ப நாளாச்சு. |
| (ii) நாங்க வந்து பத்து வருஷம் ஆச்சு. | நாங்க வந்து பத்து வருஷம் ஆச்சு. |
| இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு | நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு. |

(iii) என் மனைவி போய் மூணு வாரம் ஆச்சு.
ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு

என் மனைவி போய் மூணு வாரம் ஆச்சு.
என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.

(iv) நான் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.
சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு

நான் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.
நான் சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.

d. Question-Answer drill

(i) Q : உங்களெப் பார்த்து ரொம்ப நாளாச்சு, இல்லெங்களா ?
A : ஆமாங்க.

(ii) Q : வீட்டுலே யாரும் இல்லெங்களா ?
A : இல்லெங்க.

(iii) Q : உங்க சொந்த ஊரு எது ?
A : சேலம்.

(iv) Q : நீங்க பெறந்த ஊரு அதுதானு ?
A : ஆமாங்க.

(v) Q : நீங்க போகலெயா ?
A : நேரமில்லெங்க.

e. Substitution drill

(i) நாம சந்திச்சு ஒருமாசம் இருக்கும், இல்லே ?
Substitute and change the verb accordingly.

நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

போ — நாம போய் ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

சொல்லு — நாம சொல்லி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

கொடு — நாம கொடுத்து ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

புறப்படு — நாம புறப்பட்டு ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

அனுப்பு — நாம அனுப்பி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

வாங்கு — நாம வாங்கி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

எழுது — நாம எழுதி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

| | |
|---|---|
| மனுப் போடு | நாம மனுப்போட்டு ஒரு மாசம் இருக்கும், இல்லே ? |
| (ii) நான் போய் கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆச்சு. | நான் போய் கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆச்சு. |
| Substitute | |
| சுமார் | நான் போய் சுமார் ரெண்டு வருஷம் ஆச்சு. |
| அநேகமா | நான் போய் அநேகமா ரெண்டு வருஷம் ஆச்சு. |
| (iii) நான் சேலத்துக்குப் போய் மூணு வருஷம் ஆச்சு. | நான் சேலத்துக்குப் போய் மூணு வருஷம் ஆச்சு. |
| Substitute | |
| மாசம் | நான் சேலத்துக்குப் போய் மூணு மாசம் ஆச்சு. |
| வாரம் | நான் சேலத்துக்குப் போய் மூணு வாரம் ஆச்சு. |
| நாளு | நான் சேலத்துக்குப் போய் மூணு நாளு ஆச்சு. |

f. Integration drill

| | |
|---|---|
| (i) நாம சந்திச்சோம். அது ஒரு மாசம் இருக்கும். | நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும். |
| என் மனைவி ஊருக்குப் போனா. அது ரெண்டு வாரம் ஆச்சு. | என் மனைவி ஊருக்குப் போய் ரெண்டு வாரம் ஆச்சு. |
| நான் சேலத்துக்குப் போனேன். அது ரெண்டு வருஷம் ஆச்சு. | நான் சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு. |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : உங்க................எது ? (native place)
**உங்க சொந்த ஊரு எது ?**

(i) நான் போய்................மூணு வருஷம் ஆச்சு. (approximately)
(ii) நீங்க................ந்த ஊரு அதுதானா ? (be born)
(iii) சுமார் பத்து................ஆச்சு. (year)

h. Write the word represented by the formula.

Example : **சந்திச்சு** *சந்தி* + Verb. Part

(i) ஆகு + Verb. Part : ................
(ii) சொல்லு + Verb. Part : ................
(iii) எடு + Verb. Part : ................
(iv) ஏறு + Verb. Part : ................
(v) தா + Verb. Part : ................
(vi) ஊட்டு + Verb. Part : ................
(vii) பாராட்டு + Verb. Part : ................
(viii) கட்டு + Verb. Part : ................
(ix) அடி + Verb. Part : ................
(x) கேளு + Verb. Part : ................

i. Fill in the blanks using the verbal participle form of the verbs given in parentheses.

(i) உங்களெப்................ரொம்ப நாளாச்சு. (பாரு)
(ii) நாம................ஒரு மாசம் இருக்கும். (சந்தி)
(iii) மனெவி ஊருக்குப்................ரெண்டு வாரம் ஆச்சு. (போ)
(iv) நாங்க இந்த ஊருக்கு................பத்துவருஷம் ஆச்சு. (வா)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நான் உங்களெப் பார்த்தேன்.
அது ரொம்ப நாளாகுது.
நான் உங்களெப் பார்த்து ரொம்ப நாளாகுது.

(i) நாம சந்திச்சோம்.
அது ஒரு மாசம் இருக்கும்.
(ii) என் மனெவி ஊருக்குப் போறா.
அது ரெண்டு மூணு வாரம் ஆச்சு.
(iii) நாங்க இந்த ஊருக்கு வந்தோம்.
அது சுமார் பத்து வருஷம் ஆச்சு.
(iv) நான் சேலத்துக்குப் போனேன்.
அது ரெண்டு வருஷம் ஆச்சு.
(v) நான் இந்தப் புஸ்தகத்தெ வாங்குனேன்.
அது நாலு நாளு ஆச்சு.

k. Change the underlined word or group of words to its corresponding questions.

(i) நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்.
(ii) என் மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.

(iii) உங்க சொந்த ஊரு சேலம்.
(iv) உங்களெப் பார்த்து ரொம்ப நாளாகுது.

l. Write the word represented by the formula.

Example : வந்தோம் . வா + Past

(i) பாரு + Past : ................
(ii) சந்தி + Past : ................
(iii) போ + Past : ................
(iv) செய் + Past : ................
(v) சாப்பிடு + Past : ................
(vi) புறப்படு + Past : ................
(vii) போடு + Past : ................

m. Answer these questions.

(i) நீங்க உங்க மனெவியெப் பார்த்து ரொம்ப நாளாச்சு, இல்லே ?
(ii) உங்க சொந்த ஊரு எது ?
(iii) நீங்க எந்த ஊருலே ஆசிரியரா வேலெ பார்க்குறீங்க ?
(iv) அந்த ஊருக்குப் போய் எத்தனெ வருஷம் ஆச்சு ?
(v) நீங்க மைசூருக்கு வந்து எத்தனெ வாரம் ஆச்சு ?
(vi) நீங்க எத்தனெ வருஷமா ஆசிரியரா வேலெ பார்க்குறீங்க ?
(vii) உங்களுக்குக் கலியாணம் ஆகி எத்தனெ வருஷம் ஆச்சு ?
(viii) நீங்க இந்த இன்ஸ்டிடியூட்டுலே சேர்ந்து எத்தனெ மாசம் ஆச்சு ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| ஆகு | 'become' | பெற | 'be born' |
| கிட்டத்தட்ட | 'approximately' | | |

## GRAMMAR

**17.69.179.** As we noted already a verbal participle is formed by a verb stem consisting of base verb and its corresponding past tense marker and the suffix denoting verbal participle. The following verbal participles are formed by means of the suffix -உ.

பாரு + த்த் + உ : பார்த்து 'having seen'
சந்தி + ச்ச் + உ : சந்திச்சு 'having met'
வ + ந்த் + உ : வந்து 'having come'

We also noticed in the previous lesson that verbal participles are used in many ways. Let us consider in this lesson the verbal participles which denote a period of time that lapsed since an action expressed by a finite verb in the main clause has begun. Example :

***17. 69. 179.*** உங்களெப் பார்த்து ரொம்ப நாளாகுது.
நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்.
என் மனெவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.

Sandhi 32. The consonants **க், ச், த்** and ப் are always doubled after the verbal participle போய். Example:

போய் + கிட்டத்தட்ட → போய்க் கிட்டத்தட்ட ரெண்டு மூணு வருஷம் ஆச்சு)

சரிதான் + ங்க → சரிதாங்க (Refer S.30 in 16.61)

## UNIT 17

## LESSON 70

ABOUT THE PREPARATION FOR EXAMINATION

**DIALOGUE**

| | |
|---|---|
| *மூர்த்தி* : வாங்க சுரேஷ் ! உங்க தேர்வு எப்ப ஆரம்பிக்குது?....எப்படிப் படிக்குறீங்க ? | Please come Suresh! When does your examination start?... How are you studying ? |
| சுரேஷ் : தேர்வு அடுத்த மாசம் ஆரம்பிக்குதுங்க....நல்லாப் படிக்குறேன். இந்த இலக்கணத்தெத் தான் சரியாப் படிக்க முடியலெ. | Examination starts by next month... (I) am studying well. Only this grammar I am not able to read well. |
| *மூர்த்தி* : ரெண்டு மூணு தரம் படிங்க. புரியும். | Please read (it) for two or three times. (You) will understand. |

| | |
|---|---|
| சுரேஷ் : திருப்பித் திருப்பிப் படிச்சாச்சுங்க. புரியலெ. நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குருரு. நெறெயப் பகுதி அவருக்கும் புரியலெ. | (I) have studied again and again, sir. (I) do not understand. Narasaiah also goes on studying repeatedly. Many portions are not clear even to him. |
| மூர்த்தி : செல பாயிண்டெ நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும். | You must write again and again some of the grammatical points. |
| சுரேஷ் : எத்தனெ தடவெங்க எழுதுறது? பார்க்கலாம்; இன்னும் முயற்சி செய்றேன். | Howmany times do (I) have to write? Let (me) see; (I) will still try. |
| மூர்த்தி : பேராசிரியரெயும் போய்ப் போய்ப் பாருங்க.... புரியாத பகுதியெ அவரு சொல்லிக் கொடுப்பாரு. | (You) please meet Professor (Sundaram) also again and again. He will explain the portions which (you) do not understand. |
| சுரேஷ் : சரிங்க. இனிமே, அவரெத்தான் போய்ப் பார்க்கணும். வேறே வழியில்லெ....வறேங்க. | Alright, sir. Hereafter, (I) should go and see him. There is no other way.... (I) take leave of (you), sir. |
| மூர்த்தி : வாங்க. | Please do. |

## DRILLS

a. Variation drill

17. 70. 180. நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குருரு.
நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
நீங்க பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.
நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.

17. 70. 181. இனிமே, அவரெத்தான் போய்ப் பார்க்கணும்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குருரு. | நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குருரு. |
| பார்க்குருரு | பார்க்குருரு |
| படிச்சு | படிச்சுப் பார்க்குருரு |
| படிச்சு | படிச்சுப் படிச்சுப் பார்க்குருரு |
| நரசய்யா | நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குருரு. |

| | |
|---|---|
| (ii) நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும். | நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும். |
| பார்க்கணும் | பார்க்கணும் |
| எழுதி | எழுதிப் பார்க்கணும் |
| எழுதி | எழுதி எழுதிப் பார்க்கணும் |
| நீங்க | நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும். |
| (iii) பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க. | பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க. |
| பாருங்க | பாருங்க |
| போய் | போய்ப் பாருங்க |
| போய் | போய்ப் போய்ப் பாருங்க |
| பேராசிரியரெ | பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க. |
| (iv) நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு. | நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு. |
| படிச்சாச்சு | படிச்சாச்சு |
| திருப்பி | திருப்பிப் படிச்சாச்சு |
| திருப்பி | திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு |
| நான் | நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நீங்க பாருங்க. | நீங்க பாருங்க. |
| போய்ப் பாருங்க | நீங்க போய்ப் பாருங்க. |
| போய்ப் பாருங்க | நீங்க போய்ப் போய்ப் பாருங்க. |
| பேராசிரியரெப் பாருங்க | நீங்க பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க. |
| (ii) நான் படிச்சாச்சு. | நான் படிச்சாச்சு. |
| திருப்பிப் படிச்சாச்சு | நான் திருப்பிப் படிச்சாச்சு. |
| திருப்பிப் படிச்சாச்சு | நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு. |
| இலக்கணத்தெப் படிச்சாச்சு | நான் இலக்கணத்தெத் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு. |
| (iii) நரசய்யாவும் படிச்சுப் பார்க்குறாரு. | நரசய்யாவும் படிச்சுப் பார்க்குறாரு. |
| படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு | நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு. |
| தமிழ் இலக்கணத்தெப் படிச்சுப் பார்க்குறாரு. | நரசய்யாவும் தமிழ் இலக்கணத்தெப் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு. |

| | |
|---|---|
| (iv) நீங்க எழுதிப் பார்க்கணும். | நீங்க எழுதிப் பார்க்கணும். |
| எழுதி எழுதிப் பார்க்கணும் | நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும். |
| அதெ எழுதிப் பார்க்கணும் | நீங்க அதெ எழுதி எழுதிப் பார்க்கணும். |

d. Question-Answer drill

(i) Q : உங்க தேர்வு எப்ப ஆரம்பிக்குது ?
A : தேர்வு அடுத்த மாசம் ஆரம்பிக்குதுங்க.

(ii) Q : எப்படிப் படிக்குறீங்க ?
A : நல்லாப் படிக்குறேன்.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறுரு. | நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறுரு. |
| Substitute and change the verb accordingly. | |
| எழுது | நரசய்யாவும் எழுதி எழுதிப் பார்க்குறுரு. |
| வாசி | நரசய்யாவும் வாசிச்சு வாசிச்சுப் பார்க்குறுரு. |
| சொல்லு | நரசய்யாவும் சொல்லிச் சொல்லிப் பார்க்குறுரு. |
| சாப்பிடு | நரசய்யாவும் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பார்க்குறுரு. |
| வா | நரசய்யாவும் வந்து வந்து பார்க்குறுரு. |
| போ | நரசய்யாவும் போய்ப் போய்ப் பார்க்குறுரு. |
| கொடு | நரசய்யாவும் கொடுத்துக் கொடுத்துப் பார்க்குறுரு. |
| வரெ | நரசய்யாவும் வரெஞ்சு வரெஞ்சு பார்க்குறுரு. |

| | |
|---|---|
| (ii) எத்தனெ தடவெங்க எழுதுறது ? | எத்தனெ தடவெங்க எழுதுறது ? |
| Substitute and change the verb accordingly. | |
| படி | எத்தனெ தடவெங்க படிக்குறது ? |
| பாரு | எத்தனெ தடவெங்க பார்க்குறது ? |
| சொல்லு | எத்தனெ தடவெங்க சொல்லுறது? |
| சாப்பிடு | எத்தனெ தடவெங்க சாப்பிடுறது? |
| கொடு | எத்தனெ தடவெங்க கொடுக்குறது ? |

| | |
|---|---|
| போ | எத்தனெ தடவெங்க போறது ? |
| வா | எத்தனெ தடவெங்க வறது ? |

(iii) தமிழ் இலக்கணம் புரியலெ. — தமிழ் இலக்கணம் புரியலெ.

Substitute

| | |
|---|---|
| பாடம் | தமிழ்ப் பாடம் புரியலெ. |
| வசனம் | தமிழ் வசனம் புரியலெ. |
| பாட்டு | தமிழ்ப் பாட்டுப் புரியலெ. |
| படம் | தமிழ்ப்படம் புரியலெ. |
| சங்கீதம் | தமிழ்ச் சங்கீதம் புரியலெ. |

f. Integration drill

(i) நரசய்யா படிச்சுப் பார்க்குறுரு.
நரசய்யா படிக்குறுரு.
— நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குறுரு.

நீங்க எழுதிப் பார்க்கணும்.
நீங்க எழுதணும்.
— நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.

நீங்க போய்ப் பாருங்க.
நீங்க போங்க.
— நீங்க போய்ப் போய்ப் பாருங்க.

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : தேர்வு எப்ப................க்குது ? (begin)
தேர்வு எப்ப **ஆரம்பிக்குது** ?

(i) ................+எப் படிக்க முடியலெ. (grammar)
(ii) ரெண்டு மூணு................படிங்க. (times)
(iii) ................படிச்சாச்சுங்க. (again and again)
(iv) ரெண்டு மூணு................படிங்க. (times)
(v) இன்னும்................றேன். (try)

h. Write the word represented by the formula.

Example : **ஆரம்பிச்சு** ஆரம்பி + Verb. Part

(i) எழுது + Verb. Part : ................
(ii) முயற்சிசெய் + Verb. Part : ................
(iii) வேலெபாரு + Verb. Part : ................
(iv) வெளெயாடு + Verb. Part : ................
(v) திருப்பு + Verb. Part : ................
(vi) புரி + Verb. Part : ................

i. Fill in the blanks using the verbal participle form of the verbs given in parentheses.

(i) நரசய்யா................பார்க்குரு. (படி)
(ii) நீங்க................பார்க்கணும். (எழுது)
(iii) நீங்க................பாருங்க. (வா)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நீங்க எழுதிப் பார்க்கணும்.
நீங்க எழுதணும்.
நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.

(i) நீங்க போய்ப் பாருங்க.
நீங்க போங்க.
(ii) நீங்க படிச்சுப் பாருங்க.
| ஊறுகாய் | 'pickles' | போண்டா | 'bonda' |
| அல்வா | 'halva, a kind of sweet' | புரோக்கிராம் | 'program' |
| புரோக்கிராம் போடு | 'program' | | |

## GRAMMAR

22.89.213. The particles such as படி and மாதிரி are attached to the present and past form of relative participles to indicate manner. Example :

22. 89. 213. நீங்க சொன்னபடி அவரெ ஹோட்டலுக்கு அனுப்புனேன்.
நீங்க புரோக்கிராம் போட்டபடியே செய்வோம்.
நான் நேத்துச் சொன்னமாதிரி சாப்பிடலாம்.

Sandhi : வர + சொன்னேன் → வரச்சொன்னேன் (Refer S.29 in 15.56)
நிமிஷம் + உலே → நிமிஷத்துலே (Refer S.17 in 2.13)

# UNIT 22

# LESSON 90

## INTIMATION ABOUT A FRIEND'S ARRIVAL

### DIALOGUE

| | |
|---|---|
| சுரேஷ் : நரசய்யா, உங்களுக்குச் சேதி தெரியுமா ? என் நண்பன் திரிவேதி-யோடெ தங்கெ லதாவெ நம்ம இன்ஸ்டிடியூட்டு-லே ஸ்டெனோவா நியமிக்கப் போறுங்க-ளாம்....இதோ ! அவன் கிட்டெயிருந்து வந்த கடிதம். உங்களுக்கு லதாவெத் தெரியுமா ? | Narasaiah, do you know the news ? Miss Latha who is the younger sister of my friend Trivedi is going to be appointed as a stenographer in our Institute. Look ! this is the letter which I have received (now) from him. Do you know Latha ? |
| நரசய்யா : எப்பவோ பார்த்ததா ஞாபகம் .... சரியா நெனெவு இல்லெ. | (I) have a faint memory that I had seen (her) sometime. (I) do not remember exactly. |

சுரேஷ் : அவ அடுத்தவாரம் இங்கே வறதா எனக்குக் கடிதம் எழுதுவாளாம். அதெயும் திரிவேதியே எழுதியிருக்குறன்.

Trivedi has written himself that she would write to me that she would go over here next week.

நரசய்யா : ஓ ! அப்படியா ?

Oh ! Is it so ?

சுரேஷ் : இந்த வேலெக்கு மனுப் போட்டிருந்தவங்கள்லே லதாதான் எல்லாரெயும் விடத் தகுதி உள்ளவளாம்.

(I) was told that of all the people who put applications for this job only Latha had more qualifications than others.

நரசய்யா : உங்களுக்கு எப்படித் தெரியும் ?

How do you know that ?

சுரேஷ் : மிஸ்டர் மூர்த்திகிட்டெ டைரக்டர் சொன்னதா அவரு என்கிட்டெச் சொன்னுரு.

Mr. Murthi told me that he was told by the director.

நரசய்யா : இதுலே என்ன ஆச்சரியம் இருக்குது ? தகுதி உள்ளவங்களுக்குத் தானே வேலெ கெடெக்கும்.

What is the wonder in it ? It is certain that only the qualified people will get the job.

சுரேஷ் : ஆமா, நீங்க சொல்றது ரொம்பச் சரி.

Yes, what you say is very correct.

## DRILLS

a. Variation drill

22. 90. 214. நான் எப்பவோ பார்த்ததா ஞாபகம்.
அவ இங்கே வறதாக் கடிதம் எழுதுவாளாம்.
அவரு டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னுரு.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் எப்பவோ பார்த்ததா ஞாபகம். | நான் எப்பவோ பார்த்ததா ஞாபகம். |
| ஞாபகம் | ஞாபகம் |
| பார்த்ததா | பார்த்ததா ஞாபகம் |
| எப்பவோ | எப்பவோ பார்த்ததா ஞாபகம் |

| | |
|---|---|
| நான் | நான் எப்பவோ பார்த்தா ஞாபகம். |
| (ii) அவ இங்கே வறதாக் கடிதம் எழுதுவாளாம். | அவ இங்கே வறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| எழுதுவாளாம் | எழுதுவாளாம் |
| கடிதம் | கடிதம் எழுதுவாளாம் |
| வறதா | வறதாக் கடிதம் எழுதுவாளாம் |
| இங்கே | இங்கே வறதாக் கடிதம் எழுது-வாளாம் |
| அவ | அவ இங்கே வறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| (iii) அவரு டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னாரு. | அவரு டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னாரு. |
| சொன்னாரு | சொன்னாரு |
| என்கிட்டெ | என்கிட்டெச் சொன்னாரு |
| சொன்னதா | சொன்னதா என்கிட்டெச் சொன்னாரு |
| டைரக்டர் | டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னாரு |
| அவரு | அவரு டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னாரு. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) அவரு சொன்னாரு. | அவரு சொன்னாரு. |
| என்கிட்டெச் சொன்னாரு | அவரு என்கிட்டெச் சொன்னாரு. |
| டைரக்டர் சொன்னதாச் சொன்னாரு. | அவரு டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னாரு. |
| (ii) அவ எழுதுவாளாம். | அவ எழுதுவாளாம். |
| கடிதம் எழுதுவாளாம் | அவ கடிதம் எழுதுவாளாம். |
| இங்கே வறதா எழுதுவாளாம் | அவ இங்கே வறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| (iii) நான் பார்த்தா ஞாபகம். | நான் பார்த்தா ஞாபகம். |
| எப்பவோ பார்த்தா ஞாபகம் | நான் எப்பவோ பார்த்தா ஞாபகம். |

d. Question-Answer drill

(i) Q: உங்களுக்கு லதாவெத் தெரியுமா ?

A : எப்பவோ பார்த்தா ஞாபகம்.... சரியா நெனெவு இல்லெ.

(ii) Q : உங்களுக்கு எப்படித் தெரியும் ?
A : மிஸ்டர் மூர்த்திகிட்டெ டைரக்டர் சொன்னதா அவரு என்கிட்டெச் சொன்னூரு.

e. Substitution drill

(i) ஸ்டெனோவா நியமிக்கப் போறுங்களாம். — ஸ்டெனோவா நியமிக்கப் போறுங்களாம்.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| ஆசிரியரு | ஆசிரியரா நியமிக்கப் போறுங்களாம். |
| பேராசிரியரு | பேராசிரியரா நியமிக்கப் போறுங்களாம். |
| குமாஸ்தா | குமாஸ்தாவா நியமிக்கப் போறுங்களாம். |
| மேனேஜரு | மேனேஜரா நியமிக்கப் போறுங்களாம். |
| ஆசிரியெ | ஆசிரியெயா நியமிக்கப் போறுங்களாம். |

(ii) எப்பவோ பார்த்ததா ஞாபகம். — எப்பவோ பார்த்ததா ஞாபகம்.

Substitute and change the verb suitably.

| | |
|---|---|
| படி | எப்பவோ படிச்சதா ஞாபகம். |
| எழுது | எப்பவோ எழுதுனதா ஞாபகம். |
| கொடு | எப்பவோ கொடுத்ததா ஞாபகம். |
| வா | எப்பவோ வந்ததா ஞாபகம். |
| சொல்லு | எப்பவோ சொன்னதா ஞாபகம். |
| கேள்விப்படு | எப்பவோ கேள்விப்பட்டதா ஞாபகம். |
| தா | எப்பவோ தந்ததா ஞாபகம். |

(iii) வறதாக் கடிதம் எழுதுவாளாம். — வறதாக் கடிதம் எழுதுவாளாம்.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| போ | போறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| புறப்படு | புறப்படுறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| படி | படிக்குறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| கொடு | கொடுக்குறதாக் கடிதம் எழுதுவாளாம். |
| தா | தறதாக் கடிதம் எழுதுவாளாம். |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) வறதாக் கடிதம் எழுது வாளாம். | வந்ததாக் கடிதம் எழுதுவாளாம். |
| படிக்குறதாக் கடிதம் எழுது வாளாம். | படிச்சதாக் கடிதம் எழுதுவாளாம். |
| கௌம்புறதாக் கடிதம் எழுதுவாளாம். | கௌம்புனதாக் கடிதம் எழுது வாளாம் |
| போறதாக் கடிதம் எழுது வாளாம். | போனதாக் கடிதம் எழுதுவாளாம். |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : உங்களுக்கு ................ தெரியுமா ? (news)
உங்களுக்குச் சேதி தெரியுமா ?

(i) ஸ்டெனோவா ................ க்கப் போறாங்களாம். (appoint)
(ii) எப்பவோ பார்த்தா ................ (memory)
(iii) லதா தான் ................ உள்ளவளாம். (qualification)
(iv) இதுலே என்ன ................ இருக்குது ? (wonder)

h. Change the following into the adverb and add at the left to the verbs in the sentences given below.

(i) ஸ்டெனோ : நியமிக்கப் போறாங்களாம்.
(ii) வா : எனக்கு எழுதுவாளாம்.
(iii) பாரு : எப்பவோ ஞாபகம்.
(iv) சொல்லு : அவரு சொன்னாரு.

i. Fill in the blanks by transforming the cues given in parentheses as in the model given below.

Model : ................ (பாரு)
Present : **பார்க்குறதா** Past : **பார்த்தா**

(i) ................ (சாப்பிடு) (vi) ................ (பாரு)
(ii) ................ (தூங்கு) (vii) ................ (செய்)
(iii) ................ (வேய்) (viii) ................ (வா)
(iv) ................ (தெற) (ix) ................ (கற்பி)
(v) ................ (இரு) (x) ................ (பாராட்டு)

j. Join the following according to the sandhi rules.

(i) திரிவேதி + ஓடெ : ................ (ii) ஸ்டெனோ + ஆ : ................
சரி + ஆ : ................ எப்ப + ஓ : ................
அப்படி + ஆ : ................ லதா + எ : ................

k. Answer these questions.

(i) நீங்க எப்ப இங்கே வந்தீங்க ?.... உங்களுக்குச் சரியா நெனெவு இருக்குதா ?
(ii) உங்க மனெவி இங்கே வறதா உங்களுக்குக் கடிதம் எழுதுனுங்களா ?
(iii) நீங்க உங்க நண்பருகிட்டெ இண்ணெக்கு மாலெயிலே அவரெச் சந்திக்குறதாச் சொன்னீங்களா ?
(iv) நீங்க எனக்குப் பத்துரூபாய் கொடுக்குறதா நேத்துச் சொன்னீங்களா ?
(v) நாளெக்கு உங்க ஆசிரியரு என்ன பாடம் கற்பிக்குறதாச் சொன்னுரு ?
(vi) தேர்வு எப்ப நடக்குறதா உங்க ஆசிரியரு சொன்னுரு ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| ஞாபகம் | 'memory' | நெனெவு | 'rememberance' |
| தகுதி | 'qualification' | | |

## GRAMMAR

**22.90.214.** The manner is again expressed by the neuter participial noun (both present and past) and the adverb marker -ஆ. See the following examples :

*22. 90. 214.* நான் எப்பவோ பார்த்ததா ஞாபகம்.
அவ இங்கே வறதாக் கடிதம் எழுதுவாளாம்.
அவரு டைரக்டர் சொன்னதா என்கிட்டெச் சொன்னுரு.

Sandhi : திரிவேதி + ஓடெ → திரிவேதியோடெ
அதெ + உம் → அதெயும்
அப்படி + ஆ → அப்படியா (Refer S.8 in 1.5)
லதா + எ → லதாவெ
ஸ்டெனோ + ஆ → ஸ்டெனோவா (Refer S.9 in 1.7)
லதாவெ + தெரியுமா → லதாவெத் தெரியுமா (Refer S.20 in 2.17)
நியமிக்க + போறுங்களாம் → நியமிக்கப் போறுங்களாம் (Refer S.29 in 15.56)
எனக்கு + கடிதம் → எனக்குக் கடிதம் (எழுதுவாளாம்)
தகுதியுள்ளவங்களுக்கு + தானே → தகுதியுள்ளவங்களுக்குத்தானே (வேலெ கெடெக்கும் Refer S.18 in 2.14)
என்கிட்டெ + சொன்னுரு → என்கிட்டெச் சொன்னுரு (Refer S.22 in 4.25)
வறதா + கடிதம் → வறதாக் கடிதம் (எழுதுவாளாம்)
சொன்னதா + சொன்னுரு → சொன்னதாச் சொன்னுரு
எப்படி + தெரியும் → எப்படித் தெரியும் (Refer S.21 in 3.20)

# UNIT 23

## LESSON 91

### RAMAYANA

**DIALOGUE**

சுரேஷ் : ஸார், வால்மீகி ராமா-யணத்தெப் போலெ தமிழ்லேயும் ராமாயணம் இருக்குதா ?

Sir, is there a Ramayana like Valmiki Ramayana in Tamil ?

சுந்தரம் : ஆமா. கம்பர் வால்மீகி எழுதுன ராமாயணத்தெத் தமிழ்லே எழுதியிருக்குறாரு..அவரு தமிழ் மொழியிலே ஒரு பெரிய புலவர். ஸ்ரீராமனோடெ கதெயெ எல்லா மொழியிலேயும் புலவருங்க பாடியிருக்குறாங்க. ஆனா,

Yes. Kamban has written Valmiki Ramayana in Tamil....He is a great poet in Tamil. Poets have sung Sri Raman's story in all the languages. But, this story differs from language to language....Have you heard of Indonesia ?

மொழிக்கு மொழி இந்தக் கதெ வித்தியாசமா இருக்குது .... நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ?

சுரேஷ் : ஆமாங்க. பூகோளவியல்லே அதெப் பத்திப் படிச்சிருக்குறேன். — Yes, sir. I have read about (it) in geography.

சுந்தரம் : பாலி மொழியிலேயும் ஒரு ராமாயணம் இருக்குது. அதுலே ஸ்ரீராமன் லட்சுமணனெ அரசனுக்கிக் காட்டுக்குப் போறுரு. துருக்கிய மொழியிலேயும் ஒரு புலவர் ராமாயணத்தெ எழுதியிருக்குறுரு. அதுலே சீதெ ராவணனோடெ மக. — There is a Ramayana in Pali language also. In it Sri Rama make. Lakshman the king and goes on 'vanavasa'. In Turkish language also a poet has written Ramayana. In it Sita is Ravana's daughter.

சுரேஷ் : அப்படியா ? அதிசயமா இருக்குதே ! நான் ராமாயணத்தெப் பத்தி இப்படியெல்லாம் கேள்விப்பட்டதில்லெங்க. — Is it so ?....Looks very strange ! I have not heard about Ramayana like all these, sir.

சுந்தரம் : நாட்டுக்கு நாடு, மொழிக்குமொழி ராமாயணம் வித்தியாசமா இருக்குது. இதெப் பத்தி விரிவா அப்புறம் சொல்லுறேன். — Country to country, language to language Ramayana differs. (I) shall tell you about it in detail later on.

சுரேஷ் : சரிங்க. — Alright sir.

## DRILLS

a. Variation drill

23. 91. 215. நான் பூகோளவியல்லே படிச்சிருக்குறேன்.
அவரு ராமாயணத்தெத் தமிழ்லே எழுதியிருக்குறுரு.

பல புலவருங்க இந்தக் கதெயெப்
பாடியிருக்குறுங்க.

23. 91. 216. இந்தக் கதெ மொழிக்கு மொழி வித்தியாசமா
இருக்குது.
ராமாயணம் நாட்டுக்கு நாடு வித்தியாசமா
இருக்குது.

23. 91. 217. நான் அதெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறேன்.
நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக்
கேள்விப்பட்டிருக்குறீங்களா ?
நான் ராமாயணத்தெப் பத்திக்
கேள்விப்பட்டதில்லெ.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நான் பூகோளவியல்லே படிச்சிருக்குறேன். | நான் பூகோளவியல்லே படிச்சி-ருக்குறேன். |
| படிச்சிருக்குறேன் | படிச்சிருக்குறேன் |
| பூகோளவியல்லே | பூகோளவியல்லே படிச்சிருக்-குறேன் |
| நான் | நான் பூகோளவியல்லே படிச்சிருக்குறேன். |
| (ii) பல புலவருங்க இந்தக் கதெயெப் பாடியிருக்குறுங்க. | பல புலவருங்க இந்தக் கதெயெப் பாடியிருக்குறுங்க. |
| பாடியிருக்குறுங்க | பாடியிருக்குறுங்க |
| கதெயெ | கதெயெப் பாடியிருக்குறுங்க |
| புலவருங்க | புலவருங்க இந்தக் கதெயெப் பாடியிருக்குறுங்க |
| பல | பல புலவருங்க இந்தக் கதெயெப் பாடியிருக்குறுங்க. |
| (iii) நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்-குறீங்களா ? | நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்கு-றீங்களா ? |
| கேள்விப்பட்டிருக்கு-றீங்களா ? | கேள்விப்பட்டிருக்குறீங்களா ? |
| இந்தோனேஷியாவெப் பத்தி | இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விபட்டிருக்குறீங்களா ? |
| நீங்க | நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்கு-றீங்களா ? |

| | |
|---|---|
| (iv) ராமாயணம் நாட்டுக்கு நாடு வித்தியாசமா இருக்குது. | ராமாயணம் நாட்டுக்கு நாடு வித்தியாசமா இருக்குது. |
| இருக்குது | இருக்குது |
| வித்தியாசமா | வித்தியாசமா இருக்குது |
| நாட்டுக்கு நாடு | நாட்டுக்கு நாடு வித்தியாசமா இருக்குது |
| ராமாயணம் | ராமாயணம் நாட்டுக்கு நாடு வித்தியாசமா இருக்குது. |
| (v) நான் ராமாயணத்தெப் பத்தி இப்படிக் கேள்விப்பட்ட-தில்லெ. | நான் ராமாயணத்தெப் பத்தி இப்படிக் கேள்விப்பட்டதில்லெ |
| கேள்விப்பட்டதில்லெ | கேள்விப்பட்டதில்லெ |
| இப்படி | இப்படிக் கேள்விப்பட்டதில்லெ |
| ராமாயணத்தெப் பத்தி | ராமாயணத்தெப் பத்தி இப்படிக் கேள்விப்பட்டதில்லெ |
| நான் | நான் ராமாயணத்தெப் பத்தி இப்படிக் கேள்விப்பட்டதில்லெ. |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) அவரு எழுதியிருக்குரு. | அவரு எழுதியிருக்குரு. |
| தமிழ்லே எழுதியிருக்குரு | அவரு தமிழ்லே எழுதியிருக்குரு |
| வால்மீகி எழுதுன ராமா-யணத்தெ எழுதியிருக்குரு. | அவரு வால்மீகி எழுதுன ராமா-யணத்தெ தமிழ்லே எழுதியிருக்-குரு. |
| (ii) பல புலவருங்க பாடியிருக்-குருங்க. | பல புலவருங்க பாடியிருக்குருங்க. |
| எல்லா மொழியிலேயும் பாடியிருக்குருங்க | பல புலவருங்க எல்லாமொழியி-லேயும் பாடியிருக்குருங்க. |
| ஸ்ரீராமன் கதெயெப் பாடியிருக்குருங்க | பல புலவருங்க ஸ்ரீராமன் கதெயெ எல்லா மொழியிலேயும் பாடியி-ருக்குருங்க. |
| (iii) நான் கேள்விப்பட்டதில்லெ. | நான் கேள்விப்பட்டதில்லெ. |
| இப்படிக் கேள்விப்பட்ட-தில்லெ | நான் இப்படிக் கேள்விப்பட்ட-தில்லெ. |
| ராமாயணத்தெப் பத்திக் கேள்விப்பட்டதில்லெ | நான் ராமாயணத்தெப் பத்தி இப்படிக் கேள்விப்பட்டதில்லெ. |
| (iv) இந்தக் கதெ வித்தியாசமா இருக்குது. | இந்தக் கதெ வித்தியாசமா இருக்குது. |
| மொழிக்கு மொழி வித்தி-யாசமா இருக்குது | இந்தக் கதெ மொழிக்கு மொழி வித்தியாசமா இருக்குது. |

d. Question-Answer drill

(i) Q: வால்மீகி ராமாயணத்தெப் போல தமிழ்லேயும் ராமாயணம் இருக்குதா ?
A: ஆமா.

(ii) Q: நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ?
A: ஆமாங்க.

e. Substitution drill

(i) அவரு எழுதியிருக்குறுரு. — அவரு எழுதியிருக்குறுரு.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| பாடு | அவரு பாடியிருக்குறுரு. |
| சொல்லு | அவரு சொல்லியிருக்குறுரு. |
| கேள்விப்படு | அவரு கேள்விப்பட்டிருக்குறுரு. |
| படி | அவரு படிச்சிருக்குறுரு. |
| வெளெயாடு | அவரு வெளெயாடியிருக்குறுரு. |
| செய் | அவரு செய்திருக்குறுரு. |
| போ | அவரு போயிருக்குறுரு. |

(ii) நான் கேள்விப்பட்டிருக்கு-றேன். — நான் கேள்விப்பட்டிருக்குறேன்.
Substitute and conjugate the verb accordingly.

| | |
|---|---|
| நாம | நாம கேள்விப்பட்டிருக்குறோம். |
| நாங்க | நாங்க கேள்விப்பட்டிருக்குறோம். |
| நீ | நீ கேள்விப்பட்டிருக்குறே. |
| நீங்க | நீங்க கேள்விப்பட்டிருக்குறீங்க. |
| அவன் | அவன் கேள்விப்பட்டிருக்குறுன். |
| இவ | இவ கேள்விப்பட்டிருக்குறு. |
| அவரு | அவரு கேள்விப்பட்டிருக்குறுரு. |
| அவங்க | அவங்க கேள்விப்பட்டிருக்குறுங்க. |

(iii) மொழிக்கு மொழி வித்தி-யாசமா இருக்குது. — மொழிக்கு மொழி வித்தியாசமா இருக்குது.
Substitute and change the noun accordingly.

| | |
|---|---|
| புஸ்தகம் | புஸ்தகத்துக்குப் புஸ்தகம் வித்தியாசமா இருக்குது. |
| பாடம் | பாடத்துக்குப் பாடம் வித்தியா-சமா இருக்குது. |
| நாடு | நாட்டுக்கு நாடு வித்தியாசமா இருக்குது. |

| | |
|---|---|
| வீடு | வீட்டுக்கு வீடு வித்தியாசமா இருக்குது. |
| எடம் | எடத்துக்கு எடம் வித்தியாசமா இருக்குது. |
| வகுப்பு | வகுப்புக்கு வகுப்பு வித்தியாசமா இருக்குது. |
| புலவர் | புலவருக்குப் புலவர் வித்தியாசமா இருக்குது. |
| மாணவி | மாணவிக்கு மாணவி வித்தியாசமா இருக்குது. |

(iv) இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ? — இந்தோனேஷியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ?

Substitute

| | |
|---|---|
| இந்தியா. | இந்தியாவெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ? |
| தமிழ்நாடு | தமிழ்நாட்டெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ? |
| மதுரெ | மதுரெயெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ? |
| தஞ்சாவூரு | தஞ்சாவூரெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா ? |

f. Transformation drill

(i)

| | |
|---|---|
| அவரு ராமாயணத்தெ எழுதுறாரு. | அவரு ராமாயணத்தெ எழுதியிருக்குறாரு. |
| புலவருங்க ஸ்ரீராமனோடெ கதெயெப் பாடுறாங்க. | புலவருங்க ஸ்ரீராமனோடெ கதெயெப் பாடியிருக்குறாங்க. |
| இந்தக் கதெ வித்தியாசமா இருக்குது. | இந்தக் கதெ வித்தியாசமா இருந்திருக்குது. |
| நீங்க இதெப் பத்திக் கேள்விப்படுறீங்க. | நீங்க இதெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்க. |
| நான் பூகோளவியல்லே படிக்குறேன். | நான் பூகோளவியல்லே படிச்சிருக்குறேன். |
| அவரு காட்டுக்குப் போறாரு. | அவரு காட்டுக்குப் போயிருக்குறாரு. |

(ii)

| | |
|---|---|
| நான் கேள்விப்பட்டிருக்குறேன். | நான் கேள்விப்பட்டதில்லெ. |
| அவரு காட்டுக்குப் போயிருக்குறாரு. | அவரு காட்டுக்குப் போனதில்லெ. |

| | |
|---|---|
| நான் பூகோளவியல்லே படிச்சிருக்குறேன். | நான் பூகோளவியல்லே படிச்சதில்லெ. |
| இந்தக் கதெ வித்தியாசமா இருந்திருக்குது. | இந்தக் கதெ வித்தியாசமா இருந்ததில்லெ. |
| புலவருங்க கதெயெப் பாடியிருக்குறுங்க. | புலவருங்க கதெயெப் பாடுன–தில்லெ. |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Example : கம்பர் ஒரு பெரிய ................ ................ (poet)
கம்பர் ஒரு பெரிய **புலவர்.**

(i) இந்தக் கதெ ................ இருக்குது. (different)
(ii) ................ படிச்சிருக்குறேன். (geography)
(iii) ................ + ஆ இருக்குதே ! (strange)
(iv) இதெப் பத்தி ................ சொல்லுறேன். (in detail)

h. Write the word represented by the formula.

Example : **எழுதியிரு** எழுது + Perfect

(i) பாடு + Perfect : ................
(ii) இரு + Perfect : ................
(iii) ஆகு + Perfect : ................
(iv) போ + Perfect : ................
(v) கேள்விப்படு + Perfect : ................
(vi) சொல்லு + Perfect : ................

i. Fill in the blanks using the appropriate conjugated form (present) of the perfect verb படிச்சிரு.

(i) நான் பூகோளவியல்லே ................
(ii) நாங்க ராமாயணம் ................
(iii) நீங்க ................
(iv) அவங்க ராமாயணத்தெப் பத்தி ................

j. Change the given nouns into the locative and add at the left to the verbs in the sentences given below.

(i) தமிழ் : கம்பர் ராமாயணத்தெ எழுதியிருக்குறுரு.
(ii) பூகோளவியல் : நான் அதெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறேன்.
(iii) காடு : ஸ்ரீராமன் இருக்குறுரு.
(iv) இந்தோனேஷிய மொழி : ஒரு ராமாயணம் இருக்குது.

k. Change the given nouns into the objective and add at the left to the verbs in the sentences given below.

(i) ராமாயணம் : அவரு தமிழ்லே எழுதியிருக்குறுரு.
(ii) கதெ : புலவருங்க பாடியிருக்குறுங்க.
(iii) லட்சுமணன் : ஸ்ரீராமன் அரசனுக்குனுரு.
(iv) இது : நான் சொல்லியிருக்குறேன்.

l. Fill in the blanks by transforming the cues given in parentheses into the verbal nouns.

Model : ................ (கேள்விப்படு)
**கேள்விப்பட்டது.**

(i) ................ (எழுது)
(ii) ................ (பாடு)
(iii) ................ (சொல்லு)
(iv) ................ (படி)
(v) ................ (இரு)
(vi) ................ (கொடு)
(vii) ................ (தூங்கு)
(viii) ................ (தெற)
(ix) ................ (சாப்பிடு)
(x) ................ (வேய்)

m. Fill in the blanks using the cues as in the model given below.

Model : அது ................ வித்தியாசமா இருக்குது. (மொழி)
அது மொழிக்குமொழி வித்தியாசமா இருக்குது.

(i) அது ................ வித்தியாசமா இருக்குது.
(நாடு)
(புலவர்)
(கதெ)
(ராமாயணம்)
(அரசன்)

n. Give an answer with negative to each of these questions using the cues given in parentheses.

Model : நீங்க கேள்விப்பட்டிருக்குறீங்களா ? (கேள்விப்படு)
இல்லெ. நான் கேள்விப்பட்டதில்லெ.

(i) நீங்க எழுதியிருக்குறீங்களா ? (எழுது)
(ii) நீங்க ராமாயணம் படிச்சிருக்குறீங்களா ? (படி)
(iii) நீங்க இந்தோனேஷியாவெப் பார்த்திருக்குறீங்களா ? (பாரு)
(iv) நீங்க காட்டுக்குப் போயிருக்குறீங்களா ? (போ)

o. Give an answer with பத்தி 'about' to each of these questions using the cues given in parentheses.

Model : நீங்க கேள்விப்பட்டிருக்குறீங்களா ? (அது)
ஆமா. நான் அதெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறேன்.

(i) நீங்க படிச்சிருக்குறீங்களா ? (ராமாயணம்)
(ii) நீங்க எழுதியிருக்குறீங்களா ? (ஸ்ரீராமன்)
(iii) புலவருங்க பாடியிருக்குறுங்களா ? (நான்)
(iv) அவரு விரிவா சொல்லியிருக்குறுரா ? (இது)

p. Join the following according to the sandhi rules.

(i) மொழி + இலே : .............. (ii) படிச்சு + இரு : ................
கதெ + எ : ............ கற்பிச்சு + இரு : ............
பாடி + இரு : ............ கேள்விப்பட்டு + இரு : ............
எழுதி + இரு : ............ (iii) இந்தோனேஷியா + எ : ............

q. Answer these questions.

(i) நீங்க எந்த ராமாயணம் படிச்சிருக்குறீங்க ?
(ii) நீங்க பூகோளவியல் கற்பிச்சிருக்குறீங்களா ?
(iii) உங்க மொழியிலே ராமாயணம் எழுதுன புலவரோடெ பேரு என்ன ?
(iv) நீங்க வேறே என்ன இலக்கியம் படிச்சிருக்குறீங்க ?
(v) நீங்க ராமாயணத்தெப் பத்தி என்ன கேள்விப்பட்டிருக்குறீங்க ?
(vi) நீங்க தமிழ்நாட்டுக்குப் போயிருக்குறீங்களா ?
(vii) உங்களுக்குத்தமிழ்நாட்டெப் பத்தி என்ன தெரியும் ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| வால்மீகி | 'Valmiki, the saint who wrote Ramayana in Sanskrit' | ராமாயணம் | 'Ramayana, the epic written by Valmiki' |
| கம்பர் | 'Kambar, the poet who wrote Ramayana in Tamil' | புலவர் | 'poet' |
| ஸ்ரீராமன் | 'Rama, the hero of Ramayana in Tamil' | பாடு | 'sing, compose poems' |
| வித்தியாசமா | 'differently | பத்தி | 'about' |
| கேள்விப்படு | 'hear' | பூகோளவியல் | 'geography' |
| லட்சுமணன் | 'Lakshmana, the younger brother of Rama' | பாலி | 'the Pali language' |
| ஆக்கு | 'make' | துருக்கியமொழி | 'the Turkish language' |

| | | | |
|---|---|---|---|
| சீதெ | 'Sita, the heroine of Ramayana' | ராவணன் | 'Ravana, the king of Srilanka' |
| அதிசயம் | 'strange, wonder' | விரிவா | 'in detail' |

## GRAMMAR

**23.91.215.** The perfect verb is a compound verb which is constituted by a verbal participle and the verb root இரு 'be'. Example :

படிச்சு + இரு : படிச்சிரு          எழுதி + இரு : எழுதியிரு
பாடி + இரு : பாடியிரு          கேள்விப்பட்டு + இரு : கேள்விப்பட்டிரு
சொல்லி + இரு : சொல்லியிரு          போய் + இரு : போயிரு

Like other verbs, this is also inflected for tense, person, number and gender (Refer 2.13). The conjugation of this verb is effected always on the basis of the verb root இரு. This lesson, in particular, introduces the present perfect verb. Example :

**23. 91. 215.** நான் பூகோளவியல்லே படிச்சிருக்குறேன்.
அவரு ராமாயணத்தெத் தமிழ்லே எழுதியிருக்குறுரு.
பல புலவருங்க இந்தக் கதெயெப் பாடியிருக்குறுங்க.

The perfect verb has no corresponding negative form as other verbs. However, its corresponding negative is often expressed by the neuter past participial noun and the negative verb இல்லெ in addition to the simple negative (which is expressed by infinitive and -லெ). Example : நான் ராமாயணத்தெப் பத்திக் கேள்விப்பட்டதில்லெ ; நான் ராமாயணத்தெப் பத்திக் கேள்விப்படலெ. It is important to note that the formation of other non-finite forms of the perfect verb is same as the regular verbs.

**23.91.216.** The dative case marker has the meaning of 'from....to' when the noun, to which the case marker is added, is reduplicated as follows.

| | |
|---|---|
| மொழிக்கு மொழி | 'from language to language' |
| நாட்டுக்கு நாடு | 'from country to country' |

Example :

**23. 91. 216.** இந்தக் கதெ மொழிக்கு மொழி வித்தியாசமா இருக்குது.
ராமாயணம் நாட்டுக்கு நாடு வித்தியாசமா இருக்குது.

**23.91.217.** பத்தி is a particle which means 'about'. It is always added to objective case which consists of a noun and the case marker -எ. Example :

23. 91. 217. நான் அதெப் பத்திக் கேள்விப்பட்டிருக்குறேன்.
நீங்க இந்தோனேஷியாவெப் பத்திக்
கேள்விப்பட்டிருக்குறீங்களா ?
நான் ராமாயணத்தெப் பத்திக்
கேள்விப்பட்டதில்லெ.

Sandhi **40.** The consonants க், ச், த் and ப் are always doubled after பத்தி 'about'. Example :

இந்தோனேஷியாவெப்பத்தி + கேள்விப்பட்டிருக்குறீங்களா ⟶
இந்தோனேஷியாவெப்பத்திக் கேள்விப்பட்டிருக்குறீங்களா?
அதெப்பத்தி + படிச்சிருக்குறேன் ⟶ அதெப்பத்திப்
படிச்சிருக்குறேன்

ராமாயணம் + எ ⟶ ராமாயணத்தெ (Refer S.17 in 2.13)
தமிழ்மொழி + இலே ⟶ தமிழ்மொழியிலே
கதெ + எ ⟶ கதெயெ
மொழியிலே + உம் ⟶ மொழியிலேயும்
இப்படி + எல்லாம் ⟶ இப்படியெல்லாம் (Refer S.8 in 1.5)
அரசனுக்கி + காட்டுக்கு ⟶ அரசனுக்கிக் காட்டுக்குப் (போருரு.
Refer S.31 in 17.68)
காடு + க்கு ⟶ காட்டுக்கு (Refer S.16 in 2.13)
ராமாயணத்தெ + போலெ ⟶ ராமாயணத்தெப் போலெ
ராமாயணத்தெ + தமிழ்லே ⟶ ராமாயணத்தெத் தமிழ்லே
(எழுதியிருக்குரூரு)
இந்தோனேஷியாவெ + பத்தி ⟶ இந்தோனேஷியாவெப் பத்திக்
(கேள்விப்பட்டிருக்குறீங்களா ? Refer S.20 in 2.17)

# UNIT 23

# LESSON 92

VISITING THIRUPARANKUNDRAM

## DIALOGUE

| | | |
|---|---|---|
| சுந்தரம் : | என்ன சுரேஷ், நேத்து உங்களெ அறெயிலே காணலெயே, எங்கே போயிருந்தீங்க ? | What Suresh, you were not seen in (your) room yesterday. Where had you been ? |
| சுரேஷ் : | திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன் .... நீங்க எப்ப அறெக்கு வந்தி-ருந்தீங்க ? | (I) had been to Thiruparankundram ....When had you been to my room ? |
| சுந்தரம் : | மத்தியானம் ரெண்டு மணிக்கு வந்திருந்தேன். | I had come at two o' clock in the afternoon. |

சுரேஷ் : அப்படியா ? மத்தியானம் சாப்பிட்ட பெறகு மூர்த்தி இங்கே வந்திருந்தாரு. ரெண்டு பேருமா சாமி கும்பிடக் கௌம்புனோம். வற வழியிலே சமெக்குறதுக்கு அரிசி, பருப்பு, உப்பு, மௌகு, சீரகம், கடுகு எல்லாம் வாங்குனோம். அறெக்கு வந்து சேர்ந்தப்ப சரியா மணி பத்தரெ ஆச்சு.

Is that so ? Mr. Murthi had come here after his lunch. Both of us went to worship. On (our) way back we bought rice, cereals, salt, black pepper, cumin seeds, mustard seeds etc., for cooking. It was exactly ten thirty when we reached (our) room.

சுந்தரம் : மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போயிருந்தீங்களா ?

Had (you) been to Meenakshi Amman temple ?

சுரேஷ் : போகலெயே. ஏன் ?

(We) didn't go. Why ?

சுந்தரம் : நேத்து மீனாட்சிக் கல்யாணம் இல்லெயா ? ....கோயில்லே ரொம்ப விசேஷமா இருந்திருக்கும். நீங்க டவுன் ஹால் பக்கத்துலே அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே !....

Yesterday it was goddess Meenakshi's Wedding day, wasn't it so ?....(It) might be a grand function in the temple. You would have seen Amman's procession near the Town Hall, wouldn't you ?

சுரேஷ் : இல்லெ....பார்க்கலெங்க.

No...(We) didn't see.

## DRILLS

a. Variation drill

23. 92. 218. நான் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்.
மூர்த்தி மத்தியானம் அறெக்கு வந்திருந்தாரு.
நீங்க எங்கே போயிருந்தீங்க ?

23. 92. 219. நீங்க அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்க.
நேத்துக் கோயில்லே விசேஷமா இருந்திருக்கும்.

b. Build up drill

(i) நான் நேத்து திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்.

நான் நேத்து திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்.

| | |
|---|---|
| போயிருந்தேன் | போயிருந்தேன் |
| திருபரங்குன்றத்துக்கு | திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன் |
| நேத்து | நேத்து திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன் |
| நான் | நான் நேத்து திருபரங்குன்றத்துக்குப் போயிருந்தேன். |
| (ii) மூர்த்தி மத்தியானம் சாப்பிட்ட பெறகு இங்கே வந்திருந்தாரு. | மூர்த்தி மத்தியானம் சாப்பிட்ட பெறகு இங்கே வந்திருந்தாரு. |
| வந்திருந்தாரு | வந்திருந்தாரு |
| இங்கே | இங்கே வந்திருந்தாரு |
| சாப்பிட்ட பெறகு | சாப்பிட்ட பெறகு இங்கே வந்திருந்தாரு |
| மத்தியானம் | மத்தியானம் சாப்பிட்ட பெறகு இங்கே வந்திருந்தாரு |
| மூர்த்தி | மூர்த்தி மத்தியானம் சாப்பிட்ட பெறகு இங்கே வந்திருந்தாரு. |
| (iii) நீங்க டவுன்ஹால் பக்கத்துலே அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே ! | நீங்க டவுன்ஹால் பக்கத்துலே அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே ! |
| பார்த்திருப்பீங்களே ! | பார்த்திருப்பீங்களே ! |
| ஊர்வலத்தெ | ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே ! |
| அம்மன் | அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே ! |
| பக்கத்துலே | பக்கத்துலே அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே ! |
| (iv) நேத்துக் கோயில்லே விசேஷமா இருந்திருக்கும். | நேத்துக் கோயில்லே விசேஷமா இருந்திருக்கும். |
| இருந்திருக்கும் | இருந்திருக்கும் |
| விசேஷமா | விசேஷமா இருந்திருக்கும் |
| கோயில்லே | கோயில்லே விசேஷமா இருந்திருக்கும் |
| நேத்து | நேத்துக் கோயில்லே விசேஷமா இருந்திருக்கும். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) மூர்த்தி வந்திருந்தாரு. | மூர்த்தி வந்திருந்தாரு. |
| இங்கே வந்திருந்தாரு | மூர்த்தி இங்கே வந்திருந்தாரு. |

| | |
|---|---|
| மத்தியானம் வந்திருந்தாரு | மூர்த்தி மத்தியானம் இங்கே வந்திருந்தாரு. |
| சாப்பிட்ட பெறகு வந்திருந்தாரு | மூர்த்தி சாப்பிட்டபெறகு மத்தியானம் இங்கே வந்திருந்தாரு. |
| (ii) நீங்க போயிருந்தீங்களா ? | நீங்க போயிருந்தீங்களா ? |
| கோயிலுக்குப் போயிருந்தீங்களா? | நீங்க கோயிலுக்குப் போயிருந்தீங்களா ? |
| நேத்துப் போயிருந்தீங்களா ? | நீங்க நேத்துக் கோயிலுக்குப் போயிருந்தீங்களா ? |
| (iii) நீங்க பார்த்திருப்பீங்க. | நீங்க பார்த்திருப்பீங்க. |
| ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்க | நீங்க ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்க. |

d. Question-Answer drill

(i) Q: நேத்து உங்களெ அறெயிலே காணலெயே.... எங்கே போயிருந்தீங்க ?
A: திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்.

(ii) Q: மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போயிருந்தீங்களா ?
A: போகலெயே !

(iii) Q: அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே !.... பார்க்கலெயா ?
A: பார்க்கலெங்க.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நான் போயிருந்தேன். Substitute and change the verb accordingly. | நான் போயிருந்தேன். |
| பாரு | நான் பார்த்திருந்தேன். |
| சாப்பிடு | நான் சாப்பிட்டிருந்தேன். |
| வா | நான் வந்திருந்தேன். |
| செய் | நான் செய்திருந்தேன். |
| சொல்லு | நான் சொல்லியிருந்தேன். |
| படி | நான் படிச்சிருந்தேன். |
| கும்பிடு | நான் கும்பிட்டிருந்தேன். |
| (ii) நீங்க பார்த்திருப்பீங்க. Substitute and change the verb accordingly. | நீங்க பார்த்திருப்பீங்க. |
| வா | நீங்க வந்திருப்பீங்க. |
| பாடு | நீங்க பாடியிருப்பீங்க. |
| ஓடு | நீங்க ஓடியிருப்பீங்க. |

| | |
|---|---|
| செய் | நீங்க செய்திருப்பீங்க. |
| கேள்விப்படு | நீங்க கேள்விப்பட்டிருப்பீங்க. |
| தூங்கு | நீங்க தூங்கியிருப்பீங்க. |
| காணு | நீங்க கண்டிருப்பீங்க. |

(iii) கோயில்லே இருந்திருக்கும். — கோயில்லே இருந்திருக்கும்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| தூங்கு | கோயில்லே தூங்கியிருக்கும். |
| படு | கோயில்லே படுத்திருக்கும். |
| சாப்பிடு | கோயில்லே சாப்பிட்டிருக்கும். |
| தங்கு | கோயில்லே தங்கியிருக்கும். |

(iv) நான் போயிருந்தேன். — நான் போயிருந்தேன்.
Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| நாங்க | நாங்க போயிருந்தோம். |
| நாம | நாம போயிருந்தோம். |
| நீ | நீ போயிருந்தே. |
| நீங்க | நீங்க போயிருந்தீங்க. |

(v) நீங்க பார்த்திருப்பீங்க. — நீங்க பார்த்திருப்பீங்க.
Substitute and change the verb suitably.

| | |
|---|---|
| நீ | நீ பார்த்திருப்பே. |
| அவன் | அவன் பார்த்திருப்பான். |
| அவ | அவ பார்த்திருப்பா. |
| அவரு | அவரு பார்த்திருப்பாரு. |
| அவங்க | அவங்க பார்த்திருப்பாங்க. |

(vi) நாங்க அரிசி வாங்குனோம். — நாங்க அரிசி வாங்குனோம்.
Substitute

| | |
|---|---|
| நெல் | நாங்க நெல் வாங்குனோம். |
| உளுந்து | நாங்க உளுந்து வாங்குனோம். |
| பருப்பு | நாங்க பருப்பு வாங்குனோம். |
| வெங்காயம் | நாங்க வெங்காயம் வாங்குனோம். |
| உப்பு | நாங்க உப்பு வாங்குனோம். |
| மௌகு | நாங்க மௌகு வாங்குனோம். |
| சீரகம் | நாங்க சீரகம் வாங்குனோம். |
| கடுகு | நாங்க கடுகு வாங்குனோம். |

f. Transformation drill

(i) நான் திருப்பரங்குன்றத்துக்குப் போனேன். — நான் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்.

| | |
|---|---|
| நீங்க வீட்டுக்கு வந்தீங்க. | நீங்க வீட்டுக்கு வந்திருந்தீங்க. |
| நாங்க சமெச்சோம். | நாங்க சமெச்சிருந்தோம். |
| நாங்க வாங்குனோம். | நாங்க வாங்கியிருந்தோம். |
| (ii) நான் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன். | நான் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருக்குறேன். |
| நீங்க வீட்டுக்கு வந்திருந்தீங்க. | நீங்க வீட்டுக்கு வந்திருக்குறீங்க. |
| நாங்க சமெச்சிருந்தோம். | நாங்க சமெச்சிருக்குறோம். |
| நாங்க வாங்கியிருந்தோம். | நாங்க வாங்கியிருக்குறோம். |
| (iii) நான் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருக்குறேன். | நான் திருப்பரங்குன்றத்துக்கு போயிருப்பேன். |
| நீங்க வீட்டுக்கு வந்திருக்குறீங்க. | நீங்க வீட்டுக்கு வந்திருப்பீங்க. |
| நாங்க சமெச்சிருக்குறோம். | நாங்க சமெச்சிருப்போம். |
| நாங்க வாங்கியிருக்குறோம். | நாங்க வாங்கியிருப்போம். |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் ................ வந்திருந்தேன். (noon)
நான் **மத்தியானம்** வந்திருந்தேன்.

(i) நாங்க சாமி ................ + அ கௌம்புனோம். (worship)
(ii) நீங்க ................ + எப் பார்த்தீங்களா ? (procession)
(iii) நாங்க ................ வாங்குனோம். (rice)
(iv) நாங்க ................ வாங்குனோம். (black pepper)
(v) நாங்க ................ வாங்குனோம். (cumin seeds)
(vi) நாங்க ................ வாங்குனோம். (mustard seeds)
(vii) நாங்க ................ வாங்குனோம். (cereals)
(viii) நாங்க ................ வாங்குனோம். (salt)

h. Write the word represented by the formula.

Example : **போயிரு** போ + Perfect.

(i) காணு + Perfect : ................
(ii) சாப்பிடு + Perfect : ................
(iii) கும்பிடு + Perfect : ................
(iv) கௌம்பு + Perfect : ................
(v) பாரு + Perfect : ................

i. Fill in the blanks using the appropriate conjugated form (past) of the perfect verb போயிரு.

(i) நான் திருப்பரங்குன்றத்துக்குப் ................
(ii) நாங்க ரெண்டு பேருமா ................
(iii) நீங்க கோயிலுக்குப் ................
(iv) இவன் ................

j. Change the given nouns into the dative of direction and add at the left to the verbs in the sentences given below.

(i) திருப்பரங்குன்றம் : நான் போயிருந்தேன்.
(ii) வீடு : நீங்க எப்ப வந்திருந்தீங்க ?
(iii) கோயில் : நாங்க ரெண்டு பேருமா கௌம்புனோம்.
(iv) அறெ : நாங்க வந்து சேர்ந்தோம்.

k. Change the given nouns into the locative and add at the left to the verbs in the sentences given below.

(i) அறெ : உங்களெக் காணலெயே !
(ii) கோயில் : ரொம்ப விசேஷமா இருந்திருக்கும்.
(iii) டவுண்ஹால் : நீங்க அம்மன் ஊர்வலத்தெப் பாத்திருப்பீங்களே !
(iv) வழி : நாங்க அரிசி, பருப்பு எல்லாம் வாங்குனோம்.

l. Change the given nouns into the objective and add at the left to the verbs in the sentences given below.

ஊர்வலம் : நீங்க பார்த்திருப்பீங்களே !
நீங்க : நேத்து அறெயிலே காணலெயே !
எல்லாம் : நாங்க மௌகு, சீரகம் வாங்குனோம்.
சாமி : நீங்க கோயில்லே கும்பிட்டீங்களா ?

m. Fill in the blanks by transforming the cues given in parentheses into the verbal nouns.

Model : ................ (சமெ)

**சமெக்குறது**

| | |
|---|---|
| (i) ................ (காணு) | (v) ................ (கும்பிடு) |
| (ii) ................ (வா) | (vi) ................ (இரு) |
| (iii) ................ (சாப்பிடு) | (vii) ................ (பாரு) |
| (iv) ................ (கௌம்பு) | (viii) ................ (வாங்கு) |

n. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நாங்க அரிசி வாங்குனோம்.
நாங்க சமெப்போம்.
நாங்க சமெக்க அரிசி வாங்குனோம்.

(i) நீங்க போனீங்களா ?
நீங்க ஊர்வலத்தெப் பார்ப்பீங்க.

(ii) நாங்க கௌம்புனோம்.
நாங்க சாமி கும்பிடுவோம்.

(iii) நான் வந்திருந்தேன்.
நான் சாப்பிடுவேன்.

o. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நான் சாப்பிட்டேன்.
பெறகு, நான் போனேன்.
நான் சாப்பிட்ட பெறகு போனேன்.

(i) நாங்க சமெச்சோம்.
பெறகு, நாங்க சாப்பிட்டோம்.

(ii) நாங்க கோயிலுக்குப் போனோம்.
பெறகு, நாங்க சாமியெக் கும்பிட்டோம்.

(iii) நாங்க ஊர்வலத்தெப் பார்த்தோம்.
பெறகு, நாங்க சாமான் வாங்குனோம்.

(iv) மூர்த்தி இங்கே வந்தாரு.
பெறகு, நாங்க கோயிலுக்குக் கௌம்புனோம்.

p. Join the following according to the sandhi rules.

(i) வந்து + இரு : ...............
பார்த்து + இரு : ...............
இருந்து + இரு : ...............

(ii) ஊர்வலம் + எ : ...............
பக்கம் + உலே : ...............
திருப்பரங்குன்றம் + உக்கு ........

q. Answer these questions.

(i) நீங்க நேத்துச் சாமுண்டி மலெக்குப் போயிருந்தீங்களா ?
(ii) நீங்க சமெக்குறதுக்கு என்னென்ன வாங்குறீங்க ?
(iii) நீங்க நேத்துச் சாயங்காலம் ஹாஸ்டலுக்குப் போய்ச் சேர்ந்தப்ப எத்தனெ மணி ?
(iv) நீங்க சாமி கும்பிட எங்கே போவீங்க ?
(v) நீங்க தமிழ்ப்பாடத்தெ நல்லாப் படிச்சிருப்பீங்க, இல்லே ?
(vi) நேத்து உங்க நண்பரு இங்கே வந்திருந்தாரா ?
(vii) நீங்க இங்கே வந்த பெறகுதான் தமிழ்ச் சினிமா பார்த்திருப்பீங்க, இல்லே ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| காணு | 'see' | கும்பிடு | 'worship' |
| அரிசி | 'rice' | பருப்பு | 'cereals' |
| உப்பு | 'salt' | மௌகு | 'black pepper' |

| | | | |
|---|---|---|---|
| சீரகம் | 'cumin seeds' | கடுகு | 'mustard seeds |
| விசேஷம் | 'grand' | அம்மன் | 'a goddess' |
| அம்மன் ஊர்வலம் | 'taking a goddess in procession' | | |

**GRAMMAR**

*23.92.218.* This lesson introduces the past and future perfect verbs. In the previous lesson the present perfect was introduced. As it is indicated earlier, the conjugation of this verb is effected always on the basis of the verb root இரு. It takes the past tense marker -ந்த்-

Example :

*23. 92. 218.* நான் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்.
மூர்த்தி மத்தியானம் அறெக்கு வந்திருந்தாரு.

*23.98.219.* The tense marker -ப்ப்- is added to the verb to denote future perfect. Example :

*23. 92. 219.* நீங்க அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்க.
நேத்துக் கோயில்லே விசேஷமா இருந்திருக்கும்.

Sandhi : திருப்பரங்குன்றத்துக்கு + போயிருந்தேன் —> திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தேன்
கோயிலுக்கு + போயிருந்தீங்களா —> கோயிலுக்குப் போயிருந்தீங்களா ? (Refer S.18 in 2.14)
கும்பிட + கௌம்புனோம் —> கும்பிடக் கௌம்புனோம் (Refer S.29 in 15.56)
ஊர்வலத்தெ + பார்த்திருப்பீங்களே —> ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்களே (Refer S.20 in 2.17)

# UNIT 23

## LESSON 93

### ASKING FOR A JOB

**DIALOGUE**

| | |
|---|---|
| ரவி : வணக்கங்க. | Vanakkam, sir. |
| மல்லய்யா : வணக்கம். | Vanakkam. |
| ரவி : என் பேரு ரவிங்க. நான் உங்களெப் பார்க்க வந்திருக்குறேன். முந்தாநாளு காலெயிலே வந்திருந்தேன் .... நீங்க வீட்டுலே இல்லெ. | My name is Ravi sir....I have come to see you. (I) had come day before yesterday (also)...You were not at home. |
| மல்லய்யா : எத்தனெ மணிக்கு வந்திருந்தீங்க ? | At what time had (you) come ? |
| ரவி : காலெயிலே ஏழு மணிக்கு வந்திருந்தேன். | (I) had come at seven o'clock in the morning. |

| | |
|---|---|
| மல்லய்யா : ஏழுமணிக்கா? ஆறு மணிக்கு வந்திருந்தா என்னெப் பார்த்திருக்கலாம் .... சரி, என்ன விசேஷம் ? | At seven o'clock ? Had (you) come at six o'clock you would have seen me...Alright what is the matter ? |
| ரவி : நான் பி. ஏ. வரெ படிச்சிருக்குறேன். உங்க அலுவலகத்துலே ஏதாவது வேலெ காலியிருந்தா கொடுக்க முடியுமா ? | I have studied upto B.A.....Can you give me if any job is vacant in your office ? |
| மல்லய்யா : இப்ப வேலெ காலி இல்லெயே ! போன மாசம் ஒரு செயலாளர் வேலெ காலியா இருந்தது. அப்ப வந்திருந்தாக் கொடுத்திருப்பேன். நேத்துதான் ஒருத்தரெ அந்த வேலெக்கு நியமிச்சிருக்குறோம். இனிமே, எங்களாலெ ஒண்ணும் செய்ய முடியாது....நீங்க அப்புறமா வந்து பார்க்குறீங்களா ? | There is no vacancy now. Last month, there was a Secretary's post vacant. Had you come at that time I would have given (that job). (We) have appointed a person to that job only yesterday. We cannot do anything now. Can you come and see me later ? |
| ரவி : சரிங்க, வணக்கம். | Okey sir...Vanakkam. |
| மல்லய்யா : வணக்கம். | Vanakkam. |

## DRILLS

a. Variation drill

23. 93. 220. நீங்க அப்ப வந்திருந்தா கொடுத்திருப்பேன்.
நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம்.

b. Build up drill

| | |
|---|---|
| (i) நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம். | நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம். |
| பார்த்திருக்கலாம் | பார்த்திருக்கலாம் |
| வந்திருந்தா | வந்திருந்தாப் பார்த்திருக்கலாம் |
| ஆறுமணிக்கு | ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம் |
| நீங்க | நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம். |

| | |
|---|---|
| (ii) நீங்க ஆறுமணிக்கு வந்தி-ருந்தாக் கொடுத்திருப்பேன். | நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாக் கொடுத்திருப்பேன். |
| கொடுத்திருப்பேன் | கொடுத்திருப்பேன் |
| வந்திருந்தா | வந்திருந்தாக் கொடுத்திருப்பேன் |
| ஆறுமணிக்கு | ஆறுமணிக்கு வந்திருந்தாக் கொடுத்திருப்பேன் |
| நீங்க | நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாக் கொடுத்திருப்பேன். |

c. Expansion drill

| | |
|---|---|
| (i) நான் வந்திருந்தேன். | நான் வந்திருந்தேன். |
| காலெயிலே வந்திருந்தேன் | நான் காலெயிலே வந்திருந்தேன். |
| முந்தாநாளு வந்திருந்தேன் | நான் முந்தாநாளு காலெயிலே வந்திருந்தேன். |
| (ii) நான் கொடுத்திருப்பேன். | நான் கொடுத்திருப்பேன். |
| நீங்க வந்திருந்தாக் கொடுத்திருப்பேன் | நான் நீங்க வந்திருந்தாக் கொடுத்திருப்பேன். |
| ஆறுமணிக்குக் கொடுத்தி-ருப்பேன் | நான் ஆறுமணிக்கு நீங்க வந்தி-ருந்தாக் கொடுத்திருப்பேன். |
| (iii) நீங்க பார்த்திருக்கலாம். | நீங்க பார்த்திருக்கலாம். |
| வந்திருந்தாப் பார்த்திருக்க-லாம் | நீங்க வந்திருந்தாப் பார்த்தி-ருக்கலாம். |
| ஆறுமணிக்குப் பார்த்திருக்-கலாம் | நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம். |

d. Question-Answer drill

(i) Q: எத்தனெ மணிக்கு வந்திருந்தீங்க ?
A: காலெயிலே ஏழுமணிக்கு வந்திருந்தேன்.

(ii) Q: ஏதாவது வேலெ காலியா இருந்தாக் கொடுக்க முடியுமா ?
A: இப்ப வேலெ காலி இல்லெயே ?

(iii) Q: நீங்க அப்புறமா வந்து பார்க்குறீங்களா ?
A: சரிங்க.

e. Substitution drill

| | |
|---|---|
| (i) நீங்க பார்த்திருக்கலாம். Substitute and change the verb accordingly. | நீங்க பார்த்திருக்கலாம். |
| வா | நீங்க வந்திருக்கலாம். |
| எழுது | நீங்க எழுதியிருக்கலாம். |
| பாடு | நீங்க பாடியிருக்கலாம். |

| | |
|---|---|
| கேள்விப்படு | நீங்க கேள்விப்பட்டிருக்கலாம். |
| படி | நீங்க படிச்சிருக்கலாம். |
| நியமி | நீங்க நியமிச்சிருக்கலாம். |

(ii) நான் கொடுத்திருப்பேன். — நான் கொடுத்திருப்பேன்.

Substitute and change the verb accordingly.

| | |
|---|---|
| பாரு | நான் பார்த்திருப்பேன். |
| செய் | நான் செய்திருப்பேன். |
| எழுது | நான் எழுதியிருப்பேன். |
| ஓடு | நான் ஓடியிருப்பேன். |

(iii) செயலாளர் வேலெ காலியா இருந்தது. — செயலாளர் வேலெ காலியா இருந்தது.

Substitute

| | |
|---|---|
| குமாஸ்தா | குமாஸ்தா வேலெ காலியா இருந்தது. |
| பேராசிரியரு | பேராசிரியரு வேலெ காலியா இருந்தது. |
| ஆசிரியரு | ஆசிரியரு வேலெ காலியா இருந்தது. |

f. Transformation drill

| | |
|---|---|
| (i) நான் பார்க்க வறேன். | நான் பார்க்க வந்திருக்குறேன். |
| நான் பார்க்குறேன். | நான் பார்த்திருக்குறேன். |
| நான் படிக்குறேன். | நான் படிச்சிருக்குறேன். |
| நான் கொடுக்குறேன். | நான் கொடுத்திருக்குறேன். |
| நான் செய்றேன். | நான் செய்திருக்குறேன். |
| (ii) நான் செய்திருக்குறேன். | நான் செய்திருந்தேன். |
| நான் கொடுத்திருக்குறேன். | நான் கொடுத்திருந்தேன். |
| நான் படிச்சிருககுறேன் | நான் படிச்சிருந்தேன். |
| நான் பார்க்க வந்திருக்குறேன். | நான் பார்க்க வந்திருந்தேன். |
| நான் பார்த்திருக்குறேன். | நான் பார்த்திருந்தேன். |
| (iii) நான் கொடுத்திருந்தேன். | நான் கொடுத்திருப்பேன். |
| நான் செய்திருந்தேன். | நான் செய்திருப்பேன். |
| நான் படிச்சிருந்தேன். | நான் படிச்சிருப்பேன். |
| நான் பார்க்க வந்திருந்தேன். | நான் பார்க்க வந்திருப்பேன். |
| (iv) நான் கொடுத்திருப்பேன். | நான் கொடுத்திருக்கலாம். |
| நான் செய்திருப்பேன். | நான் செய்திருக்கலாம். |
| நான் படிச்சிருப்பேன். | நான் படிச்சிருக்கலாம். |
| நான் பார்க்க வந்திருப்பேன். | நான் பார்க்க வந்திருக்கலாம். |
| நான் பார்த்திருப்பேன். | நான் பார்த்திருக்கலாம். |

## EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : வேலெ ............... + ஆ இல்லெ. (vacancy)
வேலெ காலியா இல்லெ.

(i) ஒரு ............... வேலெ காலியா இருந்தது. (secretary)
(ii) உங்க ............... + லே வேலெ கொடுக்க முடியுமா ? (office)
(iii) ஒருத்தரெ அந்த வேலெக்கு ............... ச்சிருக்குறோம். (appoint)
(iv) நான் ............... வந்திருந்தேன். (day before yesterday)

h. Write the word represented by the formula.

Example : **வந்திரு** வா + Perfect.

(i) கொடு + Perfect : ...............
(ii) நியமி + Perfect : ...............
(iii) செய் + Perfect : ...............
(iv) படி + Perfect : ...............
(v) குடி + Perfect : ...............

i. Fill in the blanks using the appropriate conjugated form (past) of the perfect verb போயிரு.

(i) நீங்க வந்திருந்தா நான் ...............
(ii) காலெயிலே போயிருந்தா அவரு ...............
(iii) அவரு கேக்காட்டாலும் இவங்க ...............
(iv) நான் சொல்லியிருந்தா நீங்க ...............

j. Change the given nouns into the objective and add at the left to the verbs in the sentences given below.

(i) நீங்க : நான் பார்க்க வந்திருக்குறேன்.
(ii) ஒருத்தரு : நாங்க நேத்துதான் நியமிச்சிருக்குறோம்.
(iii) அந்தவேலெ : நான் கொடுத்திருப்பேன்.

k. Change the given nouns into the instrumental and add at the left to the verbs in the sentences given below.

(i) நாங்க : ஒண்ணும் செய்யமுடியாது.
(ii) நான் : படிச்சிருக்க முடியும்.
(iii) அவரு : ஆறுமணிக்குப் பார்த்திருக்க முடியாதா ?
(iv) நீங்க : அந்த வேலெக்கு அவரெ நியமிச்சிருக்க முடியாது.
(v) நாம : முந்தாநாளு காலெயிலே வந்திருக்க முடியுமா ?

l. Write the word represented by the formula.

Example : **பார்த்திருக்கலாம்** பார்த்திரு + Fut. Subjunctive.

(i) வந்திரு + Fut. Subjunctive : ................
(ii) இருந்திரு + Fut. Subjunctive : ................
(iii) படிச்சிரு + Fut. Subjunctive : ................
(iv) கொடுத்திரு + Fut. Subjunctive : ................
(v) நியமிச்சிரு + Fut. Subjunctive : ................

m. Give an answer with வரெ upto/until to each of these questions using the cues given in parentheses.

Model : நீங்க படிச்சிருக்குறீங்களா ? (பி. ஏ)
ஆமா. நான் பி. ஏ. வரெ படிச்சிருக்குறேன்.

(i) உங்க அலுவலகத்துலே வேலெ காலியா இருந்ததா ? (மூணு வருஷம்)
(ii) நீங்க காலெயிலே வீட்டுலே இருப்பீங்களா ? (ஏழுமணி)
(iii) நீங்க எனக்காகக் காத்திருந்தீங்களா ? (மூந்தா நாளு)
(iv) செயலாளர் வேலெ காலியா இருந்ததா ? (பத்துமாசம்)

n. Give an answer with 'if-clause' to each of these questions using the cues given in parentheses.

Model : நான் உங்களெப் பார்த்திருக்கலாமா ?
(ஆறுமணிக்கு வந்திரு)
ஆமா. ஆறுமணிக்கு வந்திருந்தா நீங்க என்னெப் பார்த்திருக்கலாம்.

(i) நீங்க இந்த வேலெயெக் கொடுத்திருப்பீங்களா ? (பி. ஏ. படிச்சிரு)
(ii) நீங்க என்னெச் செயலாளர் வேலெக்கு நியமிச்சிருப்பீங்களா?
(iii) நீங்க நேத்து வந்திருப்பீங்களா ? (நீங்க வீட்டுலே இருந்திரு)
(iv) நீங்க கொடுத்திருப்பீங்களா ? (வேலெ காலியா இருந்திரு)

o. Answer these questions.

(i) நான் நேத்துச் சொல்லியிருந்தா நீங்க இங்கே வந்திருப்பீங்களா ?
(ii) நான் பத்துரூபாய் கேட்டிருந்தா நீங்க கொடுத்திருப்பீங்களா?
(iii) உங்க மனெவி இங்கே வந்திருந்தா நீங்க ஊருக்குப் போயிருக்கமாட்டீங்க, இல்லே ?
(iv) உங்க மனெவி இங்கே வந்திருந்தா நீங்க எங்கே தங்கியிருப்பீங்க ?
(v) நீங்க காலெயிலே வந்திருந்தா பேராசிரியரெப் பார்த்திருக்க முடியுமா ?

(vi) நீங்க எட்டுமணிக்கு ரயில்லே போயிருந்தா
பதினொருமணிக்குத் திண்டுக்கல்லுக்குப் போயிருக்கலாம்,
இல்லே ?

## VOCABULARY

| | | | |
|---|---|---|---|
| முந்தாநாளு | 'day before yestarday' | விசேஷம் | 'matter, news' |
| அலுவலகம் | 'office' | காலி | 'vacancy' |
| செயலாளர் | 'secretary' | நியமி | 'appoint' |

## GRAMMAR

23.93.220. The future perfect always implies the 'conditional' meaning and is used as a subordinate clause in a complex sentence. Let us consider the following sentences.

23. 93. 220. நீங்க அப்ப வந்திருந்தாக் கொடுத்திருப்பேன்.
நீங்க ஆறுமணிக்கு வந்திருந்தாப் பார்த்திருக்கலாம்.

நான் கொடுத்திருப்பேன் 'I would have given' and நீங்க பார்த்திருக்கலாம் 'You might have met (me)' are the main clauses in the above sentences. நீங்க அப்ப வந்திருந்தா 'had you come at that time' and நீங்க ஆறு மணிக்கு வந்திருந்தா 'had you come at six o' clock' are the conditional clauses subordinated to the main clauses. Although the conditional clause is at times not expressed overtly, the presence of a conditional clause is inherently understood by the future perfect verb. Example : நீங்க அம்மன் ஊர்வலத்தெப் பார்த்திருப்பீங்க ; நேத்துக் கோயில்லே விசேஷமா இருந்திருக்கும் ; நான் கொடுத்திருப்பேன் ; நீங்க பார்த்திருக்கலாம் etc.

Sandhi : உங்களெ + பார்க்க → உங்களெப் பார்க்க
என்னெ + பார்த்திருக்கலாம் → என்னெப் பார்த்திருக்கலாம்
(Refer S.20 in 2.17)

அலுவலகம் + உலே → அலுவலகத்துலே (Refer S.17 in 2.13)

# UNIT 24

# LESSON 94

## HOLIDAY READING

### DIALOGUE

| | |
|---|---|
| ராமு : வாங்க சுரேஷ், உக்காருங்க. அப்பாவெப் பார்க்க வந்தீங்களா ? | Come on Suresh, please be seated. Did (you) come to meet (my) father ? |
| சுரேஷ் : ஆமா, மிஸ்டர் ராமு .... அப்பா வீட்டுலே இல்லெங்களா? | Yes, Mr. Ramu...Is (your) father not at home ? |
| ராமு : உள்ளே குளிச்சுக்கிட்டுருக்குருங்க. இப்ப வருவாங்க. டீ சாப்பிடுறீங்களா ? | (He) is taking bath inside (the house). (He) will come now. Would (you) like to have a (cup) of tea ? |

| | |
|---|---|
